பொருள்கோள்

மருதூர் ச. அரங்கராசன்

பொருள்கோள்

பொருள்கோள்

மருதூர் ச. அரங்கராசன்



பாலமுருகன் பதிப்பகம்

மருதூர் அஞ்சல், உடையார்பாளையம் வட்டம்
திருச்சி மாவட்டம், அ. கு. எண்: 621 710.

முதற் பதிப்பு, 1979.

Title	:	Poruḷkoḷ.
Language	:	Tamil.
Author	:	Marudur S. Rengarajan.
Subject	:	Grammar and Poetics.
Number of Pages	:	XVI + 230.
Edition	:	First.

விலை : ரூ: 16/-

கிடைக்குமிடங்கள் :

1. மீனாட்சி புத்தக நிலையம்,
   60, மேலக் கோபுர வீதி,
   மதுரை — 625 001.

   கிளை : 228, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
   திருவல்லிக்கேணி,
   சென்னை—600 005.

2. பாரி நிலையம்,
   184, பிரகாசம் சாலை,
   பிராட்வே,
   சென்னை—600 001.

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை — 600 014.

காணிக்கை

எனக்கு அறிவூட்டி வரும்

அறிஞர் பெருமக்களின்

தொன்மூதாசிரியர்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார்க்கு

அணிந்துரை

சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

மொழி என்றால் என்ன? மொழியப்படுவது மொழி எனச் சுருக்கமாகச் சொல்லலாம். ஒருவர் உள்ளக் கருத்தை மற்றவர்க்குச் சிறந்த முறையில் புலப்படுத்தப் பயன்படுவது மொழியேயாம். பேச்சுமொழி மக்களிடம் மட்டுமே அமைந்துள்ளது. மக்களுள் ஒவ்வொருவரிடமும் இருவகைக் கூறுகள் அமைந்து கிடக்கின்றன. ஒன்று உணர்ச்சிக்கூறு; மற்றொன்று அறிவுக்கூறு. ஆதலின் மொழியிலும் இவ்விரண்டு கூறுகளும் இடம் பெறுகின்றன. ''உடம்பு எப்படி இருக்கிறது?'' என்பது ஒரு வினாத்தொடர் மொழி. இதை மருத்துவர் தான் கவனித்து வரும் நோயாளியிடம் கேட்கிறார். நோயாளியின் முன்னிலைமை, நோயின் தன்மை, தற்பொழுதைய நிலைமை முதலியவற்றை அறிந்து ஆவன செய்வதற்காக அவ்வினா கேட்கப்பட்டமையால் அதில் அறிவுக்கூறு இருக்கக் காண்கிறோம். சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இருவரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து, ''உடம்பு எப்படி இருக்கிறது''? என்று வேகமாகக் கேட்கிறார். மருத்துவர் நோயாளியைக் கேட்ட அதே கேள்விதான். ஆனாலும் இது கேட்கப்பட்டவரைப் புண் படுத்துகிறது; சினமூட்டுகிறது; அடிதடியில் கொண்டு வந்துவிட்டு விடுகிறது. காரணம் என்ன? இதில் அறிவுக்கூற்றை அமுக்கிவிட்டு உணர்ச்சிக்கூறு மேலோங்கி நிற்பதேயாம். தொடருக்கு நோயாளி கொண்ட பொருள் வேறு; பின்னவர் கொண்ட பொருள் வேறு. இங்ஙனம் மொழியில் நாம் பொருள்கொள்ளும் நிலைமையே 'பொருள்கோள்' எனப்படுகிறது. பொருள்கோள் ஒருவகையில் மொழிக்கு நயமூட்டுகிறது எனலாம் தமிழுலகில் உணர்ச்சிக் கூறுகளைப் பற்றிய மொழியாராய்ச்சி எதிர்காலத்தில் மிகச் சிறப்பாக வளரும் என்று எதிர்பார்க்கலாம்.

உரைநடைப் பேச்சிலேயே இப்படி என்றால் பாட்டுகளில் கேட்கவேண்டுமா?

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை"

என்பது ஒரு பாடல். இந்தப் பாடலில் சொற்கள் அமைந்துள்ள முறையிலேயே பொருள் கொண்டால் நகைப்பும் வியப்புமே தோன்றும். கானக நாடனின் மலைச்சுனையில் சுரைக்காயைப் போட்டால் அஃது அமிழ்ந்து விடுகிறதாம்; ஆனால் அம்மிக் கல்லைப் போட்டால் அது மிதக்கிறதாம். சுனையில் யானை இறங்கி நின்றால் தண்ணீர் நிலைக்கவில்லையாம்; அதாவது யானை நீரில் முழுகி விடுகிறதாம். ஆனால் முயல்நின்றால் தண்ணீர் நிலைக்கிறதாம்; அதாவது முயல் முழுகிவிடாதாம். என்ன விந்தை! இப்பாடலை இப்படியே பொருள் உணரும் ஒருவர் இதில் அறிவுப் பொருத்தம் இல்லையே என்று நகைத்துக் குறை கூறலாம். ஆனால் இதில் 'மொழிமாற்றுப் பொருள்கோள்' அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரானால் குறைகாணாது நிறைகண்டு மகிழ்வர். கானக நாடன் சுனையில், 'சுரை மிதப்ப' என்றும் 'அம்மி ஆழ' என்றும் முதலடியில் சொற்களை மாற்றிக் கொள்ளவேண்டும். அதேபோல் 'யானைக்கு நிலை' என்றும் 'முயற்கு நீத்து' என்றும் இரண்டாமடியில் சொற்களை மாற்றிக் கொள்ளவேண்டும். இங்ஙனம் ஓரடியுள் சொற்களை மாற்றிக் கொண்டு உரிய பொருளைக் கண்டுகொள்ளும் முறை மொழி மாற்றுப் பொருள்கோள் எனப்படுகிறது. மேற்கண்ட பாடலுக்கு நண்பர் திரு ச. அரங்கராசன் வேறுவகையான விளக்கங்களையும் குறிப்பிடுகிறார்; நீங்களே அதைப் படித்து மகிழுங்கள்.

இங்ஙனம் ஆற்றுநீர்ப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள் கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள் கோள் முதலிய பல்வேறு பொருள்கோள்கள் செய்யுட்களில் அமைந்து இன்பம் நல்குகின்றன. அவற்றை நன்கு அறிந்தால் தான் பாடற்சுவையின் பயனை நாம் முழுமையாக அடைய முடியும். நண்பர் அரங்கராசன் எழுதியுள்ள 'பொருள்கோள்' என்னும் இவ்வாராய்ச்சி நூல் அதற்குப் பெரிதும் துணை செய் கிறது. ஆசிரியர் அரிதின் முயன்று இவ்வரிய நூலைப் படைத்திருக் கிறார். பொருள்கோளின் வரையறை, வகைகள், மாறுபாடுகள், வளர்ச்சி, இலக்கணத்தில் பொருள்கோளின் இடம் முதலாய செய்திகளை எல்லாம் ஆசிரியர் இந்நூலுள் பெருமளவில் ஆராய்ந் துள்ளார். பொருள்கோளைப் பொறுத்தவரை பல புதிய, நுணுக்க மான செய்திகள் இதில் காட்டப்பட்டுள்ளன. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அவிநயம், அமுதசாகரம், யாப்பருங்

கலம், வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் முதலிய எல்லா நூல்களும் ஒவ்வொரு பொருள்கோளைப் பற்றியும் என்ன சொல்கின்றன? உரையாசிரியர் பலரின் கருத்து என்ன? அவற்றில் எது சரி? என்பதெல்லாம் கண்டறியும் ஓர் ஒப்பற்ற ஒப்பீட்டு நூலாக இது திகழ்கிறது. செய்யுளில் பொருள்கோள் அமைவதற் குரிய காரணங்களை ஆசிரியர் சிறந்த முறையில் ஆய்ந்துள்ளார். பாட்டிலக்கணம் கெடக்கூடாது என்பதற்காகவும், தொடை நயங் கருதியும், பொருட்சிறப்புக்காகவும், சிலேடைப் பொருள் தருவதற் காகவும், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறம் கருதியும் பாடல் களில் 'பொருள்கோள்' அமைக்கப்பட்டிருக்கிறது என்று ஆசிரியர் முடிவு காண்கிறார். எடுத்துக்காட்டுப் பாடல்களுடன் ஆசிரியர் இவற்றை நிறுவுவது அவரின் ஆராய்ச்சி நுட்பத்தை நமக்குப் புலப்படுத்துகிறது. அத்துடன் ஆசிரியர் நூல் இறுதியில் பொருள் கோள் பற்றிய நூற்பாக்களின் தொகுப்பையும் தந்துள்ளார். மேற்கோட் பாடல்களின் அகரவரிசை, மேற்கோள் நூற்பாக்களின் அகர வரிசை, சிறப்புப் பெயர் அகர வரிசை, பொருட்குறிப்பு அகர வரிசை ஆகியவற்றைத் தந்துள்ளதன் மூலம் படிப்போரின் முயற்சியை எளிமைப்படுத்தியுள்ளார். ஆசிரியரின் ஈடில்லாத இப்பெரும் பணிக்குத் தமிழுலகம் வரவேற்பும் நன்றிக்கடப்பாடும் அளிக்கும் என்பது என் நம்பிக்கை.

வெல்க தமிழ்!

அன்புடன்,
சு. செல்லப்பன்
22-12-1979

முகவுரை

I

காலந்தோறுந் தோன்றிய இலக்கணப் புலவர்கள் பலரும் 'பொருள்கோளின்' இன்றியமையாமையை உணர்ந்து, அதற்குச் சிறந்த இடத்தைத் தந்து வந்திருக்கின்றனர். அத்துணைச் சிறப்புடைய 'பொருள்கோள்' குறித்து ஆயவேண்டுவதன் தேவையை அறிவுறுத்தி எனக்கு வழிகாட்டியவர் என்னுடைய மேற்பார்வையாளர் டாக்டர் பொற்கோ அவர்களாவர். அவர்கள் 'வழிகாட்டி' என்ற அளவிலேயே நின்று விடாமல், 'வழித் துணை'யாயும் அமைந்து, வேண்டுவன அனைத்தும் உதவி என்னைப் பணி கொண்டார்கள். வேண்டுழியெல்லாம் அறிவுரையுங் கருத்துரையுமளித்து என்னைக் கொண்டு செலுத்திய அவர்கட்கு உணர்விடை ஒன்றிய நன்றியன்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராயமைந்து செயற்கரிய செய்துவரும் பேராசிரியர் டாக்டர் சி. பால சுப்பிரமணியன் அவர்கள் 'தமிழாராய்ச்சியின் வளர்ச்சி' குறித்துப் பாடம் நடாத்துகையில் யான் பெற்ற பயன் ஆய்வுக்கு மிகவும் உறுதுணையாய் அமைந்தது. அவர்கட்கு இதயங்கனி நன்றியன்.

ஆய்வுக் காலத்து ஊக்கி ஆக்கிய பேராசிரியர் டாக்டர் அ. மா. பரிமணம், டாக்டர் தா. வே. வீராசாமி, டாக்டர் மா. செல்வராசன் ஆயோர்க்கும், புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை அவர்கட்கும் நெஞ்சம் நிறை நன்றியன்.

II

தம் மாணுக்கர்களின் முன்னேற்றமே தம் முன்னேற்றமெனக் கொண்டு மகிழும் டாக்டர் பொற்கோ அவர்கள் என்றிறத்தும் அன்பால் எண்ணற்றனவியற்றி, ஆய்வினை நூலாகக் கொணரும் வழியில் என்னை ஊக்கி மகிழ்வித்தார்கள். அவர்களை என்றென்றும் நெஞ்சிறுத்திப் போற்றுவன்.

திருமலி சிலம்பொலி. சு. செல்லப்பனுர் அவர்களை நூலுக் கணிந்துரை வேண்டி அணுகிய ஞான்று, அவருக்குள்ள பல்வேறு

அலுவல்கட்கிடையேயும் மகிழ்வோடிசைந்து உடன் வழங்கியருளி ஞர்கள். அவர்களது அச்சான்ருண்மையை எஞ்ஞான்றும் வணங்கி மகிழ்வன்.

எனது எம். ஃபில். ஆய்வினை நூலாக வெளியிட்டுக்கொள்ள ஒப்புதல் வழங்கியருளிய சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன்.

அச்சியற்றும் அரும்பணியில் அருகிருந்து உதவியவர்கள் திரு பெ. அர்த்தநாரீசுவரன், எம்.ஏ., எம்.ஏ., எம். ஃபில்., திரு நா. செல்வராசன் (டி.பி.டி.) ஆய நண்பர்களாவர். தமிழக அரசின் நல்லாசிரியர் விருது வென்றவரும், தலைசிறந்த தமிழ்ப் புலவருமாய புலவர்மணி இரா. திருஞானசம்பந்தனார் அவர்கள் அச்சுமுற்படியினை அவ்வப்போது திருத்தியுதவினார்கள். நூலுட் சில படிமங்கட்குப் (Block) படம் வரைந்துதவியவர் உழுவலன்பின் நண்பரும், சிறந்த சிறுகதை எழுத்தாளருமாய திரு எஸ். குமார கிருஷ்ணன் எம்.ஏ.,எம்.ஹெச் எட். அவர்களாவர். நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பனார் அவர்கள் நூலைக் கவினுற அச்சிட்டுதவினார்கள். இவர்களனைவர்க்கும் என் நன்றி என்றும் உரித்தாகும்.

III

மறைமலையடிகள் நூனிலைய நூலகராய்த் திகழும் திரு இரா. முத்துக்குமாரசுவாமி எம்.ஏ., பி.லிப். அவர்கள் என் ஆய்வுக்கு ஒல்லும் வாயெல்லாம் உதவி செய்தருளினார்கள்.

திருவான்மியூர் உ.வே. சாமிநாதையர் நூனிலைய மதிப்பியற் பாதுகாவலரும் உ.வே சா. அவர்களின் பெயரருமாய திரு க. சுப்பிரமணியன் அவர்களும், மதிப்பியற்றுணைப் பாதுகாவலரும் பாவலருமாய திரு மு கோ. இராமன் அவர்களும் எனக்கு மிகவுந் துணைபுரிந்தனர். இவர்கள் மாணிக்க சுவாமிகளியற்றிய குவலயானந்தத்தின் ஓலைச்சுவடியினையும், கையெழுத்துப் படியினையும், பிறநூல்களையும் அன்புடன் தந்துதவினர்.

அரசு சுவடிகள் நூலகத்திலிருந்து சில அரிய நூல்கள் ஆய்வுக்குத் துணையாகக் கிட்டின. சுவடியியலில் பெரும்புலமை பெற்றவரும் நூனிலையத் தலைமைத் தமிழ்ப் புலவருமாய திரு பூ. சுப்பிரமணியன் எம்.ஏ., பி.லிட், பி.டி., டிப். வடமொழி, அவர்கள் என் ஆய்வு தொடர்பாக ஆவன அனைத்தும் செய்துதவினார்கள்.

வேறெங்குமே கிட்டாத ஒருசில நூல்கள் அரசாவணக் காப்பகத்திலிருந்து கிடைத்தன. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

மற்றும் வரலாற்றுராய்ச்சித் துறை ஆணையாளர் அன்புடன் உதவினார்கள். காப்பகத்தில் பணியாற்றும் நண்பர் திரு. இரா. கி. சீனிவாசன் அவர்களும் பல்லாற்றானும் உதவினார்கள்.

இவர்கள் அனைவர்க்கும் உளமொன்றிய நன்றி என்றுமென்றும் உரித்தாகும்.

IV

பக்கவரையறை இகந்தமை கருதி ஆய்வின்கண் சேர்க்காமல் விடுக்கப்பட்ட 'சொன்முறை மாற்றமுந் தேவையும்' எனுமியல் இப்பொழுது நூலின்கண் இணைக்கப்பட்டிருக்கின்றதென்பதும், முதலியலான 'முன்னுரை' சற்றே விரித்தெழுதப்பட்டிருக்கின்ற தென்பதும் இவண் குறிக்கப்பட வேண்டுவனவாம்.

நூலின்கண் குறிக்கப்படும் தொல்காப்பியம், நன்னூல் ஆயவற்றின் நூற்பாக்கட்கான எண்கள் முறையே திரு பி. சிதம்பர புன்னைவனநாத முதலியாரின் தொல்காப்பியப்பதிப்பிலும் (1922), மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையின் நன்னூற் பதிப்பிலும் (1911) உள்ளவாறு இடப்பட்டுள்ளன.

அச்சுப் பிழைகள் அறவே இல்லாமல் நூலை வெளிக்கொணர வேண்டுமென பெரிதும் முயன்றும், தவிர்க்க இயலாத வகையில் சில பிழைகள் இடம் பெற்றுவிட்டன. எனவே 'பிழையுந் திருத்தமும்' என்றொரு பகுதியை இறுதியிற் சேர்க்க நேர்ந்துவிட்டது. இந்தக் குறைபாட்டுக்காக யான் பெரிதும் வருந்துகின்றனன். அறிஞர் பெருமக்கள் பொறுத்தருளட்டும்.

V

ஓரிடத்துக் கூறப்பட்ட ஒருசில செய்திகளே தொடர்பு நோக்கியுந் தெளிவு கருதியும் ஓரோவழிப் பிறாண்டும் இடம்பெற வேண்டுவது தவிர்க்க முடியாததாகிவிட்டதாகலான், அதனைக் 'கூறியது கூறல்' எனும் குற்றமாகக் கொள்ளாதிருக்க அறிஞர்களை வேண்டுவன்.

நூலைக் கண்ணுறும் அறிஞர் பெருமக்கள் அதன்கண் காணப் பெறும் குறைகளைச் சுட்டுவார்களேயாயின் அஃதென்னைத் திருத்திக்கொள்ள மிகவும் பயன்படும். பொருள்கோள் பற்றி மேலும் பல ஆய்வுகள் பெருக இந்நூல் ஓரளவுக்கேனும் வழி வகுக்குமே யாயின் அதுவே யான்பெற்ற நற்பயனும் என எண்ணி மகிழ்வன்.

மருதூர்
22-12-1979

ச. அரங்கராசன்

குறுக்க விளக்க அகரநிரல்

அமுத.	...	அமுதசாகரம்
அவி.	...	அவிநயம்
ஆ—ர்.	...	ஆசிரியர்
இ. அ. உ.	...	இறையனார் அகப்பொருள் உரை
இ. அ. பொ.	...	இறையனார் அகப் பொருள்
இ. கொ.	...	இலக்கணக் கொத்து
இ. வி.	...	இலக்கண விளக்கம்
இளம்.	...	இளம்பூரணர்
உ—ர்.	...	உரையாசிரியர்
உ—ர்கள்.	...	உரையாசிரியர்கள்
கா.	...	காரிகை
கு—ர்.	...	குறிப்புரையாசிரியர்
சு. நா.	...	சுவாமிநாதம்
சேனா.	...	சேனாவரையர்
தண்டி.	...	தண்டியலங்காரம்
த. நூ.	...	தமிழ்நூல்
தெய்.	...	தெய்வச்சிலையார்
தொ—ர்.	...	தொகுப்பாசிரியர்
தொல்.	...	தொல்காப்பியம்
தொ. வி.	...	தொன்னூல் விளக்கம்
தோரா.	...	தோராயமாக
நச்சி.	...	நச்சினார்க்கினியர்
நம்பி.	...	நம்பியகப்பொருள்
நம்பி. உ.	...	நம்பியகப்பொருள் உரை
நன்.	...	நன்னூல்
நூ.	...	நூற்பா
நேமி.	...	நேமிநாதம்
பக்.	...	பக்கம்
ப—ர்.	...	பதிப்பாசிரியர்
ப—ள்.	...	பக்கங்கள்
பா.	...	பாடல்
பொ. ப—ர்.	...	பொதுப் பதிப்பாசிரியர்
மு. வீ.	...	முத்து வீரியம்
யா. க.	...	யாப்பருங்கலம்
யா. கா.	...	யாப்பருங்கலக் காரிகை
யா. கா. உ.	...	யாப்பருங்கலக் காரிகை உரை
யா. வி. உ.	...	யாப்பருங்கல விருத்தி உரை
வீ. சோ.	...	வீரசோழியம்
வீ. சோ. உ.	...	வீரசோழிய உரை
P.	...	Page
Pp.	...	Pages

அட்டவணை முதலியவற்றின் பட்டி

[ஆய்வின்கண் பயன்படுத்தப்பட்டுள்ள அட்டவணை, வரிமரம், வரைகட்டப்படம், விளக்கப்படம் ஆயவற்றின் பட்டி இவண் இணைக்கப்படுகிறது.]

அட்டவணை

வரிமரம்

வரைகட்டப்படம்

விளக்கப்படம்

உள்ளுறை

நூன்முன்

நூலுள்

நூற்பின்

1. முன்னுரை.

1.1. ஆயக் கொண்ட பொருள்.

1.1.1. பொருள்கோளின் இன்றியமையாமை.

1.1.2. ஆயக் கண்ட கரணியம்.

1.1.3. பேசு நூல்கள்.

1.1.3.1. இலக்கண மூல நூல்கள்.

1.1.3.1.1. தொல்காப்பியம்.

1.1.3.1.2. அவிநயம்.

1.1.3.1.3. அமுதசாகரம்.

1.1.3.1.4. நேமிநாதம்.

1.1.3.1.5. நன்னூல்.

1.1.3.1.6. இலக்கண விளக்கம்.

1.1.3.1.7. இலக்கணக் கொத்து.

1.1.3.1.8. தொன்னூல் விளக்கம்.

1.1.3.1.9. சுவாமிநாதம்.

1.1.3.1.10. முத்துவீரியம்.

1.1.3.1.11. தமிழ்நூல்.

1.1.3.1.12. அணிநூல்கள்.

1.1.3.1.12.1. நிரனிறையை மட்டுங் கூறுவன.

அ. தண்டியலங்காரம்.

ஆ. குவலயாநந்தம்.

இ. குவலயானந்தம்.

ஈ. துறைசைச் சதாலங்காரம்.

உ. அரங்கரலங்கார மாலை.

ஊ. ஆரணச் சைலரலங்கார பஞ்சகம்.

எ. சந்திராலோகம்.

1.1.3.1.12.2 பூட்டுவில்லையுங் கூறுவது.
மாறனலங்காரம்

1.1.3.1.12.3. அனைத்தையுங் கூறுவன.

1.1.3.2. இலக்கண உரை நூல்கள்.

1.1 3.2.1. இறையனாரகப் பொருளுரை.
1.1.3.2.2. யாப்பருங்கல விருத்தியுரை.
1.1.3.2.3. யாப்பருங்கலக் காரிகையுரை.
1.1.3.2.4. வீரசோழிய உரை.
1.1.3.2.5. நம்பியகப் பொருளுரை.

1.1.4. நூல்களின் காலம்.
1.1.5. இதுவரை வந்த ஆய்வுகள்.

1.1. ஆயக் கொண்ட பொருள்:-

தமிழ்ச் செய்யுட்கண் பொருள் கொள்ளப்படும் முறைகளைப் 'பொருள்கோள்' என்னும் இலக்கணக் கோட்பாடாகத் தந்து சென்றனர் இலக்கணப் புலவர்கள். இப் 'பொருள்கோளே' இவண் ஆய்வுக்குரிய பொருளாகக் கொள்ளப்படுகின்றது. செய்யுளொன்றின் உரியபொருள், உரியமுறையில் உணர்ந்து கொள்ளப் படவில்லையாயின் அச்செய்யுளான் நேரவிருந்த நற்பயன் பாழ் பட்டுப்போம். இந்தப் பாழ்பாட்டிலிருந்து செய்யுளைக் காத்து, உரிய பயன் நமக்குக் கிடைக்க உதவியாய் அமைவதே இப் 'பொருள்கோள்' என்பதாகும். எனவே, செய்யுளின் பொருளுணர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத இலக்கணக் கோட்பாடே 'பொருள்கோள்' என்பது உணரப்பட வேண்டுவதொன்றும்.

1.1.1. பொருள்கோளின் இன்றியமையாமை :-

மொழியோ ஒரு தொடர் இன்னின்னவாறுதான் அமையலாம் என்று வரையறுத்த இலக்கணங் கொண்டு இயல்கின்றது. ஆயின், நிலத்தைக் கிழித்துப் புறப்படும் நீரூற்று போல, உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்படும் உணர்ச்சி வெள்ளமே பாடலென்றும், அதனைக் கட்டுப்படுத்த யாருக்கும் அல்லது எதற்கும் உரிமையில்லை என்றும் புலவன் கருதுகிறான். அவ்வாறு கருதுமவன், தன் உணர்ச்சிக்கு ஒத்த ஓசையைத் தேர்ந்து, அதற்கேற்பச் செய்யுளின்கண் சொற்களை மாற்றியமைத்துக் கொள்கிறான். புலவன் தேர்ந்து பாடிய ஓசை-இசை-ஒலிநயம் என்பவற்றின் அடிப்படையிலேயே பாவகைகள், எதுகை, மோனை போன்ற தொடைகள் ஆயவற்றை உள்ளடக்கிய யாப்பிலக்கணம் அமைகின்றது.

இவ்வாறு யாப்பிலக்கணத்துக்கு இயைய செய்யுளின்கண் புலவனால் மாற்றியமைக்கப்பட்ட சொற்களை, மொழியின் அடிப்படைத் தொடரமைப்புக்குப் பொருந்த முறைப்படுத்தித் தந்து, உரிய பொருளைப் பிறழ்வின்றி உணர்த்துஞ் சிறந்த பணியைச் செம்மையுடன் செய்வதே பொருள்கோளாகும். எனவே செய்யுளின் பொருள் நோக்கில் பொருள்கோளின் இன்றியமையாமை இனிது பெறப்படும்.

1.1.2. ஆயக் கண்ட காரணியம்:-

பொருள்கோள் பற்றிய இலக்கண நூலாசிரியர்கள் மற்றும் உரையாசிரியர்களின் கருத்துகளை ஊன்றிப் பயில்வார்க்கு எதிர்ப் படுஞ் சிக்கல்கள் பல.

பொருள்கோளின் வகைகளை இரண்டென்றும், நான்கென்றும் ஐந்தென்றும், எட்டென்றும், ஒன்பதென்றும், இருபதென்றும் தாந்தாங் கண்டவாறு கூறித் தமக்குள் வேறுபடுவாராயினர், இலக்கணப் புலவர்கள். இவற்றுள் எப்பகுப்பு ஏற்புடைத்து என்பதும், செய்யுளின் பொருளுணர்ச்சிக்கு எவ்வெவ் வகைகள் இன்றியமையாதன என்பதும் ஆய்ந்து காணப்பட வேண்டுவனவாம்.

தொல்காப்பியங் கூறிய சுண்ணத்தினை இரண்டாகப் பகுத்து இருவேறு பொருள்கோள்களாகக் காட்டின நேமிநாதம் முதலாயின. அன்றியும், ஓரடியுள் மொழிகளை மாற்றிக் கூட்டுதல், ஈரடியுள் மாற்றிக் கூட்டுதல், இரண்டிறந்த அடிகளுள் மாற்றிக் கூட்டுதல் என்று அடிகளின் அடிப்படையில் 'சொற்களை ஏற்புழி மாற்றிக் கூட்டும் பொருள்கோளின்' வகைகளை வேண்டின இந் நூல்கள். இத்தகைய பகுப்புகள் தேவைதானா என்பதும் தெளியப்பட வேண்டுவனவாம்.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவேமே
வங்கத்துச் சென்றோர் வரின்."

இப்பாடலைத் தெய்வச்சிலையார் சுண்ணத்திற்கும், நேமிநாத உரை யாசிரியர் மொழிமாற்றுக்கும், குணசாகரர், சங்கர நமச்சிவாயர், வைத்தியநாத தேசிகர் ஆயோர் கொண்டு கூட்டுக்குங் காட்டினர். இவர்களில் யார் கூறுவது சரி என்பதும், இவ்வுரை யாசிரியர்கள் தம்முள் மாறுபட்டதற்குக் காரணியம் என்னை யென்பதுங் கண்டறியப்பட வேண்டுவனவாம்.

"சுரையாழ அம்மி மிதப்ப—வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

எனும் பாடலைச் சுண்ணத்திற்குக் காட்டுகின்றனர் தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நேமிநாதம் ஆயவற்றின் உரையாசிரியர்கள். மொழிமாற்றுக்குக் காட்டுகின்றனர் நன்னூல் மற்றும் அதன் பின்னூல்களின் உரையாசிரியர்கள். இந்தப் பாட லொன்றையே தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக மொழி மாற்றுக்குக் காட்டிவரக் காரணியமென்னை? மொழி மாற்றுப் பொருள்கோள் ஏறத்தாழ பொருள்கோளைப் பேசும் எல்லா இலக்கண நூல்களாலுங் குறிக்கப்பட்டிருக்கிற இன்றியமையாமை யுடைய நிலையில், அதுபற்றிய பாடல் ஒன்றுதான் இருந்திருக்க முடியுமா? எனவே, இப்பாடலொன்றே மீண்டும் மீண்டுங் காட்டப்

பட வேண்டுவதன் தேவையென்னை என்பதும், மூலநூலாசிரியர் களை உரையாசிரியர்கள் புரிந்து கொண்டதில் நேர்ந்த தவறு தானே இப்பாடலொன்றையே மொழிமாற்றுக்குக் காட்டச் செய்தது என்பதும் ஆயப்பட வேண்டுவனவாம்.

'தெங்கங்காய்...', 'சுரையாழ...' எனத் தொடங்கும் இரு பாடல்களுங் கிடந்தாங்கே, இயல்பின் நடந்து, யாற்றொழுக்காய்ப் பொருள் தரவும், அவற்றை முறையே கொண்டு கூட்டு, மொழி மாற்றுப் பொருள்கோள்கட்குக் காட்டுவது பொருந்துமா என்பதும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாம்.[1]

இன்னவாறு இன்னும் பற்பல ஐயங்களுஞ் சிக்கல்களும் தெளி விக்கப்படவும், அவிழ்க்கப்படவும் வேண்டியுள்ளதால், 'பொருள் கோள்' ஆய்வுக்குரிய பொருளாகத் தெரியப்பட்டது.

1.1.3. பேசு நூல்கள்:-

தொல்காப்பியந் தொடங்கி, இருபதாம் நூற்றுண்டு இலக்கண நூலாந் 'தமிழ்நூல்' வரையில் பற்பல இலக்கண மூல நூல்களும் உரை நூல்களும் 'பொருள்கோள்' குறித்துப் பேசிப் போகின்றன.

1.1.3.1. இலக்கண மூல நூல்கள்:-

1.1.3.1.1. தொல்காப்பியம்:-

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரால் இயற்றப்பட்ட இந் நூல் கி. மு. 5 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படு கிறது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று பிரிவுகளில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி (உவமை) எனும் ஐந்திலக்கணங்களையும் பேசுகிறது இந்நூல். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பதொன்பதியல்களாக இருபத் தேழு இயல்களைக் கொண்டியங்கும் இந்நூல் பொருள்கோளை 'மொழிபுணர் இயல்பு' என்ற குறியீட்டுடன் சொல்லதிகார எச்சவியலின் கண் பேசுகிறது. இம் 'மொழிபுணர் இயல்பின்' இயல்பறிய உளங்கூர் கேள்வி இளம்பூரணனர், ஆனு இயல்பிற் சேனுவரையர், உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர், தெளிவுடையறிவின் தெய்வச்சிலையார்—ஆய நால்வரின் உரை களும் மிகுந்த துணைபுரிகின்றன.

1.1.3.1.2. அவிநயம்:-

'அளவறு புலமை அவிநயனுர்' என்றும், 'புவிபுகழ் புலமை அவிநயனுர்' என்றும் பாராட்டப் பெறும் அவிநயனுரால் இயற்றப் பெற்ற அவிநயம் எனு நூல் இன்று முழுமையாகக் கிட்டவில்லை.

யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழிய உரை, நேமிநாதஉரை, நன்னூல் மயிலைநாதர் மற்றும் சங்கர நமச்சிவாயர் உரைகள், தக்கயாகப் பரணி உரை, நவநீதப் பாட்டியல் உரை, திருக்குறள் நுண்பொருள் மாலையுரை, பன்னிருபாட்டியல் — ஆயவற்றில் மேற்கோள்களாக ஆளப் பட்டிருக்கும் அவிநயனாரின் கருத்துகளையும், அவிநய நூற்பாக் களையுந் தொகுத்து, 'அவிநயம்' எனும் நூலாகப் பதித்து, உரை யும் வரைந்திருக்கிறார் திரு. க. ப. அறவாணன்.[2]

இவருக்கு முன்பே அவிநய நூற்பாக்களைத் தமது 'மறைந்து போன தமிழ் நூல்கள்' எனும் நூலின்கண் தொகுத்துத் தந்திருக் கிறார் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி[3].

"இப்பத் தெச்சமும்
புவிபுகழ் புலமை அவிநய நூலுள்
தண்டலங் கிழவோன் தகைபெறு நேமி
எண்டிசை நிறைபெயர் இராச பவித்திரப்
பல்லவ தரையன் பகர்ச்சியென் றறிக"[4]

என்ற மயிலைநாதரது கூற்றால் அவிநயத்திற்கு இராசபவித்திரப் பல்லவதரையன் எழுதிய உரையொன்றிருந்தமை புலனாகும்.

குணசாகரர் தமது யாப்பருங்கல விருத்தியுரையில் மேற் கோளாகக் காட்டிய அவிநயனாரின் பொருள்கோட் கருத்தைத்[5] தாம் தொகுத்த 'அவிநய' நூலுள் யாப்பதிகாரத்தின்கண் அடக்கி யிருக்கிறார், திரு. க. ப. அறவாணன். இவர் அவிநயத்தின் கால மாகக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டைக் குறிக்கிறார்.

1.1.3.1.3. அமுதசாகரம்:-

யாப்பருங்கல விருத்தியுரையின்கண் யாப்பருங்கலக் காரிகையி லிருந்து சில காரிகைகளைக் காட்டி, 'இவற்றை விரித்துரைத்துக் கொள்க' என்றும், 'பதம் நெகிழ்த்து உரைத்துக் கொள்க' என்றுங் கூறும் குணசாகரர், சில வெண்பாக்களைக் காட்டியும் அவ்வாறு கூறுகிறார். காட்டப்பட்ட காரிகைகளைப் போலவே வெண்பாக் களும் அமுதசாகரனாரால் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று கருதுகிறார் திரு க. ப. அறவாணன்.

"இந்நூல் உடையாரும், 'மாஞ்சீர் கலியுட் புகா' (காரிகை 40) என்னும் இதன் புறனடையானும்,

'நாலசைச்சீர் வெண்பாவில் நண்ணு; அயற்பாவில்
நாலசைச்சீர் நேரீற்று நாலிரண்டாம்—நாலசைச்சீர்
ஈறுநிரை சேரின் இருநான்கும் வஞ்சிக்கே
கூறினார் தொல்லோர் குறித்து'

என்னும் புறனடையானும், பிறவற்றானும் விளங்கக் கூறினார் என்க"[6]

என்னும் யாப்பருங்கல விருத்தியுரைப் பகுதி, யாப்பருங்கல ஆசிரியர் அமுதசாகரரே காரிகைப் புறனடை ஒன்றனும், வெண்பாப் புறனடை ஒன்றனும் விளங்கக் கூறினார் என்று குறிப்பிடுகிறது எனச் சுட்டும் திரு க. ப. அறவாணன், அவ்வெண்பாப் புறனடையைத் தொகுத்து, 'அமுதசாகரம்' என்ற பெயரால் பதித்து, உரையும் இயற்றியிருக்கிறார்.[7] இவர் அமுதசாகரரின் காலத்தைக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டென வரையறுக்கிறார்.

யாப்பருங்கலம் தொண்ணூற்றைந்தாவது (95) நூற்பாவிருத்தியுரையில் குணசாகரர் மேற்கோளாகக் காட்டிப் 'பதம் நெகிழ்த்து உரைத்துக் கொள்க' என்று கூறிய பொருள்கோள் பற்றிய வெண்பாவைத் திரு க. ப. அறவாணன் தாம் பதித்த 'அமுத சாகரம்' எனும் நூலில் ஒழிபியலின்கண் பேசுகிறார்.

1.1.3.1.4. நேமிநாதம்:-

திரிபுவன தேவன் என்னும் மூன்றாங் குலோத்துங்கன் காலமாம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குணவீர பண்டிதரால் வெண்பா யாப்பைக் கொண்டு இயற்றப் பெற்றது இந்நூல். எழுத்து, சொல் ஆய இரண்டன் இலக்கணங்களையும் தெளியவுஞ் செறியவுங் கூறும் இந்நூல் 'சின்னூல்' என்னும் வேறு பெயரையும் உடைத்து.

பொருள்கோளின் வகைகளாக ஒன்பதை இந்நூலாசிரியர் சொல்லதிகாரம் எச்சமரபின்கண் குறிக்கிறார். இந்நூற்கு ஆசிரியர் பெயர் அறியக் கூடாத உரையொன்றுளது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் அவிரோதி ஆழ்வார் எனும் சமணப் புலவர் ஒருவரை இவ்வுரை குறித்தலால், இது கி பி. 14ஆம் நூற்றாண்டிலோ அல்லது அதற்குப் பின்னரோ எழுந்ததாதல் வேண்டும் என்பர்.

1.1.3.1.5. நன்னூல்:-

தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கண நூல்களுள் தலைமையுஞ் சிறப்பும் பயிற்சியும் மிக்க இலக்கண நூலாக

இலங்குவது இந்நன்னூலேயாகும். அமராபரணன் என்னும் சிறப்புப் பெயர் வாய்த்தனும், கங்க வமிசத்தரசனுமாய சீயகங்கன் என்பான் தொல்காப்பியக் கடலைச் சுருக்கித் தருக என்று வேண்டிக் கொண்டதற் கிணங்க இந்நூல் பவணந்தி முனிவரால் இயற்றப் பட்டது என்பது சிறப்புப் பாயிரத்தால் தெரியவருகிறது. இச் சீயகங்கன் மூன்றாங் குலோத்துங்கனின் காலத்தவனாகத் துணியப் படுதலின், நன்னூலின் காலத்தைக் கி. பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி. பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று வரையறுக்க முடிகிறது.

நன்னூல் ஐந்திலக்கணங்களையுங் கூறும் நூல் என்று கருத இடமுளவாயினும்,[8] இப்பொழுது கிடைத்திருப்பவை எழுத்து, சொல் ஆய ஈரதிகாரங்களே. பொருள்கோள் பற்றிய செய்தி, சொல்லதிகாரத்துப் பொதுவியலின்கண் கூறப்பட்டிருக்கிறது.

மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆயோரது நன்னூலுரைகள் புலவர்களாற் பெரிதும் போற்றப்படும் பெற்றியன. ஆண்டிப் புலவர், கூழங்கைத் தம்பிரான், இராமநுசக் கவிராயர், விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர் போன்றோரின் உரைகளுங் குறிப்பிடத்தகுஞ் சிறப்பின. இவை தவிர, இன்னுஞ் சில உரைகளுமுள.

1.1.3.1.6. *இலக்கண விளக்கம்:-*

வன்மீக தேசிகரின் மைந்தரும், அகோர முனிவரின் மாணவரும், படிக்காசுப் புலவரின் ஆசிரியரும், திருவாரூரினரு மாய வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டது இந்நூல். தொல்காப்பியத்தைப் பின்பற்றி மூன்றதிகாரங்களில் ஐந்திலக் கணங்களையும் பேசும் இந்நூல், 'குட்டித் தொல்காப்பியம்' என்றும் வழங்கப் பெறும்.

> ''முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
> பொன்னேபோல் போற்றும்''[9] இயல்பினர்

இந்நூலாசிரியர் என்பது, முன்னோர்களின் நூற்பாக்கள் பலவற்றை அப்படியே இவர் தமது நூலின்கண் அமைத்துக் கொண்ட தன்மையினாற் புலனாகும். நன்னூலிலிருந்து மட்டும் ஏறத்தாழ இருநூற்றைம்பது (250) நூற்பாக்களை அப்படியே ஆண்டு கொள்கிறார்.

பொருள்கோள் பற்றிய செய்தியினைச் சொல்லதிகாரம் பொது வியலின்கண் ஒன்பது (9) நூற்பாக்களிற் கூறுகிறார்; இவற்றுள்

எட்டு (8) நன்னூலிலிருந்தும், ஒன்று தொல்காப்பியத்திலிருந்தும் ஆளப்பட்டனவாம்.

இந்நூற்கமைந்த உரை நூலாசிரியராலேயே இயற்றப்பட்டதாகும். கி. பி. 17ஆம் நூற்றுண்டு இந்நூலாசிரியரின் காலமாகத் துணியப்படுகிறது.

1.1.3.1.7. *இலக்கணக் கொத்து:-*

பிரயோக விவேக சுப்பிரமணிய தீட்சிதர், இலக்கண விளக்க வைத்தியநாத தேசிகர் ஆயோருடன் ஒத்த காலத்தவரும், சங்கரநமச்சிவாயரின் ஆசிரியருமாய சுவாமிநாத தேசிகரே இந்நூலின் ஆசிரியராகலான், இந்நூலின் காலமும் கி.பி. 17ஆம் நூற்றுண்டே என்பது கூறுமற் போதரும். இந்நூற்கு நூலாசிரியரே இயற்றிய உரையொன்றுமுளது.

வேற்றுமையியல், வினையியல், ஒழிபியல் என்னும் முப்பகுப்புகளைக் கொண்டிலங்கும் இச்சொல்லிலக்கண நூல், பொருள்கோளை ஒழிபியலின்கண் பேசுகிறது. பொருள்கோள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவுங் கூறப்படவில்லையாயினும், பொருள்கோளின் வகைகளைப் ‘பொருத்தப் புணர்ச்சி’, ‘பொருத்தமில் புணர்ச்சி’ என்ற இருபெரும் பகுப்புகளில் அடக்கிக்காட்டும் முயற்சி இந்நூற்கண்ணேதான் காணப்படுகிறது.

1.1.3.1.8 *தொன்னூல் விளக்கம்:-*

இத்தாலி நாட்டிற் பிறந்து, தமிழ் நாட்டிற் போந்து தமிழ்த் தொண்டாற்றிய ‘ஜோசப் கொன்சுடான் சியுசு பெஸ்கி’ என்னும் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட ஐந்திலக்கண நூலே தொன்னூல் விளக்கமாகும். இந்நூலின் உரையாசிரியரும் இவரேயாவர். இந்நூலின் காலம் கி. பி. 18 ஆம் நூற்றுண்டாகும்.

பொருள்கோளின் வகைகளை நன்னூலையொட்டி எட்டு என்னும் இத்தொன்னூல் விளக்கம் அவற்றை அணியதிகாரத்தின்கண் சொல்லணியியலிற் பேசுகிறது. பொருள்கோளின் வகைகள் அனைத்தையும் அணியியலின்கண் சேர்த்துப் பேசிய முதனூல் தொன்னூல் விளக்கமே என்பது குறித்தற்குரியது.

1.1.3.1.9. *சுவாமிநாதம்:-*

19ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த சாமிகவிராசரால் இயற்றப்பட்ட இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆய ஐந்திலக்கணங்களைத் தனித்தனி மும்மூன்று பகுப்புகளிற் கூறிச்

செல்கிறது. இந்நூலின் ஒரு பகுதி 'தமிழ்ப் பொழிலில்' வந்துள்ள தாயினும், இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சியில் இருந்த சுவாமிநாத மூலத்தை அடிப்படையாகக் கொண்டு, நூல் முழுதையும் பதித்து, உரையெழுதி அண்ணுமலைப் பல்கலைக்கழக வழி வெளிக்கொணர்ந்தவர் டாக்டர். செ. வை. சண்முகம் ஆவர். (இந்நூல் பற்றிய விரிவான வரலாற்றை அதன் முன்னுரையிற் காணலாம்.)[10]

சொல்லதிகார எச்சமரபின்கண் இந்நூல் பொருள்கோளைப் பேசுகிறது.

1.1.3.1.10. *முத்துவீரியம்:-*

கி. பி. 19ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த உறையூர் முத்துவீரப்ப உபாத்தியாயர் என்பவரால் இயற்றப்பட்ட ஐந்திலக்கண நூலே முத்துவீரியம் என்பதாகும். இந்நூற்குத் திருநெல்வேலி திருப்பாற் கடனுதன் கவிராயர் எழுதிய உரையொன்றுளது.

தொன்னூல் விளக்கம் போலவே இம்முத்துவீரியமும் பொருள்கோளை அணியதிகாரத்தின்கண் பேசுகிறது. அணியிலக் கணத்தைச் சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளணி யியல் என்னும் முப்பகுப்புகளில் கூறும் இந்நூல், பொருள்கோளைச் செய்யுளணியியலில் அடக்குகிறது.

1.1.3.1.11. *தமிழ் நூல்:-*

இருபதாம் நூற்றுண்டிற் பாவடிவில் எழுந்த இலக்கண நூலாகுமிது. நூலாசிரியரும் உரையாசிரியருமாவார் திரு. த. சரவணத் தமிழன். தொல்காப்பிய முதல் நூற்கும், வழி நூல் நன்னூற்கும் முடிபொருங்கொத்துப் பின்னே அமைந்த மாற்றங்கள் சுட்டி ஒருபுடை தழுவும் சார்புநூல் இஃதென்பது ஆசிரியராலேயே சுட்டப்பெறுகிறது.[11]

எழுத்தியல், சொல்லியல், உறுப்பியல், புணரியல், பொது வியல், ஒழிபியல், தொடரியல் எனும் ஏழியல்களாகப் பகுத்துக் கொண்டு இலக்கணங் கூறும் நூலாசிரியர் பொருள்கோளைத் தொடரியலின்கண் அடக்குகிருர். பொருள்கோளின் இலக் கணத்தை உரைநடைக்காகவும் அமைக்கும் முயற்சி இவரிடமே காணப்படுகிறது. இவர் பொருள்கோளில் யாற்றுநீர், கொண்டு கூட்டு என்னும் இருவகைகளை மட்டுமே வேண்டுகின்றுர்.

1.1.3.1.12. *அணி நூல்கள்:-*

1.1.3.1.12.1. *நிரனிறையை மட்டுங் கூறும் நூல்கள்:-*

நிரனிறைப் பொருள்கோளை மட்டுமே அணியிற் கொண்டு கூறின பெரும்பாலான அணி நூல்கள். அவை வருமாறு:-

அ. தண்டியலங்காரம்.
ஆ. குவலயாநந்தம் (மீனாட்சி சுந்தரக் கவிராயர்).
இ. குவலயானந்தம் (மாணிக்க சுவாமிகள்).
ஈ. துறைசைச் சதாலங்காரம்.
உ. அரங்கரலங்கார மாலை.
ஊ. ஆரணச் சைல ரலங்கார பஞ்சகம்.
எ. சந்திராலோகம்.

அ. தண்டியலங்காரம்

தண்டி என்பார் செய்த 'காவ்யதர்சம்' எனும் வடமொழி அணி நூலை அடியொற்றித் தமிழிலாக்கப்பட்ட இந்நூலின் ஆசிரியர் பெயரும் தண்டியே என்பர். இந்நூலின் காலமாகக் கி. பி. 12 ஆம் நூற்றுண்டைக் குறிப்பிடுவர். நூற்றிருபத்தைந்து (125) நூற்பாக்களானமைந்த இந்நூலின்கண் முப்பத்தைந்து (35) அணிகள் கூறப்பட்டுள்ளன. இந்நூற்குப் பழைய உரையொன்றும் உளது.

ஆ. குவலயாநந்தம் (மீனாட்சி சுந்தரக் கவிராயர்):-

வடமொழிச் சந்திராலோகத்திற்கு அப்பைய தீட்சிதர் உரையெழுதியும், சில அணிகளைப் புதிதாகச் சேர்த்தியும் 'குவலயாநந்தம்' என்றொரு நூலை ஆக்கினர்.[12] அதனைச் சங்கர நாராயண சாஸ்திரிகள் தமிழில் உரை நடைவடிவில் மொழி பெயர்க்க, முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர் செய்யுளிலமைத்துக் 'குவலயாநந்தம்' என்ற மூலநூலின் பெயரையே இட்டார். இந்நூல் நூற்றிருபது அணிகளைக் கூறுகிறது.

இ. குவலயானந்தம் (மாணிக்க சுவாமிகள்):-

மேற் குறித்த நூற்பெயரையே கொண்டிலங்கும் இந்நூல், அதனினும் வேறனதொன்றென்பது அறியவேண்டுவதாம்.

வடமொழியணியிலக்கண நூலாகிய 'மீமாங்கிசை'யின் பொருளுணர்ந்து அகத்திய முனிவரால் 'சிவ வியாகரணம்' எனும் நூல் யாக்கப் பட்டதாகவும், அதனை முதனூலாகக் கொண்டு இக்குவலயானந்தம் மாணிக்க சுவாமிகளால் இயற்றப் பட்டதாகவும் நூலின் சிறப்புப் பாயிரங் கொண்டு அறியமுடிகிறது.

இந்நூலை அண்மையிற் பதித்து வெளியிட்ட திரு ச.வே சுப்பிரமணியன்,

"ஏட்டிலக்கணமாகவே இருந்து முதல் முறையாகத் தற்போது பதிப்பிக்கப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது"[13]

என்று குறிக்கின்றார். ஆயின், இந்நூல் முன்பே அச்சேறியுள்ளதாகத் திரு. எஸ். சுவாமிநாத ஐயர் என்பார் தமது 'A Lecture on Tamil Grammars and Grammarians' எனும் பெயரியதொரு தமிழ் நூலில் குறித்துள்ளார்.

"இது (குவலயானந்தம்) தேனினும் தித்திப்புள்ள திருவாசகத்தைச் செய்த மாணிக்க வாசக ஸ்வாமிகள் அருளிச் செய்த ஓர் இலக்கணம்...இவர் செய்த (இக்) குவலயானந்தம் அச்சிடப் பட்டிருக்கிறது.[14]

என்கிறார் இவர். சமயகுரவர் நால்வருள் ஒருவராய மாணிக்க வாசகரையும், இக்குவலயானந்தம் எழுதியவரையும் ஒருவரென மயங்கிக் கூறியவாறுபோல, அச்சேறியிருந்த மீனாட்சி சுந்தரக் கவிராயரின் குவலயாநந்தத்தை இக்குவலயானந்தமாகக் கருதி, இவர் மயங்கிக் கூறினாரா என்பது அறியக் கூடவில்லை. இவர் அச்சேறியுள்ளதாகக் குறிப்பிடும் குவலயானந்தத்தின் ஒருபடி கூட இவ்வாய்வாளன் தேடிய வரையில் கிட்டிற்றிலது.

நூறு அணிகளை இந்நூல் கூறுவதாக டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் கூறினும்,[15] இப்பொழுது எண்பத்தேழு(87) அணிகளே நூற்கண் உள. எஞ்சியன சிதலைவாய்ப் பட்டழிந்தொழிந்தன போலும்!

ஈ. துறைசைச் சதாலங்காரம்:-

திரு. ஆ. சபாபதியாபிள்ளை யாத்த இந்நூல் நூறு (100) அணிகளைப் பெயர் மாத்திரையேயாய்க் கூறிப் போகிறது.[16]

உ. அரங்கரலங்கார மாலை:-

திரு. நாராயணசுவாமிப்பிள்ளை என்பாரால் இயற்றப்பட்டதும் உவமஅணி முதல் ஏதுவணி ஈறுகப் பலவணிகளைப் பேசுவதுமாய இந்நூல் 'தமிழ்நூல் விவர அட்டவணை'யின்கண் குறிக்கப் பட்டுள்ளதாயினும்,[17] தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலிருந்து உரிய நேரத்தில் தேடியெடுக்கக் கூடவில்லையாகலான், நூல் பற்றிய மேல் விவரம் எவையும் அறிய முடியவில்லை.

ஊ. ஆரணச் சைல ரலங்கார பஞ்சகம்:-

தற்சிறப்புப் பாயிரப் பாடல்கள் பதினொன்று (11) உட்பட, நூற்றுப் பதினொன்று (111) பாடல்களாலாய இந்நூலை யாத்தவர் திரு. திருஞானசம்பந்த முதலியார் என்பவராவர்.[18] இந்நூற்கண் நூறு (100) அணிகள் பேசப்படுகின்றன.

எ. சந்திராலோகம்:-

வடமொழிச் 'சந்திராலோக'த்தை விசாகப் பெருமாளையர் உரைநடை வடிவில் தமிழில் மொழி பெயர்க்க, அதற்குச் செய்யுளுருவளித்தார் திரு. மு. இராகவையங்காரின் தந்தையாராய திரு. முத்துசாமி ஐயங்கார்.[19] நூறு (100) பொருளணிகளைக் கூறும் இந்நூல்- சொல்லணிகள் எதனையுங் குறித்துச் செல்லவில்லையென்பது கருதுதற்குரித்து.

1.1.3.1.12.2 *பூட்டுவில்லையுங் கூறும் நூல்:-*

நிரனிறைப் பொருள்கோளையேயன்றிப் பூட்டுவிற் பொருள்கோளையும் அணியிற் கொண்டு கூறிய நூல் மாறனலங்காரமாகும்.

மாறனலங்காரம்:-

கி.பி.16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் குருகைப் பெருமாள் கவிராயரால் ஆக்கப்பட்ட இந்நூற்கண் அறுபத்து நான்கு (64) அணிகள் பேசப்படுகின்றன. பூட்டுவிற் பொருள்கோளை அணிகளுளொன்றாக அமைத்துக் காட்டிய அணியிலக்கண நூல் இஃதொன்றே.

1.1.3.1.12.3. *அனைத்தையுங் கூறும் நூல்கள்:-*

தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆய நூல்கள் எல்லாப் பொருள்கோள்களையும் அணியின்கண் அடக்கின. இவை ஐந்திலக்கண நூல்களாதல் பற்றி, 'அணிநூல்கள்' என்னும் இப்பகுப்பின்கண் (1.1.3.1.12) கொண்டு வந்து கூறாமல், முன்பே கூறப்பட்டன. (காண்க 1.1.3.1.8. & 1.1.3.1.10.)

அணியிலக்கணத்தை மட்டும் அறையும் நூல்களேயன்றி, ஐந்திலக்கணங்களையும் நவிலும் நூல்களும் அணியிலக்கணம் நுவலுழி, நிரனிறைப் பொருள்கோளை அணிகளுள் ஒன்றாகக் கொண்டு கூறுகின்றன என்பதும், தரப்பிசைப் பொருள்கோள் 'இடைநிலை' விளக்காகவும், அளைமறியாப்புப் பொருள்கோள் 'முதனிலை' 'மற்றும் 'கடைநிலை' விளக்குகளாகவும் அணியிலக்கணத்தின்கண் பேசப்படுகின்றன என்பதும் இவண் கருத்திறுத்தற்குரித்து.

1.1.3.2. இலக்கண உரை நூல்கள்:-

சில இலக்கண நூல்களில் பொருள்கோள் பெயரளவில் மட்டுமே சுட்டப்படுகின்றது. உரையாசிரியர்களே விரித்தும் விளக்கியும் கூறிப் போகின்றனர். இவ்வகையில் குறிப்பிடத் தகுந்தன வருமாறு.

அ. இறையனாரகப் பொருளுரை.
ஆ. யாப்பருங்கல விருத்தியுரை.
இ. யாப்பருங்கலக் காரிகையுரை.
ஈ. வீரசோழிய உரை.
உ. நம்பியகப் பொருளுரை.

1.1.3.2.1. இறையனாரகப் பொருளுரை:-

இறையனார் என்னும் புலவரால் எழுதப் பெற்ற அகப்பொருள் பற்றிய நூலே 'இறையனாரகப் பொருள்' என்பதாகும். இந்நூற் கமைந்த உரை நக்கீரரால் இயற்றப்பட்டதென்பர். ஆயின், இந்நக்கீரர் சங்க கால நக்கீரர்தானா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுளது. பல தலைமுறை வாய்வழியே வழங்கி வந்த உரை இன்றுள்ள நிலையை அடைந்தது கி. பி. 9ஆம் நூற்றாண்டிலேயே என்பர்.[20]

நூல் பொருள்கோளைக் 'கோள்' என்று குறிக்கிறது; உரை ஐந்துவகைப் பொருள்கோளைக் காட்டுகிறது.

1.1.3.2.2. யாப்பருங்கல விருத்தியுரை:-

அமுதசாகரனாரால்[21] இயற்றப்பட்ட யாப்பிலக்கண நூலாம் யாப்பருங்கலத்திற்குக் குணசாகரர் இயற்றிய உரையே 'யாப்பருங் கலவிருத்தியுரை' என்பது. நூலின் காலம் கி. பி. 10ஆம் நூற்றாண்டு என்றும்; நூலாசிரியரின் மாணாக்கரே உரையாசிரியர் என்றுங் கருதப்படுகின்றன.

'நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதி'[22] என்று மட்டுமே நூலாசிரியர் குறிக்க, உரையாசிரியரோ பொருள்கோளின் வகைகளைக் கூறி, உகந்த மேற்கோள்கள் காட்டி, இனிது விளக்கிப் போகிறார்.

1.1.3.2.3. யாப்பருங்கலக் காரிகை உரை:-

யாப்பருங்கலத்தின் ஆசிரியரே இக்காரிகையின் ஆசிரியரும் ஆவர். குணசாகரரே இந்நூற்கும் உரையாசிரியராவர். 'பொருள் கோள்'[23] என்றும், 'ஒன்பதொண் பொருள்கோள்'[24] என்றும் மட்டுமே நூலாசிரியர் குறிக்க, உரையாசிரியரே பொருள்கோளை விரித்தும் விளக்கியுங் கூறிப் போகிறார்.

1.1.3.2.4. *வீரசோழிய உரை:-*

இன்று நமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் தொல்காப்பியத்திற்குப் பிறகு ஐந்திலக்கணம் பேசும் முதனூல் வீரசோழியமே ஆகும். வீரராசேந்திர சோழனின் விருப்பப்படி பொன்பற்றி காவலர் புத்தமித்திரனார் யாத்த இந்நூற்குப் பெருந்தேவனார் வரைந்த உரையொன்றுள்ளது. இந்நூல் கி. பி. 11ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகும். உரையாசிரியர், விக்கிரமசோழன் காலமாகிய கி. பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.

நூலாசிரியர் 'கோள்' என்று குறித்ததைப் 'பொருள்கோள்' என்றும், 'பொருளடைவு' என்று குறித்ததைப் 'பொருணடை' என்றுங் கூறிப் போகிறார் உரையாசிரியர்.

1.1.3.2.5. *நம்பியகப் பொருளுரை:-*

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனும் நால்வகைக் கவிபாடுந் திறம் பெற்ற நாற்கவிராச நம்பி யாத்த 'அகப்பொருள் விளக்கம்' எனும் நூலின் வேறொரு பெயரே 'நம்பியகப் பொருள்' என்பதாகும். இந்நூற்கமைந்த உரையும் நூலாசிரியராலேயே இயற்றப் பெற்றதாகும். இந்நூலின் காலத்தைக் கி. பி. 13ஆம் நூற்றாண்டென அறுதியிடுவர்.

அகப்பாட்டுறுப்புகளில் ஒன்றாக நூல் சுட்டும் 'பொருள் வகை' என்பதே உரையின்கண் 'பொருள்கோள் வகை'யாகக் குறிக்கப் பட்டிருக்கிறது.

1.1.4. *நூல்களின் காலம்;-*

காலந்தோறும் பொருள்கோட் கோட்பாட்டில் ஏற்பட்டு வந்த மாற்றம், நேர்ந்த வளர்ச்சி போன்றவற்றை அறிய பொருள் கோளைப் பேசும் இலக்கண நூல்களின் காலங்களை அறிய வேண்டுவது தேவையாகின்றது. பெரும்பாலான நூல்களின் கால வரையறைகள் திரு. சோம இளவரசு தமது 'இலக்கண வரலாற்றில்' குறிப்பிட்டுள்ளபடி அட்டவணை ஒன்றில் தரப்படுகின்றன. அவர் தமது 'இலக்கண வரலாற்றில்' சுட்டாத இலக்கண நூல்களின் கால வரையறைகள் அவ்வந்நூற் பதிப்புகளிலிருந்து அறிந்தவாறு குறிக்கப்படுகின்றன.

அட்டவணை ஒன்றில் காட்டப்படும் நூல்களின் காலங்கள் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும், இன்ன நூற்குப் பின் இன்ன நூல் தோன்றிற்று என்னுங் கால வரிசையிற் பெரும்பாலுங் கருத்து வேறுபாடு இல்லை; அதுவே நமக்குப் போதுவதாம்.

இலக்கண நூல்களின் கால அட்டவணை

(அட்டவணை எண்: 1)

எண்	நூல்கள்		காலம் (தோராயமாக)
1.	தொல்காப்பியம்	—	கி.மு.5ஆம் நூற்றாண்டு
2.	இறையனாரகப் பொருளுரை	—	கி.பி.9ஆம் நூற்றாண்டு
3.	அவிநயம்	—	கி.பி 9ஆம் நூற்றாண்டு
4.	அமுதசாகரம்	—	கி.பி.10ஆம் நூற்றாண்டு
5.	யாப்பருங்கல விருத்தியுரை	—	கி.பி.10ஆம் நூற்றாண்டு
6.	யாப்பருங்கலக் காரிகையுரை	—	கி.பி.10ஆம் நூற்றாண்டு
7.	வீரசோழிய உரை	—	கி.பி.12ஆம் நூற்றாண்டு
8.	நேமிநாதம்	—	கி.பி.12ஆம் நூற்றாண்டு
9.	தண்டியலங்காரம்	—	கி.பி.12ஆம் நூற்றாண்டு
10.	நம்பியகப் பொருளுரை	—	கி.பி.13ஆம் நூற்றாண்டு
11.	நன்னூல்	—	கி பி.13ஆம் நூற்றாண்டு
12.	மாறனலங்காரம்	—	கி.பி.16ஆம் நூற்றாண்டு
13.	இலக்கண விளக்கம்	—	கி.பி.17ஆம் நூற்றாண்டு
14.	இலக்கணக்கொத்து	—	கி.பி.17ஆம் நூற்றாண்டு
15.	தொன்னூல் விளக்கம்	—	கி.பி.18ஆம் நூற்றாண்டு
16.	குவலயானந்தம் (மாணிக்க சுவாமிகள்)	—	கி.பி.18ஆம் நூற்றாண்டு
17.	சுவாமிநாதம்	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
18.	முத்துவீரியம்	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
19.	துறைசைச் சதாலங்காரம்	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
20.	அரங்கரலங்கார மாலை	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
21.	குவலயாநந்தம் (மீனாட்சி சுந்தரக் கவிராயர்)	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
22.	ஆரணச் சைலர் அலங்கார பஞ்சகம்	—	கி.பி.19ஆம் நூற்றாண்டு
23.	சந்திராலோகம்	—	கி.பி.20ஆம் நூற்றாண்டு
24.	தமிழ் நூல்	—	கி.பி.20ஆம் நூற்றாண்டு

1.1.5. *இதுவரை வந்த ஆய்வுகள் :-*

பொருள்கோளின் வகைகளை நான்கென்றும் ஐந்தென்றும் எட்டென்றுங் கூறி இலக்கணப் புலவர்கள் தம்முள் வேறுபடு மாற்றைச் சுட்டி, பொருள்கோள் இலக்கணத்தை ஆராய்ந்து 'செந்தமிழின்' வாயிலாய் விரித்துரைக்குமாறு திரு. எஃப். எக்ஸ். சி. நடராசா என்பவர் செந்தமிழ் (ஆகஸ்டு, 1958) இதழில் தமிழன்பர்கட்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.[25] தொடர்ந்து வந்த 'செந்தமிழ்' இதழ்களை ஆவலுடன் புரட்டிய இவ்வாய் வாளற்கு ஏமாற்றமே காத்திருந்தது; யாரும் பொருள்கோளைப்பற்றி விரித்தெழுதியதாகத் தெரியவில்லை.

செந்தமிழ்ச் செல்வி (ஜூலை, 1967) இதழில் பண்டித வித்துவான். தி. சங்குப்புலவர் 'பொருள்கோள் ஆராய்ச்சி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.[26] அடிமறி மாற்று, யாற்று நீர், விற்பூட்டு, கொண்டு கூட்டு என்னும் நான்கு பொருள்கோள் வகைகளே தேவை என்கிறார் இவர். ஏனைய பொருள்கோள் வகை களைத் தள்ளுதற்கு இவர் கொள்ளும் கரணியங்கள் வலுவற்றவை யாகவே காணப்படுகின்றன. அணியிற் கூறப்பட்டுள்ளதால் நிரனிறையைத் தள்ளுகிறார்; சில பொருள்கோள்கள் பட அமைந்த பாடல்கள் இக்காலத்துத் தோன்றவில்லை என்பதைக் கரணியங் காட்டி அவற்றை விலக்குகிறார்; இக்காலத்துத் தோன்றவில்லை எனினும், பண்டு தோன்றிய பாடல்களைப் பொருள் கொள்ளவேனும் அப்பொருள்கோள்கள் தேவையென்பதனை அவர் நினைத்துப் பார்க்கவில்லை. எவ்வகையிற் பார்த்தாலும் இவ்வாய்வை முழுமையோ நிறைவோ கொண்டதாக ஏற்கமுடியவில்லை.

'Proceedings of The First All India Conference of Dravidian Linguistics'—இல் இடம்பெற்ற "Tamil Meaning Process —'Porulkool' " என்னும் பெயரிய திரு வி. வீராசாமியின் ஐந்து பக்கக் கட்டுரையொன்று குறிப்பிடத் தகுந்ததொன்றும்.[27] பொருள்கோள் பற்றிப் பல்வேறு இலக்கண நூல்களுங் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்துஞ் சுருக்கியுந் தருகிறது இக்கட்டுரை.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை - தொகுதி ஒன்றில் (1), ச. வே. சுப்பிரமணியன் எழுதி வெளிவந்துள்ள 'நிரனிறை' என்னுங் கட்டுரையும் இவண் சுட்டத் தகுந்ததொன்றும்.[28] சொல், பொருள், யாப்பு, அணி ஆய நான்கிலக்கணங்களுள்ளும் நிரனிறை பேசப்படினும், செய்யுளிற் பயின்று வருவது என்னும் பொதுமையாலும் ஒருமையாலும் அஃது செய்யுளிலக்கணமே

என்று கூறி அமைகின்றது இக்கட்டுரை. பொருள்கோள் வகைகளுள் நிரனிறை ஒன்றை மட்டும் பேசுவதோடே இதன் எல்லை அமைகின்றது.

இங்குக் குறிக்கப்பட்ட இம்மூன்று கட்டுரைகள் தவிர, 'சுரையாழ' என்ற தலைப்பில் 'செந்தமிழ்ச்செல்வி' (டிசம்பர், 1949) வழிவந்த வித்துவான். கே. குஞ்சிதபாதனார் கட்டுரையும்,[29] 'கானக நாடன் சுனையில் சுரைக்காயும், அம்மியும்' என்ற தலைப்பில் 'தமிழ்ப் பொழில்' (அக்டோபர், நவம்பர்—1962) வழிவந்த ஆசிரியர் பெயரிடப்படாத கட்டுரையொன்றுங்[30] குறிப்பிடத் தகுந்தன. ஆயின், இக்கட்டுரைகள், பொருள்கோளின் வகைகளுள் ஒன்றான மொழிமாற்றுப் பொருள்கோட்குக் காட்டப்பட்ட, 'சுரையாழ அம்மி மிதப்ப...' எனத் தொடங்கும் பாடல் யாற்றொழுக்காய்ப் பொருள் கொள்ளப்பட வேண்டுவதாம் என்பதைச் சுட்டுவதோடே அமைகின்றன.

இவை தவிர, குறிப்பிடும்படியாய்ப் பொருள்கோள் குறித்துத் தனிக் கட்டுரைகளோ, நூல்களோ வந்ததாகத் தெரியவில்லை. இங்குக் குறிக்கப்பட்ட கட்டுரைகளும் ஒருமையும் முழுமையுங் கொண்டன என்று சொல்ல முடியாது. இந்நிலையில் 'பொருள் கோள்' பற்றிய இவ்வாய்வு தொடரப்படுகிறது.

பின்குறிப்புகள்

1. இப்பாடல்கட்குக் கிடந்தாங்கே பொருள் கூறப்பட்டிருப்பதனைப் 'பொருள்கோளின் வகைகள்' என்ற இயலின் பின் குறிப்பிற் காணலாம்.
2. க. ப. அறவாணன் (ப—ர்., உ—ர்)., *அபிநயம்*, (சைன இளைஞர் மன்றம், சென்னை—17) ஏப்ரல், 1975.
3. மயிலை. சீனி. வேங்கடசாமி, *மறைந்துபோன தமிழ் நூல்கள்*, ப-ள். 16-30.
4. உ. வே. சாமிநாதையர் (ப—ர்)., *நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்*, நூ. 359 இன் உரை, பக். 236.
5. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, நூ. 95 இன் உரை, பக். 305.
6. ஷை. நூ. 15 இன் உரை., பக். 55.
7. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்), *அமுத சாகரம்*, (சைன இளைஞர் மன்றம், சென்னை-17) டிசம்பர், 1974.

8. ச. தண்டபாணி தேசிகர் (ப-ர்), *புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை*, பக். 7-8.

9. *நன்னூல்*, நூ. 9.

10. டாக்டர் செ. வை. சண்முகம் (ப-ர், உ-ர்), *சுவாமிநாதம்*, (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்), 1975.

11. த. சரவணத் தமிழன், *தமிழ் நூல் பாவும் உரையும்*, பக். 15.

12. ''பொருளணியை வடநூலிற் சிறந்த மகாகவியாகிய காளிதாஸர் உவமையணி முதல் ஏதுவணியீருக நூறணிகள் விளங்க இலக்கண விலக்கியமமைந்த சுலோகங்களாக வியற்றிச் சந்திராலோகமெனப் பெயரிட்டனர். அந்நூலுக்குப் பெயர் பெற்ற மகாவித்துவான் அப்பைய தீக்ஷித ருரையிட்டு ஆங்காங்குற்ற பல சுலோகங்களை யுதாரணங்களாகக் காட்டியும், அவற்றிற் கின்றியமையா வலங்காரங்களை வாக்கியரூபமாகத் தெரிவித்தும் நூற்றுக்கு மேலூற்ருக இரஸவதலங்கார முதல் ஏகவாசகாநுப்பிரவேச ஸங்கராலங்கார மீருக இருபதணிகளைச் சேர்த்தும் குவலயாநந்தமெனப் பெயருள்ள வோர் நூலாக முடித்தனர்''

—முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர், 'முகவுரை', *குவலயாநந்தம்*, ப-ள். 5-6.

13. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் (ப-ர்)., *குவலயானந்தம் 1, 2. சந்திராலோகம்*, பக்.36.

14. S.Swaminātha Aiyar, **A Lecture on Tamil Grammars and Grammarians**, P.7.

15. டாக்டர். உ. வே. சாமிநாதையர், *சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்*, பக். 35.

16. ஆ. சபாபதியா பிள்ளை, *துறைசைச் சதாலங்காரம்*, (ஆரியப் பிரகாசினி அச்சுக்கூடம்), சுபானுஸு, மகரமீ, 1884.

17. காண்க: *தமிழ் நூல் விவர அட்டவணை*, தொகுதி 1, பகுதி 1, பக். 324.

18. பழந்தண்டலம். சைவ. திருஞான சம்பந்த முதலியார், *ஆரணச் சைல ரலங்கார பஞ்சகம்*, (ஸ்காட்டிஷ் பிரஸென்னும் இயந்திரசாலை) சார்வாரிஸு, ஆனிமீ.

இந்நூலினை, 'ஆரண சைல பஞ்சகம்' என்று குறிக்கும் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இந்நூல் பற்றிய செய்தி ஏதுந் தெரிந்திலது என்று தாம் பதித்த 'குவலயானந்தம் 1,2. சந்திராலோகம்' எனும் நூலிற் குறித்துள்ளார்.

காண்க : டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் (ப-ர்), 'தமிழில் அணியிலக்கணம்', குவலயானந்தம் 1,2. சந்திராலோகம், பக். 7.

ஆயின், 'ஆரணச் சைலரலங்கார பஞ்சகம்' எனும் இந்நூல் பற்றிய முழு விவரங்களையும் இவ்வாய்வாளற்குக் கூறி, நூல் கிடைக்கவும் ஆவன செய்தவர் புலவர்மணி. மு. சண்முகம் பிள்ளை அவர்களாவர்.

19. சதாவதானம்—முத்துசாமி ஐயங்கார், சந்திராலோகமூலம் (தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு), 1909.
20. சோம இளவரசு, இலக்கண வரலாறு, பக். 82.
21. இப்பெயர் அமிர்தசாகரர், அமித சாகரர் என்றுங் குறிக்கப்படுகின்றது. சிறப்புப் பாயிரம் 'அளப்பருங் கடற்பெயர் அருந்தவத்தோன்' என்று குறித்தலால், 'அமித சாகரர்' என்ற பெயரே பொருத்தமுடைத்தென்பர். (அளப்பரும்—அமித; கடற்பெயர்—சாகரர்). ஆயின், நேமிநாதம் மற்றும் வீரசோழிய உரைகளில் 'அமுதசாகரர்' என்றே காணப்படுகின்றது. மேலும், 'நீடூர்' எனும் ஊரிற் கிடைத்த கல்வெட்டும், 'அமுதசாகரன் நெடுந்தமிழ்த் தொகுத்த காரிகை' என்றே குறிக்கிறது. எனவே, இவ்வாய்வின் கண் 'அமுதசாகரர்' என்றே குறிக்கப்படுகின்றது.
22. யாப்பருங்கலம், நூ.14.
23. யாப்பருங்கலக் காரிகை, கா. 43.
24. ,, கா. 44.
25. எஃப். எக்ஸ். சி. நடராசா, 'பொருள்கோள்', செந்தமிழ், தொகுதி 54; பகுதி 5., ப-ள் 137-138.
26. தி. சங்குப்புலவர், 'பொருள்கோள் ஆராய்ச்சி', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 41; பரல் 11., ப—ள். 504-511.
27. V. Veerasamy, 'Tamil Meaning Process—Porulkool', **Proceedings of the first all India conference of Dravidian Linguistics,** pp. 162-167.
28. எஸ். வி. சுப்பிரமணியன், 'நிரனிறை' இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-1, ப-ள். 199-203.
29. கே. குஞ்சித பாதனார், 'சுரையாழ', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 29; பரல் 4, ப-ள், 161-164.
30. ஆசிரியர் பெயர் இல்லை, கானகநாடன் சுனையில் சுரைக்காயும் அம்மியும், தமிழ்ப் பொழில், துணர் 38, மலர் 6, 7., ப-ள். 215-219.

2. வரையறையும் விளக்கமும்.

2.1. முன்னுரை.

2.2. பொருள்கோள்.

2.2.1. வரையறை.

2.2.1.1. பொருள்.

2.2.1.2. கோள்.

2'2.1.3. பொருள்கோள்.

2.2.2. விளக்கம்.

2.2.2.1. பொருள்கோளும் பெயரீடும்.

2.2.2.2. கூறும் நூல்கள்.

2.2.2.3. வேறு பெயர்கள்.

2.2.2.3.1. தொல்காப்பியமும் பொருள்கோளென் பெயரும்.

2.2.2.4. வேறு பொருள்கள்.

2.3. முடிவுரை.

2.1. முன்னுரை:-

> ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து''[1]

என்றார் மணிவாசகப் பெருமான். எனவே பொருள் உணர்ச்சி யின்றி ஒரு பாடலைப் படிப்பதானேரும் பயன் ஏதுமின்றாம். ஒரு பாடலின் பொருளைச் சரியாகவுந் தவறின்றியும் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அதற்குப் பொருள்கோள் பற்றிய இலக்கண அறிவு மிகவுந் தேவையாகும் என்பது முன்னுரையிலுஞ் சுட்டப் பட்டது.

எல்லாச் செய்யுள்களுங் கிடந்தாங்கே பொருள் தந்து விடுவ தில்லை. எதுகை, மோனை முதலிய தொடையழகுகளால் உண் டாகுஞ்செய்யுளின்பம் நோக்கியும், இயல்பான அடிப்படைஅமைப் பினின்றுந் தொடர்களை மாற்றியமைப்பதான் நிகழும் நுட்பமான பொருட்சிறப்பு கருதியும் செய்யுள்களிற் சில சொற்களைப் புலவர் கள் முன்னும் பின்னும் முறை மாற்றி அமைக்கின்றனர். இவ்வாறு செய்யுள்களின்கண் மாற்றியமைக்கப்பட்ட சொற்களை முறைப்படுத்திப் பொருள் கொள்ளப் பொருள்கோள் பற்றிய இலக்கண அறிவு மிகவுந் தேவையாகும்.

2.2. பொருள்கோள் :-

பொருள், கோள்—என்ற இருசொற்களின் கூட்டே 'பொருள் கோள்' என்பதாகும். கட்டுப்படு, வழிபடு, நிலைபெறு போன்ற வினைகள் முறையே கட்டுப்பாடு, வழிபாடு, நிலைபேறு என்று பெயர் களாயவாறு போல, 'பொருள்கொள்' என்ற வினையும் 'பொருள் கோள்' என்று பெயராயிற்று.

'பொருள்கோள்' — என்பது 'பொருளைக் கொள்ளும் முறை' என்று விரிந்து பொருள் தருகிறது.

2. 2. 1. வரையறை:-

2. 2. 1. 1. பொருள்:-

'பொருள்' என்பதற்குப் பல பொருள்களைக் காணமுடிகிறது. சொற்பொருள், தத்துவம், மெய்மை, கல்வி, அறிவு, அறம், பயன், துறக்கம், இறை, பொன், விரகு, சுணங்கு, தலைமை போன்ற

இருபத்தேழு (27) பொருள்களைக் காட்டுகளுடன் தருகிறது தமிழ்ப் பேரகராதி.[2]

'பொருள்கோள்' என்பதன் கண்ணுள்ள 'பொருள்' என்பதற்குச் 'செய்யுளின் பொருள்' என்பது கருத்தாகும்.

2. 2. 1. 2. *கோள்:-*

'கொள்' என்பது முதனிலை திரிந்த தொழிற்பெயராய்க் 'கோள்' என்றாயிற்று. 'கோள்' என்பதற்குக் கொள்ளுகை, துணிபு, மதிப்பு, வலிமை, தன்மை, பொய், தீமை, கொலை, இடையூறு, பாம்பு போன்ற இருபத்தொரு (21) பொருள்களைத் 'தமிழ்ப் பேரகராதி' தருகிறது.[3]

'பொருள்கோள்' என்பதன் கண்ணுள்ள 'கோள்' என்பது 'இச்செய்யுட்கு இது பொருள்' என்று கொள்ளுதல், அல்லது துணிதலைக் குறித்தலின், முதலிரு பொருள்களும் பொருத்தமுடையனவாய்த் திகழ்தருகின்றன.

2. 2. 1. 3. *பொருள்கோள்:-*

பொருள்கோளின் வகைகளைக் கூறி, அவை ஒவ்வொன்றையும் விளக்கும் இலக்கண நூல்கள், 'பொருள்கோள்' என்றால் என்ன என்று விரிவாகவுந் தனியாகவும் விளக்கிக் கூறவில்லை. 'பொருள்கோள்' என்ற சொல்தானும் 'தான் விளங்கி' (Self-explanatory) யாக அமைந்து விட்டதே இதற்குக் காரணியமாகலாம்.

'யாப்பு தொடை போன்ற பலவற்றைக் கருதிச்
செய்யுளின்கண் கோக்கப் பெற்ற சொற்களைப்
பொருட்கியைய அமைத்துப் பொருள்கொள்ளலே
பொருள்கோள் ஆகும்'

என்று பொருள்கோளை வரையறை செய்யலாம். இப்பொருள்கோளை 'அந்வயம்' என்பர் வடநூலார்.

2. 2. 2. *விளக்கம்:-*

2. 2. 2. 1. *பொருள்கோளும் பெயரீடும்:-*

ஒரு செய்யுளின்கண் அடிப்படைத் தொடரமைப்புடன் பொருந்திக் கிடக்குஞ் சொற்களைக் கிடந்தாங்கே இயல்பின் நடாத்திப் பொருள் கொள்ளலை 'யாற்றுநீர்ப் பொருள்கோள்' என்று குறித்தனர்.

அடிப்படைத் தொடரமைப்பினின்றும் மாறிக் கிடக்கின்ற சொற்களை முறைப்படுத்திக் கொள்ளும் வகைகட்கிடப்பட்ட பெயர்களே நிரனிறை முதலியனவாம். எனவே, யாற்றுநீர் ஒழிந்த பொருள்கோள்களின் பெயர்களனைத்தும் 'மாறி நின்றவற்றை முறைப்படுத்திக் கொள்ளும் வகைகட்கிடப்பட்டனவே' என்பது போதரும்.

2. 2. 2. 2. *கூறும் நூல்கள்:-*

தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் போன்ற நூல்கள் சொல்லிலக்கணத்திலும், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆய நூல்கள் அணியிலக்கணத்திலும் பொருள்கோள்களைப் பேசுகின்றன.

இறையனார் அகப்பொருள், வீரசோழியம் போன்ற நூல்கள் பொருளிலக்கணத்திலும், அமுதசாகரம், அவிநயம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆய நூல்கள் யாப்பிலக்கணத்திலும் பொருள்கோள்களைப் பெயரளவிற் குறித்துச் செல்கின்றன. அவற்றின் உரையாசிரியர்கள் விரித்துச் சொல்கின்றனர்.

2. 2. 2. 3. *வேறு பெயர்கள் :-*

தொல்காப்பியம் 'பொருள்கோள்' என்று குறிக்கவில்லை; 'மொழிபுணர் இயல்பு' என்றே குறித்தது. 'பொருள்புணர் இயல்பு' என்று பாடங்கொண்டார் தெய்வச்சிலையார்.[4] எழுத்ததிகாரத்தில் இயல்பு, விகாரப் புணர்ச்சிகளையும் 'மொழிபுணர் இயல்பு' என்றே தொல்காப்பியர் குறித்தார் ஆகலான்,[5] அதனினின்றும் வேறுபாடு தோன்ற 'பொருள்புணர் இயல்பு' என்ற பாடத்தைத் தெய்வச்சிலையார் தேர்ந்தனராகலாம். 'மொழிபுணர் இயல்பு' என்னும் போது 'மொழிகள் தம்முட் புணரும் இயல்பு' என்றும், 'பொருள் புணர் இயல்பு' என்னும்போது 'பொருட்காக (மொழிகள்) புணரும் இயல்பு' என்றும் பொருள்கோடல் வேண்டும்.

இறையனார் அகப்பொருள் 'கோள்' என்றும், நேமிநாதம் 'பொருள்' என்றுஞ் சுட்டின. 'பொருளடைவு' என்று வீரசோழியமும் 'பொருணடை' என்று வீரசோழிய உரையுங் குறித்தன. 'பொருள்கோள்' என்றே வேண்டின யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, முத்து வீரியம், தமிழ்நூல் ஆய நூல்கள். தொன்னூல் விளக்கத்திற் 'கோள்', 'பொருள்கோள்' ஆய இரு குறியீடுகளுங் காணப்படுகின்றன.

பொருள்கோட்கு இலக்கணப் புலவர்கள் வேண்டிய குறியீடுகள் வரும் பக்கத்திலமையும் அட்டவணையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பொருள்கோள் - பெயர் விகற்ப அட்டவணை.

அட்டவணை எண் : 2.

வரிசை எண்	பெயர்கள்	கூறும் நூல்கள்	நூற்பா எண்கள்
1	மொழி புணரியல்பு	தொல்காப்பியம்	886
2	கோள்	இறையனாரகப்பொருள்	56, 57
	,,	தொன்னூல் விளக்கம்	325
3	பொருளடைவு	வீரசோழியம்	கா. 89
4	பொருணடை	வீரசோழிய உரை	கா. 89இன் உரை
5	பொருள்	நேமிநாதம்	192
6	பொருள்கோள்	யாப்பருங்கலம்	95
		யாப்பருங்கலக்காரிகை	43, 44
		நன்னூல்	411,414,417
		இலககண விளக்கம்	361,364,367
		இலக்கணக் கொத்து	108
		தொன்னூல் விளக்கம்	305
		முத்து வீரியம்	1282
		தமிழ்நூல்	430

2. 2. 2. 3. 1. *தொல்காப்பியமும் பொருள்கோளென் பெயரும்:-*

தொல்காப்பியம் 'மொழி புணரியல்பு' என்றே கூறினும், அடிமறி மாற்று இயல்பு கூறுழிப் 'பொருள் தெரி மருங்கின்' என்றும்[6] மொழி மாற்று இலக்கணஞ் சொல்லுழிப் 'பொருள் எதிர் இயைய முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்', என்றுங்[7] குறித்தலின், சொற்களை மாற்றுதல் 'பொருள் கோளுக்காகவே' என்பது இனிது பெறப்படுகிறது. 'மொழிபுணர் இயல்பு' என் பதைப் 'பொருள்புணர் இயல்பு' என்று தெய்வச்சிலையார்கொண்ட பாடமும் மேற்கருத்தை உறுதி செய்யும். செய்யவே, பின்னூலார் 'பொருள் கோள்' என்று பெயர் கொண்டமைக்கான வித்துத் தொல்காப்பியத்திற் கிடந்தமை தெள்ளிதின் விளங்கும்.

2. 2. 2. 4. வேறு பொருள்கள்:-

'பொருளைக் கொள்ளுதல்' என்பதே 'பொருள்கோள்' வெளிப் படுத்துஞ் சொற்பொருளாகும்.

ஆவும்ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பதாகிய ஆரிட மணத்தைப் 'பெருள்கோள்' என்று குறித்தார், இறையனார் அகப்பொருள் உரையுடையார்.

செய்யுள்களினின்றும் நாம் பொருள் கொள்ளுதலையே 'பொருள்கோள்' என்று எல்லா இலக்கணப் புலவர்களுஞ் சொல்ல, பெருந்தேவனாரோ, 'செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்றலைப்' 'பொருள்கோள்' என்று குறித்தார், தமது வீரசோழிய உரையில்.

'இலக்கணக் கொத்து' ஆசிரியர் சுவாமிநாத தேசிகர், அந் நூலுரையில், செய்யுட்குப் பொருள்கொள்ளும் முறைகளையே யன்றி, வேறு இரண்டனையும் 'பொருள்கோள்' என்ற பெயராற் குறிக்கிறார். அவையாவன:-

(அ) பொருள், அதிகாரம், முன்னம், உத்தி, வெளிப்படை, குறிப்பு, மெய்ப்பாடு, அன்மொழி, ஒட்டு, ஆகுபெயர், உவமை, இறைச்சி, உபகாரம், ஆசை, உண்மயக்கு என்னும் இவை கரணியமாக இடனறிந்து சொற்குப் பொருளுரைப்பர் என்ற ஆசிரியர் இவற்றைப் 'பொருள்கோள்கள்' என்று குறிக்கின்றார்.

(ஆ) உயர்திணை, அஃறிணையியற் பெயர்கள் (2), உயர்திணை, அஃறிணைப் பொருள்களிற் சாதியொருமை பன்மைகள் (4), ஒரு சொல் நின்று தனித்தனி உதவுதல் (1)என்னும் இவ்வேழும் நின்ற நிலை தப்பிப் பிரிந்து பொருள் தரும் என்று கூறும் ஆசிரியர் இவற்றையும் 'பொருள்கோள்கள்' என்கின்றார்.

'பொருள்கோள்' எனுஞ்சொல் ஆரிட மணத்தோடு ஆசுர (அசுர) மணத்தையுங் குறிக்கும் என்று கூறுகிறது தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon). மதுரைத் தமிழ்ப் பேரகராதியோ ஆரிடம் முதலிய எண்வகை மணத்தையுங் குறிக்கும் என்று கூறு கிறது.[8] 'பொருள்கோள்' என்பதற்குப் பயனில்லை என்ற பொருள் உண்மையையுங் காண முடிகிறது.

பொருள்கோட்குரிய பொருள்களை வரும் பக்கத்திலமையும் அட்டவணை தொகுத்துக் காட்ட முயல்கிறது.

பொருள்கோள் - பொருள் விகற்ப அட்டவணை.

அட்டவணை எண் : 3.

வரிசை எண்	'பொருள்கோளின்' பொருள்கள்	அப்பொருள் படக் கூறும் நூல்கள்	சான்று விவரங்கள்
1	பொருளைக் கொள்ளுதல்	—	சொற் பொருள்.
2	ஆரிட மணம்	இறையனாரகப் பொருளுரை	இ.அ.பொ. நூ. 1 இன் உரை.
3	செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் நிலை.	வீரசோழிய உரை.	வீ.சோ., கா. 89. இன் உரை.
4	சொற்குப் பொருள் கூறக் கரணியமாகும் இடங்கள்,15	இலக்கணக் கொத்து உரை	இ.கொ. நூ. 129 இன் உரை.
5	நின்ற நிலையினின்று தப்பிப் பொருள் தருவன 7	,,	இ.கொ. நூ.130 இன் உரை.
6	ஆரிடம் மற்றும் ஆசுர மணங்கள்	தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon, University of Madras)	தொகுதி : 5 பகுதி :1 பக்கம். 2936.
7	ஆரிடம் முதலிய எண்வகை மணங்கள்	மதுரைத் தமிழ்ப் பேரகராதி (இ மா. கோபால கிருஷ்ணக் கோன்)	பக்கம் 318.

8	பயனிலே	இருபதாம் நூற்ருண்டுத் தமிழ்ப் பேரகராதி (The twentieth century Tamil Dictionary)	பகுதி 2; பக்கம். 27.
9	செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறைகள் நிரனிறை முதலியன	இலக்கண நூல்கள்	யாப்பருங்கலம், நூ.85. யாப்பருங்கலக் காரிகை,கா.43. நன்னூல், நூ. 411. இலக்கண விளக்கம் நூ. 361. இலக்கணக் கொத்து, நூ. 108. தொன்னூல் விளக்கம், நூ.305. முத்துவீரியம், நூ. 1282. தமிழ் நூல், நூ. 430.

2.3. *முடிவுரை:-*

'செய்யுட்குப் பொருள் கொள்ளும் முறைகளை' ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடுகளால் இலக்கணப் புலவர்கள் குறித்துள்ளனர் என்றும், அக்குறியீடுகளில் பெரும்பாலோரால் ஆளப்பட்டதும், மிகுதியும் வழக்கிலுள்ளதுமான 'பொருள்கோள்' என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன என்றுங் காட்டப்பட்டன.

'செய்யுட்கண் பொருள்கொள்ளப்படும் முறைகளே' பொருள்கோள் என்று இவ்வாய்வின்கண் பேசப்படுகின்றன.

பின் குறிப்புகள்

1. *திருவாசகம், சிவபுராணம்*, அடிகள் : 93—95.
2. *தமிழ்ப் பேரகராதி* (Tamil Lexicon), தொகுதி 5; பகுதி 1, பக், 2935—2936.
3. ஷெ., தொகுதி 2; பகுதி 1; பக். 1202.
4. தெய்வச்சிலையார் (உ-ர்.), *தொல்காப்பியம் சொல்லதிகாரம்*, பக். 222.
5. தொல்காப்பியம், நூ. 108.
6. ,, நூ. 890.
7. ,, நூ. 891.
8. ஆரிடந் தவிர்ந்த ஏனைய மணங்களைப் 'பொருள்கோள்' எனும் பெயரால் வழங்கல் எவ்வண் பொருந்தும் என்பது விளங்கவில்லை.

3. வகைகள்.

3.1. முன்னுரை.
3.2. இலக்கணப் புலவர்களும் பொருள்கோள் எண்ணிக்கையும்.
3.3. பொருள்கோளின் வகைகள்.
3.3.1. தொல்காப்பியஞ் செப்பும் பொருள்கோள்கள்.
3.3.1.1. நிரனிறை.
3.3.1.1.1. முறையும் எதிரும்.
3.3.1.1.1.1. முறை நிரனிறை.
3.3.1.1.1.2. எதிர் நிரனிறை.
3.3.1.1.2. பெயரும்வினையும்.
3.3.1.1.2.1. பெயர் நிரனிறை.
அ. பெயர்முறை நிரனிறை.
ஆ. பெயர் எதிர் நிரனிறை.
3.3.1.1.2.2. வினை நிரனிறை.
அ. வினைமுறை நிரனிறை.
ஆ. வினை எதிர் நிரனிறை.
3.3.1.1.3. பிற நிரனிறைகள்.
3.3.1.2. சுண்ணம்.
3.3.1.2.1. ஈரடியெண்சீர்.
3.3.1.2.2. தெய்வச்சிலையாருஞ் சுண்ணமும்.
3.3.1.2.3. ஏனைய பொருகோள்களுஞ் சுண்ணமும்.
3.3.1.3. மொழிமாற்று.
3.3.1.3.1. மொழிமாற்றுஞ் சுண்ணமும்.
3.3.1.4. அடிமறி.
3. 3. 1. 4. 1. நூற்பா நுவல்வது.
3. 3. 1. 4. 1. 1. உண்மை வடிவம்.
3. 3. 1. 4. 1. 2. விதப்புக் கிளவி.
3. 3. 1. 4. 2. புறனடை நூற்பா.
3. 3. 1. 4. 2. 1. இளம்பூரணர்.
3. 3. 1. 4. 2. 2. சேனாவரையர் & தெய்வச் சிலையார்.
3. 3. 1. 4. 2. 3. நச்சினார்க்கினியர்.
3. 3. 1. 4. 2. 4. உண்மைப் பொருளெது?

3. 1. முன்னுரை:-

செய்யுளின்கண் கிடக்குஞ் சொற்களைப் பொருள் இயையு மாற்றான் நிறீஇக் கோடலே பொருள்கோள் ஆகும் என்பது முன்னர்க் காட்டப்பட்டது. இப்பொருள்கோள் பற்றிய கோட்பாட்டிற் பண்டைய இலக்கணப் புலவர்கள் தம்முள் கருத்து வேறுபடுகின்றனர். ஒருவர் சுட்டிய பொருள்கோளை இன்னொருவர் சுட்டாமற் போதல், ஒருவர் கூறிய ஒரு பொருள்கோளைப் பின் வருவோர் இரண்டாகப் பகுத்து இருபெயரிட்டுக் கூறல், ஒருவர் ஒரு பொருள்கோட்குக் காட்டிய பாடலை மற்றொருவர் வேறொரு பொருள்கோட்குக் காட்டுதல் என்றின்னவாறு பற்பல வேறுபாடுகள் பண்டைய இலக்கண அறிஞர்களிடையே காணப்படுகின்றன. இந்நிலையில், இலக்கணப் புலவர்கள் கண்ட பொருள்கோள் வகைகள் ஒவ்வொன்றைப் பற்றியுங் காண வேண்டியது தேவையாகின்றது.

3. 2. இலக்கணப் புலவர்களும் பொருள்கோள் எண்ணிக்கைகளும்:-

தொல்காப்பியர் பொருள்கோளின் வகைகளை நான்கென்று காட்ட, இரட்டிப்பாக்கி எட்டென்று சுட்டுகின்றார் பவணந்தியார். நேமிநாதமோ ஒன்பது என்கின்றது. எந்தெந்த இலக்கண நூல்கள் எத்தனையெத்தனை வகைகளைப் பொருள்கோளிடை வேண்டின என்பதை வரும் பக்கங்களிலமையும் இரு அட்டவணைகள் இனிது புலப்படுத்தும்.

முதற்கண் அமைந்துள்ள நான்காம் எண்ணிட்ட அட்டவணை நூல்களின் காலவரிசையில் அமைந்துள்ளது. தொடர்ந்து இடம் பெற்றுள்ள ஐந்தாம் எண்ணிட்ட அட்டவணையோ பொருள்கோள் வகைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டமைந்தது. பொருள்கோட் கோட்பாட்டில் காலந்தோறும் ஏற்பட்டு வந்த மாற்றத்தினைக் காண முதல் அட்டவணையும், ஒத்த கருத்துடைய நூல்களை ஒருங்கு வைத்து ஒப்பு நோக்க அடுத்த அட்டவணையும் மிக்குத் துணைபுரியும்.

பொருள்கோள் - எண்ணிக்கை விகற்ப அட்டவணை.

(நூல்களின் கால வரிசையில்)

அட்டவணை எண் : 4

தொடர் எண்.	நூல்களின் பெயர்கள்	பொருள்கோள் வகைகள்	சான்று விவரங்கள்
1	தொல்காப்பியம்	4	நூ. 886
2	இறையனாரகப்பொருளுரை	5	இ. அ. பொ., நூ. 56 இன் உரை
3	அவிநயம்	20	யா. க., நூ. 95 இன் விருத்தியுரை மேற்கோள் & அவிநயம், 106
4	அமுதசாகரம்	4	யா. க., நூ. 95இன் விருத்தியுரை மேற்கோள் & அமுதசாகரம், நூ. 68
5	யாப்பருங்கல விருத்தியுரை	9	யா. க., நூ. 95 இன் விருத்தியுரை
6	யாப்பருங்கலக் காரிகையுரை	9	யா. கா., கா. 43 & 44 இன் உரை
7	வீரசோழிய உரை	5	வீ. சோ., கா. 89 இன் உரை
8	நேமிநாதம்	9	நூ. 92
9	நம்பியகப்பொருளுரை	9	நம்பி., நூ. 233 இன் உரை
10	நன்னூல்	8	நூ. 411
11	இலக்கண விளக்கம்	8	நூ. 361
12	இலக்கணக் கொத்து	9	நூ. 108
13	தொன்னூல் விளக்கம்	8	நூ. 305
14	சுவாமிநாதம்	8	நூ. 69
15	முத்துவீரியம்	8	நூ. 1279 – 1286
16	தமிழ்நூல்	2	நூ. 431

பொருள்கோள் - எண்ணிக்கை விகற்ப அட்டவணை.

(எண்ணிக்கையின் ஏறு வரிசையில்)

அட்டவணை எண் : 5

தொடர் எண்	நூல்களின் பெயர்கள்	பொருள்கோள் வகைகள்	சான்று விவரங்கள்
1	தமிழ் நூல்	2	நூ. 431
2	தொல்காப்பியம்	4	நூ. 886
3	அமுதசாகரம்	4	யா.க., நூ. 95 இன் விருத்தியுரை மேற்கோள் & அமுதசாகரம், நூ. 68
4	இறையனாரகப்பொருளுரை	5	இ.அ.பொ., நூ. 59 இன் உரை
5	வீரசோழிய உரை	5	வீ.சோ., கா. 89 இன் உரை
6	நன்னூல்	8	நூ. 411
7	இலக்கண விளக்கம்	8	நூ. 361
8	தொன்னூல் விளக்கம்	8	நூ. 305
9	சுவாமிநாதம்	8	நூ. 69
10	முத்துவீரியம்	8	நூ. 1279—1286
11	யாப்பருங்கல விருத்தியுரை	9	யா.க., நூ. 95 இன் விருத்தியுரை
12	யாப்பருங்கலக் காரிகையுரை	9	யா.கா., கா. 43 & 44 இன் உரை
13	நேமிநாதம்	9	நூ. 92
14	நம்பியகப்பொருளுரை	9	நம்பி., நூ. 233 இன் உரை
15	இலக்கணக் கொத்து	9	நூ. 108
16	அவிநயம்	20	யா.க., நூ. 95 இன் விருத்தியுரை மேற்கோள் & அவிநயம், 106

3. 3. *பொருள்கோளின் வகைகள்:—*

நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்னும் நான்கைக் கூறுகிறது தொல்காப்பியம். இவற்றுள் முதன் மூன்றுடன் அடிமொழி மாற்றைச் சேர்த்து நான்கென்கின்றது அமுதசாகரம்.

தொல்காப்பியஞ் சுட்டியவற்ரேடு அடிமொழிமாற்று, விற்பூட்டு, யாற்றுவரவு, தாப்பிசை, அளைமறிபாப்பு என்னும் ஐந்தையுங் கூட்டி ஒன்பது என்கிறது நேமிநாதம் மொழி மாற்றைக் 'கொண்டுகூட்டு' என்று கொள்ளுஞ் சிறு திருத்தத்தோடு யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, நம்பியகப்பொருளுரை ஆயவைகள் நேமி நாதத்தொடு ஒத்து விளங்குகின்றன.

யாப்பருங்கல விருத்தியுரை முதலியவை குறித்த வகை களுள் 'அடிமொழி மாற்றை' விடுத்தும், 'சுண்ணத்தை' 'மொழி மாற்று' என்று பெயர் மாற்றியும், ஏனையவற்றை அப்படியே உடன் பட்டும் எட்டு என்கிறது நன்னூல்.

நன்னூற்குப் பின்வந்த இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆய நூல்கள் அனைத்தும் சிறிதும் மாற்றமின்றி நன்னூலை அப்படியே பின்பற்றுகின்றன.

அவிநயனார் இருபது வகைப் பொருள்கோள்களைக் குறித்தார் என்பது யாப்பருங்கல விருத்தியுரையால் அறியக் கிடக்கிறது. விற்பூட்டு, விதலை யாப்பு, பாசிநீக்கு, கொண்டுகூட்டு, ஒருசிறை நிலை என்னும் ஐந்தும் இறையனாரகப் பொருளுரையுடையாரால் குறிக்கப்படுவனவாம். வீரசோழிய உரையாசிரியர் இப்பொருள் குறித்துப் பொருள்கோள் (கோள்), பொருணடை (பொருளடைவு) எனும் இரு தலைப்புகளில் மற்றவர்களினின்றுஞ் சற்றே வேறு பட்டுப் பேசுகிறார்.

இருபதாம் நூற்றுண்டிற் பாவடிவில் எழுந்த இலக்கண நூலாம் 'தமிழ்நூலோ' பொருள்கோளில் யாற்றுநீர், கொண்டு கூட்டு எனும் இரு பகுப்புகளையே வேண்டுகிறது.

இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுங் குறித்த பொருள்கோள்கள் எல்லாம் எதிர்ப்பக்கத்து அட்டவணையில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன.

இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுங் குறித்த பொருள்கோள் வகைகள் அட்டவணை

அட்டவணை எண் : 6.

பொருள்கோள்கள்	நூல்கள்														
	தொல்.	இ. அ. உ.	* அவி.	அமுத.	யா. வி. உ.	யா.கா. உ.	வீ. சோ. உ +	நேமி.	நம்பி. உ.	நன்	இ. வி.	தொ. வி.	சு. நா.	மு. வீ.	தூ. நூ.
அசோகு							X								
அடிமறிமாற்று	X		X	X	X	X		X	X	X	X	X	X	X	
அடிமொழிமாற்று			X	X	X	X		X	X						
அளைமறிபாப்பு			X		X	X	X	X	X	X	X	X	X	X	
ஒருசிறை நிலை		X													
கரும்பு							X								
கொண்டுகூட்டு		X	X		X	X	X		X	X	X	X	X	X	X
சுண்ணம்	X		X	X	X	X	X	X	X						
தாப்பிசை			X		X	X		X	X	X	X	X	X	X	
நிரனிறை	X		X	X	X	X	X	X	X	X	X	X	X	X	
பலா							X								
பாசிநீக்கம்		X													
புனல்யாறு			X		X	X	X	X	X	X	X	X	X	X	X
மொழிமாற்று	X						X	X		X	X	X	X	X	
வள்ளி							X								
வாழை							X								
விதலையாப்பு		X													
விற்பூட்டு		X	X		X	X	X	X	X	X	X	X	X	X	

அட்டவணை விளக்கம் :—

* "நிரனிறை, சுண்ணம், அடிமறிமொழி மாற்று, அடிமொழி மாற்று என்னும் இந்நான்கினோடும், பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு என்னும் இவ்வைந்து செய்யுட்பொருட்கோளும் உறழ, இருபதாம்...இருபது வகையானுங் காட்டினார் அவிநயனார்"

—என்று குறித்தார் குணசாகரர் தமது யாப்பருங்கல விருத்தியுரையில்.[1] (வருகின்ற அட்டவணைக்கும் இவ்விளக்கங் கொள்க.)

+ அசோகு, கரும்பு, பலா, புனல்யாறு, வள்ளி, வாழை, விற்பூட்டு ஆயவற்றைப் 'பொருள் கோள்' என்ற தலைப்பிலும், அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, சுண்ணம், நிரனிறை, மொழி மாற்று ஆயவற்றைப் 'பொருணடை' என்ற தலைப்பிலும் பேசுகிறார் பெருந்தேவனார், தமது வீரசோழிய உரையில்.

இறையனார் அகப்பொருள் உரை, யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழிய உரை, நம்பியகப் பொருளுரை—ஆயஉரை நூல்களின் பொருள்கோட் கோட்பாடுகள் குறித்துத் தனியே 'உரைநூல்களும் பொருள் கோள்களும்' என்ற தலைப்பிற் பேசவுள்ளதால், இலக்கண மூலநூல்கள் சுட்டும் பொருள்கோள் வகைகள் மட்டுமே இவ்வியலின்கண் பேசப்படுகின்றன.

இலக்கண மூலநூல்கள் மட்டுஞ் சுட்டும் பொருள்கோள் வகைகள் தனியே பிரிக்கப்பட்டுக் கீழ்க்காணும் அட்டவணையின் கண் தொகுக்கப்பட்டுள்ளன.

இலக்கண மூல நூல்கள் கூறும் பொருள்கோள்கள் - அட்டவணை.

அட்டவணை எண் : 7.

பொருள் கோள்கள்	நூல்கள்									
	தொல்.	*அவி.	அமுத.	நேமி.	நன்.	இ. வி.	தொ. வி.	சு. நா.	மு. வீ.	த. நூ.
அடிமறி மாற்று	x	x	x	x	x	x	x	x	x	
அடிமொழி மாற்று		x	x	x						
அளைமறி பாப்பு		x		x	x	x	x	x	x	
கொண்டுகூட்டு		x			x	x	x	x	x	x
சுண்ணம்	x	x	x	x						
தாப்பிசை		x		x	x	x	x	x	x	
நிரனிறை	x	x	x	x	x	x	x	x	x	
புனல்யாறு		x		x	x	x	x	x	x	x
மொழிமாற்று	x			x	x	x	x	x	x	
விற்பூட்டு		x		x	x	x	x	x	x	

* முன் அட்டவணையில் அவிநயத்திற்கான குறிப்பு காண்க.

3.3.1. தொல்காப்பியஞ் செப்பும் பொருள்கோள்கள்:-

நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்று நான்கு வகைப் பொருள்கோள்களைத் தொல்காப்பியர் சுட்டுகின்றமை முன்னரே குறிக்கப்பட்டது.

> "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
> அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே"[2]

என்பது நூற்பா. அவர் கூறும் இப்பொருள்கோள்களைக் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தி வரிமரமிடலாம்.

மொழிபுணர் இயல்பு (தொல்காப்பியம்)
(பொருள்கோள்)
நூ. 886

- சொல்லை மாற்றிக் கூட்டல்
  - நிரலே நிறைத்தல். → நிரனிறை நூ. 887
  - ஏற்ற பெற்றி முன்பின் மாற்றிக் கூட்டல்
    - ஈரடி எண்சீரைத் துணித்துக்கூட்டல். → சுண்ணம் நூ. 888
    - அத்தகைய வரையறையின்றிக் கூட்டிக் கோடல் → மொழிமாற்று நூ. 891
- அடியை மாற்றிக் கூட்டல் → அடிமறி
  - சீர்மாறுமல் அடி மட்டும் மாறல் நூ. 889
  - ஒரோவழி சீர் மாறி அடிமாறல் நூ. 890

3.3.1.1. நிரனிறை:-

முடிக்கப்படுஞ் சொற்களும், முடிக்குஞ் சொற்களும் (சொல்லும் பொருளும்) வேறு வேறு நிரலே நிற்க, அவற்றை இயைத்துப் பொருள் கோடலே 'நிரனிறைப் பொருள்கோள்' என்பதாகும். இதனை வடநூலார் 'யதாஸங்க்யம்' அல்லது 'கிரமம்' என்பதோர் அணியாக் கொள்வர்.

"அவற்றுள்
நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்"[3]

என்பது நிரனிறைக்கான தொல்காப்பிய நூற்பா.

'வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றி, முடிக்கப்படுஞ் சொல்லும் முடிக்குஞ் சொல்லும் வேறுவேறு நிற்றல் நிரனிறை யாம்' என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். தொடர்மொழிப் பொருள் முடிக்குஞ் சொற்கண்ணதாகலான் முடிக்குஞ் சொல்லைப் 'பொருள்' என்றார் தொல்காப்பியர்.[4]

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகஞ் செவ்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குஞ் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"[5]

இப்பாடலில்,

கொடி, குவளை, கொட்டை—என்பன முதலடியில் முடிக்கப் படுஞ் சொற்கள். நுசுப்பு, உண்கண், மேனி என்பன அவற்றை முடிக்குஞ் சொற்கள். கொடி போலும் நுசுப்பு, குவளை போலுங் கண், கொட்டை போலும் மேனி என்று நிரலே நிறைகின்றன. இவ்வாறு வருவனவே நிரனிறை என்னப்படுகின்றன. இப் பாடலின் அடுத்த இரு அடிகளும் இவ்வாறே கொள்ளக் கிடக் கின்றன.

3.3.1.1.1. முறையும் எதிரும்:-

நிரனிறையை முறை நிரனிறை, எதிர் நிரனிறை என்று தொல்காப்பியர் பகுக்கவில்லை; உரையாசிரியர்களே பிரிக்கின் றனர். உரையாசிரியர்களும் எதிர் நிரனிறையை 'மயக்க நிரனிறை' என்றே குறித்தனர். பவணந்தியார் எதிர் நிரனிறை யைக் குறிக்கிறார்.

"பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே."[6]


என்பது நன்னூல்.

3.3.1.1.1.1. *முறை நிரனிறை :-*

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது 'முறை நிரனிறை'யாம். இதனை 'நேர் நிரனிறை' என்றுங் கூறலாம்,

"வாக்கு முகந்தேன் மலர்க்கமலம்; வண்குவளைப்
பூக்குரும்பை வேய்க்கண் புணர்முலைதோள் — நோக்கல்குல்
மான்தேர்; மயிந்தன் மணியருவி வேங்கடத்து
தேன்தேர் குறவர் மகட்கு."[7]

இப்பாடலில், முதலடியின் முதன் மூன்று சீர்களில் வாக்கு, முகம் —என்பன முடிக்கப்படுஞ் சொற்கள்; தேன், மலர்க்கமலம்— என்பன முடிக்குஞ் சொற்கள். இவை 'வாக்கு—தேன்' என்றும், 'முகம்—மலர்க்கமலம்' என்றும் நிரலே நேரே இயைகின்றன.



AA^1, BB^1 என்று நேரே முறையாக இயைகின்றன. இவ்வாறி யைவன 'முறை நிரனிறை'யாம்.

இங்குக் காட்டிய பாடலின் எஞ்சிய பகுதியும், இவ்வாறே பொருடரக் காணலாம். முன் காட்டிய 'கொடி குவளை' எனத் தொடங்கும் பாடலுமிது.

3.3.1.1.1.2. *எதிர் நிரனிறை:-*

இது தொல்காப்பிய உரையாசிரியர்களால் 'மயக்க நிரனிறை' என்று குறியீடு செய்யப்பட்டமை முன்பே சுட்டப்பட்டது. சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி எதிராகப் பொருள் கொள்ளுதலே 'எதிர் நிரனிறை' யாகும்.

"குன்ற வெண்மணல் ஏறி நின்றுநின்
றின்னம் காண்கம் வம்மோ தோழி
களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே"[8].

'களிறுங் கந்தும் போற் கூம்புங் கலனுந் தோன்றும்' என்று கூறப்பட்டிருக்கிறது. 'களிறு போற் கூம்பும், கந்து போற் கலனுந் தோன்றும்'—என்று நேராக இயைத்துப் பொருள் கொள்ளின் உவமை பொருந்தாது. எனவே, 'களிறு போற் கலனும், கந்து போற் கூம்புந் தோன்றும்' என்று எதிராகப் பொருத்திப் பொருள் கொள்ள வேண்டும்.

களிறும் கதும் (போல) கூம்பும் கலனும் (தோன்றும்)
A B A^1 B^1

AB^1, BA^1,—என மாறி எதிராக இயைகின்றன. இவ்வாறு இயைவனவே எதிர் நிரனிறையாம்.

3.3.1.1.2. *பெயரும் வினையும்:-*

> ''நிரனிறை தானே
> வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
> சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.''[9]

என்பது நூற்பாவாகலான், தொல்காப்பியர் நிரனிறையிற் பெயர், வினை என்னும் பகுப்பைக் கருதினராதற் பெறப்படும்.

> ''வினையினும் பெயரினும் என்றதனன், வினைச்சொல்லான் வருவதூஉம், பெயர்ச்சொல்லான் வருவதூஉம், அவ்விரு சொல்லான் வருவதூஉம் என நிரனிறை மூன்றும்''[10]

என்றனர் சேனவரையர், நச்சினார்க்கினியர் ஆய உரையாசிரியர்கள்.

பெயர், வினை நிரனிறைகள் என்னும் இப்பகுப்பு முடிக்குஞ் சொல், முடிக்கப்படுஞ் சொல் ஆய இரண்டன் இயற்கையைக் கொண்டு நிகழ்த்தப் பெறுகின்றது. கீழ்க்கண்ட நான்கு வகைகளில் முடிக்கப்படுஞ் சொல்லும் முடிக்குஞ் சொல்லும் அமையலாம்.

முடிக்கப்படுஞ்சொல் (சொல்)	முடிக்குஞ்சொல் (பொருள்)
அ. பெயர்	பெயர்
ஆ. பெயர்	வினை
இ. வினை	பெயர்
ஈ. வினை	வினை

பெயரும் பெயருமாக வருவனவற்றைப் 'பெயர் நிரனிறை' என்றும், வினையும் வினையுமாக வருவனவற்றை 'வினை நிரனிறை' என்றும், பெயரும் வினையுமாகக் கலந்து வருவனவற்றைப் 'பொது நிரனிறை' என்றுங் கொண்டனர் சேனவரையரும் நச்சினார்க்கினியரும்.[11] ஆயின், இளம்பூரணரோ பெயரும் பெயருமாகவருவனவற்றைப் 'பெயர் நிரனிறை' என்றும், ஏனையவற்றை 'வினை நிரனிறை' என்றுங் கொண்டார்.[12] குணசாகரர், மயிலைநாதர் போன்றோரும் இளம்பூரணரோடு ஒத்த கருத்தினர்களே. இவர்கள்

கொண்ட கருத்தே ஏற்புடைத்தென்பது கீழ்வருங் காட்டாலும் இனிது விளங்கும்.

> ''அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
> உடலும் இரிந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
> கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
> தடமதியம் ஆமென்று தாம்''[13]

இப்பாடலில்,

'உடலும், ஓடும், மலரும், பார்க்கும்'—என்னும் வினைகளும், 'கடல், இருள், ஆம்பல், பாம்பு'—என்னும் பெயர்களும் வேறு வேறு நிரலே வந்தமையால் இதனைப் 'பொது நிரனிறை' என்றனர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

வினையும் பெயருமாக வந்தாலும், 'கடல் உடலும், இருள் ஓடும், ஆம்பல் மலரும், பாம்பு பார்க்கும் என இயையும்போது, தொடர்மொழிப் பொருள் முடிக்குஞ் சொற்களாகிய வினைகளில் நிலைபெறுவதால், இதனை, 'வினை நிரனிறை' யாய்க் கொண்டார் இளம்பூரணர். எனவே, இவரது கருத்தின் பொருத்தமுடைமை புலனாகின்றது.

3.3.1.1.2.1. *பெயர் நிரனிறை:-*

நிரலே, வேறுவேறு நிற்குஞ் சொல்லும் பொருளும் பெயர்களாய் அமைந்து நடக்கும் 'பெயர் நிரனிறை' முறை, எதிர் என்பவற்றுடன் உறழ இருவகையாம்.

அ. பெயர் முறை நிரனிறை.
ஆ. பெயர் எதிர் நிரனிறை.

அ. *பெயர் முறை நிரனிறை:-*

> ''காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்
> வார்புருவத்தால் இடையால் வாய்த்தளிரால்-நேர்தொலைந்த
> கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு
> வல்லி கவிர்மென் மலர்.''[14]

மொழி, நோக்கு, முலை, புருவம், இடை, வாய்—என்பன முடிக்கப்படுஞ் சொற்கள். கொல்லி, வேல், அரும்பு, வில், வல்லி, மலர் என்பன முடிக்குஞ் சொற்கள். 'மொழி கொல்லி, நோக்கு வேல், முலை அரும்பு, புருவம் வில், இடை வல்லி, வாய் மலர்—என்று நிரலே நிறைகின்றன.

இவ்வாறு சொல்லும் பொருளும் (முடிக்கப்படுஞ் சொற்களும், முடிக்குஞ் சொற்களும்) பெயர்களாய் அமைந்து முறையாக (நேராக) இயைவது 'பெயர் முறை நிரனிறை'யாம். முன்பு காட்டிய 'கொடி குவளை...', 'வாக்கு முகந்தேன்...' என்ற தொடக்கத்தனவாய பாடல்களும் இது.

ஆ. பெயர் எதிர் நிரனிறை:-

"வில்லம்பு வேய்தோள் விலங்கரிக்கண் வெல்புருவம்
பல்வாய் மொழித்தேன் பவளம் பனிமுத்தம்
நல்லாயூர் அன்னாள் நடைசாயல் நோக்கமான்
மல்குசீர் மஞ்ஞை பிடி."[15]

இப்பாடலின் முதலடியில் வில், அம்பு, வேய் என்பன முடிக்கப்படுஞ் சொற்கள்; தோள், கண், புருவம் என்பன முடிக்குஞ் சொற்கள். வில் தோள், அம்பு கண், வேய் புருவம்' என்று முறையே (நேராக) இயையாமல், 'வில் புருவம், அம்பு கண், வேய்தோள்' என்று மாறி (எதிராக) இயைந்தமையான் 'பெயர் எதிர் நிரனிறை' ஆயிற்று.

இவ்வாறு, சொல்லும் பொருளும் பெயர்களாய் அமைந்து எதிராக இயைவது 'பெயர் எதிர் நிரனிறை'யாம். இங்குக் காட்டிய பாடலின் எஞ்சிய பகுதியும் இவ்வாறே இயையக் காணலாம்.

3.3.1.1.2.2. *வினை நிரனிறை:-*

நிரலே, வேறு வேறு நிற்கும் முடிக்கப்படுஞ் சொல்லும் முடிக்குஞ் சொல்லும் வினையும் வினையுமாகவோ, வினையும் பெயருமாகவோ, பெயரும் வினையுமாகவோ அமைந்து நடக்கும் வினைநிரனிறையும் முறை, எதிர் நிரனிறைகளுடன் உறழ்ந்து இருவகைப்படும். அவையாவன:-

அ. *வினை முறை நிரனிறை.*

ஆ. *வினை எதிர் நிரனிறை.*

அ. வினை முறை நிரனிறை:-

"காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப! போர்ச்செழிய!—நீதியால்
மண் அமிர்தம் மங்கையர்தோள் மாற்றாரை ஏற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்"[16]

கா, து, சேர், தாழ், குழை, ஆய் என்பன, மண், அமிர்தம், மங்கையர் தோள், மாற்றுரை, ஏற்றூர்க்கு, நுண்ணியவாய பொருள் என்பவற்றோடு நிரலே இயைந்து 'கா மண், து அமிர்தம், சேர் மங்கையர்தோள், தாழ் மாற்றுரை, குழை ஏற்றூர்க்கு, ஆய் நுண்ணியவாய பொருள்' என்று பொருடரும். இது வினையும் பெயருமாய் அமைந்த 'வினை முறை நிரனிறை' ஆகும்.


ஆ. வினை எதிர் நிரனிறை:-

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."[17]

வெஃகா, பாடகம், ஊரகம் ஆய முடிக்கப்படுஞ் சொற்கள், நின்றான், இருந்தான், கிடந்தான் என்னும் முடிக்குஞ் சொற்களுடன் முறையே (நேராக) இயையாமல், மாறி (எதிராக) இயைந்து 'வெஃகாவிற் கிடந்தான், பாடகத்தில் இருந்தான், ஊரகத்தில் நின்றான்' என்று நடந்ததனால், இப்பாடல் பெயரும் வினையுமாய் அமைந்த, 'வினை எதிர் நிரனிறை' ஆயிற்று.

3.3.1.1.3. *பிற நிரனிறைகள்:-*

இங்கு இதுகாறுங் கூறப்பட்ட நிரனிறையின் வகைகளைக் கீழ்க்கண்டவாறு வரிமரமிட்டுக் காட்டலாம்.



இவற்றுள் முறை நிரனிறை, எதிர் நிரனிறை எனும் பகுப்பே பொருளுணர்ச்சிக்கு அடிப்படையானதும், மிகவும் இன்றியமையாததும் ஆகும். பொருள் கொள்ளும் முறைக்குப் பெயர் நிரனிறை, வினை நிரனிறை எனும் பகுப்புத் தரும் பயன் ஏதுமின்றாம்.

அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று நிரனிறைகள் என்றும், எழுத்து நிரனிறை, பூட்டுவில் நிரனிறை என்றும், பிறவாறும் பிற்காலத்தார் காட்டிய

நிரனிறை விகற்பமெல்லாம் மேற்காட்டிய பகுப்புகளுள்ளேயே அடங்கும்.

3.3.1.2. *சுண்ணம்:-*

> *"சுண்ணந் தானே*
> *பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்*
> *ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல்."[18]*

என்றார் தொல்காப்பியர். 'அளவடியான் அமைந்த ஈரடிக்கண் உளவாகிய எண்சீரைத் துணித்துப் பொருள் இயையுமாறறிந்து, அதன்வழிக் கூட்டி இயற்றுதல் சுண்ணப் பொருள்கோளாம்' என்பது கருத்து. 'சுண்ணம்' என்பது பொடி. பொடிபோல முடிக்கப்படுஞ்சொல்லும் முடிக்குஞ் சொல்லும் எண்சீரிலும் சிதறிக் கிடப்ப, இப்பொருள்கோள் அமையுமாகலான், 'சுண்ணம்' எனப் பெயர் பெற்றது.

> *"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய*
> *யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப*
> *கானக நாடன் சுனை."[19]*

என்று காட்டினர் உரையாசிரியர்கள். இதன்கண் ஆழ, மிதப்ப, நீத்து, நிலை—என்பனவும், சுரை, அம்மி, யானைக்கு, முயற்கு—என்பனவும் நின்றுழி நிற்ப இயையாமையின், சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் துணித்துக் கூட்ட வேண்டியதாயிற்று என்று விளக்கினர்.

3.3.1.2.1. *ஈரடி எண்சீர்:-*

'பட்டாங்கமைந்த ஈரடியெண்சீர்' என்றார் தொல்காப்பியராகலான் *அளவடியான் அமைந்த ஈரடிக்கண் உளவாகிய எண்சீரைத்* துணித்து ஒட்டுதலையே சுண்ணமெனக் கொண்ட அவரது கருத்துப்புலனாகின்றது. ஈரடியெண்சீரின் குறைந்து வருவதைத் துணித்து ஒட்டுதலும், ஈரடியெண்சீரின் மிகுந்து வருவதைத் துணித்து ஒட்டுதலும், அளவடியான் அமையாத ஈரடியெண் சீரைத் துணித்துஒட்டுதலும்ஆயவற்றையெல்லாம் சுண்ணமென்று ஆசிரியர் கருதவில்லை என்றே தோன்றுகின்றது. எனவேதான்,

> *"குன்றத்து மேல குவளை குளத்துள*
> *செங்கோடு வேரி மலர்."[20]*

என்றும்,

> *"ஆலத்து மேல குவளை குளத்துள*
> *வாலி னெடிய குரங்கு."[21]*

என்றும் ஈரடி எழுசீருள் மாற்றிக் கூட்ட வேண்டுவனவற்றையும்,

"இடைமுலைக் கிடந்து"[22]

என்றும்,

"கடற்படை குளிப்ப மண்டி"[23]

என்றும் ஓரடிக்குள் மாற்றிக் கூட்ட வேண்டுவனவற்றையும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'மொழிமாற்றுள்' அடக்கினர் எனலாம்.

"ஈரடி எண்சீர்...துணித்தனர் இயற்றல்" என்று தொல்காப்பியரும், 'ஈரடிக்கண் உளவாகிய எண்சீரைத் துணித்து இயற்றல்' என்று உரையாசிரியர்களுங் கூறினர் எனினும், உரையாசிரியர்கள் காட்டிய காட்டோ (சுரையாழ...) 'ஓரடிக்கண் உளவாகிய நாற்சீரைத் துணித்து ஓட்டுதலாகவே' உள்ளது என்பது நோக்குதற்குரியது,

3.3.1.2.2. *தெய்வச்சிலையாருஞ் சுண்ணமும்:-*

'சுரையாழ்'... என்று தொடங்கும் பாடலைக் காட்டி, நாற்சீர்க் கண்ணே துணித்து ஓட்டியது என்ற தெய்வச்சிலையார், எண்சீருள் துணித்து ஓட்டியதாகக் கீழ்க்கண்ட பாடலைக் காட்டினர்.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவேமே
வங்கத்துச் சென்றார் வரின்"[24]

"அஞ்னத்தன்ன பைங்கூந்தல்! மாமை பொருந்தின
மேனிமேல், தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட
கோழிமுட்டை உடைத்தாலொத்த பசலை, வங்கத்துச்
சென்றார் வரின் தணிவேம்"[25]

என்று பொருத்திக் காட்டி, 'இதனுள் எண்சீருள் ஓட்டி வந்தது' என்றார் அவர். இதனால், துணித்து ஓட்டுதல் எண்சீருக்குள் இருத்தல் வேண்டுமேயன்றி, ஈரடி கொண்ட எண்சீருக்குள் இருத்தல் வேண்டுமென்பதில்லை என்று தெய்வச்சிலையார் கருதினராதற் பெறப்படுகிறது.

"சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்லல்"[26]

என்பது நூற்பாவாகலானும்,

"இரண்டடியால் எட்டுச் சீராற் பொருந்துமாறு
அறிந்து துணித்து இயற்ற வரும்"[27]

என்று இளம்பூரணரும்,

"அளவடி இரண்டனுள் அல்லது பிறுண்டு வாராது"[28]

என்று சேனவரையருங் கூறினராகலானும், இரண்டடியின் மிக்கு வரும் பாடல்களிற் சொற்களை முன்னும் பின்னும் ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டும் பொருள்கோளாம் கொண்டுகூட்டென் பொருள் கோளிலேயே 'தெங்கங்காய்' எனத் தொடங்கும் இப்பாடலை யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை ஆயவைகள் சேர்த்தனவாகலானும் தெய்வச்சிலையாரது காட்டுங் கருத்தும் ஏற்கத் தகுந்தனவாய்த் தோன்றவில்லை.

3.3.1.2.3. ஏனைய பொருள்கோள்களுஞ் சுண்ணமும்:-

சொற்களை மாற்றிக் கூட்டுதல் என்ற அடிப்படையில் ஒற்றுமை யுடையனவாக விளங்கும் நிரனிறை, சுண்ணம், மொழிமாற்று ஆயவற்றைத் தொல்காப்பியர் வேறுபடுத்தித் தனித்தனிக் கூறிய தற்கான கரணியத்தை உரையாசிரியர்கள் நினைந்திருக்கின்றனர்.

"நிரனிறையுஞ் சுண்ணமும் மொழி மாற்றுத
லொக்குமாயினும், நிரனிற்றலும், அளவடி யெண்சீரைச்
சுண்ணமாகத் துணித்தலுமாகிய வேறுபாடுடைமையின்
அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர் கொடுத்து,
வேறிலக்கணமில்லாத மொழிமாற்றை மொழிமாற்றென்றார்"[29]

என்பது சேனவரையம்.

"நிரனிறையுஞ் சுண்ணமும் நிரலே நிறுத்துதலுந்
துணித்துக் கூட்டுதலுமாகிய வேறுபாடுடைமையின்,
மொழிமாற்றின் வேறாயின"[30]

என்றார் நச்சினார்க்கினியரும்.

3.3.1.3. மொழிமாற்று:-

"மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்"[31]

என்றது தொல்காப்பியம்.

'செய்யுளில் நின்ற சொற்களைப் பொருளியையுமாறு முன்னும் பின்னும் மாற்றிக் கோடலே மொழிமாற்றும்' என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

> "ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்
> பாரி பறம்பின்மேல் தண்ணுமை—காரி
> விறன்முள்ளூர் வேங்கைவீ தாறுணுந் தோளாள்
> நிறனுள்ளூர் உள்ள தலர்"[32]

என்று காட்டி,

> "பாரி பறம்பின்மேற் றண்ணுமை தாறுணுந் தோளாள் எனவும், நிறன் விறன்முள்ளூர் வேங்கை வீ எனவும், உள்ளூருள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும் எனவும் முன்னும் பின்னுங் கொள் வழியறிந்து கொளுவப் பொருளெதிரியைந்தவாறு கண்டு கொள்க"[33]

என்று விளக்கினர் சேனவரையர்.

3.3.1.3.1. மொழிமாற்றுஞ் சுண்ணமும்:-

ஈரடி எண்சீரைத் துணித்து ஓட்டுவனவற்றைச் சுண்ணம் என்ற தொல்காப்பியர், அத்தகையதோர் வரையறை இல்லாத தனை 'மொழிமாற்று' என்றார்.

> "சுண்ணத்தோடு இதனிடை வேற்றுமையென்னை யெனின், சுண்ணம் ஈரடி எண்சீருள் அவ்வாறு செய்யப்படும்; இதற்கு அன்னதோர் வரையறையில்லை என்றவாறும்"[34]

என்றார் இளம்பூரணரும்.

3.3.1.4. அடிமறி:-

ஏனைய பொருள்கோள்கள் அமைந்த செய்யுள்களிற் சொற்கள் மட்டுமே முன்னும் பின்னும் மாற, இவ்வடிமறிப் பொருள்கோள் அமைந்த செய்யுள்களிலோ அடிகளே மாறுகின்றன. இது ஏனைப் பொருள்கோளிடை இதற்குள்ள வேற்றுமையாகும்.

> "அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
> சீர்நிலை திரியாது தடுமாறும்மே"[35]

என்பது அடிமறிப் பொருள்கோள் பற்றிய தொல்காப்பிய நூற்பாவாகும்.

சீர்நிலை திரியாது கிடந்தவாறே அமைய, எந்த அடியும் எங்குஞ் சென்று நிற்கும் என்று இந்நூற்பாவுக்கு உரை கண்டனர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆய உரையாசிரியர்கள்.[36] அதாஃது, அடிமறிப் பொருள்கோளுடைய ஒரு பாடல் கிடந்தவாறேயும் பொருள் தரும்; எந்த அடியை எங்கு மாற்றினாலும் பொருள் தரும் என்பது அவர்கள் கருத்து.

"எல்லா அடியும் யாண்டுஞ் செல்லும்"[37]

என்பது சேனாவரையம்.

ஆயின், கிடந்தவாறேயும் பொருள் தருவனவற்றையெல்லாம் யாற்று நீரின் விகற்பமாய்க் கருதி, அதனோடு சேர்த்தலே நேரிதாம். எனவே, இந்நூற்பாவின்கண் தொல்காப்பியர் கூற வந்த கருத்து என்ன என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

3.3.1.4.1. நூற்பா நுவல்வது:-

'சீர்நிலை திரியாது அடிகள் தன்னிலை திரிந்து பொருள்தெரி மருங்கின் (பொருட்கியைய) இடம் மாறும்' என்பதே இந்நூற்பாவின் கருத்தாதல் வேண்டும்.

3.3.1.4.1.1. உண்மை வடிவம்:-

'பொருள்தெரி மருங்கின்' என்று பொருள் கொள்ள நூற்பாவின்கண் இடமில்லை என்று கருதலாம். ஆயின், அடிமறிப் பொருள்கோள் பற்றிய புறனடை நூற்பாவின் முதலிரு சீர்களாகிய 'பொருள்தெரி மருங்கின்' என்பதனை அடிமறி பற்றிய இத்தலை நூற்பாவுடன் கூட்டி,

"அடிமறிச் செய்தி
அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது
தடுமாறும்மே பொருள்தெரி மருங்கின்"

என்று கோடலே உண்மை வடிவமாகலாம். ('பொருள் தெரி மருங்கின் தடுமாறும்' என்று ஈற்றடியை மாற்றிக் கூட்டிப் பொருள் காண வேண்டும்.)

நூற்பா இவ்வாறு அமைவதால் எதுகையுடன் விளங்குகிறது என்பது மட்டுமன்று; பொருள்கோள் பற்றிய ஏனைய நூற்பாக் களுடன் ஒத்தும் விளங்குகிறது. நூற்பா இவ்வடிவம் பெற்றும் பண்டு விளங்கியமையைச் சேனாவரையர் உரை தெளிவுறுத்தும்.

"'நிரனிறைதானே', 'சுண்ணந்தானே', 'மொழிமாற்றியற்கை' என்பனபோல ஈண்டு 'அடிமறிச் செய்தி' என்பதனைக் குறளடியாக்கி, 'அடி நிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமாறும்மே பொருடெரி மருங்கின்' என்று சூத்திரமாக அறுப்பாருமுளர்"[38]

என்பது சேனாவரையம்.

3.3.1.4.1.2. விதப்புக் கிளவி:-

'சீர்நிலை திரியாது அடிநிலை திரியும்' என்றலே போதுமான தாகவும், 'தடுமாறும்' என்று விதந்து கூறியது என்னையோ வெனின், 'பொருட் புலப்பாட்டுக்காக, ஒரே செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகள் தன்னிலையிலிருந்து திரிதலும் உண்டு' என்று அறிவித்தற்காகவேயாம் என்க.

எனவே, எந்த அடியும் யாண்டுஞ் சென்று பொருள் தருவன வற்றை (கிடந்தவாறேயும் பொருள் தந்து, அடிமாறியும் பொருள் தருவனவற்றை) அடிமறியெனத் தொல்காப்பியர் குறிக்கவில்லை என்பதும், அடிமாறினலல்லது அடிப்படைத் தொடரமைப்புடன் பொருந்திப் பொருள் தராது என்று அமைவனவற்றையே அவர் அடிமறியெனக் குறித்தார் என்பதும் போதரும்.

தெய்வச்சிலையாரும்,

"அடிமறியென்பதன் செய்தி சீர்நிலை திரியாது
அடிநிலைமை திரிந்து தடுமாறும் எ—று.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
சார னாட நீவர லாறே
வார லெனினே யானஞ் சுவலே!"

"இது, சாரல்நாட! நீ வருகின்ற நெறி
சூரல் பம்பிய சிறுகான் யாறு, சூரர மகளிர்

வருத்தஞ் செய்வார், வாராதொழியென யான் அஞ்சா
நின்றேன் என அடிமாறிப் பொருளுணர்த்தியவாறு
கண்டு கொள்க"[39]

என்றே உரை கூறினர்.

3.3.1.4 2. புறனடை நூற்பா :-

"(பொருள் தெரி மருங்கின்)
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியுந்
தோற்றமும் வரையார் அடிமறி யான"[40]

என்பது தொல்காப்பியங் கூறும் அடிமறிக்கான புறனடை நூற்பாவாகும். இதற்கு உரை கூறுகையில் உரையாசிரியர்கள் தம்முள் மாறுபடுகின்றனர்.

3.3.1.4.2.1. இளம்பூரணர்:-

"அடிமறிப் பொருள்கோள் ஆராயுமிடத்து
ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்தத்துச் சீராய்க்
கிடந்தும் வரையப் படாது"

என்றார் இளம்பூரணர். அவர்,

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
சார னாடட நீவர லாறே
வார லெனினே யானஞ் சுவலே"

என்ற பாடலைக் காட்டி,

"அஞ்சுவல் யான் என இறுதிச் சீர்
எருத்துவயிற் றிரிந்தவாறு கண்டு கொள்க"

என்று விளக்கினார்.[41]

3.3.1.4.2.2. சேனாவரையர் & தெய்வச்சிலையார்:-

"அடிமறிச் செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர்
எருத்தடியிற் சென்று திரிதலும் வரையார்

என்று உரைகண்ட சேனாவரையர்,

"அஞ்சுவல் யான் என இறுதிச்சீர் ஈற்றயற் சீர்வயிற்
சென்று திரிந்ததென்று உதாரணங் காட்டினுரால்
உரையாசிரியரெனின்—யானஞ்சுவலென நின்றுங்கு
நிற்பவும் பொருள் செல்லுமாகலின் இவ்வாறு திரிதல்
பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க"[42]

என்று இளம்பூரணரை மறுக்கவுஞ் செய்கிருர். சேனுவரையருடன் ஒத்த கருத்தினரே தெய்வச்சிலையாரும்.[43]

3.3.1.4.2.3. *நச்சினுர்க்கினியர்:-*

"அவ்வடிமறிச் செய்யுளிடத்துப் பொருள் முடிவை
ஆராயுமிடத்து அப்பொருள் முடிவினையுடைய அடியில்,
முடிக்கின்ற சீர்க்கு முதற்சீரிடத்துப் பொருளே
தன் பொருளாய் இறுஞ்சீர் ஏனையடிகள் போல
நேராய் முடியாது மீண்டு சென்று முன் நின்றதோர்
சொல்லோடே பொருள் முடியுந் தோற்றரவும் நீக்கார்"[44]

என்பது நச்சினுர்க்கினியம்.

எனவே, அடிமறி பற்றிய இப்புறனடை நூற்பாவுக்கு உரையாசிரியர்களிடையே மூன்று கருத்துகள் நிலவுதற் பெறப் படுகிறது.

அ. ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்தத்துச் சீராய் வருதல் (இளம்பூரணர்)

ஆ. ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதல் (சேனுவரையர் & தெய்வச்சிலையார்)

இ. பொருள் முடிவினையுடைய அடியின் முடிக்கின்ற சீர் முதற்சீரின் பொருளைப் பெற்று, அவ்வடியில் முன்னின்ற சீரோடு பொருந்துதல் (நச்சினுர்க்கினியர்)

சேனுவரையர், தெய்வச் சிலையார் ஆயோரை உடன்படுகின்ருர் திரு பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார்.[45] திரு க. வெள்ளை வாரணனுரோ எனின் இளம்பூரணரை உடன்படுகின்ருர்.[46]

3.3.1.4.2.4. உண்மைப் பொருளெது?

சீர் மாறுதலை மட்டுமே இந்நூற்பா குறித்ததாகக் கொள்ள முடியாது. சீர் மட்டும் மாறுதல் மொழிமாற்றுள் பேசப்பட

வேண்டுவதாம். இந்நூற்பா அடிமறிக்கான புறனடை ஆகலான் அடிமறித்தலையும் இது உள்ளடக்கியதாதல் வேண்டும்.

எனவே, 'ஈற்றடியின் இறுதிச் சீர் எருத்தத்துச் சீராய்த் திரிந்து, பின்னர், பொருட் புலப்படுமாற்ருன் அந்த அடி இடம் பெயர்தலைத்தான்' ஆசிரியர் இந்த நூற்பாவிற் குறித்தனராதல் வேண்டும். சீர் மட்டும் மாறுதல் மொழி மாற்றுள் அடங்கும்; சீர் மாருமல் அடி மாறுதல் அடிமறியுள் அடங்கும். இந்நிலையில், சீரும் மாறி அடியும் மாறுதலை அடக்கவே இப்புறனடை நூற்பாவை அமைத்தார் ஆசிரியர் எனலாம்.

> "சீர்நிலை திரியாது தடுமாறும் (அடிமறி) என்ருராகலின் சீர்நிலை திரிதலும் ஒருவழிக்கண்டு எய்தியதிகந்துபடாமற் காத்தவாறு"[47]

என்று அந்நூற்பாவின் பயனைக் கூறினர் சேனாவரையரும்.

3.3.1.4.2.5 *அடிமாற்றுதல் சொல்லப்படவில்லையா?*

'ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியுந் தோற்றமும் வரையார்' என்று சீர்திரிதல் மட்டுமே இந்நூற்பாவிற் குறிக்கப்பட்டிருந் தாலும், அதிகாரத்தியைபால் அடிமாறுதலுங் கொள்ளப்பட்டது.

அடிமறியைப் பேசிவிட்டு அதற்குப் புறனடை அமைக்கின்ருராகலான் இங்கும் அதனை (அடிமாறுதலை)க் குறிக்க வேண்டுவதில்லை. இவ்வாறு அதிகாரத்தாற் பெறவைத்தல் ஆசிரியர்க்கு இயல்புதான். காட்டாக ஒன்றைக் காணலாம்.

எழுத்ததிகாரக் குற்றியலுகரப் புணரியலில், குற்றியலுகர எண்ணுப் புணர்ச்சிக் கூறுகையில்,

> "ஒன்றுமுத லாக எட்ட னிறுதி
> எல்லா வெண்ணும் பத்தன் முன்வரின்
> குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
> முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே"[48]

என்று குறிக்கிருர். அடுத்த நூற்பாவாக,

> "பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்
> ஒத்த தென்ப இரண்டுவரு காலை"[49]

என்பதை அமைக்கிருர். இரண்டாவது நூற்பாவிற் 'குற்றியலுகரம் மெய்யொடுங் கெடும்' என்பதைக் குறிக்கவில்லை. ஆயின், 'குற்றியலுகரம் மெய்யொடுங் கெட்டே' புணர்ச்சி நிகழ்கிறது. எனவே, அதனை அதிகாரத்தியைபாற் பெற வைத்தார்,

> "'குற்றியலுகர மெய்யொடுங் கெடும்' என்ற
> விதி இதற்கும் மேலனவற்றிற்கும் (தொடர்ந்து
> வருவனவற்றிற்கும்) கொள்க"[50]

என்றார் நச்சினார்க்கினியரும்.

இவ்வாறே, அடிமறிக்கான புறனடை நூற்பாவிற் சீர்திரிதல் மட்டுமே கூறப்பட்டிருப்பினும், முதனூற்பாவால் அடிமாறுதலையுங் கொள்ள வேண்டும்.

3.3.1.4.2.6. *ஈற்றடிக்கு மட்டுந்தான் விதியா?*

ஈற்றடி மட்டுந்தான் சீர்திரிந்து இடம் பெயர வேண்டுமா? ஏனையடிகட்கு இவ்விதி பொருந்தாதா? என்ற வினாவெழல் இயல்பே.

> "எல்லாவடியும் யாண்டுஞ் செல்லுமாயினும்
> உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடி
> யென்றுங் கூறினார்"[51]

என்றார் சேனாவரையர். 'இவ்வாறு எங்கும் மாற்றுக' என்றார் இளம்பூரணரும்.[52] ஈற்றடி என்பதற்குப் 'பொருள் முடிவினையுடைய அடி' என்ற நச்சினார்க்கினியர், பொருள் முடிவினையுடைய அடி ஒரு செய்யுளில் யாண்டுங் கிடக்கலாம் என்றும், அவ்வடியிற் சீர் பெறும் மாற்றத்தையே ஆசிரியர் கூறுகிறார் என்றுங் குறிக்கிறார்.[53]

'செய்யுள்களிற் பொருட் புலப்படுமாற்றான் அடிகள் இடம்மாறி அமையும்' என்பதனை அடிமறி பற்றிய தலை நூற்பாவிலும், 'அவ்வாறு அடிகள் மாறுமிடத்து அவ்வடிகளிற் சீர் இடம் பெயர்தலையும் நீக்கார்' என்பதனை அடிமறிக்கான புறனடை நூற்பாவிலும் விளக்கிய ஆசிரியர், 'அடிமறியிற் சீர் இடம் பெயர்தற் சிறுபான்மையே' என்பதைத் 'தோற்றமும் வரையார்' என்ற உம்மையான் பெறவைத்தார்.

3.3.2. *அவிநயம் அறையும் பொருள்கோள்கள்:-*

அவிநயனார் இருபது வகைப் பொருள்கோள்களைச் சுட்டினார் என்று யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோளால் அறிய வருகிறோம். அவை வருமாறு:-

I. *நிரனிறை*

நிரனிறைப் பூட்டுவில் 1
நிரனிறைப் புனல்யாறு 2
நிரனிறைத் தாப்பிசை 3
நிரனிறை அளைமறிபாப்பு 4
நிரனிறைக் கொண்டுகூட்டு 5

II. *சுண்ணம்*

சுண்ணப் பூட்டுவில் 6
சுண்ணப் புனல்யாறு 7
சுண்ணத் தாப்பிசை 8
சுண்ண அளைமறிபாப்பு 9
சுண்ணக் கொண்டுகூட்டு 10

III. *அடிமறி மொழிமாற்று*

அடிமறிமொழிமாற்றுப் பூட்டுவில் 11
அடிமறிமொழிமாற்றுப் புனல்யாறு 12
அடிமறிமொழிமாற்றுத் தாப்பிசை 13
அடிமறிமொழிமாற்று அளைமறிபாப்பு 14
அடிமறிமொழிமாற்றுக் கொண்டுகூட்டு 15

IV. *அடிமொழி மாற்று*

அடிமொழிமாற்றுப் பூட்டுவில் 16
அடிமொழிமாற்றுப் புனல்யாறு 17
அடிமொழிமாற்றுத் தாப்பிசை 18
அடிமொழிமாற்று அளைமறிபாப்பு 19
அடிமொழிமாற்றுக் கொண்டுகூட்டு 20

> "நிரனிறை, சுண்ணம், அடிமறி மொழி மாற்று, அடிமொழி மாற்று என்னும் இந்நான்கினோடும், பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு என்னும் இவ்வைந்து செய்யுட் பொருள்கோளும் உறழ இருபதாம். இவை வந்த வழிக் கண்டு கொள்க. இருபது வகையானுங் காட்டினர் அவிநயனர்"[54]

என்று குறித்தார் குணசாகரர் தமது யாப்பருங்கல விருத்தியுரையில். திரு மயிலை சீனி. வேங்கடசாமி, தமது 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்னும் நூலில், அவிநய நூற்பாக்களைத் தொகுத்துக் கூறும்போது இதனையுங் கூறுகிருர்.[55] திரு க.ப.

அறவாணன் தொகுத்த 'அவிநயம்' நூலிலும் இப்பகுதி குறிக்கப் பட்டுள்ளது.[56]

3.3.3. அமுதசாகரம் மொழியும் பொருள்கோள்கள்:-

''சொல்லாதல் சொல்லின் பொருளாதல் முன்முறைவைத்
தவ்வகை நேர்கொள் நிரல்நிறையாம்; அவ்வவ்
விடையிட் டெதிரும் விராய்ச்சொல் இடையிடை
இட்டன சுண்ணம்; இரண்டடியாற் சொல்வர
நிற்ப தடிமொழி மாற்றல்; அதடி
மறியா முழுதும் யாப்பு''

என்பது நூற்பா. இதுவும் யாப்பருங்கல விருத்தியுரையிடைக் கண்ட மேற்கோளேயாம்.[57] இதனை 'அமுதசாகரம்' எனும் நூலின்கண் தொகுத்திருக்கிறார் திரு க.ப. அறவாணன்.[58]

3.3.4. நேமிநாதம் நுவலும் பொருள்கோள்கள்:-

இன்று முழுமையாகக் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் தொல்காப்பியத்தை அடுத்துப் பொருள்கோளைப் பேசும் நூல் நேமிநாதமேயாகும். இது ஒன்பது வகைப் பொருள்கோள்களைக் குறிக்கின்றது.[59] அவையாவன :-

(அ) அடிமொழி
(ஆ) சுண்ணம்
(இ) நிரனிறை
(ஈ) விற்பூட்டு
(உ) அடிமறி
(ஊ) யாற்றுவரவு
(எ) தாப்பிசை
(ஏ) மொழிமாற்று
(ஐ) அளைமறிபாப்பு

இப்பொருள்கோள் வகைகள் அனைத்தும் பெயரளவில் மட்டுமே இந்நூலின்கண் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வகைகளைத் தனித்தனி நூற்பாக்களில் வைத்து விரிவாகவும் விளக்கமாகவும் ஆசிரியர் பேசவில்லை.

3.3.5. *நன்னூல் நவிலும் பொருள்கோள்கள்:-*

இன்று நமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள், தொல்காப்பியத்தை அடுத்துப் பொருள்கோளின் வகைகள் ஒவ்வொன்றுக்குந் தனித்தனி நூற்பா அமைத்து விரிவாக விளக்கிக் கூறும் நூல் நன்னூலேயாகும். இந்நூல் எட்டு வகைப் பொருள்கோளைக் கூறுகிறது.

"யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே"[60]

என்பது நூற்பா. நன்னூல் கூறிய இப்பொருள்கோள்களை வருமிரு பக்கங்களில் உள்ளவாறு வகைப்படுத்தி வரிமரமிட்டுக் காட்டலாம்.

பொருள்கோள் (நன்னூல்)

நூ. 411

- இயல்பிற் கிடந்தாங்கே பொருள் கொள்ளல்
  - யாற்றுநீர் நூ. 412
- மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ளல்
  - அடிமாற்றிப் பொருள் கொள்ளல்
    - அடிமறி நூ. 419
      - ஏற்புழி இசைப்பன
      - பொருளிசை மாறுதன
  - சொல் மாற்றிப் பொருள் கொள்ளல்

- ஓர் ஒழுங்குடன் சொல்லை மாற்றல்
  - நிரலே நிறைத்தல் → நிரனிறை (நூ. 414)
  - முதலுங் கடையுங் கூட்டல் → பூட்டுவில் (நூ. 415)
  - ஓரிடத்து நின்ற சொல் அல்லது சொற்களை ஒன்றுக்கு மேற்பட்ட இடத்துக் கூட்டல்
    - இடை நின்ற சொல்லை இருமருங்குங் கூட்டல் → தாப்பிசை (நூ. 416)
    - முதல் அல்லது கடை நின்ற சொல்லை ஏனையிரிடத்துங் கூட்டல் → அளைமறி பாப்பு (நூ. 417)
- ஒழுங்கின்றி ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டல்
  - ஓரடியுட் சொற்களை மாற்றல் → மொழி மாற்று (நூ. 413)
  - ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளிற் சொற்களை மாற்றல் → கொண்டுகூட்டு (நூ. 418)

3.3.5.1. *யாற்றுநீர்:-*

புனல்யாற்றுப் பொருள்கோள், யாற்றுப் புனற் பொருள்கோள், யாற்றுவரவுப் பொருள்கோள், புனல்யாற்று வரவுப் பொருள்கோள், யாற்றொழுக்குப் பொருள்கோள் எனவும் இலக்கணப் புலவர்களால் இது வழங்கப் பெறும்.

''மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே''[61]

என்பது யாற்றுநீர்ப் பொருள்கோள் பற்றிய நன்னூல் நூற்பாவாகும். இந்நூற்பாவுக்கு இருவகைப் பொருள்கள் உரையாசிரியர்களாற் கூறப்படுகின்றன.

அ. ஒவ்வோரடியிலும் பொருள் முற்றுப்பெற்று வருதல்.

ஆ. பாடல் முழுதும் ஒரே பொருள் அமைந்து இயல்பின் நடத்தல்.

3.3.5.1.1. *மயிலைநாதர் கூறும் பொருள்:-*

''ஏனையடிகளை நோக்காது அடிதொறும் பொருள்
அற்றுவருவது யாற்றுநீர்ப் பொருள்கோளாம்''[62]

என்றார் மயிலைநாதர். 'மற்றைய நோக்காது' என்பதற்கு 'மற்றைய அடிகளை நோக்காது' என்றும், 'அடிதொறும்' என்பதற்கு 'ஒவ்வோரடியிலும்' என்றும், 'அற்றற்றொழுகுவது' என்பதற்கு 'அறுந்து அறுந்து முற்றுப் பெற்று நடப்பது' என்றும் இவர் உரை கொண்டமை புலனாகின்றது.

''அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்''[63]

என்று காட்டினார். நேமிநாத உரை, யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, இலக்கண விளக்க உரை, தொன்னூல் விளக்கம் ஆயவைகளும் இக்கருத்தினவே.

''யாற்றுப் புனலே அடிதொறும் பொருளற
ஏற்றடி நோக்கா விளம்பலின் ஆகும்''[64]

என்று தெளிவாகவே சுட்டியது தொன்னூல் விளக்கம்.

திரும்பாமலே ஒரேமுகமாக ஓடுகின்ற ஆற்றுநீரின் ஓட்டம் போல், சொற்கள் முன்பின்னாக மாறாமல் நேராகப் பொருள்

தருவது யாற்றுநீர்ப் பொருள்கோளாம் என்று உவமைப் பொருத்தங் காட்டினர். ஒவ்வோரடியுந் தனித்தனி ஒழுகுதற்கே 'யாற்றொழுக்கு' உவமையாயிற்று என்பதும் இவர்கள் கருத்து.

> ''அடிதொறும் பொருளற்று மீளாது
> சேறலின், புனல்யாற்றுப் பொருள்
> கோளாயிற்று''[65]

என்றார் குணசாகரரும் தமது யாப்பருங்கல விருத்தியுரையில்.

3.3.5.1.1.1. *அடிமறி மாற்றிடை வேறுபாடென்னை?*

'அடிதொறும் பொருள் முற்றுப் பெற்று நடத்தலே யாற்றுநீர்ப் பொருள்கோளாம்' என்னுங் கருத்தினர்களாகிய இவர்கள் அடிமறி மாற்றிடை இதற்குக் கண்ட வேறுபாட்டினைக் கண்டறிய வேண்டும். அடிமறிமாற்றுக்கு அவர்கள் காட்டிய பாடல்களுள் ஒன்று வருமாறு:-

> ''மாறாக் காதலர் மலைமறந் தனரே
> ஆறாக் கட்பனி வரலா னாவே
> ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே
> கூறாய் தோழியான் வாழு மாறே''[66]

இதுவும் அடிதொறும் அற்றற்றொழுகுவதே. அவ்வாறாயின், அடிமறி மாற்றுக்கும் யாற்றுநீர்க்கும் இவர்கள் கண்ட வேறு பாடென்னை?

இந்தப் பாடல் முழுவதும் ஒரே பொருளுடையது; 'தோழி! யான் உய்யுமாறு கூறுவாயாக!' என்று இறுவது. ஒரே பொருளுடைய இப்பாடலில், ஒவ்வோரடியுந் தொடரால் முடி கின்றது; ஆயின், பிற அடிகளோடு பொருட்டொடர்பால் இயை கின்றது.

'மாறாக் காதலர் மலைமறந் தனரே' என்ற அடி, 'மறந்ததன் விளைவுகளென்னை?' என்று பின்னடிகளை அவாவி நிற்கிறது. 'ஆறாக்கட்பனி வரலானாவே' என்ற அடி 'எதன் விளைவாய் ஆறாக்கட்பனி வரலானா?' என்று முன்னடியை நோக்கி நிற்கிறது.

'மாறாக் காதலர் மலைமறந்தனர்; அதனால் ஆறாக்கட்பனி வரலானா; ஏறா மென்றோள் வளை நெகிழும்; எனவே, கூறாய் தோழி யான் வாழுமாறு' என்று காரணிய விளைவுத் தொடர்பால் ஒவ் வோரடியும் பிறவடிகளோடு இயைதலை இங்குக் காணலாம்.

ஆயின், யாற்றுநீர்க்குக் காட்டப்பட்ட பாடலில் இவ்வியல்பு காணப்படுவதில்லை.

''அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டுன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்''[67]

என்பது யாற்றுநீர்க்குக் காட்டப்பட்ட பாடல். இப்பாடல் ஒரே பொருளுடையதன்று; நான்கு செய்திகளை (குற்றமாகக் கூடிய நான்கை)க் கூறுவது. ஒவ்வோரடியுந் தொடரால் முடிவதன்றியும் பொருளாலும் முடிகின்றது. ஓரடியின் பொருளுக்கும் அடுத்த அடியின் பொருளுக்கும் காரணிய விளைவுத் தொடர்பு அல்லது இயைபு ஏதுமில்லை. ஒவ்வோரடியுந் தொடரால் (மற்... பொருளால் மற்ற அடிகளோடு தொடரும் பாடல்களை '... மாற்று' என்றும், தொடராலே மட்டுமன்றிப் பொருளாலும் மு... றும் பாடல்களை 'யாற்றுநீர்' என்றும் மயிலைநாதர் முதலிய உரையாசிரியர்கள் கொண்டனர் என்று அவர்கள் காட்டிய மேற்கோட் பாடல்களினின்றும் அறிய முடிகிறது.

3.3.5.1.2. சங்கர நமச்சிவாயர் உரை:-

மொழிமாற்று முதலிய மற்றைப் பொருள்கோள்கள் போல மாறிச் செல்ல வேண்டாமல், செய்யுளின் அடிகளிலெல்லாம் சிறந்த பொருள் அமைந்து அமைந்து நடப்பதாகிய பொருள்கோள் யாற்றுநீர்ப் பொருள்கோள் என்பது சங்கர நமச்சிவாயர் கருத்து.

நூற்பாவில் உள்ள 'மற்றைய நோக்காது' என்பதற்கு 'மற்றைய பொருள்கோள் போலப் பிறழ்ந்து செல வேண்டாது' என்றும், 'அடிதொறும்' என்பதற்கு 'அடிகளில் எல்லாம்' என்றும், 'அற்றற்றொழுகுவது' என்பதற்கு 'அமைந்து அமைந்து நடப்பது' என்றும் இவர் பொருள் கொண்டார்.

''சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே''[68]

என்று காட்டினர்.

3.3.5.1.2.1. மயிலைநாதருக்கு மறுப்பு:-

'அடிதொறும் பொருள் முடிந்து வருவது' என்று கூறும் மயிலைநாதரைச் சங்கர நமச்சிவாயர் கீழ்க்கண்ட காரணியங்களைக் காட்டி மறுக்கிறார்.[69]

அ. உவமை கூறப்பட்ட யாற்றுநீருக்கு
இடையறுதல் இயல்பன்று.

ஆ. ஒவ்வோரடியுந் தனித்தனி ஒழுகுதற்கே யாற்றுநீர்
உவமையாயிற்றெனின், பாட்டு முழுவதும்
இடையறாது ஒழுகிப் பயின்று வரும் பொருள்கோள்
மொழிமாற்று முதலியவற்றுள் அடங்காமையின்
குன்றக் கூறலாம்.

3.3.5.1.3. *உண்மைப் பொருளெது?*

சங்கர நமச்சிவாயர் கூறும் மறுப்புகள் பொருந்துமாகலானும், அடிதொறும் பொருள் முடிந்து வருவனவாக மயிலைநாதர் காட்டிய பாடலை நன்னூலார் கூறிய இரு அடிமறிகளுள் 'பொருளிசை மாறு அடிமறியுள்' (காண்க: 3.3.5.8.2.2.) அடக்கக் கூடுமாகலானும்,

'மற்றைப் பொருள்கோள்கள் போலப் பிறழ்ந்து செல்ல வேண்டாமல், செய்யுளின் அடிகளில் எல்லாம் சிறந்த பொருள் அமைந்து நடப்பது யாற்றுநீர்ப் பொருள்கோளாம்' என்று சங்கர நமச்சிவாயர் வழி நின்று பொருள் கோடலே பவணந்தியார் கருத்துக்கு இயைந்ததாகும்.[70]

3.3.5.2. *மொழிமாற்று:-*

"ஏற்ற பொருளுக் கியைய மொழிகளை
மாற்றியோர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே"[72]

என்பது நன்னூல்.

"உரிய பொருட்கு இயையும் வண்ணஞ் சொற்களை
ஓரடிக்குள்ளாக மாற்றிக் கொள்ளுதல் மொழிமாற்று"

என்பது கருத்து.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."[72]

என்று காட்டினர்.

3.3.5.2.1. *பண்டமாற்று போன்றதா?*

"மொழிமாற்று என்பது தனக்கு உள்ளதைக் கொடுத்துப் பிறர்க்குள்ளதை வாங்கும் பண்டமாற்று போறலின் இரண்டு மொழியும் அவை கொள்ளும் இரண்டு பயனிலையும் வந்தல்லது மொழி மாற்றுதற் கூடாமையின் அத்தொகை தந்து (இரண்டு மொழியும் அவை கொள்ளும் இரண்டு பயனிலையும் என்று தொகை தந்து) கூறினும்"[73] என்றார் சங்கர நமச்சிவாயர்.

'சுரை ஆழ அம்மி மிதப்ப'
1 2 3 4

இதில் இரண்டாவது சீர் நான்காவது இடத்தை அடையும்போது, இரண்டாவதன் இடத்தை நிரப்ப, அந்த நான்காவது சீர்தான் வரவேண்டுமே தவிர, பிறிதொன்று வருதற் கூடாது என்பதையே 'பண்டமாற்று போன்றது' என்று சங்கர நமச்சிவாயர் குறித்தன ராதல் வேண்டும். அவர் காட்டிய காட்டளவில் அவர் கொண்ட கருத்துச் சரியே. ஆயின், 'பண்டமாற்று போன்றே மொழி மாற்று நிகழும்' என்று நேரடியாகவோ,குறிப்பாகவோ பவணந்தியார் நூற்பாவிற் கூறினாரில்லை. எனவே, 'ஓரடிக்கண் உள்ள சொற்களைப் பொருளியையுமாறு அவ்வடிக்குள்ளேயே எப்படி மாற்றினாலும் மொழிமாற்றே' என்பதுதான் பவணந்தியாரின் கருத்தாதல் வேண்டும். இவ்வாறு கொள்ளாதொழியின், பண்டமாற்று போலாது ஓரடிக்கண் உள்ள சொற்களை எப்படியும் மாற்றிக் கூட்டிப்பொருள் கொள்ளும்படி அமைவனவற்றை நன்னூல் கூறிய பொருள் கோள் வகைகள் எதனுள்ளும் அடக்க முடியாமற் போகும். எனவே 'பரலவ லடைய இரலை தெறிப்ப'[74] என்றாற் போல் வருனவும் இப்பொருள்கோளுடையனவாகவே கொள்ளப்படவேண்டும். இங்கு, 'இரலை பரலவ லடைய தெறிப்ப' என்று ஓரடியுள் மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியதாயிற்று.

3.3.5.2.2. *மொழிமாற்றுங் கொண்டு கூட்டும்:—*

ஓரடிக்குள் சொற்களை மாற்றிக் கூட்டுதலை மொழிமாற்று என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பலவடிகளுள் சொற்களை மாற்றிக் கூட்டுதலைக் கொண்டு கூட்டு என்றும் பவணந்தியார் கூறினார். ஓரடிக்கண் உள்ள சொற்களை அவ்வடிக்குள்ளேயே மாற்றிக் கூட்டு தல் 'மொழி மாற்று' என்பதும், மற்ற அடிகளோடு மாற்றிக் கூட்டுதல் 'கொண்டுகூட்டு' என்பதும் பவணந்தியார் கருத்தாகும்.

3.3.5.2.3. *தொல்காப்பியரும் பவணந்தியாரும்:—*

தொல்காப்பியர் கூறிய மொழிமாற்றுக்கும் பவணந்தியார் கூறிய மொழிமாற்றுக்குமான ஒற்றுமை பெயரளவிலானதே. இரண்டிறந்த பலவடிகளிற் சொற்களை மாற்றிக் கூட்டுதலை 'மொழிமாற்று' என்றார் தொல்காப்பியர். பவணந்தியாரோ ஓரடியுள் சொற்களை மாற்றிக் கூட்டுதலையே 'மொழிமாற்று' என்று குறித்தார்.

3.3.5.3. *நிரனிறை:-*

தொல்காப்பியர் கூறிய நிரனிறைக்கான நூற்பாவால், அவர் பெயர், வினை ஆய இரு பாகுபாட்டைத்தான நிரனிறையுள்

வேண்டினர் என்று அறிய முடிகிறது. ஆயின் பவணந்தியாரோ பெயர், வினை ஆய பகுப்புகளுடன் முறை, எதிர் ஆய பகுப்புகளையும் வேண்டினர். (காண்க: 3.3.1.1; ப-ள். 40-47)

3.3.5.4. *விற்பூண்:—*

தொல்காப்பியமும் அமுதசாகரமுந் தவிர, பொருள்கோளைப் பேசும் எல்லா இலக்கண நூல்களாலுங் குறிக்கப்படும் இப்பொருள் கோள் விற்பூட்டு, பூட்டுவில், கடைமொழிமாற்று என்றும் வழங்கப்பெறும். வில்லின் இருதலையும் சேரப் பூட்டிநிற்கும் நாண் போல, செய்யுளில் முதல்மொழியும் இறுதிமொழியும் பொருளிற் பொருந்துவது பூட்டுவிற் பொருள்கோளாம்.

"எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில் லாகும்"[75]

என்பது பூட்டுவில் பற்றிய நன்னூல் நூற்பாவாகும்.

'செய்யுட்கண் முதலிலும் முடிவிலும் நின்ற சொற்கள் பொருளால் தம்முள் நோக்கிக் கொள்வது பூட்டுவிற் பொருள் கோளாம்' என்பது இந்நூற்பா நுவலுங் கருத்தாகும்.

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம் —உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு"[76]

என்ற இம் முத்தொள்ளாயிரப் பாடலையே பெரும்பாலோர் காட்டினர். 'கதவு திறந்திடுமின்'—என இறுதிச் சீரையும் முதற் சீரையும் இயைத்துப் பொருள்கொள்ள இவ்வெண்பா நின்றமையின் இது 'பூட்டுவில்' ஆயிற்று.

செய்யுளில் முதலடியின் முதற்சீரும், இறுதியடியின் இறுதிச் சீருந்தான் இவ்வாறு இயையவேண்டும் என்பதில்லை; இடையிலுள்ள அடிகளிலும் இவ்வாறமையலாம் என்பதைச்,

"செய்யுட் கெல்லாம் முதலினும்
ஈற்றினும் என்னுமையின் அதனகத்து
எங்ஙனம் இவ்வாறு வரினுமாம் என்க"[77]

என்று விளக்கினர் சிவஞான முனிவர்.

3.3.5.5. ***தாப்பிசை:—***

பொருள்கோளைப் பேசும் இலக்கண நூல்களுள் தொல்காப்பியமும் அமுதசாகரமுந் தவிர அனைத்துமே இத்தாப்பிசையைக் குறிக்கின்றன.

தாப்பிசை என்பதற்கு ஊசல் போல் இடைநின்று இருமருங்குஞ் செல்லுஞ் சொல் என்பது பொருள். ஆகுபெயராய் ஊசலைக் குறிக்குந் 'தாம்பு' எனுஞ் சொல் வலித்தல் விகாரம் பெற்றுத் 'தாப்பு' என்றுயது.

"இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை"[78]

என்பது தாப்பிசை பற்றிய நன்னூல் நூற்பாவாகும்.

'செய்யுளின் இடையில் நிற்கின்ற சொல் ஒழிந்த ஈரிடங்களாகிய முதலிலும் முடிவிலும் நடந்து சென்று பொருள் தருவது தாப்பிசைப் பொருள்கோளாம்' என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.


"உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு"[79]

பெரும்பாலோர் இக்குறளையே காட்டினர்.

" 'ஊன்' உண்ணாமை உள்ளது உயிர்நிலை" எனவும்,
" 'ஊன்' உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு"
எனவும் நடு நின்ற 'ஊன்' என்னுஞ் சொல்லே
முதலும் இறுதியுஞ் சென்று பொருள் தந்தமையால்
தாப்பிசைப் பொருள்கோள் ஆயிற்று—

என்று விளக்கினர் உரையாசிரியர்கள் அனைவரும்.

3.3.5.5.1. இருமருங்குஞ் சென்றதா?



'ஊன் உண்ணுமை உள்ளதுயிர்நிலே' என்று இடைநின்ற 'ஊன்' எனுஞ் சொல் முதலிற் சென்று புணர்ந்தது; 'ஊன் உண்ண அண்ணுத்தல் செய்யாதளறு' என்று இருந்த இடத்திலேயே இருந்தும் பொருள் தந்தது.

எனவே, 'ஊன்' எனுஞ் சொல் தனக்கு உரிய இடத்தில் இருந்து பொருள் தந்ததோடு முன் சென்று நின்றும் பொருள் தந்தது எனலே முறையாம். இறுதியிற் சென்று நின்றது என்னல் ஒவ்வாதாம்.

3.3.5.5.2. *தாப்பிசையும் அளேமறிபாப்பும்:—*

ஒரு சொல்லே ஒன்றுக்கு மேற்பட்ட இடத்திற் கூட்டிப் பொருள் கொள்ளல் என்னுந் தன்மையால் இத்தாப்பிசை அளேமறிபாப்புடன் ஒத்தும், பிறவற்றுடன் வேறுபட்டும் விளங்குகிறது. இடையினின்ற சொல்லே ஒன்றுக்கு மேற்பட்ட இடத்துக் கூட்டுதல் தாப்பிசை; முதலிலோ முடிவிலோ நின்ற சொல்லே ஒழிந்த ஈரிடத்துங் கூட்டுதல் அளேமறிபாப்பு என்று இரண்டற்குமுள்ள வேறுபாடு உணரப்பட வேண்டுவதாம்.

3.3.5.6. *அளேமறிபாப்பு:—*

> ''செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்
> எய்திய பொருள்கோள் அளேமறி பாப்பே''[80]

என்ருர் பவணந்தியார். 'செய்யுட்கண் ஈற்றில் நின்ற மொழி இடையிலும் முதலிலுஞ் சென்று பொருள் தருதல் அளேமறி பாப்பாகும்' என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

புற்றினுள் தலே முதலாக உட்சென்று, உடன் மடிந்து, உடலோடும் வாலோடும் ஒட்டி மேல்வரும் பாம்பு போல, ஈற்று நின்ற மொழி இடையிலும் முதலிலுஞ் சென்று இயைந்து பொருள் தருதலால் இப்பொருள்கோள் 'அளேமறிபாப்புப் பொருள்கோள்' என்னப்பட்டது. (அளே—புற்று; மறிதல்-மடிதல் அல்லது மடங்குதல்) அளேமறி பாம்பு என்பது அளேமறிபாப்பு என்று வலித்து நின்றது.

> ''தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
> தண்டூன்றித் தளர்வார் தாமும்
> சூழ்ந்த விஜேயாக்கை சுடவிலிந்து
> நாற்கதியிற் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே"[81]

அளைமறிபாப்பைப் பேசுகின்ற நூல்களில் நேமிநாதந் தவிர்ந்த நூல்களின் உரைகள் அனைத்தும் இப்பாடலொன்றையே காட்டின.

வாழ்ந்த...முயலாதாரே மூழ்ந்த...முனிவார்;
வாழ்ந்த...முயலாதாரே சூழ்ந்த...சுழல்வார்;
வாழ்ந்த...முயலாதாரே தாழ்ந்த...தளர்வார்

என்று ஈற்றில் நின்ற சொற்கள் இடையும் முதலுஞ் சென்று இயைந்து பொருள் தந்தன. இங்கு, ஈற்று நின்ற தொடர் முதலில் மூன்றுவது அடியுடனும், அடுத்து இரண்டாவது அடியுடனும், பின்னர் முதலாவது அடியுடனும் இயைத்துக் காட்டப்பட்டது. இவ்வாறன்றி ஈற்று நின்ற அடியை முதலடியிலிருந்து இயைப்பி னும் அமையும்.

"வளர்பொருள் கொள பின்மொழி முன்னிடை சேறல்"[82] என்றது சுவாமிநாதமும்.

"இறுதிச் சொல் முதலும் இடையும் சென்று
மறிந்து பொருள கோடல்"[83]

என்பது யாப்பருங்கல விருத்தியுரை.

3.3.5 6.1. *நேமிநாத உரை:—*

அளைமறிபாப்பைக் கூறும் எல்லா இலக்கண நூல்களும் அவற்றின் உரைகளும் ஈற்றில் நின்ற மொழி முதலிடை சேறலையே 'அளைமறிபாப்பு' என்றன. ஆயின், நேமிநாத உரை யுடையாரோ, 'முதலிலுள்ள சொல்லை இடையிலும் இறுதியிலுங் கூட்டிப் பொருள் முடிப்பது' என்று கொண்டார்.[84]

"மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கே
ஓதிற் புகழ்சால் உணர்வு"[85]

என்று காட்டினர். 'மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாட்கு விளக்கம் புதல்வர்; புதல்வர்க்கு விளக்கம் கல்வி; கல்விக்கு விளக்கம் உணர்வு'—என்று முதலில் நின்ற 'விளக்கம்' என்ற சொல் இடையிலும் இறுதியிலும் வந்து பொருந்தியது.

புற்றினுள் தலை முதலாக உட்சென்று, உடன் மடிந்து, உடலோடும் வாலோடும் ஒட்டி மேல்வரும் பாம்பு இப்பொருள் கோட்கு உவமையாகலான், நேமிநாத உரையின் கருத்து (தலைப் பகுதியிலுள்ள சொல் இடையும் இறுதியும் வந்து பொருந்தல்) உவமையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிலங்குகிறது.

3.3 5.6.2. *அளைமறிபாப்புஞ் சிவஞான முனிவரும்:—*

> ''இருமருங்கிணையும் இறுதியென அமையுமாதலின் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' ('தாழ்ந்தவுணர்வினராய்' எனத் தொடங்கும் பாடலில்) என்னுஞ் சொற்களை அம்மருங்கு (செய்யுளின் முதலில்) வைத்துச் செய்யுளாக்கினும் இப்பொருள்கோளாமென்க''[86]

என்று விளக்குவதன் மூலம் நேமிநாத உரையாசிரியரை உடன் படுகின்றார் சிவஞான முனிவர்.

எனவே, செய்யுளின் முதலிலோ முடிவிலோ நின்ற சொல் அல்லது சொற்களை ஒழிந்த இடங்களிலுங் கூட்டிப் பொருள் கொள்ளலை அளைமறிபாப்பு பொருள்கோள் எனலாம்.

3.3.5.6.3. *அளைமறி பாப்புந் தெய்வச் சிலையாரும்:—*

திரிபின்றி இயற்பிற் பொருள் தருவதாகக் கூறி, அளைமறி பாப்பை யாற்றொழுக்குடன் ஒன்றாகச் சேர்த்துக் கூறினார் தெய்வச் சிலையார்.[87] யாற்றொழுக்காகப் பொருள் தரினும், செய்யுளின் முதலிலோ முடிவிலோ உள்ள சொல் அல்லது சொற்களை ஏனைய இடங்களிலுங் கூட்டிப்பொருள் கொள்ள வேண்டியுள்ளதால், இதனைத் தொல்காப்பியர் கூறிய மொழிமாற்றினின்றும் பிரிந்த தொன்றாய்க் கோடலே சாலும்.

3.3.5.7. *கொண்டுகூட்டு:—*

> ''யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
> ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே''[88]

என்பது நன்னூல்.

'செய்யுளின் அடிகள் பலவற்றிலும் கோக்கப்பட்டுக் கிடக் கின்ற சொற்களைப் பொருளுக்கேற்பக் கொண்டு வந்து இயைத்தல் கொண்டுகூட்டு என்னும் பொருள்கோளாம்' என்பது கருத்து.

> *''ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்*
> *பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி*
> *விறன்முள்ளூர் வேங்கைவீ தாறுணுந் தோளாள்*
> *நிறனுள்ளூர் உள்ள தலா''*[89]

'பாரி பறம்பின்மேற் றன்னுமை தானுணுந் தோளாளுடைய நிறன் காரி விறன் முள்ளூர் வேங்கைவீ; (அதனுல்) உள்ளுருள்ள தாய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்' -என்று ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

3.3.5.7.1. *கொண்டுகூட்டுந் தெய்வச்சிலையாரும்:—*

> *"கொண்டு கூட்டு, சுண்ண மொழி*
> *மாற்றுள் அடங்கும்"*[90]

என்கிருர் தெய்வச் சிலையார்.

> *"சுண்ணந் தானே*
> *பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்*
> *ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல்"*[91]

என்றுராகலான், சுண்ணம் ஈரடி எண்சீருள் துணித்துக் கூட்டப் படுவது என்பது பெறப்படும். எனவே, ஈரடிபெண்சீருள் துணித்து ஒட்டுவதாய இச்சுண்ணத்துள், பலவடிகளிலும் மொழியை மாற்றிக் கூட்டுங் கொண்டுகூட்டை அடக்க முயலுந் தெய்வச்சிலை யாரின் கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை.

சுண்ணம் போன்றதோர் வரையறையின்றிப், பலவடிகளிலும் மொழிகளை மாற்றிக் கூட்டும் மொழிமாற்றின்கண் கொண்டுகூட்டை அடக்குதலே சாலும்.

> *"மொழிமாற் றியற்கை*
> *சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய*
> *முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்"*[92]

என்ற மொழிமாற்று பற்றிய நூற்பாவில் 'பலவடிகளில் மொழிகளை மாற்றிக் கூட்டல்' என்பதைத் தொல்காப்பியர் வெளிப்படையாய்க் கூறிற்றிலர் எனினும், சுண்ணத்தை 'ஈரடி எண்சீருள் துணித்து ஒட்டுதல்' என்று வரையறுத்தார் ஆகலான், அந்த வரை யறையை இகந்து வருவதையே இதன்கண் அமைத்தார் எனலாம்.

> "சுண்ணத்தோடு இதனிடை (மொழிமாற்றிடை) வேற்றுமை யென்னையெனின், சுண்ணம் ஈரடி எண்சீருள் அவ்வாறு செய்யப்படும்; இதற்கு அன்னதோர் வரையறை இல்லை"[93]

என்றுர் இளம்பூரணரும்.

எனவே, ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளில் மொழிகளை மாற்றிக் கூட்டுதலை இலக்கணமாகக் கொண்ட நன்னூலாரின் கொண்டு கூட்டைத் தொல்காப்பியரின் மொழிமாற்றுள் அடக்குதலே சாலும்.

3.3.5,8. *அடிமறி:—*

அடிமறி மாற்று, அடிமறி மொழிமாற்று எனவும் இலக்கணப் புலவர்களால் இது வழங்கப்பெறும்.

''ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீ றிடைமுதல் ஆக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா அடியவும் அடிமறி''[94]

என்றார் பவணந்தியார். 'பொருளுக் கேற்ப அடிகளை மாற்றுதலும், யாதானும் ஓரடியை யாதானும் ஓரிடத்து மாற்றுதலும் அடிமறி மாற்றும்' என்பது கருத்து. எனவே, பவணந்தியார் அடிமறி மாற்றுள் இருவகையை வேண்டியமை பெறப்படுகிறது தொல் காப்பியரோ 'பொருளுக்கேற்ப அடிகளை மாற்றும்' அடிமறி மாற்று ஒன்றனையே கொண்டார். (காண்க: ப-ள். 50-53)

3.3 5 8.1. *ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்று:—*

ஒரு செய்யுளில் பொருட் புலப்பாட்டுக்கு ஏற்ப அடிகளை மாற்றுதல் இவ்வகையிற் சேரும். அடியை மாற்றினால் மட்டுமே பொருள் புலப்படும் என்பது இவ் வகை அடிமறி மாற்றின் அடிப் படையாகும்.

''நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்''[95]

என்ற பாடலைக்,

''கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
விடுக்கும் வினையுலந்தக் கால்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்''

என்று மாற்றினால்தான் பொருள் புலப்படுகிறது. பொருளுக்கேற்ப, அடிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் கொண்டமையான், இது 'ஏற்புழிக் கூட்டும் அடிமறி' ஆயிற்று.

3.3.5.8.2. *பொருளிசை மாறா அடிமறி மாற்று:—*

ஒரு செய்யுளில் யாதானும் ஓரடியை யாதானும் ஓரிடத்து மாற்றினும் பொருள் மாறுபடாதிருப்பதே இவ்வகை அடிமறி மாற்றும். அடிமாறினால்தான் பொருள் புலப்படும் என்கின்ற நிலைமை இவ்வகைப் பொருள்கோளுடைச் செய்யுள்கட்குக் கிடையாது. அடிமாறியும் பொருள் உணர்த்து'; கிடந்தவாறே இருந்தும் பொருள் புலப்படுத்தும்.

இப்பொருளிசை மாறா அடிமறி மாற்றில் இரண்டு வகையைக் காட்டுவர் நன்னூல் உரையாசிரியர்கள்.

அ. பொருளும் இசையும் மாறாதன.
ஆ. இசைமாறிப் பொருள் மாறாதன.

இரண்டற்கும் ஒற்றுமை பொருள் மாறாதிருப்பது; இசை மாறுவது வேற்றுமையாம.

3.3.5.8.2.1. *பொருளும் இசையும் மாறாதன:—*

"மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே"[96]

அடிகளை மாற்றி நிறுத்துவதன் மூலம் இப்பாடலை இருபத்து நான்கு (24) வகைகளில் ($1\times2\times3\times$..............n; n=பாடலின் அடிகள்) அமைத்துக் காட்டலாம்.[97] ஆயின் எந்த அடியை எங்கு மாற்றி நிறுத்தும் போதும் பொருளும் இசையும் மாறாமை நோக்கத் தக்கது.

3.3.5 8 2 2. *இசைமாறிப் பொருள் மாறாதன:—*

"அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்"[98]

இதனுள் ஈற்றடி யொழிந்த ஏனையடிகளுள் எதனை எங்கு அமைத்தாலும் பொருளும் இசையும் வேறுபடாமையும், ஈற்றடியை எடுத்து எவ்விடத்துக் கூட்டினாலும் இசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையும் நோக்கத்தக்கன. நன்னூலும அதனுரைகளுங் கொண்டு இங்குப் பேசப்பட்ட அடிமறிமாற்றைக் கீழ்க்கண்டவாறு வரிமரமிட்டுக் காட்டலாம்.

- அடிமறி
  - ஏற்புழிக் கூட்டும் அடிமறி
  - பொருளிசை மாறு அடிமறி
    - பொருளும் இசையும் மாறுதன
    - இசைமாறிப் பொருள் மாறுதன

3.3.6. *பிற நூல்களும் பொருள்கோள்களும்:—*

நன்னூற்குப் பின்வந்த இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆய எல்லா நூல்களும், நன்னூலை அப்படியே பின்பற்றிப் பொருள்கோளை எட்டென்றன. நன்னூற்குப் பின்வந்த நூல்களுள் இலக்கணக் கொத்து ஒன்றே பொருள்கோளின் வகைகளை ஒன்பதென்கின்றது. இவ்விருபதாம் நூற்றாண்டிற்றோன்றிய 'தமிழ்நூலோ' எல்லாப் பொருள் கோள்களையும் யாற்றுநீர், கொண்டுகூட்டு எனும் இரு பகுப்பு களுக்குள்ளேயே அடக்கிற்று.

3.3.7. *அணிநூல்களும் பொருள்கோள்களும்:—*

தண்டியலங்காரம், மீனாட்சி சுந்தரக் கவிராயரின் குவலயா நந்தம், மாணிக்க சுவாமிகளின் குவலயானந்தம், துறைசைச் சதாலங்காரம், ஆரணச் சைலரலங்கார பஞ்சகம், சந்திராலோகம் ஆய அணியிலக்கண நூல்கள் நிரனிறைப் பொருள்கோளை அணி களுள் ஒன்றாய்க் கொண்டு கூறுகின்றன. மாறனலங்காரமோ நிரனிறையுடன் பூட்டுவிற் பொருள்கோளையும் அணியாய்க் கொண்டது. தாப்பிசைப் பொருள்கோள் அணியிலக்கணங்களுள் 'இடைநிலை விளக்காகப்' பேசப்படுகிறதுஎன்பதும், அணிநூல்கள் கூறும் முதல் மற்றும் கடைநிலை விளக்குகள் அளைமறி பாப்புப் பொருள்கோளைக் கருதியனவே என்பதும் தொடர்புடையவற்றின் இலக்கணங்களைத் துழாவி ஆய்வார்க்குத் தெள்ளிதின் புலனாகும்.

3.3.7.1. *தண்டியலங்காரம்:—*

நிரனிறையில் வழுவாமாற்றை இந்நூல் குறிக்கிறது.

> *"தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்*
> *நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினர்*
> *ஈரெண் கலையோன் வருண னிரவியமன்*
> *யாரும் புகழியல்பி னூர்"*[99]

இப்பாடலை, நேர் நிரனிறையாகவும் பொருள் கொள்ள முடியாது; எதிர் நிரனிறையாகவும் பொருள் கொள்ள முடியாது. முதலில் நிறுத்திய திசைகளின் அடைவுக்கு ஏற்ப, பின் நிறுத்திய காவலர்களை ஏற்ற பெற்றி மாற்றி இயைத்துக் கொள்ளவேண்டும்.

> இச்செய்யுளில், தென்றிசை முதல் குணதிசையீறாக அடைவேயெண்ணி அத்திசைகளினின்றும் உலகங் காப்பவர் யமன், வருணன், சந்திரன் (குபேரன்), சூரியன் என முறையே வையாது, சந்திரன், வருணன், சூரியன், யமன் என பிறழ வைத்தமையின் வழுவாயிற்று''[100]

என்பது தண்டியலங்கார உரை.

> *''ஒருநிரல் முன்வைத் ததன்பின் வைக்கும்*
> *நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவே''*[101]

என்பது நிரனிறை வழுவுக்கான தண்டியலங்கார நூற்பா.

இன்ன பொருட்கு இன்ன பொருள்தான் பொருந்தும் என்று உய்த்துணரக் கூடிய இடத்து நிரனிறை வழுவும் அமைதி பெறும் என்கிறார் ஆசிரியர்.

> *''உய்த்துணர வரும்வழி அவ்வாறும் உரித்தே''*[102]

என்பது நூற்பா.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'மயக்க நிரனிறை' என்று குறித்தது எதிர் நிரனிறையையே ஆகலானும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் 'மயக்க நிரனிறை' என்று குறித்தது நிரனிறையேயன்று ஆகலானும், அவற்றை 'மயக்க நிரனிறை' 'என்பதைத் தவிர்த்துத் தண்டியாசிரியரால் குறிக்கப்பெற்ற நிரனிறை வழுவினை' 'மயக்க நிரனிறை' என்று கரணியக் குறியீடு செய்யலாம். முறை, எதிர் நிரனிறைகள் போன்றே இம் மயக்க நிரனிறையும் (நிரனிறை வழுவும்) பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

பரிவர்த்தனை அணி, உவம உருவகம் ஆயவற்றையும் நிரனிறையில் தண்டியாசிரியர் சேர்ப்பதாக டாக்டர் தா. வே. வீராசாமி கூறியுள்ளார்.[103] பரிவர்த்தனை மற்றும் உவம உருவக அணிகட்குத் தண்டியாசிரியர் கூறும் இலக்கணத்தையுங் காட்டுங் காட்டுகளையும் நோக்குவார்க்கு டாக்டர் தா.வே.வீராசாமி கூறிய கருத்தின் பொருந்தாமை புலனாகும்.

3.3.7.2. *மாறனலங்காரம்:—*

பெயர், பெயரெதிர், பெயர்வினை, பெயர்வினையெதிர், வினை, வினையெதிர், வினைபெயர், வினைபெயர் எதிர், எழுத்து, முறை, இடையிணை, விற்பூட்டு என்று பன்னிரண்டு வகை நிரனிறை விகற்பங்களை வேண்டுகின்றார் மாறனலங்காரமுடையார்.[104] இவற்றுள் இடையிணை, விற்பூட்டு-ஆய இரு நிரனிறைகளும் வேறு யாராலும் நினைக்கப் படாதனவாம்.

பூட்டுவிற் பொருள்கோளைத் தனியணியாகக் கொண்டு பேசுகிறார் இந்நூலுடையார்.[105]

3.4. *முடிவுரை:—*

தொல்காப்பியந் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு இலக்கண நூலாம் தமிழ்நூல் ஈறாக உள்ள எல்லா இலக்கண நூல்களுஞ் சுட்டிய பொருள்கோளின் வகைகளெல்லாம் இவ்வியலின்கண் காட்டுகளுடன் விளக்கப்பட்டன. பொருள்கோள் எண்ணிக்கை பற்றிய இரு அட்டவணைகளும், வகைகள் பற்றிய இரு அட்டவணைகளும் இணைக்கப்பட்டுச் செய்திகள் தெளிவாக்கப்பட்டன.

பின்குறிப்புகள்

1. மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்)., *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 305.
2. *தொல்காப்பியம்*, நூ. 886.
3. ,, நூ. 887.
4. ஆறுமுக நாவலர் (ப-ர்)., *தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரையோடும்*, பக். 213.
   இராம. கோவிந்தசாமி பிள்ளை (ப-ர்.)., *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*, பக். 383.
5. தொல்காப்பிய உரையாசிரியர்கள் முதலடியை மட்டுங் காட்டினர். நேமி., யா.க., யா.கா., இ.வி., தொ.வி., மு.வீ. ஆயவற்றின் உரைகளும், நன்னூல் சங்கர நமச்சிவாயருரையும் முழுப் பாடலையுங் காட்டின. 'முத்தம் முகம்வாய் முறுவல்' என்பது யா.க., யா.கா. உரைகள் கொண்ட பாடம்.
6. *நன்னூல்.*, நூ. 414.
7. யாப்பருங்கல விருத்தியுரை காட்டிய மேற்கோள்.
   மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்.), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 294.

8. மூன்று நான்காவது அடிகளை மட்டுங் காட்டினர் இளம்பூரணர், தெய்வச்சிலையார், நச்சினர்க்கினியர் ஆயோர். சேனுவரையரோ இறுதி மூன்றடிகளைக் காட்டினுர். யா.க., நேமி, இ.வி. ஆயவற்றின் உரைகள், நன்னூல் மயிலைநாதர் உரை ஆயவைகள் முழுப்பாடலையுங் காட்டின.

9. குறிப்பு '2' காண்க.

10. ஆறுமுக நாவலர் (ப-ர்)., *தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனுவரையருரையோடும்*, பக். 213.

இராம. கோவிந்தசாமிபிள்ளை (ப-ர்), *தொல்காப்பியம், சொல்லதிகார மூலமும் நச்சினர்க்கினியர் உரையும்*, பக். 383.

11. ,, ,,

12. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் (ப-ர்.), *தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்*, ப-ள். 216-217.

13. இறுதி மூன்றடிகளைக் காட்டினர் இளம்., சேனு., நச்சி. ஆகியோர். தெய்வச்சிலையாருரை, யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை-ஆயவைகள் முழுப்பாடலையுங் காட்டின.

''உடலும் உடைந்தோடும் ஊழ்மலரும் பார்க்குங்
கடலிருளாம் பல்பாம் பென்னக்-கெடலருஞ்சீர்த்
திங்கள் திருமுகமாச் சேர்ந்து''

என்று சிந்தியல் வெண்பாவாகக் காட்டினுர் இளம்பூரணர். இறுதிச்சீரைச் 'செத்து' என்று கொண்டனர் சேனுவரையரும் நச்சினர்க்கினியரும்.

14. தண்டியலங்கார உரை காட்டிய மேற்கோள் இது. வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (கு-ர்.), *தண்டியலங்காரம் மூலமும் பழைய உரையும்*, பொருளணியியல், பக்.101.

15. யாப்பருங்கல விருத்தியுரை காட்டிய மேற்கோளிது. மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்.), *யாப்பருங்கலம் பழைய விருததியுரையுடன்*, பக். 297.

16. யா. க., யா. கா., நேமி., தொ. வி. — ஆயவற்றின் உரைகளும் நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரையும் இப்பாடலைக் காட்டுகின்றன.

17. யா.க., நேமி., இ.வி., தண்டி.-ஆயவற்றின் உரைகளும், நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையும் காட்டிய மேற்கோளிது.

18. தொல்காப்பியம், நூ. 888.

19. "கரையாட கெண்டை கயத்தாட மஞ்ஞை
சுரையாழ அம்மி மிதப்ப-வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலை யென்ப
கானக நாடன் சுனை"

என்று நான்கடிப் பாடலாகக் காட்டின தொன்னூல் விளக்க உரையும், தமிழிலக்கணத் தெளிவும்.

இப்பாடலை மாற்றிக் கூட்டாது, கிடந்தாங்கே யாற்றொழுக் காய்ப் பொருள்கொண்டு, இயற்பழித்தல் துறைக்குக் காட்டாகக் கொள்ளவேண்டும் என்பர்.

காண்க: வித்துவான் கே. குஞ்சிதபாதனுர், 'சுரையாழ', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 24, பரல் 4; பக். 162.

வல்லவர்கள் செய்யும் உயர்ந்த செயல்களையும் கானக நாடனது நாட்டின் எளிய மக்களுஞ் செய்து முடிப்பார்கள் என்பதையும், கானக நாடனது நாட்டில் ஏழை மக்கட்குச் சலுகைகள் அதிகம் என்பதையும் இப்பாடல் கிடந்தாங்கே நின்று உணர்த்திற்று என்று தமிழ்ப்பொழிலில் வெளியான கட்டுரையொன்று கூறுகிறது.

காண்க: ஆசிரியர் பெயர் இல்லை, 'கானக நாடன் சுனையில் சுரைக்காயும் அம்மியும்', தமிழ்ப்பொழில், துணர் 38, மலர் 6,7, ப-ள். 217-218.

"உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய
நிரையுணர் அல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு"

என்பது பழமொழி நானூறு (123).

"இம்மியன நுண்பொருள்க ளீட்டி நிதி யாக்கிக்
கம்மியரு மூர்வர்களி றேடை நுதல் சூட்டி
அம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்தநறுஞ்சால் கென்று
உம்மைவினை நொந்துபுலந் தூடலுணர் வன்றே"

என்பது சிந்தாமணி (495). இங்கெல்லாம் கிடந்தாங்கேதான் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. 'சுரையாழ அம்மி மிதப்ப' என்று தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிறருங் காட்டியதையும் கிடந்தாங்கே, யாற்றொழுக்காய் நடாத்திப் பொருள் கொள்ளும் போதுதான் பொருள் சிறப்புறுகிறது.

(இப்பாடலைப்)பாடியவரின் கருத்து,கொடுங்கோல் மன்னனின் அல்லது ஆட்சி முறையறியா அரசனின் நாட்டு வாழ்க்கையின் தாறுமாறான நிலைமையை உணர்த்துவதேயன்றி, மொழிமாற்றுப் பொருள்கோட்கு எடுத்துக்காட்டு அமைப்பதன்று என்பதை அறிதல் வேண்டும்'' என்றார் ஞா. தேவநேயனாரும். காண்க: ஞா. தேவநேயனார், 'மதிப்புரை', த. சரவணத்தமிழனின் *தமிழ்நூல்*, பக். 7.

20. இளம்பூரணர் காட்டிய மேற்கோளிது.

21. தெய்வச்சிலையார் காட்டிய மேற்கோளிது.

22. 23. நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோளிவை. முன்னது குறுந்தொகை 178; பின்னது புறநானூறு 6.

24. தெய்வச்சிலையார் சூத்திரத்திற்குக் காட்டிய இப்பாடலை மொழிமாற்றுக்கு நேமி. உரையும், கொண்டுகூட்டுக்கு யா.க., யா.கா., இ.வி. ஆயவற்றின் உரைகளுங் காட்டின. நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையுங்கொண்டுகூட்டுக்கே காட்டிற்று.
 மாமேனிக்கு உடைத்தமுட்டை உவமையாயிற்று; முட்டைக்குத் தெங்கங்காய் உவமையாயிற்று. இவ்வாறு உவமைக்கு உவமை வருதல் இயல்பன்று.

 ''உவமைக்குவமையாகக் கூறியவதனாற் போதுவதோர் பயன் இன்மையின் ஆகாதென்று கொள்க''-என்று உவமைக்கு உவமை கூறுவதனை விலக்குகிறார் இளம்பூரணரும்.

 காண்க: வ.உ. சிதம்பிரம் பிள்ளை (ப-ர்)., *தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம்*, பக். 356.

 அன்றியும், முட்டைக்குத் தெங்கங்காய் பொருத்தமான உவமையுமன்று. அடர்ந்த கூந்தலை அள்ளி முடித்த கொண்டைக்கே தெங்கங்காய் உவமை மிகுதியும் பொருந்தும். எனவே இப்பாடலையுங் கிடந்தாங்கே யாற்றொழுக்காய்ப் பொருள் கொள்ளலே சிறந்ததாகும்.

 இக்கருத்தைத் திரு தா.ம. வெள்ளைவாரணனார் கூறியதாக டாக்டர் பொன். கோதண்டராமனார் கூறினார்.

25. தெய்வச்சிலையார் (உ-ர்), *தொல்காப்பியம் சொல்லதிகாரம்*, பக். 225.

26. குறிப்பு 18 காண்க.

27. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியர் (ப-ர்),*தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்*, பக். 217.

28. ஆறுமுக நாவலர் (ப–ர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனுவரையருரையோடும், பக், 214.

29. ஷை., பக். 213.

30. இராம. கோவிந்தசாமி பிள்ளை (ப-ர்), தொல்காப்பியம், சொல்லதிகார மூலமும் நச்சினர்க்கினியர் உரையும், பக். 382.

31. தொல்காப்பியம், நூ. 891.

32. மொழிமாற்றுக்குச் சேனுவரையர் காட்டிய இப்பாடலைக் கொண்டுகூட்டுக்குக் காட்டின யா.க., யா.கா., இ.வி.— ஆயவற்றின் உரைகள்.

33. ஆறுமுக நாவலர் (ப-ர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனுவரையருரையோடும், பக். 216.

34. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார்(ப-ர்), தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணம், பக். 219.

35. தொல்காப்பியம், நூ. 889.

36. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் (ப-ர்.),தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், பக். 218.
ஆறுமுக நாவலர் (ப-ர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனுவரையருரையோடும், பக். 215.
இராம. கோவிந்தசாமிபிள்ளை (ப-ர்), தொல்காப்பியம்சொல்லதிகார மூலமும் நச்சினர்க்கினியருரையும், பக். 385.

37. ஆறுமுக நாவலர் (ப-ர்.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனுவரையருரையோடும், பக். 215.

38. ஷை.

39. தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், பக். 225.

40. தொல்காப்பியம், நூ. 890.

41. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் (ப-ர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், பக். 218.

42. ஆறுமுக நாவலர் (ப-ர்), தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனுவரையருரையோடும், பக். 215.

43. தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், பக். 226.

44. இராம. கோவிந்தசாமிபிள்ளை (ப-ர்.), *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினர்க்கினியருரையும்*, பக். 385.

45. பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, *தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு*, பக். 183.

46. க. வெள்ளைவாரணனர், *தொல்காப்பியம் நன்னூல், சொல்லதிகாரம்*, பக், 388.

47. ஆறுமுக நாவலர் (ப-ர்), *தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனுவரையருரையோடும்*, பக். 215.

48. *தொல்காப்பியம், நூ*. 433.

49. *தொல்காப்பியம், நூ*. 434.

50. சி. கணேசையர் (ப-ர்.), *தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினர்க்கினியருரையும்*, பக். 330.

51. ஆறுமுக நாவலர் (ப-ர்.), *தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனுவரையருரையோடும்*, பக். 215.

52. காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் (ப-ர்.), *தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்*, பக். 218.

53. இராம. கோவிந்தசாமிபிள்ளை (ப-ர்), *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினர்க்கினியர் உரையும்*, பக்.385

54. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம், பழைய விருத்தியுரையுடன்*, பக், 305.

55. மயிலை சீனி. வேங்கடசாமி, *மறைந்து போன தமிழ் நூல்கள்*, ப-ள். 16-30.

56. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்.), *அவிநயம்*, பக். 47.

57. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழையவிருத்தியுரையுடன்*, பக். 303.

58. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்), *அமுதசாகரம்*, பக். 46.

59. *நேமிநாதம், நூ*. 92.

60. *நன்னூல் நூ*. 411.

61. *நன்னூல். நூ*. 412.

62. உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் (ப-ர்.), *நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்*, பக். 280.

63. நான்மணிக்கடிகை: 26. இந்தப் பாடலைச் சங்கர நமச்சிவாயர் அடிமறிக்குக் காட்டினார். யா. க., யா. கா., நேமி., இ.வி. —ஆயவற்றின் உரைகள் யாற்றுநீர்க்குக் காட்டின.

64. தொன்னூல் விளக்கம், நூ. 306.

65. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, யாப்பருங்கலம், பழைய விருத்தியுரையுடன், பக். 303.

66. சேனா., நச்சி. —ஆயோருங் காட்டினர். யா. க., நேமி., இ. வி. —ஆயவற்றின் உரைகள் மற்றும் நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை ஆயனவுங் காட்டின.

67. குறிப்பு 63 காண்க.

68. சீவகசிந்தாமணி, பாடல், 53.

69. டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்.), நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும் ,பக். 391.

70. பவணந்தியார் கருதிய கருத்தே இவண் காட்டப்பட்டது. 'பொருளிசை மாறு அடிமறி' அடிமறியேயன்று என்பதும், யாற்றுநீரின் விகற்பமாய்க் கோடற்குரிய தென்பதும் 'பொருள்கோளின் வளர்ச்சி' எனும் பெயரிய இயலிற் காட்டப்படும்.

71. நன்னூல், நூ. 413.

72. குறிப்பு 19 காண்க.

73. டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்.), நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், பக். 392.

74. அகநானூறு, 4.

75. நன்னூல், நூ. 415.

76. முத்தொள்ளாயிரம் (டி. கே. சி. பதிப்பு), பாடல் 31.

77. ச. தண்டபாணி தேசிகர் (ப-ர்.), புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை, பக். 596.

78. நன்னூல், நூ. 416.

79. திருக்குறள், 255.

80. நன்னூல், நூ. 417.

81. யா. க., யா. கா., இ.வி., தொ.வி., மு.வீ. ஆயவற்றின் உரைகளும் இதையே காட்டின.

82. சுவாமிநாதம், நூ. 69.
83. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை (ப-ர்.), யாப்பருங்கலம், பழைய விருத்தியுரையுடன், பக். 304.
84. ரா. இராகவையங்கார் (ப-ர்.), நேமிநாத மூலமுமுரையும், பக். 96.
85. நான்மணிக்கடிகை; 103. நேமி. நூ. 92 இன் மேற்கோள்.
86. ச. தண்டபாணி தேசிகர் (ப-ர்.), புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை, பக். 598.
87. தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப-ள். 226—227
88. நன்னூல், நூ. 418.
89. குறிப்பு 32 காண்க.
90. தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், பக். 227.
91. குறிப்பு 18 காண்க.
92. குறிப்பு 31 காண்க.
93. குறிப்பு 34 காண்க.
94. நன்னூல், நூ. 419.
95. நாலடியார், 93.
96. குறிப்பு 66 காண்க.
97. $T = \frac{l^2 (l-1)}{2}$ என்று அமைத்துக் காட்டினர் டாக்டர் தா. வே. வீராசாமி. அது நான்கடியுடைய பாவிற்கு மட்டுமே பொருந்தும். இவ்வகைப் பாடல்களை நான் கடிகளினிகந்தும் அமைக்க முடியும்.
98. குறிப்பு 63 காண்க.
99. தண்டியலங்கார மேற்கோளிது.
வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (கு-ர்.), தண்டியலங்காரம் மூலமும் பழைய உரையும், சொல்லணியியல், பக். 95.
100. ,, ப-ள். 95-96.
101. தண்டியலங்காரம், சொல்லணியியல், நூ. 18.
102. ,, நூ. 19
103. V. Veerasamy, 'Tamil meaning process-porul kool', Proceedings of the First All India Conference of Dravidian Linguistics, p.166.
104. மாறனலங்காரம், நூ. 163-174.
105. ,, நூ. 175.

4. உரை நூல்களும் பொருள்கோள்களும்.

4.1. முன்னுரை.

4.2. உரை நூல்கள்.

4.2 1. இறையனாரகப் பொருளுரை.

4.2.1.1. வகைகள்.

4 2.1.1.1. விதலையாப்பு.

4.2.1.1.1.1. உரையிற் காணப்படுவது.

4.2.1.1.1.2. யாற்றுநீரா?

4 2.1.1.2. பாசி நீக்கம்.

4.2.1.1.3. ஒருசிறை நிலை.

4.2.1.2. கோளின்றி வந்த பாட்டு.

4.2.1.3. இயைபின்மை.

4.2.2. யாப்பருங்கல விருத்தியுரை.

4.2.2.1. வகைகள்.

4.2.2.1.1. நிரனிறை.

4.2.2.1.1.1. நிரனிறையைச் சேர்ந்தன.

அ. எழுத்துமாறு நிரனிறை.

ஆ. முறையும் எதிரும்.

இ. அடிமுதலிய நிரனிறைகள்.

ஈ. உய்த்துணர் நிரனிறை.

4.2.2.1.1.2. நிரனிறையைச் சேராதன.

அ. மயக்க நிரனிறை.

4.1. *முன்னுரை:-*

தொல்காப்பியத்தை அடுத்துப் பொருள்கோளின் வகைகள் ஒவ்வொன்றையுந் தனித்தனி நூற்பாவில் வைத்துப் பேசும் நூல் நன்னூலேயாகும். இவ்விரு நூல்கட்கிடையே எழுந்த நேமி நாதமோ பொருள்கோளின் வகைகளைப் பெயரளவிற் குறிப்ப தோடே அமைந்து விடுகின்றது. எனவே, தொல்காப்பியத்திற் கும் நன்னூற்கும் இடைப்பட்ட காலத்தின் பொருள்கோட் கோட் பாடுகளை அறிய உரை நூல்களே நமக்குத் துணை செய்கின்றன. அவ்வுரை நூல்கள் கூறும் பொருள்கோள்களைப் பற்றிக் காண எழுந்ததே இவ்வியலாகும்.

4.2. *உரை நூல்கள்:-*

இலக்கண மூலநூல்கள் 'பொருள்கோள்' என்றும், 'கோள்' என்றும், 'பொருளடைவு' என்றும் பெயரளவு மாத்திரையே யாய்ப் பொருள்கோளைக் குறிக்கவும், அந்நூல்கட்கமைந்த உரை களோ பொருள்கோளின் வகைகளைக் கூறி, அவற்றைத் தனித் தனி விளக்கி, மேற்கோள் காட்டிப் புலப்படுத்திப் போகின்றன.[1] இவ்வகையிற் குறிப்பிடத் தகுந்த உரைகள் வருமாறு:-

அ. இறையனாரகப் பொருளுரை.

ஆ. யாப்பருங்கல விருத்தியுரை.

இ. யாப்பருங்கலக் காரிகையுரை.

ஈ. வீரசோழிய உரை.

உ. நம்பியகப்பொருளுரை.

இவ்வுரை நூல்கள் கூறும் பொருள்கோள் வகைகள் அனைத்தும் எதிர்ப்பக்கத்து அட்டவணையின்கண் தொகுத்துத் தரப்பட்டிருக் கின்றன.

உரைநூல்கள் கூறும் பொருள்கோள்கள் (அட்டவணை)

அட்டவணை எண் : 8

உரை நூல்கள்	பொருள்கோள்கள்																	
	அசோகு	அடிமறி	அடிமொழி	அளைமறி	ஒருசிறைநிலை	கரும்பு	கொண்டு கூட்டு	சுண்ணம்	தாப்பிசை	நிரனிறை	பலா	பாசிநீக்கம்	புனல்யாறு	மொழிமாற்று	வள்ளி	வாழை	விதலையாப்பு	விற்பூட்டு
இறையனார் அகப்பொருள் உரை					x		x					x					x	x
யாப்பருங்கல விருத்தியுரை		x	x	x			x	x	x	x			x					x
யாப்பருங்கலக் காரிகையுரை		x	x	x			x	x	x	x			x					x
வீரசோழிய உரை	o			+		o	+	+		+	o		o	+	o	o		o
நம்பியகப் பொருள் உரை		x	x	x			x	x	x	x			x					x

o இக்குறியுள்ளவற்றைப் 'பொருள்கோள்' என்னுந் தலைப்பின் கீழும்,

+ இக்குறியுள்ளவற்றைப் 'பொருணடை' என்னுந் தலைப்பின் கீழும் வீரசோழிய உரை கூறுகிறது.

4.2.1. *இறையனாரகப்பொருளுரை:-*

அகப்பாட்டுறுப்புகள் அல்லது அகனைந்திணைக்கண் உரைக்க வேண்டுவன என்று பத்தனைக் கூறுகின்றார் இறையனாரகப் பொருள் உரையுடையார்.

''திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோள்என் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்த லாறே''[2]

என்பது நூற்பா. இங்குக் கூறப்பட்ட பத்தனுள் 'கோள்' என்பதனை உரையாசிரியர் 'பொருள்கோள்' என்று கொண்டார்.

4.2.1.1. வகைகள்:-

'கோள்' என்பதனை 'ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை' என்று விளக்கிய உரையாசிரியர்,[3] அதன் கண் ஐந்து வகைகளைக் கூறுகின்றார்.[4] அவையாவன:-

அ. விற்பூட்டு
ஆ. விதலையாப்பு
இ. பாசிநீக்கம்
ஈ. கொண்டுகூட்டு
உ. ஒருசிறைநிலை

இவற்றுள் விற்பூட்டுங் கொண்டுகூட்டும் பிற இலக்கண நூல்களாலும் உரைகளாலுங் கூறப்பட்டவைதான் என்பதாலும், அவை பற்றி முன்பே சொல்லப்பட்டுள்ளது என்பதாலும் அவை தவிர்ந்த ஏனையனவே இங்குப் பேசப்படுகின்றன.

4.2.1.1.1. *விதலையாப்பு:-*

''விதலையாப்பு என்பது முதலும் இடையுங் கடையும் பொருள் கொள்வது'' என்றார் உரையுடையார்.[5]

''பண்தான் அனையசொல் லாய்பரி விட்டுப் பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்கொல்லிப் பாங்கர் விரைமணந்த
வண்டார் கொடிநின் நுடங்கிடை போல வணங்குவன
கண்டாற் கடக்கிற்ப ரோகட வாரன்பர் கானகமே''[6]

என்ற பாடல் விதலையாப்புக்குக் காட்டாகக் காணப்படுகிறது.

'பண்தான் அனைய சொல்லாய்; வண்டார் கொடி நின் நுடங்கிடை போல வணங்குன—அவற்றை அன்பர் கண்டால்

கானகம் கடக்கிற்பரோ? கடவார்'—என்று கூட்ட, பொருள் புலனு யிற்று. ('நுடங்கிடை போல வணங்குவனவாய வண்டார் கொடியைக் கண்டால்' —எனக் கூட்டினுமாம்). ஈற்று நிற்க வேண்டிய 'கடவார்' எனும் வினைமுற்று தன் இடத்தினின்றும் பெயர்ந்து சென்று முன் நின்றது.

> ''முளிதரு வேனற்கண் கானவர் ஆர்ப்ப முகிற்கணங்கள்
> தளிதரு தண்சிலம் பாதக்க தன்று தரணிதன்மேல்
> அளிதரு செங்கோல் அரிகே சரிஅந் தண்கூடலன்ன
> ஒளிதரு வாள்நுத லாள்நைய இவ்வா றெழுகுவதே''[7]

இதுவும் விதலையாப்புடையதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

'சிலம்பா! வாள்நுதலாள் நைய இவ்வாறெழுகுவது தக்க தன்று'—என்றியைந்தது. இங்கும் ஈற்றில் நிற்க வேண்டிய 'தக்கதன்று' எனுஞ் சொல் முன் சென்று நின்றது.

> ''மானக் கடுஞ்சிலை மான்தேர் வரோதயன் வாள்முனைபோன்
> றூனப் படநினை ந் தூடல்பொன னேயுறு வெஞ்சுரத்து
> நானக் குழல்மிசை நான்கொய்து கொண்டு நயந்தணிந்த
> கானக் குரவினம் போதே கமழுமென் கைத்தலம்''[8]

என்பது விதலையாப்புடையதாகக் காட்டப்பட்ட இன்னொரு பாடல்.

'பொன்னே! போதே என்கைத்தலம் கமழும்; (ஆகலான்) ஊடல்' என்றியைந்தது. ['அல்' ஈற்று வியங்கோள் எதிர்மறை உணர்த்தி நின்றது, 'மகனெனல்' (குறள் 196) என்பது போல. 'ஊடற்க' என்பது கருத்து.] இங்கும் ஈற்றில் நிற்க வேண்டிய 'ஊடல்' எனுஞ்சொல் முன்சென்று நின்றது.

எனவே, ஈற்று நிற்க வேண்டிய சொல் முன்சென்று நின்றது என்னும் ஒருமையும் பொதுமையும் விதலையாப்புடையனவாகக் காட்டப்பட்ட பாடல்கள் மூன்றனுள்ளுங் காணப்படுகின்றன. ஆயின், 'தலையும் இடையுங் கடையும் பொருள் கொள்வது' என்று உரையாசிரியர் விதலையாப்புக்குக் கூறிய விதி இப்பாடல் களில் எவ்வண்ணம் பொருந்துகின்றது என்பது தெரியவில்லை.

4.2.1.1.1.1. உரையிற் காணப்படுவது:—

விதலையாப்புடையனவாக இங்குக் காட்டப்பட்ட பாடல்கள் மூன்றனுள்ளும் இறுதி இரண்டற்கு யாற்றெழுக்காகவே உரையின் கண் பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

> '' 'தளிதரு தண்சிலம்பா தக்கதன்று இவள் நைய இவ்வாறெழுகுவது' எனக் கொண்டமையின் இது விதலையாப்பு''[9]

என்று உரையின்கண் காணப்படுகின்றது. ஆயின், 'தக்கதன்று' என்பதை இறுதியிற் சேர்த்தலே தொடரமைப்புக்குப் பொருந்துவ தாக உள்ளது.

> "விதலையாப்பு, 'நான் கொய்து அணிந்த குரவினம் போதே இன்னுங் கமழும் என் கைத்தலம்' என்று மூன்றிடத்துப் பொருள் கொண்டமையான் என்பது"[10]

என்று இறுதியிற் காட்டப்பட்ட பாடலுக்குப் பொருண்முடிபு காட்டப்படுகின்றது. 'மூன்றிடத்துப் பொருள் கொண்டது' என்றது எதைக் கருதியது என்பது விளங்கவில்லை.

'தலையும் இடையுங் கடையும் பொருள் கொள்வது' என்று விதலையாப்புக்குச் சொல்லப்பட்ட விதிக்கும், காட்டப்பட்ட காட்டுகட்கும், கூறப்பட்ட விளக்கங்கட்கும் இடையே தொடர் பின்மையும் இடைவெளியுண்மையுங் காணப்படுகின்றன.

4.2.1.1.1.2. *யாற்றுநீரா?*

விதலையாப்புடைய இரு பாடல்கள் உரையின்கண் யாற்றொழுக் காய் இயைத்துக் காட்டப்பட்டிருப்பதைக் கருதிப் போலும் விதலையாப்பை யாற்றுநீருள் அடக்கினர் டாக்டர் தா. வே. வீரா சாமி.[11]

விதலையாப்புக்குக் கூறப்பட்ட விதி யாற்றுநீர்ப் பொருள் கோட்கு இயைய அமையவில்லையாகலானும், விதலையாப்புடை யனவாகக் காட்டப்பட்ட பாடல்களை மாற்றிக் கூட்டியே பொருள் கொள்ள வேண்டியுள்ளதாகலானும், யாற்றொழுக்காய் அமைந்த பாடல்கள் 'கோளில்லாப் பாடல்கள்' என்று தனியே குறிக்கப்படு கின்றனவாகலானும்[12] விதலையாப்பை யாற்றுநீருள் அடக்கிய டாக்டர் தா. வே. வீராசாமியின் கருத்து இயைபுடையதாகத் தோன்றவில்லை.

4.2.1.1.2. *பாசி நீக்கம்:—*

"பாசிநீக்கம் என்பது சொற்றோறும் அடிதோறும் பொரு ளேற்று நிற்பது" என்றார் உரையாசிரியர்.[13]

> "சென்றார் வருவது நன்கறிந்தேன் செருச்செந் நிலத்தை
> வென்றான் பகைபோல் மெலியல் மடந்தைமுன்
> வெற்பெடுத்து
> நின்றான் அளந்த நிலமுங் குளிர்ந்தது நீள்புயலால்
> பொன்றான் மலர்ந்து பொலங்கொன்றை தாமும்
> பொலிந்தனவே"[14]

என்று காட்டப்பட்டுள்ளது.

'மடந்தை! நீள்புயலால் நிலமுங் குளிர்ந்தது, பொலங் கொன்றை தாமும் பொன் தான் மலர்ந்து பொலிந்தன; சென் ருர் வருவது நன்கறிந்தேன், மெலியல்!'—என்று மாறி இயைகின்றது.

'சொற்ருேறும் அடிதோறும் பொருளேற்று நிற்பது' என்று உரையாசிரியர் எதைக் கருதினுர் என்பதும், கொண்டு கூட்டிடை இப்பாடற்குள்ள வேறுபாடென்னே என்பதும் விளங்கவில்லை.

டாக்டர் உ.வே. சாமிநாதையரும், டாக்டர் தா.வே. வீராசாமியும் இப்பொருள்கோளை யாற்றுநீருள் அடக்கினர்.[15] 'விதலை யாப்பு யாற்றுநீரன்று'—என்பதற்குக் காட்டப்பட்ட கரணியங் களே இங்கும் பொருந்தி, 'பாசிநீக்கம் யாற்று நீரன்று' என்பதை வலியுறுத்தும்.

4.2.1.1.3. ஒருசிறை நிலை :-

"ஒருசிறை நிலை என்பது ஒரு பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்பது" என்ருர் உரைகாரர்.[16]

''கோடல் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றை செம்பொன்
பாடல் மணிவண்டு பாண்செயப் பாரித்த பாழி வென்ற
ஆடல் நெடுங்கொடித் தேரரி கேசரி அந்தண் பொன்னி
நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே'' [17]

என்று காட்டப்பட்டுள்ளது.

பருவங் கண்டு ஆற்ருளாய தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறிய தாக அமைந்ததிப்பாடல்.

'கோடல் மலர்ந்து குருகிலை தோன்றின; பாடல் மணிவண்டு பாண் செயக் கொன்றை செம்பொன் பாரித்த; பொன்னி நாடன் பகைபோல் என் செய்ய (சிவந்த) நன்னுதல் மெலிகின்றது'— என்று இயையப் பொருள் இனிது புலனுகின்றது.

'நன்னுதல்' என்பதை விளியாக்கி, 'மனம்' என்பதைத் தோன்ருஎழுவாயாய்க் கொண்டு, 'என்செய்ய' என்பதை வினு வாக்கி, 'நன்னுதலே! என் மனம் மெலிகின்றது, என் செய்ய?' என்று கூட்டிப், 'பருவங் கண்டு ஆற்ருளாய தலைமகள் தோழிக் குக் கூறியது' என்று உரைப்பினும் அமையும்.

'செய்ய நன்னுதல் மெலிகின்றது' என்றோ 'மனம்மெலிகின்றது' என்றோ சொல்லி, தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துதலே இப்பாடலின் நோக்கமாகும். ஆற்றாமையை வெளிப்படுத்தும் 'மெலிகின்றது என் செய்ய நன்னுதலே' என்பது பாடலின் இறுதியில் நிற்கிறது. இதையே, 'பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்பது' என்று உரையாசிரியர் குறித்தனராகலாம்.

4. 2. 1. 2. *கோளின்றி வந்த பாட்டு:-*

''அவற்றுள்
எச்சமுங் கோளும் இன்மையும் உரிய''[18]

என்ற நூற்பாவுரையிற் 'கோளின்றி' வந்ததாகக் கீழ்க்காணும் பாடலைக் காட்டுகிறார் உரையாசிரியர்.

''வாடு நிலைமையை நீக்கிமண் காத்துவல் லத்தெதிர்ந்தார்
ஓடு நிலைமைகண் டான்வையை யொண்ணுதல் மங்கையரோ
டாடு நிலைமையை யல்லை அவரொடம் பூம்பொழில்வாய்
நீடு நிலைமையும் அல்லைசொல் லாய்என் நெடுந்தகையே''[19]

இப்பாடல் யாற்றொழுக்காக நடத்தல் நோக்கத்தக்கது. 'யாற்றுநீரைப்' பொருள் கோளன்றென்று கருதிய உரையாசிரியரின் கருத்து இங்கு வெளிப்படுகிறது.

'கோளின்றி வந்த பாட்டு' என்று யாற்றொழுக்காய் அமைந்ததனைக் குறிக்கவே, விதலையாப்பு, பாசிநீக்கு, ஒருசிறை நிலை போன்ற கோளொடு வந்ததனைத்தும் யாற்றொழுக்காகாமை இனிது பெறப்படும்.

4.2.1.3. *இயைபின்மை:-*

விதலையாப்பு, பாசிநீக்கம் என்பனவற்றுக்குச் சொல்லப்பட்ட இலக்கணங்கட்கும், காட்டப்பட்ட காட்டுகட்கும், கூறப்பட்ட விளக்கங்கட்கும் இடையே இயைபின்மையும் இடைவெளியுண்மையும் மிகுதியுங் காணப்படுகிறது. வழிவழி வழங்கிவந்த உரையிடையே இணைக்கப்பட்ட பாண்டிக்கோவைப் பாடல்கள் உரையாசிரியரின் கருத்தைச் சரிவர வெளிப்படுத்தவில்லையோ என்று ஐயப்படத் தோன்றுகின்றது.

4.2.2. *யாப்பருங்கல விருத்தியுரை:-*

ஒழிபியலின்கண் செய்யுளியலிற் கூறப்பட்ட செய்யுள்கட்கான புறனடை இலக்கணத்தைப் பேசும் யாப்பருங்கலம், அவ்வியலின்

இரண்டாம் நூற்பாவில் 'நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதியும்' என்று குறிக்கிறது.[20] இதனை விரித்துப் பொருள்கோளின் வகைகள் பலவற்றையுந் தெளிவாகச் சுட்டுகிறார் உரையாசிரியர் குணசாகரர்.

4.2.2.1. *வகைகள்:-*

ஒன்பது வகைப் பொருள்கோள்களை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குணசாகரர் குறிக்கிறார். அவையாவன:-

அ. நிரனிறை
ஆ. சுண்ணமொழி மாற்று
இ. அடிமறி மொழி மாற்று
ஈ. அடிமொழி மாற்று
உ. பூட்டுவிற் பொருள்கோள்
ஊ. புனல்யாற்றுப் பொருள்கோள்
எ. அளைமறிபாப்புப் பொருள்கோள்
ஏ. தாப்பிசைப் பொருள்கோள்
ஐ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

4.2.2.1.1. *நிரனிறை:-*

குணசாகரர் யாப்பருங்கல விருத்தியுரையில் நிரனிறையின் வகைகளாக இரண்டனை வேண்டுகின்றார். அவையாவன:—

அ. பெயர் நிரனிறை
ஆ. வினை நிரனிறை

இவ்விரண்டுந் தவிர 'பிறன்கோட் கூறல்' என்னும் உத்திப்படி இவ்வுரையாசிரியர் நிரனிறையிற் காட்டும் விகற்பங்கள் மிகப் பலவாம். நிரனிறையின் வகைகளாக இவ்வுரையின்கண் குறிக்கப் பட்டிருப்பன வருமாறு:-

1. பெயர் நிரனிறை
2. எழுத்துமாறு நிரனிறை
3. வினைநிரனிறை
4. முறை நிரனிறை
5. எதிர் நிரனிறை
6. மயக்க நிரனிறை
7. நிறையெண் நிரனிறை
8. குறையெண் நிரனிறை
9. மிகையெண் நிரனிறை
10. ஒருமுதல் நிரனிறை
11. இருமுதல் நிரனிறை
12. உய்த்துணர் நிரனிறை

13. அடிநிரனிறை
14. இணை நிரனிறை
15. பொழிப்பு நிரனிறை
16. ஓரூஉ நிரனிறை
17. கூழை நிரனிறை
18. மேற்கதுவாய் நிரனிறை
19. கீழ்க்கதுவாய் நிரனிறை
20. முற்று நிரனிறை
21. முரண்நிரனிறை

இவ்வுரையிற் கூறப்பட்டனவாக மேலே காட்டப்பட்ட நிரனிறை விகற்பங்களிற் சில நிரனிறையேயல்ல என்பதும், எஞ்சியன பெயர், வினை, முறை, எதிர்—என்னும் நிரனிறையின் வகைகளுள்ளேயே அடங்கக் கூடுவன என்பதுங் கருதத் தக்கன.

4.2.2.1.1.1. *நிரனிறையைச் சேர்ந்தன:-*

அ. எழுத்து மாறு நிரனிறை; -

இதனை யாப்பருங்கல விருத்தியுரையேயன்றி, நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆயவற்றின் உரைகளும் மாறனலங்காரமுங் குறிக்கின்றன. இது 'எழுத்து நிரனிறை', 'எழுத்து மாற்று நிரனிறை' என்றும் வழங்கப் பெறும்.[21]

"காமவிதி கண்முகம் மென்மருங்குல் செய்யவாய்
தோமில் துகடினி சொல்லமிர்தம்—தேமலர்க்
காந்தள் குரும்பை கனக மடவாள்கை
ஏந்திளங் கொங்கை எழில்"[22]

இதனுள், 'காமவிதி கண்முகம்' எனும்போது,

கா ம வி தி— காவி, மதி என்று பிரித்துக் கூட்டிக்

காவி கண், மதி முகம்—என நிரலே இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

'மருங்குல் வாய் துகடினி' எனும்போது,

து க டி னி துடி, கனி என்று பிரித்துக் கூட்டித், துடி

மருங்குல், கனி வாய்—என நிரலே இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

இங்குக் காட்டப்பட்ட இச்செய்யுளின்கண் முடிக்கப்படுஞ் சொல்லும், முடிக்குஞ் சொல்லும் பெயராக அமைந்திருக்கின்ற மையான், இதனையும் பெயர் நிரனிறையில் அடக்கலாம்.

ஆ. முறையும் எதிரும்:-

பெயர், வினை எனும் நிரனிறைப் பகுப்புகளினும், முறை, எதிர் எனும் பகுப்புகளே மிகவும் இன்றியமையாதனவாகும்; பொருள் கொள்வதற்கு நிரனிறையில் இவையே அடிப்படையாகும்.

சொல்லையும், பொருளையும் நிரலே வேறு வேறு நிறீஇ, முறையாக (நேராக) இயைத்துக் கோடலை 'முறை நிரனிறை' என்றும், மாறுக (எதிராக) இயைத்துக் கோடலை 'எதிர்நிரனிறை' என்றும் இலக்கணப் புலவர்கள் காட்டியமை முன்னியலிற் காட்டப்பட்டது. (காண்க: 3.3.1 1.1.1. & 3.3.1.1.1 2.ப-ள். 41-43.)

குணசாகரர் தமது உரையில் 'முறை நிரனிறை' உடையனவாகக் காட்டும் பாடல்களிற் சில 'நிரனிறையே யல்ல' என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

> ''முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
> வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு''[23]

என்பது காட்டப்பட்ட பாடல்களுள் ஒன்று. இதன்கண், சொல்லும் பொருளுந் தனித்தனி நிரலே நில்லாமையானும், அடுத்தடுத்து இயல்பாயமைந்து யாற்றொழுக்காய்ப் பொருள் தருகின்றமையானும் இதனை நிரனிறைப் பொருள்கோள் என்னல் தகாது.

முறை நிரனிறைக்குக் காட்டப்பட்ட பாடல்களுள்,

> ''வாய்பவளம் வேய்தோள் மருங்குல் இளவஞ்சி
> ஆய்மலர்க் கோதை யவட்கு''[24]

என்பதும் ஒன்று. இப்பாடலில் ஈரிடங்களில் (வாய், மருங்குல்) பொருள் (உவமேயம்) உவமைக்கு முன்னே நிறுத்தப்பட்டிருக்கிறது. எஞ்சிய இடங்களிற் பொருள் உவமைக்குப் பின்னே நிறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு வருவனவற்றை 'மயக்க நிரனிறை' என்று தனியே வேண்டிய குணசாகரர், இப்பாடலை அப்பகுப்பின்கண் சேர்க்காது, 'முறை நிரனிறை'யிற் சேர்த்துத் தமக்குத்தாமே முரணுகிறார்.

இ. அடி முதலிய நிரனிறைகள்:-

தொடைப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டு, நிரனிறையைக் கீழ்க்கண்ட எட்டு பகுப்புகளாற் காட்டுகிறார் யாப்பருங்கல விருத்தியுரையுடையார், குணசாகரர்.

அ. அடிநிரனிறை

1	2	3	4
↓			
1	2	3	4

ஆ. இணை நிரனிறை

1	2	3	4
↓	↓		
1	2	3	4

இ. பொழிப்பு நிரனிறை

1	2	3	4
↓		↓	
1	2	3	4

ஈ. ஒரூஉ நிரனிறை

1	2	3	4
↓			↓
1	2	3	4

உ. கூழை நிரனிறை

1	2	3	4
↓	↓	↓	
1	2	3	4

ஊ. மேற்கதுவாய் நிரனிறை

1	2	3	4
↓		↓	↓
1	2	3	4

எ. கீழ்க்கதுவாய் நிரனிறை

1	2	3	4
↓	↓		↓
1	2	3	4

ஏ. முற்று நிரனிறை

1	2	3	4
↓	↓	↓	↓
1	2	3	4

இங்குக் காட்டப்பட்ட அடி முதலாய நிரனிறைப் பகுப்புகள் யாப்பிலக்கணத் தொடைப் பாகுபாட்டின் தாக்கத்தால் நிகழ்ந்தனவாம். இத்தகைய பாகுபாடு நிரனிறையின் வகைகளைப் பெருக்கிக் காட்டப் பயன்படுமே தவிர, பிறிது பயன் விளைக்காது. இவ்வாறு பகுக்கப்பட்ட நிரனிறையையெல்லாம் பெயர், வினை, முறை, எதிர் என்ற பகுப்புகளிலேயே அடக்கிவிட முடியுமாகலான் இப்பகுப்புகள் தேவையற்றது என்பது சொல்லாமற் பெறப்படும்.

ஈ. *உய்த்துணர் நிரனிறை:-*

"செய்யோன் செழும்புகரோன் தெள்ளியோன் தேய்கதி
ரோன்
வெய்யோன் புதன்வெளியோன் வென்றிசேய்—
பொய்யாப்பொன்

செல்லாச் சனிகாரி தேவர்கோன் மந்திரியே
இல்காற் கிறைவரா வார்"[25]

என்பது யாப்பருங்கல விருத்தியுரையுடையார் 'உய்த்துணர் நிரணிறை'க்குக் காட்டிய பாடல்களுள் ஒன்று. இங்குக் கோள்களின் (கிரகம்) பெயரைக் கூறிய பாடலுடையார் அவற்றுக்குரிய வீடுகளின் (இராசி) பெயரைக் கூறாமல், பொருந்துமாறு உய்த்துணர வைத்தமையான் இஃது 'உய்த்துணர் நிரணிறை' ஆயிற்று.

4.2.2.1.1.2. நிரணிறையைச் சேராதன:-

அ. மயக்க நிரணிறை:-

எதிர் நிரணிறையைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'மயக்க நிரணிறை' என்று குறித்தமை முன்னியலிற் காட்டப்பட்டது. ஆயின், குணசாகரர் தமது யாப்பருங்கல விருத்தியுரையிற் காட்டும் மயக்க நிரணிறையோ எதிர் நிரணிறையினும் மாறுனது.

"கண்ணன் கருவிளை; கார்முல்லை கூரெயிறு;
பொன்னன் பொறிசுணங்கு; போழ்வாய் இலவம்பூ;
மின்னன் நுழைமருங்குல்; மேதகு சாயலாள்
என்னன் பிறமகளா மாறு"[26]

என்பது மயக்க நிரணிறைக்கு யாப்பருங்கல விருத்தியுரையிற் காட்டப்பட்ட பாடல்களுள் ஒன்று.

இப்பாடலில் ஈரிடங்களில் (கண்ண், வாய்) பொருள் (உவமேயம்) உவமைக்கு முன்னே நிறுத்தப்பட்டிருக்கிறது; எஞ்சிய இடங்களிற் பொருள் உவமைக்குப் பின்னே நிறுத்தப்பட்டிருக்கிறது. 'கருவிளை கண்' என்றும், 'இலவம்பூ போழ்வாய்' என்றும் மாற்றிக் கூட்ட, பாடல் இயல்பின் நடக்கிறது. இவ்வாறு அமைந்து நிற்கும் பாடல்களையெல்லாம் 'மயக்கநிரணிறை' என்று வேண்டினுர் யாப்பருங்கல விருத்தியுரையுடையார். ஆயின்,

"இது சொல்லையும், பொருளையும் தனித்தனி நிறீஇக் கூறியதன்றி, நிரணிறையாக நிறீஇக் கூறுமையின் நிரணிறையன்று"[27]

என்று மறுக்கிறுர் சங்கர நமச்சிவாயர். இங்குச் சொற்களை ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்ட வேண்டியுள்ளதால், இதனைக் கொண்டு கூட்டின்கண் அடக்கலாம்.

ஆ. எண் நிரணிறைகள்:-

நேமிநாத உரையும் இப்பகுப்பை வேண்டுகின்றது.[28] இந்நிரணிறையில் மூன்று வகைகளைக் காட்டுகின்றனர். அவையாவன:-

அ. நிறையெண் நிரனிறை

ஆ. மிகையெண் நிரனிறை

இ. குறையெண் நிரனிறை

நிறையெண் நிரனிறையை 'அளவெண் நிரனிறை' என்று சுட்டிற்று நேமிநாத உரை.

> ''யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
> தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
> தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
> கானும் புள்ளுங் கைதையும் எல்லாம் கரியன்றே''[29]

''இதனுள் மூன்று பொருள் நிறுவி, ஒருவழி இரண்டே நிறுவியமையால் 'குறையெண் நிரனிறை''[30]

என்றது யாப்பருங்கல விருத்தியுரை.

அதாவது,

முதலடியில், 'யானும், தோழியும், ஆயமும்' என்றும்,

இரண்டாவதடியில் 'தானும், தேரும், பாகனும்' என்றும்,

நான்காவதடியில் 'கானும், புள்ளும், கைதையும்' என்றும் மும்மூன்று பொருள்களைக்கூறி, மூன்றாவதடியில் 'தேனும், பாலும்' என்று இரண்டு பொருள்களையே கூறியுள்ளமையால் இது 'குறையெண் நிரனிறை' ஆயிற்றென்பது யாப்பருங்கல விருத்தியுரையுடையார் கருத்து.

இவ்வாறே, சரியாக நிறுவுவதை 'நிறையெண் நிரனிறை' என்றும், மிகுத்துநிறுவுவதை 'மிகையெண் நிரனிறை' என்றும் வேண்டினர்.

இ. ஒருமுதல் இருமுதல் நிரனிறைகள் :-

மயிலைநாதருந் தம் நன்னூலுரையில் இவற்றைக் குறித்தார்.[31] ஒரு முதன் நிரனிறைக்கு,

> ''மீனொடு தண்டேறு வேதியர் ஆதியா
> ஆனாத ஐந்தொன்பான் ஆயினவும்—தேனார்
> விரைக்கமல வாண்முகத்தாய் வெள்ளை முதலா
> உரைத்தனவும் இவ்வாறே ஒட்டு''[32]

என்று காட்டி, ''முற்றும் நிறுவாது முதல் ஒன்றே சொன்னமையான் ஒருமுதல் நிரனிறை''—என்றார் குணசாகரர்.[33]

இனி, இருமுதனிரனிறைக்கு,

''வெண்பா முதலா வேதியர் ஆதியா
மண்பால் வகுத்த வருணமாம் — ஒண்பா
இனங்கட்கும் இவ்வாறே என்றுரைப்பர் தொன்னூல்
மனந்தட்பக் கற்றூர் மகிழ்ந்து[34]''

என்று காட்டி, ''இருதிறமும் முதலே சொன்னமையான், இரு முதனிரனிறை'' என்றூர் அவர்.[35] ஆயின், இருமுதனிரனிறைக்குக் காட்டப்பட்ட இப்பாடலைத் 'தொகை நிரனிறை'க்குக் காட்டின இலக்கண விளக்க உரையும், நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையும்.[36]

''வெண்பா முதலிய நான்கு பாக்களையும், வேதியர் முதலிய நான்கு வருணங்களையும், தாழிசை முதலிய மூன்று இனங்களையும், அநுலோமர் முதலிய மூன்று சங்கீர்ண வருணங்களையும் தனித்தனியே எடுத்துக் கூருமல் தொகுத்துச் சுட்டினமையின் இது தொகுத்துக் கூறும் நிரனிறையாயிற்று''[37]

என்று விளக்கினூர் டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

ஈ. முரணிரனிறை:-

யாப்பருங்கல விருத்தியுரையில் மட்டுமே இந்நிரனிறை குறிக்கப் பெறுகின்றது.

''பகற்செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச்செய்யும் வெண்டிங்களும்''[38]

என்று காட்டப் பட்டுள்ளது.

'பகலிரவு செய்திடுநல்
செஞ்ஞாயிறும் வெண்டிங்களும்'

என்று அமையின் மட்டுமே நிரனிறையாகும். இங்குக் காட்டப் பட்ட பகுதி 'முரண்தொடை' ஆமேயன்றி, நினிரறையாகாது.

நிரனிறையல்ல:-

இங்குக் காட்டப்பட்ட மயக்க நிரனிறை, நிறையெண் நிரனிறை, மிகையெண் நிரனிறை, குறையெண் நிரனிறை, ஒருமுதல் நிரனிறை, இருமுதல் நிரனிறை, முரணிரனிறை—ஆய நிரனிறை விகற்பங்கள் எல்லாம் நிரனிறைப் பொருள்கோளையே சேர்ந்தனவல்ல என்பது கருதத்தகும்.

இவற்றுள்,சொல்லும் பொருளுந் தனித் தனியே வேறுவேறு வைக்கப் பெருமையானும், நிரலே நிறுத்தப் பெருமையானும் இவற்றை நிரனிறை என்னல் தகாது.

4.2.2·1 2. *பிற பொருள்கோள்கள்:-*

ஈரடி எண்சீருள் துணித்து ஓட்ட வரும் என்று தொல்காப்பியர் கூறிய சுண்ணத்தினை இரண்டாகப் பிரித்து, ஓரடியுள் மொழி மாற்றிக் கூட்ட வேண்டுவனவற்றைச் 'சுண்ணம்' என்றும், ஈரடியுள் கூட்ட வேண்டுவனவற்றை 'அடிமொழிமாற்று' என்றும் இவ்வுரையாசிரியர் குறியீடு செய்தார்.

பலவடிகளுள் மொழிமாற்றிக் கொண்டுகூட்ட வேண்டுவன வற்றை 'மொழிமாற்று' என்று தொல்காப்பியம், நேமிநாதம் ஆயவைகள் கூற, இவ்வுரையுடையாரோ 'கொண்டுகூட்டு' என்று குறிக்கிறார்.

கொண்டு கூட்டுள் நான்கு விகற்பங்களை இவர் காட்டுகிறார்.[39] அவையாவன:-

அ. தன்னுள்ள (செய்யுளின் கண்ணுள்ள) சொல்லைக் கொணர்ந்து கூட்டல்.

ஆ தன்னில்லாச் சொல்லைக் கொணர்ந்து கூட்டல்.

இ. தன்னுள்ள பொருளைக் கொணர்ந்து கூட்டல்.

ஈ. தன்னில்லாப் பொருளைக் கொணர்ந்து கூட்டல்.

கொண்டுகூட்டின்கண் இவ்வுரையாசிரியர் காட்டிய இவ்விகற் பங்கள் பிற இலக்கணப் புலவர்களால் நினைந்து பார்க்கப் படாதன வாம் என்பது குறிப்பிடத் தகுந்தது.

4.2.2.1.3. *வேறு சில பொருள்கோள்கள்:-*

இவ் யாப்பருங்கல விருத்தியுரையுடையார் 'பிறன்கோட் கூறல்' என்னும் உத்திப்படி வேறு சில பொருள்கோள்களையுங் காட்டுகிறார்.[40] அவையாவன:-

அ. ஆதித் தீபகம்

ஆ. அந்தத் தீபகம்

இ. மத்திமத் தீபகம்

ஈ. சிங்க நோக்கு

உ. தேரைத் தத்து

ஊ. பாசிநீக்கு

எ. ஒருசிறை நிலை

இவற்றுள், முதன் மூன்றையும் விளக்கணியின் பாற்படுத்துவர் அணி நூலார்.[41] அடுத்த இரண்டையும் நூற்பா நிலைப்படுத்துவர் இலக்கணப் புலவர்கள்.[42] இறுதி இரண்டும் இறையனுர் அகப் பொருள் உரையிற் குறிக்கப்படுகின்றன.[43] ஆதித் தீபகம் முதலாகச் சுட்டப்பட்ட பொருள்கோள்கள் அனைத்தும் மேற்கூறப்பட்ட பொருள்கோள் வகைகள் ஒன்பதனுள்ளேயே அடங்கிவிடும் என்பதை, "அவையும் அவற்றுள்ளே அடங்கும் எனக் கொள்க" என்று குறித்தார் குணசாகரர்.[44]

4. 2. 3. *யாப்பருங்கலக் காரிகையுரை:-*

யாப்பருங்கலத்துக்கு உரை எழுதிய குணசாகரரே யாப்பருங் கலக் காரிகைக்கும் உரை எழுதினுராகலான் பொருள்கோட் கோட்பாடு பற்றி இவ்விரண்டற்குமிடையே வேறுபாடெதுவுமில்லை. நிரனிறையின் விகற்பங்களாக யாப்பருங்கல விருத்தியுரையில் தாம் குறித்தவற்றுள் பலவற்றைக் காரிகையுரையிற் கூறுது போகிருர் என்பதே இவண் குறிக்க வேண்டுவதாகும்.

4. 2. 4. *வீர சோழிய உரை:-*

சட்டகம், திணை, கைகோள், கோள், எச்சம், இறைச்சி, பயன், பொருளடைவு போன்ற இருபத்தேழனை (27) அகப்பொரு ளுக்குரிய உரைகளாகக் கூறுகிறது வீரசோழியம்.[45] இவை பற்றிய விளக்கம் எதையும் நூலிற் காணக் கூடவில்லை. இவற்றைப் பற்றியறிய நாம் உரையாசிரியரையே நம்ப வேண்டியுள்ளது. அவர் ஒவ்வொன்றைப் பற்றியுந் தனித்தனியாகவும், விரிவாகவும் விளக்கிப் போகிருர்.

4. 2. 4. 1. *கோளும் பொருளடைவும்:-*

'கோள்' என்று நூலாசிரியர் குறித்ததைப் 'பொருள்கோள்' என்று கொண்ட உரையாசிரியரான பெருந்தேவனுர் அதன்கீழ் ஏழனைச் சுட்டுகிருர்.

"கொழுங்கொடி வள்ளி செழுங்குலை வாழை
தீங்கரும் பேமலர் திகழ்தரு பலவே
தேங்கமழ் அசோகு செருவிற் பூட்டே
பூம்புன லாறென பொருள்கோள் ஏழே"[46]

என்பது உரை நூற்பா.

நூலாசிரியர் 'பொருளடைவு' என்று கூறியதை 'பொருணடை' என்று குறிக்கும் உரையாசிரியர் அதன்கீழ் ஐந்தனைச் சுட்டுகிருர்.

"அளைமறி கோடலும் மொழிமாற்றுக் கோடலும்
கொண்டு கூட்டும் இருநிர னிறையும்
சுண்ணங் கோடலும் முதலா யினவே"[47]

என்பது உரை நூற்பா.

அ. எது பொருள்கோள்?

தலைப்பைக் கொண்டு பார்க்கும்போது வள்ளி, வாழை, கரும்பு, பலா, அசோகு, விற்பூட்டு, புனலாறு முதலியவற்றைப் பொருள் கோள் என்று கொள்ள வேண்டியுள்ளது. (அவை 'பொருள் கோள்' என்ற தலைப்பின்கீழ் அமைந்துள்ளன).

கூறப்படும் பொருள்கோள் வகைகளைக் கொண்டு பார்க்கும் போது 'பொருணடை' (பொருளடைவு) என்பதைப் பொருள் கோளின் வேறு பெயராகக் கொள்ளவேண்டியுள்ளது. ('பொரு ணடை' எனுமித் தலைப்பின்கீழ் மற்ற இலக்கணப் புலவர்கள் பொருள்கோள்களாகக் குறித்த 'அளைமறி' போன்றவைகள் குறிக் கப்பட்டுள்ளன).

ஆ. சொற்பொருள் :-

'செய்யுளிலிருந்து நாம் பொருள் கொள்ளுகின்ற முறை'யைப் 'பொருள்கோள்' என்ற தொடரும், 'செய்யுளிற் பொருள் நடக்கின்ற முறை'யைப் 'பொருணடை' என்ற தொடரும் உணர்த்துவனவாகத் தோன்றுகின்றது. நூலாசிரியர் கூறிய 'பொருளடைவு' என்னுந் தொடர் 'செய்யுளின்கண் பொருள் அடைவு பெற்றிருக்கும் முறை'யை உணர்த்துவதாகத் தோன்றுகின்றது. ஆயின், மேலோட்டமாகப் பார்க்கும்போது தோன்றும் இத்தொடர்ப் பொருள்கள் உரையாசிரியரின் கருத்துக்கு மாறுபட்டனவாக இருக்கின்றன.

இ. உண்மைப் பொருள்:-

'செய்யுள்கள் சிறந்த பொருளைத் தாம் கொண்டிருக்கின்ற அமைப்பை அல்லது முறை'யையே 'பொருள்கோள்' என்று குறித்தார் வீரசோழிய உரையாசிரியரான பெருந்தேவனார்.

அதாவது, ஒரு செய்யுளின் பொருட்சிறப்பு அந்தச் செய்யுளில் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது என்பதைக் குறிக்கவே 'பொருள்கோள்' என்ற குறியீட்டை ஆண்டார்.

செய்யுள்களில் யாப்புக்காக நடக்கின்ற சொற்களைப் பொரு ளுக்காக மாற்றி நடக்கச் செய்தலைப் 'பொருணடை' என்று குறித்தார். (நூலாசிரியர் 'பொருளடைவு' என்று குறித்தார்; யாப்

புக்காக அடைவு பெற்றிருக்கின்ற சொற்களைப் பொருளுக்காக மாற்றி அடைவு பெறச் செய்தல் என்பது கருத்து).

ஈ. மற்ற இலக்கண நூல்களும் வீரசோழியமும்:-

மற்ற இலக்கண நூல்கள் 'செய்யுளிலிருந்து நாம் பொருள் கொள்ளும் முறை'யைப் 'பொருள்கோள்' என்று குறிக்கவும், வீர சோழியமோ 'பொருளடைவு' என்று குறித்தது. (உரை 'பொரு ணடை' என்று சுட்டியது).

'செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் அமைப்பை அல்லது முறை'யை ஏனைய இலக்கண நூல்கள் குறிக்காதிருக் கவும், வீரசோழியமோ 'கோள்' என்று குறித்தது. (உரை 'பொருள்கோள்' என்று சுட்டியது).

4. 2. 4. 1. 1. பொருள்கோள்:-

ஏனைய இலக்கணப் புலவர்கள் கூறிய பொருள்கோள்களுள் விற்பூட்டு, புனல்யாறு ஆகிய இரண்டையும் வேறு யாருங் கூறாத ஓர் ஐந்துடன் கூட்டிப் பொருள்கோள் வகைகளை ஏழென்று காட் டுகிறார் வீரசோழிய உரையுடையார்.[48] அவையாவன:-

அ. வள்ளி
ஆ. வாழை
இ. கரும்பு
ஈ. பலா
உ. அசோகு
ஊ. விற்பூட்டு
எ. புனலாறு

இவை சுவையடிப்படையில் வேண்டப்பட்ட பகுப்புகளாகும். 'செய்யுளின் பொருட் சிறப்பு அந்தச் செய்யுளின் எந்தப் பகுதி யில் அமைந்துள்ளது' என்பதை இப் 'பொருள்கோள்கள்' பேசுகின்றன.

> ''கொழுங்கொடி வள்ளி கூறுமுற் பொருளே;
> செழுங்குலை வாழையின் சொற்பொருளீறே;
> இன்தீங் கரும்பில் இடையது பொருளே;
> வன்றுட் பலவுக்கு முதலிடை பொருளே;
> நற்பூ வசோகுக்கு நடுவது பொருளே;
> விற்பூட்டு மேலுங் கீழும் பொருளே;
> இரும்புன லாற்றினுக் கெங்கும் பொருளே''[49]

என்பது உரை நூற்பா.

4.2.4.1.1.1. *வள்ளி:-*

கொடியில் 'முதற்பகுதி' என்பது அதன் வேர்ப்பகுதியாகும். வேர்க்கு 'முதல்' என்றொரு பெயருண்மையும் இதனைத் தெளிவுறுத்தும். வள்ளிக் கொடி முதலில் (வேரில்) கிழங்கு வீழ்த்துப் பயன்தருமாகலான், முற்பகுதியிற் பொருட்சிறப்புடைய செய்யுள்களை 'வள்ளி' என்ற பெயராற் குறித்தனர் எனலாம்.

4.2.4.1.1.2. *வாழை:-*

வாழை ஈற்றிலிருந்து பழுத்துவரும் இயல்பினது. ஒருவாழைப் பழத்தில் நுனிப்பகுதியை விட அடிப்பகுதி மிகவுங் கனிந்திருத்தற் கண்கூடு. எனவே, ஈற்றுப் பகுதியிற் பொருட் சிறந்திருக்கும் பாடல்களை 'வாழை' என்றனராகலாம்.

4.2.4.1.1.3. *கரும்பு:-*

கரும்பின் அடிப்பகுதி வேருடைத்தாகலான் மெல்லுதற்கு அரும் வலிமையினதாய் இருக்கும்; நுனிப்பகுதியோ மிகுதியும் உவர்ப்பினதாய் அமையும்; இடைப் பகுதியே இனிக்கும்; சுவைக்கும். எனவே, இடைப்பகுதியிற் பொருட் சிறப்புடைய பாடல்களைக் 'கரும்பு' என்றனராகலாம்.

4.2.4.1.1.4. *பலா:-*

பலா நுனியிலிருந்து பழுக்கும் இயல்பினது. பலாவை அறுத்துச் சுவைக்கும்போது நுனிப்பகுதியிலும் இடைப்பகுதியிலும் உள்ள சுளைகள் மிகுந்து கனிந்தும், அடிப்பகுதியிலுள்ள சுளைகள் கனிவிற் சற்றுக் குறைந்துந் தென்படும். பலாப் பொருள்கோளுடைய பாக்களும் முதலிடைப் பகுதிகளிற் பொருட்சிறப்பைக் கொண்டிலங்கும் என்று கருதலாம்.

4.2.4.1.1.5. *அசோகு:-*

அடிப்பகுதி தழையின்றியும், நுனிப்பகுதி தழை குறைந்தும் நிற்கும் அசோகில் நடுப்பகுதியே அடர்ந்துந் தழைந்தும் அழகாய்ப் பொலியுமாகலான், நடுப்பகுதியிற் பொருட்சிறக்கும் பாடல்கட்கு அசோகை உவமையாக்கி 'அசோகுப் பொருள்கோள்' என்றார் எனலாம்.

கரும்புப் பொருள்கோளிடை இதற்குள்ள வேற்றுமை விளங்கவில்லை. கணுக்கள் இடையிட்டமையுங் கரும்பைப் போல, இடையிடையே பொருள் சிறந்து தோன்றுவனவற்றைக் 'கரும்பு' எனக் கருதினரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அவ்வாறு கருதியிருப்பின், 'இன்தீங் கரும்பில் இடையிடை பொருளே' என்று அமைத்திருப்பார் என்பதையுங் கருத வேண்டியுள்ளது. விளக்கமோ, மேற்கோட் பாடல்களோ இல்லாத நிலையில் மேற்கொண்டு எதையுங் கூற முடியவில்லை.

4.2.4.1.1.6. *விற்பூட்டு:-*

மேற்பகுதியுங் கீழ்ப்பகுதியும் (முதலிறுதி) பொருட்சிறப்புடன் தோன்றும் பாடல்களை 'விற்பூட்டுப் பொருள்கோள்' என்றார்.

4.2.4.1.1.7. *புனல்யாறு:-*

தடையின்றியும், பரந்தும், முன்னோக்கியும் ஓடும் ஆறுபோல எல்லாப் பகுதிகளிலும் பொருள் சிறந்திடும் பாடல்களைப் 'புனல் யாற்றுப் பொருள்கோள்' என்று குறியீடு செய்தார்.

உரையாசிரியர் தாம் கூறிய 'பொருள்கோள்'கட்கு மேற்கோட் பாடல்கள் எதுவுங் காட்டவில்லை. அவர் கூறிய விளக்கங்களைக் கொண்டு ஓரளவு ஊகிக்க முடிந்தவாறே மேலே விரித்தெழுதப்பட்டது ஒரு பாட்டை இவண் பொருத்திப் பார்க்கலாம்.

> *"கோடல் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றை செம்பொன்*
> *பாடல் மணிவண்டு பண்செயப் பாரித்த பாழி வென்ற*
> *ஆடல் நெடுங்கொடித் தேரரி கேசரி அந்தண் பொன்னி*
> *நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே"*[50]

இறையனாரகப் பொருளுரையுடையார் 'ஒருசிறை நிலை'க்குக் காட்டிய பாடலிது. பருவங் கண்டு ஆற்றாளாய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறிய இதனுள் 'மெலிகின்ற தென் செய்ய நன்னுதலே' என்று ஏங்குவதே பொருட் சிறப்புடைய பகுதியாகும். இப் பொருட்சிறப்புடைய பகுதி செய்யுளின் இறுதியில் அமைந்துள்ளதால், வீரசோழிய உரையாசிரியராம் பெருந்தேவனார் கருத்துப் படி இப்பாடல் 'வாளைப் பொருள்கோள்' உடையதாகும் ('செழுங் குலை வாழையின் சொற்பொருள் ஈறே' என்பது விதி).

இங்குக் கூறப்பட்டனவுங் காட்டப்பட்டனவுந் தவிர வேறொன்றுங் கூறுதற்கு உரையாசிரியரது உரை துணையளிப்பதாய் இல்லை.

4.2.4.1.2. பொருணடை:-

பிற இலக்கணப் புலவர்கள் குறித்த 'பொருள்கோளே' இப் 'பொருணடை'யாம் என்பது முன்பே சுட்டப்பட்டது. இதன்கீழ்க் கீழ்க்கண்ட வகைகளைக் கூறுகிறார் பெருந்தேவனார்.[51]

அ. அளைமறி கோடல்

ஆ. மொழி மாற்றுக் கோடல்

இ. கொண்டு கூட்டல்

ஈ. நிரனிறை

i. முறை நிரனிறை

ii. எதிர் நிரனிறை

உ. சுண்ணங் கோடல்

4.2.4.1.2.1. தலைமையும் இன்மையும் :-

"அவைதாந் தலைமையும் இன்மையுங் கூட்டிப்
பின்வருங் காரணம் பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை உடைத்தே"[52]

என்பது உரை நூற்பா. இவ்வுரைநூற்பாவில் தொடரியைபு சரியாக அமைந்துள்ளதாகத் தெரியவில்லை. 'அவைதாம் உடைத்து' என்று ஒருமை பன்மை மயக்கமுங் காணப்படுகிறது. இவ்வுரை நூற்பாவின் மூலம் எதைக் கூற இவ்வுரையாசிரியர் முயன்றுள்ளார் என்பதுந் தெளிவின்றியே உள்ளது. எனினுங் கீழ்க் கண்டவாறு உரைத்துப் பார்க்கலாம்.

'தலைமைப் பொருணடையானும் இன்மைப் பொருணடையானுங் கூட்டி, மேலும் காரணம் பற்றிய பொருட்டாகத் தோன்றும் பொருணடை வகையை அவை (பெயராக)உடையன' என்பதே உரை நூற்பா உரைக்க வந்த பொருள் எனலாம்.

'அவைதாம்' - என்றது அளைமறி - கோடல் முதலாய பொருணடை அமைந்துவரப் பெற்ற பாடல்களை.

'தலைமை' - என்றது தலைமைப் பொருணடையை; 'இன்மை' என்றது தலைமையில்லாப் பொருணடையை. ஒரு பாடலின்

பொருள் உணர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத பொருணடையே 'தலைமைப் பொருணடை'யாம் (Primary). பாடலின் பொருள் உணர்ச்சிக்கு அத்துணை இன்றியமையாததும், தலைமைப் பொருணடைக்குத் துணையளவு மாத்திரையேயாய் நிற்பது மானதே 'இன்மைப் பொருணடை'யாம் (Secondary).

'தலைமையும் இன்மையுங் கூட்டி' - என்று உரை நூற்பா கூறியதற்குத் 'தலைமையானும் இன்மையானுங் கூட்டி' என்று மூன்றன் உருபு விரித்துப் பொருள் கொள்ளப்பட்டது; 'பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாரும் எள்ளப்படும்'[53] எனும்போது, 'எல்லாராலும் எள்ளப்படும்' என்று மூன்றன் உருபு விரித்துப் பொருள் கொள்ளப்பட்டது போன்றதிது.

> *''முலைகலிங்கம் மூரி நிலமா மகட்கு*
> *மலைபரவை; மாரிமென் கூந்தல்—குலநதி*
> *தண்ணாரம் காஞ்சி தகைசால் முகமட்கு*
> *கண்ணவான் ஏறுயர்த்த கோ''*[54]

என்பது அடி நிரனிறைக்கு யாப்பருங்கல விருத்தியுரையுடையார் காட்டிய பாடல்களுள் ஒன்று.

இப்பாடல், 'மூரி நிலமா மகட்கு முலை மலை; கலிங்கம் பரவை; மாரி மென்கூந்தல்; அவட்குக் குலநதி தண்ணாரம்; காஞ்சி தகை சால் முகம்; ஏறுயர்த்த கோ கண்' - என்று இயைகிறது.

இப்பாடலுள் கொண்டுகூட்டுப் பொருணடையும் உள்ளது; நிரனிறைப் பொருணடையும் உள்ளது. ஆயின், பொருள் உணர்ச்சிக்கு 'முலை கலிங்கம், மலை பரவை' - என்பதை 'முலை மலை, கலிங்கம் பரவை' - என்று மாற்றிக் கூட்டும் நிரனிறைப் பொருணடையே மிகவும் இன்றியமையாததாகும். அவற்றை நிரலே இயைக்காவிடிற் பொருளே பொருந்தாது.

எனவே, இப்பாட்டில் நிரனிறையே தலைமைப் பொருணடையாம்; கொண்டுகூட்டு இன்மைப் பொருணடையாம்.

'ஒருபாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருணடைகள் அமையும்போது, அப்பாடலை அவையனைத்தாலும் (தலைமையாயினும், இன்மையாயினும்) கூட்டவேண்டும். அவற்றுள், பாடலின் பொருட்சிறப்புக்குக் காரணியமாகிய பொருணடையால் அப்பாடல் பெயர் பெறும்' என்பதே இவ்வுரை நூற்பா கூற முற்படும் பொருள் எனலாம்.

மேலே காட்டிய 'மூலை கலிங்கம்'-எனத் தொடங்கும் பாடல், பொருட்சிறப்புக்குக் காரணியமாகிய பொருணடையாம் நிரனிறையின் பெயரால், 'நிரனிறைப் பொருணடை உடைய பாடல்' என்று வழங்கப்பெறும்.

4.2.5. *நம்பியகப் பொருள் உரை:-*

அகப்பாட்டுறுப்புகளாகப் பன்னிரண்டைக் கூறுகிறது நம்பியகப்பொருள்.

> ''திணையே கைகோள் கூற்றே கேட்போர்
> இடனே காலம் பயனே முன்னம்
> மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்
> றப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே''[55]

என்பது நூற்பா. இதன் கண்ணுள்ள 'பொருள்வகை' என்பது பொருள்கோளாகக் கருதப்பட்டிருப்பதை நம்பியகப் பொருளின் பழைய உரையால் அறிய முடிகிறது. இவ்வுரையைக் கருத்திற் கொண்டே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியும் 'பொருள்வகை' என்பதற்குப் 'பொருள்கோள்' என்று உரை கூறிற்று.[56] ஆயின், இப் 'பொருள்வகை' பொருள்கோளைக் குறிப்பதுதானா என்பது ஐயப்பட வேண்டுவதொன்றாகும்.

4.2.5.1. *பொருள் வகை:-*

> ''ஒருதிணைக் குரிமை பூணா நிலைமை
> பொருள்வகை என்மனார் புலமை யோரே''[57]

என்பது பொருள்வகை குறித்த நம்பியகப்பொருள் நூற்பாவாகும்.

> ''இத்திணைக்கே இப்பொருள் உரித்தாவது என்னாமல்
> எல்லாத் திணைக்கும் பொதுவாய் நிற்கும் நிலைமை
> பொருள்வகை என்று சொல்லுவர் அறிவுடையோர்''

என்று இந்நூற்பாவுக்கு அமைந்துள்ள உரையுடன்,

> ''அவையாவன: நிரனிறை மொழிமாற்று, சுண்ண
> மொழிமாற்று, அடிமறி மொழிமாற்று, அடிமொழி
> மாற்று, பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப்
> பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள்,
> அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப்
> பொருள்கோள் என ஒன்பதாகும்''[58]

என்ற பகுதியும் காணப்படுகிறது.

பொருள்கோளின் வகைகளைப் பொருள்வகையில் அடக்கிக் கூறிய இப்பழைய உரைப்பகுதி பொருள்வகை பற்றிய நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்தவில்லையோ என்றே ஐயப்பட வேண்டியுள்ளது.

4.2.5.1.1. *பிற உரையாசிரியர்கள்:-*

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம்பியகப் பொருளுக்குச் சிலர் உரை எழுதினர். 'பொருள்வகை' பற்றிய நூற்பாவுக்கு அவர்கள் கூறிய உரைகள் இவண் நோக்கத்தக்கனவாம்

> ''இஃது இத்திணைக்கு உரித்து என்னும் உரிமை பூணாது
> பொதுவாய் நிற்கும் நிலைமையைப் பொருள்வகை என்று
> சொல்லுவர் புலவர்''

என்றும்,

> ''பொதுவாய் நிற்கும் நிலைமை எல்லாத் திணைக்கும்
> பொதுவாய் நிற்குந் தன்மை''

என்றும் உரை கூறினர் சுன்னாகம் திரு அ. குமாரசுவாமிப் பிள்ளையும், திருக்கோணமலை திரு த. கனகசுந்தரம் பிள்ளையும்.[59] திரு ச. வயித்திலிங்கம் பிள்ளை,[60] திரு வ. தங்கைய நாடார்[61] ஆயோர்களும் இக்கருத்தினர்களேயாதல் அவர்களது உரைகளாற் பெறப்படும்.

எனவே, பொருள்வகையைப் பொருள்கோள் வகையாகக் காட்டும் முயற்சி நம்பியகப் பொருளின் பழைய உரையிலன்றி இக்காலத்தெழுந்த உரைகளெவற்றுள்ளுங் காணப்படவில்லை என்பது கருதத்தகும்.

4.2.5.1.2. *பொருள் வகையும் பிற நூல்களும்:-*

தொல்காப்பியம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் - ஆய நூல்களும் இப்பொருள்வகையைக் குறிக்கின்றன.

செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகப் 'பொருள்' என்பதனைத் தொல்காப்பியர் குறிக்கிறார்.[62] இப் 'பொருளை' விரித்துக் கூறும் போது 'பொருள்வகை' என்று சுட்டுகிறார்.[63] இப்பொருள் வகையே நம்பியகப் பொருளாலுங் குறிக்கப்படுவதாகும்.

> ''இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
> ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
> இதுவா இத்திணைக்கு உரிப்பொருள் எனாது
> பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப''[64]

என்பது 'பொருள்வகை' பற்றிய தொல்காப்பிய நூற்பாவாகும்.

"இன்பமுந் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமுமென்று சொல்லப்பட்டவை வழுவு நெறியின்றி இத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்றுது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகையாம்"[65]

என்று இந்நூற்பாவுக்கு உரை கூறினர் இளம்பூரணர். பேராசிரியர்,

"கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அத்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே"[66]

என்று காட்டி,

"இது பாலைப்பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலிய வற்றுக்கும் பொதுவாம் என்பது"[67]

என்று விளக்கினர். நச்சினர்க்கினியரும் பேராசிரியரைத் தழுவியே உரைகூறி, அவர் காட்டிய பாடலையே காட்டினர்.[68]

தொல்காப்பியர் பொருள்வகைக்குக் கூறியஅதே நூற்பாவைச் சிறிதும் மாற்றமின்றி அப்படியே எடுத்தாண்டார் வைத்தியநாத தேசிகர் தமது இலக்கண விளக்கத்தில்.[69] அவர் பேராசிரியரைத் தழுவி உரையெழுதி, அவர் காட்டிய பாடலையே காட்டினர்.[70]

சுவாமிநாதமும் இக்கருத்தினதே ஆதல் பொருள்வகை பற்றிய அதன் நூற்பாவானும், அதற்கமைந்த டாக்டர் செ. வை. சண்முகத்தின் உரையானும் பெறப்படும்.[71]

எனவே, 'பொருள்வகை' என்பது 'பொருள்கோள்' இலக்கணத்தைப் பேசுவதன்று என்பது தெளிவாய்ப் புலனாகின்றது.

4.2.5.1.3. *பிறழ உணர்ந்தாரா?*

அகப்பாட்டுறுப்புகளில் ஒன்றாகக் கூறப்பட்ட 'பொருள்வகை' என்பது 'பொருள்கோளை'க் குறிப்பதன்று என்று நிலவிய கருத்துக்கு மாறாக, நம்பியகப் பொருள் உரையில் அவ்வாறு குறிக்கப் பட்டிருப்பதை நோக்க, உரையாசிரியர் நூலாசிரியர் கருத்தைப்

பிறழ உணர்ந்தனராதலோ அல்லது அவ்வுரைப்பகுதி இடைச் செருகலாக இணைந்ததாதலோ வேண்டும் என்று கருதத் தோன்று கின்றது.

"அகப்பொருள் விளக்கம் என்றதற் கொருநாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்"[72]

என்னும் நம்பியகப்பொருள் சிறப்புப் பாயிரப் பகுதியால், நூலாசிரியரே நூலுக்கு உரை எழுதினார் என்பது பெறப்படுவதால், உரை பிறழ்ந்துணர்ந்து எழுதப்பட்டது என்னல் சாலாது.

4 2.5.1.4. *இடையில் இணைந்ததே:-*

உரை பிறழ்ந்துணர்ந்து எழுதப்பட்டதன்று என்பது பெறப் படவே, பொருள்வகையைப் பொருள்கோளாகத் தவறுபடக் காட்டும் அவ்வுரையின் பிற்பகுதி இடையில் இணைந்ததாதலே வேண்டும் என்று கருத உரிமையுண்டு.

உரையின் பிற்பகுதி முற்பகுதியுரையுடன் பொருந்தாமலும் இயையாமலும் தனித்து நிற்பதும் அப்பிற்பகுதியுரை இடையில் இணைக்கப்பட்டதே என்பதை வலியுறுத்தும்.

இறையனார் அகப்பொருள், வீரசோழியம் ஆய நூல்கள் அகப் பாட்டுறுப்புகளில் ஒன்றாகப் பொருள்கோளைப் பேசவும், நம்பியகப் பொருள் பேசவில்லையே என்பதை நோக்கிக் குறையாகக் கருதிய ஒருவர் அக்குறை முடிப்பான் புகுத்தியதே இவ்விணைப்பு என ஒருவாறு கருதலாம்.

4.3. *முடிவுரை:-*

விதலையாப்பு, பாசிநீக்கம்—ஆய பொருள்கோள்கட்கு இறையனார் அகப்பொருள் உரை கூறிய இலக்கணத்திற்கும் காட்டப் பட்ட காட்டுகள், கூறப்பட்ட விளக்கங்கள் ஆயவற்றிற்கும் இடையேயான இடைவெளி இவ்வியலின் தொடக்கத்திற் சுட்டப் பட்டது.

யாப்பருங்கல விருத்தியுரை குறித்த நிரனிறை விகற்பங் களிற் பல நிரனிறையேயல்ல என்பது அடுத்து விளக்கப்பட்டது.

செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் நிலை, செய்யுள் களினின்றும் நாம் பொருள் கொள்ளும் முறை ஆய இரண்டனை வீரசோழிய உரை கூறியமை தொடர்ந்து தெளிவாக்கப்பட்டது.

நம்பியகப்பொருள் உரை 'பொருள்வகை' எனும் அகப்பாட் டுறுப்பைப் 'பொருள்கோளாகக்' கொண்டமை பொருந்தாது என்பது இறுதியில் நிறுவப்பட்டது.

பின் குறிப்புகள்

1. இறையனாரகப் பொருள் 'கோள்' என்றது; 'பொருள்கோள்' என்றன யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும்; வீர சோழியமோ, 'பொருளடைவு' என்று குறித்தது.

2. இறையனாரகப்பொருள், நூ. 56.

3. சி. வை. தாமோதரம்பிள்ளை (ப-ர்.), இறையனாரகப் பொருள் உரையோடு, பக். 174.

4. ''பூட்டுவில் விதலை யாப்புக் கொண்டுகூட்
டொருசிறை நிலையே பாசி நீக்கமென்
றுக்கிய வைந்தும் பொருள்கோள் ஆகும்''

என்று மேற்கோள் காட்டினர் மயிலைநாதரும்.
காண்க: உத்தமதானபுரம் வே. சாமிநாதையர், நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், பக். 280.

5. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்.), இறையனாரகப்பொருள் உரையோடு, பக். 175.

6. ,, பக். 174.

7, 8, 9. ,, பக் 175.

10. ,, பக். 176.

11. V. Veerasami, 'Tamil meaning Process-Porul kool' **Proceedings of the First All India Conference of Dravidian Linguistics, P.** 165.

12. இறையனாரகப்பொருள், நூ. 57.

13. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்), இறையனாரகப்பொருள் உரையோடு, பக். 175.

14. ,, பக். 174.

15. டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்), 'அடிக்குறிப்பு', நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், பக். 390.
V. Veerasami, 'Tamil Meaning Process—Porul Kool' **Proceedings of the First All India Conference of Dravidian Linguistics**, P.165.

16. சி. வை. தாமோதரம்பிள்ளை (ப-ர்), இறையனாரகப் பொருள் உரையோடு, பக். 175.

17. பக். 174.

18. குறிப்பு 12 காண்க.

19. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்.), *இறையனாரகப் பொருள் உரையோடு*, பக்.176.

20. யாப்பருங்கலம், நூ.95.

21. இராமாநுசக் கவிராயர் 'எழுத்து மாற்று நிரனிறை' என்றார் தமது நன்னூலுரையில். ஏனைய இலக்கண நூல்களின் உரையாசிரியர்கள் 'எழுத்து நிரனிறை' என்றனர்.

22. யா. க., நேமி., இ. வி. ஆயவற்றின் உரைகளும், நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையுங் காட்டின. மயிலைநாதர் தமது நன்னூலுரையில் இப்பாடலை 'முறைப் பெயர் நிரனிறை' என்று குறித்தார்.

23. திருக்குறள், 1113.

24. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 296.

25. ,, பக். 298.

26. ,, பக். 297 (மயிலை நாதருங் காட்டினார்.

27. டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்), *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்*, பக். 395.

28. ரா. இராகவையங்கார் (ப-ர்), *நேமிநாத மூலமுமுரையும்*) பக். 96.

29. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 298.

30. ,,

31. உத்தம தானபுரம் வே. சாமிநாதையர் (ப-ர்), *நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும்*, பக். 282.

32. மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 298.

33. ,,

34. ,, (மயிலை நாதரும் இப்பாடலையே காட்டினார்)

35. ,,

36. புலவர் சேயொளி (ப-ர்), *இலக்கண விளக்கம் மூலமும் உரையும் (எழுத்து, சொல்)*, பக். 468.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்), *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்*, பக். 395.

37. டாக்டர் உ. வே. சாமிநாதையர் (ப-ர்), 'அடிக்குறிப்பு', *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்*, பக். 395.

38. மதுரைக்காஞ்சி, அடி: 7-8.

39. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம், பழைய விருத்தியுரையுடன்*, பக். 304.

40. ,, பக். 305.

41. *தண்டியலங்காரம்*, பொருளணியியல், நூ. 13.

42. *நன்னூல்*, *நூ*. 19.

43. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்), *இறையனாரகப் பொருள், உரையோடு*, பக். 174.

44. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம், பழைய விருத்தியுரையுடன்*, பக். 305.

45. *வீரசோழியம்*, கா. 88 & 89.

46. கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்), *வீரசோழியம் உரையுடன்*, பக். 99.

47. ,, பக். 107.

48. ,, பக். 99.

49. ,,

50. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்), *இறையனாரகப்பொருள் உரையோடு*, பக். 174.

51. கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்), *வீரசோழியம் உரையுடன்*, பக். 107.

52. ,,

53. *திருக்குறள்*, 191.

54. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரைடன்*, பக். 299.

55. *அகப்பொருள் விளக்கம்*, *நூ*.211.

56. *தமிழ்ப் பேரகராதி* (Tamil Lexicon) தொகுதி 5, பகுதி 1, பக். 2936.

57. *அகப்பொருள் விளக்கம்*, *நூ*. 233.

58. பொ. பாண்டித்துரைத்தேவர் (ப ர்), அகப்பொருள்விளக்கம் மூலமுமுரையும், பக். 177.

59. சுன்னுகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை, திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை (உ-ர்கள்), அகப்பொருள் விளக்கம் பக். 174.

60. ச. வயித்திலிங்கம்பிள்ளை (உ-ர்), அகப்பொருள் விளக்கம் மூலமுமுரையும், பக். 74.

61. வ. தங்கைய நாடார் (உ-ர்), அகப்பொருள் விளக்கம் மூலமும் குறிப்புரையும், ப-ள். 145-146.

62. தொல்காப்பியம், நூ. 1258.

63. ,, நூ. 1465.

64. ,,

65. வ. உ. சிதம்பரம்பிள்ளை (ப-ர்), தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம், பக். 453.

66. அகநானூறு, 9.

67. பேராசிரியர் (உ-ர்), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக். 414.

68. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்), தொல்காப்பியம், பொருளதிகாரம் செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, ப-ள். 251-252.

69. இலக்கண விளக்கம், அகத்திணையியல், நூ. 210.

70. புலவர் சேயொளி (ப-ர்), இலக்கண விளக்கம், பொருளதிகாரம், மூலமும் உரையும், பக். 303.

71. செ. வை. சண்முகம் (ப-ர்., உ-ர்), சுவாமிநாதம், பக்.220.

72. அகப்பொருள் விளக்கம், பாயிரம், அடி: 11-12.

5. வளர்ச்சி

5.1. முன்னுரை.

5.2. வளர்ச்சி.

5.2.1. மொழிமாற்று எய்திய வளர்ச்சி.

5.2.2. தாப்பிசை போல்வன இணைந்தமை.

5.2.3. நிரனிறை பெற்ற விகற்பம்.

5.2.4. அடிமறி அடைந்த மாற்றம்.

5.2.4.1. பொருளிசை மாறுதல் அடிமறிமாற்றா?

5.2.4.2. பின்னூல்கள் கொண்ட கொள்கை.

5.2.5. யாற்றுநீர் வந்த வரலாறு.

5.2 5.1. யாற்றுநீர்—ஒரு பொருள்கோளா?

5.2.5.1.1. தொல்காப்பியர் கருத்து.

5.2.5.1.2. தெய்வச்சிலையார் கருத்து.

5.2.5.1.3. நச்சினார்க்கினியர் கருத்து.

5.2.5.1.4. இறையனாரகப் பொருளும் உரையும்.

5.2.5.1.5. பெருந்தேவனார் கருத்து.

5.2.5.2. யாற்றுநீர்—ஒரு பொருள்கோளன்று?

5.2.5.3. யாற்றுநீரும் ஒரு பொருள்கோளே!

5.2.5.3.1. யாற்றுநீருந் தொல்காப்பியமும்

5.2.6. இருபதாம் நூற்றாண்டிலக்கண நூல்

5.2.6.1. வகைகள் இரண்டே.

5.2.6.2. உரைநடைக்கும் பொருந்துமா.

5.3 முடிவுரை.

5.1. முன்னுரை:-

பொருள்கோள் பற்றிய இலக்கணப் புலவர்களின் கருத்துகள் காலந்தொறும் மாறுபட்டு வந்திருக்கின்றன. பொருள்கோளின் வகைகளை இரண்டென்றும், நான்கென்றும், ஐந்தென்றும், எட்டென்றும், ஒன்பதென்றும், இருபதென்றும் பலவாருகக் காட்டுகின்றனர் இலக்கணப் புலவர்களும் உரையாசிரியர்களும். இவ்வேறுபாடு, பொருள்கோட் கோட்பாடு குறித்த கருத்துகளிற் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றம், நேர்ந்த வளர்ச்சி போன்றவற்றையே காட்டுகின்றது. இந்நிலையிற் பொருள்கோள் வளர்ந்து வந்த வழியினை ஆய வேண்டுவது கடமையாகின்றது.

5.2. வளர்ச்சி:-

பொருள்கோளின் வளர்ச்சியை நான்கு படிநிலைகளிற் காணலாம்.

முதற்படிநிலையில் தொல்காப்பியம், இறையனுரகப் பொருளுரை, அவிநயம், அமுதசாகரம்—ஆய நூல்களை அடக்கலாம். இந்நூல்கள் பொருள்கோளின் வகைகளை நான்கென்றும், ஐந்தென்றும், இருபதென்றும் பலவாருகப் பகுத்துக் காட்டுகின்றன. பொருள்கோட் கோட்பாட்டில் அக்காலத்து நிலவியதோர் இளகிய தன்மையையும் இலக்கணப் புலவர்களின் கட்டுப்பாடற்ற தற்சார்புச் சிந்தனையையுமே இவை உணர்த்துவனவாக அமைகின்றன. யாற்றுநீரை ஒரு பொருள்கோளாகக் கோடல் வேண்டுமா?, மொழிமாற்றில் விகற்பங்கள் பலவற்றைக் காட்ட வேண்டியது தேவைதானு?—என்பன போன்ற பலவற்றில் இந்நூல்கள் தம்முள் வேறுபட்ட கருத்துடையனவாகத் தோன்றுகின்றன.

இரண்டாவது படிநிலையில் யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, நேமிநாதம், வீரசோழிய உரை, நம்பியகப்பொருள் உரை ஆயவற்றை அடக்கலாம். பொருள்கோள் பற்றிய சிந்தனையில் ஏற்பட்ட தெளிவினை உணர்த்துவனவாக இந்நூல்கள் இலங்குகின்றன. கருத்து வேறுபாடின்றி யாற்றுநீரைப் பொருள்கோள் வகைகளுள் ஒன்ருகக் கொள்ளும் நிலைமையினையும் இங்குக் காண்கிறேம். மொழிமாற்றுப் பொருள்கோள் பெற்ற விகற்பங்களை எல்லோரும் உடன்படுகின்றனர். வீரசோழிய உரை தவிர்த்த ஏனைய நூல்கள் அனைத்தும் பொருள்கோளின் வகைகளை ஒன்பதாகக் கொள்கின்றன. முதற்படிநிலையில் நிலவிய ‘நெகிழ்வு நிலை’ மாறி, மூன்ருவது படிநிலையில் ‘நிலைத்த நிலை’ தோன்ற இவ்விரண்டாவது படிநிலை நூல்கள் சிறந்த பாலமாக அமைகின்றன என்னல் மிகையாகாது.

மூன்றுவது படிநிலை நூல்களாகக் கொள்ளப்படுவனவற்றுள் காலத்தால் முந்தியது நன்னூலாகும். பொருள்கோள் பற்றிய கொள்கையில் 'இளகிய நிலை' மாறி 'இறுகிய நிலை' தோன்றக் கரணியமாய் அமைந்தது இந்நூலே எனலாம். பொருள்கோளின் வகைகள் எட்டென்பது இந்நூல் கொண்ட கொள்கையாகும். இந் நூலின் தாக்கமே இதன் பின்னூல்களாகிய இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆயவற்றிலுங் காணப்படுகிறது.

நான்காவது படிநிலையைச் சேர்ந்த நூலாக இவ்விருபதாம் நூற்றுண்டிற் பாவடிவில் எழுந்த இலக்கண நூலாம் திரு. த. சரவணத் தமிழனின் 'தமிழ்நூல்' கொள்ளத் தகுந்தது. பொருள் கோள்களை யாற்றுநீர், கொண்டு கூட்டு - என்ற இரு பகுப்புகளுள் ளேயே அடக்கிக் காட்டுகின்ற முயற்சி இங்குக் காணப்படுகின்றது. செய்யுட்கேயன்றி, உரைநடைக்காகவும் பொருள்கோள் இலக் கணத்தை அமைக்கின்ற புதுமையும் இந்நூலுள் காணக்கிடக் கின்றது.

இங்குக் கூறப்பட்ட நான்கு படிநிலைகளையும் கீழ்க்கண்டவாறு தொகுத்துச் சுட்டலாம்.

அ. முதற் படிநிலை (பழங்காலம்) — தோரா. கி. மு. 5ஆம் நூற்றுண்டு முதல் கி.பி. 10ஆம் நூற்றுண்டு வரை.

இப்படிநிலையைச் சேர்ந்த நூல்களாகக் கருதக் கூடியன:-

1. தொல்காப்பியம்
2. இறையனுரகப் பொருளுரை
3. அவிநயம்
4. அமுதசாகரம்

ஆ. இரண்டாம் படிநிலை (உரைகாலம்) — தோரா. கி. பி. 11ஆம் நூற்றுண்டு முதல் கி.பி. 13ஆம் நூற்றுண்டுவரை.

இப்படிநிலையைச் சேர்ந்த நூல்களாகக் கருதக் கூடியன:-

1. யாப்பருங்கல விருத்தியுரை
2. யாப்பருங்கலக் காரிகையுரை
3. நேமிநாதம்
4. வீரசோழிய உரை
5. நம்பியகப் பொருளுரை

இ. மூன்றும் படிநிலை (இலக்கண காலம்) — தோரா. கி. பி. 13ஆம் நூற்றுண்டு முதல் கி.பி. 19ஆம் நூற்றுண்டு வரை.

இப்படிநிலையைச் சேர்ந்த நூல்களாகக் கருதக் கூடியன:-

1. நன்னூல்
2. இலக்கண விளக்கம்
3. இலக்கணக் கொத்து
4. தொன்னூல் விளக்கம்
5. சுவாமிநாதம்
6. முத்து வீரியம்

ஈ. நான்காம் படிநிலை (இக்காலம்) — கி.பி. 20ஆம் நூற்றுண்டு

இக்காலத்துப் பாவடிவில் எழுந்த இலக்கண நூலாவது:-

1. தமிழ்நூல்

முதலாவது படிநிலையில் இறையனாகப் பொருளுரை மற்றும் அவிநயம் ஆயவைகளும், இரண்டாவது படிநிலையில் வீரசோழிய உரையும், மூன்றுவது படிநிலையில் இலக்கணக் கொத்தும் அவ்வப் படிநிலைகளைச் சேர்ந்த ஏனைய நூல்களினின்றுஞ் சற்றே வேறு பட்டு நிற்கின்றன.

இறையனுரகப் பொருளுரை விற்பூட்டு, கொண்டுகூட்டு ஆயப் பொருள்கோள்களுடன், வேறு எந்நூலுமே குறிக்காத விதலை யாப்பு, பாசிநீக்கு, ஒருசிறை நிலை ஆயவற்றையுங் குறிக்கின்றது.[1]

அவிநயம் பொருள்கோளின் வகைகளாக இருபதைக் காட்டு கிறது.

> "நிரனிறை, சுண்ணம், அடிமறி மொழிமாற்று, அடிமொழி மாற்று என்னும் இந்நான்கினேடும், பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு என்னும் இவ் வைந்து செய்யுட் பொருள்கோளும் உறழ, இருபதாய்...... இருபது வகையானுங் காட்டினுர் அவிநயனுர்"[2]

என்று குணசாகரர் தமது யாப்பருங்கல விருத்தியுரையுட் சுட்டினுர். இதனைத் திரு க. ப. அறவாணன் தான் பதித்த 'அவிநயம்' எனும் நூலின்கண் தொகுத்திருக்கிருர். இப்பொருள்கோள் விகற் பங்கள் குறித்துத் தெளிய அறியக் கூடவில்லை.

வீரசோழிய உரை 'செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் நிலை'யைப் 'பொருள்கோள்' என்றும், 'செய்யுள்களினின்


றும் நாம் பொருள்கொள்ளும் முறை'யைப் 'பொருணடை' என்றும் குறித்தது.[3]

இலக்கணக் கொத்து பொருள்கோளைப் 'பொருத்தப்புணர்ச்சி' 'பொருத்தமில் புணர்ச்சி' என்று இரண்டாகப் பிரித்து, முன்னதில் யாற்றுநீர், அடிமறி ஆயவற்றையும், பின்னதில் ஏனையவற்றையுஞ் சேர்த்தது.[4] மூன்றாவது படிநிலை நூல்கள் எல்லாம் பொருள் கோளின் வகைகளை எட்டென்று குறிக்க, இவ்விலக்கணக் கொத்தோ ஒன்பதென்றது.

இலக்கண நூல்கள் கொண்ட பொருள்கோளின் எண்ணிக்கையையும், இங்குக் காட்டப்பட்ட நான்கு படிநிலைப் பகுப்புகளையும் கீழமையும் வரைகட்டப் படம் இனிது விளக்கும்.

பொருள்கோள்- எண்ணிக்கை விகற்பம்

[வரைகட்டப் படம்]



5.2.1. *மொழிமாற்று எய்திய வளர்ச்சி:—*

செய்யுளின்கண் பொருணோக்கில் ஒழுங்கின்றிக் கிடக்குஞ் சொற்களைப் பொருட் புலப்படுமாற்றான் ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டும் பொருள்கோளினை இரண்டாகக் கொண்டார், தொல்காப்பியர்.[5] ஈரடியெண்சீரைத் துணித்துக் கூட்டுதலைச் 'சுண்ணம்' என்றும், அத்தகைய வரையறையின்றிக் கூட்டிக் கோடலை 'மொழிமாற்று' என்றும் அவர் குறியீடு செய்தார்.

சொற்களை மாற்றிக் கூட்டல்

(தொல்.)

சுண்ணம்
(ஈரடி எண்சீரைத் துணித்துக் கூட்டல்)

மொழிமாற்று
(அத்தகைய வரையறையின்றி மாற்றிக் கோடல்)

ஈரடியுட் சொற்களைத் துணித்துக் கூட்டுதலைச் 'சுண்ணம்' என்று தொல்காப்பியர் கூற, அமுதசாகரரோ 'அடிமொழி மாற்று' என்றார்.

"இரண்டடியாற் சொல்வர நிற்ப தடிமொழி மாற்றல்" என்பது அமுதசாகரம்.[6] ஓரடியுட் சொற்களை மாற்றிக் கோடலையே சுண்ணம்' என்று அமுதசாகரம் கருதியதாகத் தெரிகிறது. இரண்டிறந்த அடிகளிற் சொற்கள் மாற்றப்படுதலை இந்நூல் குறிக்கவில்லை.

சொற்களை மாற்றிக் கூட்டல்

(அமுத.)

சுண்ணம்
(ஓரடியுள்மொழி மாற்றல்)

அடிமொழி மாற்று
(ஈரடியுள் மொழி மாற்றல்)

ஓரடியுட்சொற்கள் மாற்றப் படுதலைச் 'சுண்ணம்' என்றும், ஈரடியுள் மாற்றப்படுதலை 'அடிமொழி மாற்று' என்றும், பலவடிகளுள் மாற்றப்படுதலை 'மொழி மாற்று' என்றும் நேமிநாதங் கொண்டமை அதனுரையாற் பெறப்படுகிறது.[7]

சொற்களை மாற்றிக் கூட்டல்

(நேமி)

சுண்ணம் (ஓரடியுள் மொழிமாற்றல்)	அடிமொழி மாற்று (ஈரடியுள் மொழி மாற்றல்)	மொழிமாற்று இரண்டிறந்த அடிகளுள் மொழி மாற்றல்)

நேமிநாதத்திற்குங் காலத்தால் முந்தையனவாகக் கருதப் படுகின்ற யாப்பருங்கல விருத்தியுரையும், யாப்பருங்கலக் காரிகை யுரையும் இரண்டிறந்த பலவடிகளிற் சொற்கள் மாற்றப்படுதலைக் 'கொண்டுகூட்டு' என்னும் பெயராற் குறியீடு செய்தன. ஈரடியுட் சொற்களைக் கொண்டுகூட்ட வரும் என்று அமுதசாகரம் மற்றும் நேமிநாதம் ஆயவற்றுற் குறிக்கப்பட்ட 'அடிமொழி மாற்றுக்கு' 'இரண்டடி மொழிமாற்று' என்று இன்னொரு பெயரையும் யாப்பருங் கலவிருத்தியுரை சுட்டிற்று.[8]

சொற்களை மாற்றிக் கூட்டல்

(யா. வி. உரை & யா. கா. உரை)

சுண்ணம் (ஓரடியுள் மொழி மாற்றல்)	இரண்டடிமொழிமாற்று (இரண்டடியுள் மொழி மாற்றல்)	கொண்டுகூட்டு (இரண்டிறந்த அடிகளுள் மொழி மாற்றல்)

ஈரடியுட் சொற்கள் மாற்றப்படுதலைக் குறிக்கும் 'அடிமொழி மாற்று' அல்லது 'இரண்டடி மொழிமாற்று' என்னும் பகுப்பை நன்னூலும் அதன் பின்னூல்களுங் கைவிட்டன. நேமிநாதம் மற்றும் யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை ஆயவைகள் ஓரடியுட் சொற்கள் மாற்றப்படுதலைச் 'சுண்ணம்' என்று கூற, நன்னூலோ 'மொழிமாற்று' என்றது. நன்னூலின் பின்னூல்கள் யாவும் நன்னூலையே பின்பற்றின. ஒன்றுக்கு மேற் பட்ட அடிகளுட் சொற்கள் மாற்றப்படுதலைக் 'கொண்டுகூட்டு' என்றன இந்நூல்கள்.

சொற்களை மாற்றிக் கூட்டல்

(நன்., இ வி., தொ. வி., சு. நா., மு. வீ.)

மொழிமாற்று (ஓரடியுள் மொழிமாற்றல்)	கொண்டுகூட்டு (ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளுள் மொழிமாற்றல்)

இவ்விருபதாம் நூற்றாண்டிற்றோன்றிய 'தமிழ் நூலோ' மேற்காட்டிய இரு பகுப்புகளுள்ளும் 'மொழிமாற்றை'க் கைவிட்டது. சொற்களை மாற்றிக் கூட்டுதல் ஓரடியுள்ளாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட பலவடிகளுள்ளாயினும் அனைத்தையுங் 'கொண்டு கூட்டு' எனும் பாகுபாட்டுக்குள்ளேயே அடக்கிற்று இத் 'தமிழ்நூல்.'

அடிகளை மாற்றிக் கூட்டுதலை 'அடிமறி மாற்று' என்று ஏனைய இலக்கண நூல்கள் தனியே வேண்ட, இத்தமிழ்நூலோ அதனையுங் கொண்டு கூட்டின்கண் அடக்கிற்று. கொண்டுகூட்டப்படுவது எழுத்தாயினுஞ், சொல்லாயினுந் தொடராயினும் அனைத்தையுங் கொண்டுகூட்டென் பெயரிலேயே வேண்டிற்று இந்நூல்.

"சொல்லும் தொடரும் எழுத்தும் கருத்துச்
செல்லும் வகையான் ஓரடி பலவடி
முன்பின் கொண்டு கூட்டல் பலவே"[9]

என்பது நூற்பா.


எழுத்தை மாற்றிக் கூட்டல்	சொல்லை மாற்றிக்கூட்டல்	தொடரை மாற்றிக்கூட்டல்

கொண்டு கூட்டு

(தமிழ் நூல்)

சொற்களை ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டிப் பொருள்கொள்ளும் முறைகள் காலந்தோறும் பெற்றுவந்த மாற்றங்களை எதிர்ப்பக்கத்து விளக்கப்படம் விளக்காநின்றது.

மொழிமாற்று எய்திய வளர்ச்சி



5.2.2. தாப்பிசை போல்வன இணைந்தமை:—

தாப்பிசை, அளைமறி பாப்பு, விற்பூட்டு என்னும் மூன்று பொருள்கோள்களுந் தொல்காப்பியம் மற்றும் அமுதசாகரம் ஆயவற்றுற் குறிக்கப்படவில்லை. சொற்களை மாற்றிக் கூட்டுதலே இப்பொருள்கோள்களின் அடிப்படையுமாகலான், தொல்காப்பியர் இவற்றை மொழிமாற்றுள்ளேயே அடக்கியிருந்திருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

தாப்பிசை இடைநின்ற சொல் இருமருங்குஞ் செல்லுதல் என்னும் வரையறை உடையது; அளைமறி பாப்புக் கடை அல்லது தலைநின்ற மொழி ஓழிந்த இருமருங்குஞ் செல்லுதல் என்னும் இலக்கணங் கொண்டது; விற்பூட்டுத் தலையுங் கடையும் இயைவது என்னும் விதி பெற்றது. சொற்களை மாற்றிக்கூட்டுதலே இவற்றின் அடிப்படை எனினும், அதனுள்ளும் ஓரொழுங்கு முறை பின்பற்றப் படுவதால் இவற்றைக் கொண்டு கூட்டு அல்லது மொழிமாற்றி னின்றும் பிரித்துத் தனியே வேண்டினர் பிற்கால இலக்கணப் புலவர்கள்.

சொற்களை மாற்றிக் கூட்டுதல் என்னும் பொதுமை பெற்றிருப் பினும், நிரலே நிறுத்தி நிறைத்தல் எனுஞ் சிறப்பால் மொழி மாற்றினின்றும் நிரனிறைப் பொருள்கோளை வேருக வேண்டிய தொல்காப்பியர் தாப்பிசை, அளைமறிபாப்பு, விற்பூட்டு ஆயவற்றை அவற்றது சிறப்பு நோக்கித் தனியே வேண்டாததன் கரணியம் புலப்படவில்லை. இப்பொருள்கோள்கள் பட யாக்கப் பெற்ற செய்யுள்கள் அவர் காலத்து அருகியிருந்திருக்கலாம்; அல்லது அறவே இல்லாதிருந்திருக்கலாம் என்று அமைதி காணலாம்.

இறையனுரகப் பொருளுரை இம்மூன்று பொருள்கோள் களுள்ளும் விற்பூட்டு ஒன்றனையே குறிக்கிறது; வீரசோழிய உரையோ தாப்பிசையை மட்டுமே குறிக்கவில்லை.[10] ஓரிடத்து நின்ற மொழியை ஒன்றுக்கு மேற்பட்ட இடத்துக் கூட்டுதல் என்னும் பொதுமையால் தாப்பிசையை அது (வீரசோழிய உரை) அளைமறி பாப்புள் அடக்கிக் கருதியிருக்கலாம்.

பொருள்கோளைப் பேசும் ஏனைய நூல்கள் அனைத்தும் இம் மூன்று பொருள்கோள்களையுங் குறித்தன. அவிநயமோ இப் பொருள்கோள்கள் ஒவ்வொன்றிலும் நான்கு விகற்பங்களைக் குறிக் கின்றது.[11] அவை வருமாறு:—

தாப்பிசை:—

நிரனிறைத் தாப்பிசை
சுண்ணத் தாப்பிசை

அடிமறி மொழிமாற்றுத் தாப்பிசை
அடிமொழி மாற்றுத் தாப்பிசை

அளைமறி பாப்பு:—

நிரனிறை அளைமறிபாப்பு
சுண்ண அளைமறிபாப்பு
அடிமறி மொழிமாற்று அளைமறிபாப்பு
அடிமொழி மாற்று அளைமறிபாப்பு

விற்பூட்டு:—

நிரனிறைப் பூட்டுவில்
சுண்ணப் பூட்டுவில்
அடிமறி மொழிமாற்றுப் பூட்டுவில்
அடிமொழி மாற்றுப் பூட்டுவில்

அவிநயம் முழுதுங் கிடைக்காததாலும், அவிநயம் கூறியதாகக் கூறும் இப்பொருள்கோட் செய்தி யாப்பருங்கல விருத்தியுரை யிலேயே சுட்டப்பட்டுள்ளதாதலாலும், இங்குக் குறிக்கப்பட்ட விகற்பங்கட்கெல்லாம் மேற்கோட் பாடல்கள் காட்டப்படாததாலும் இவை பற்றி மேலும் விரிவாகவுந் தெளிவாகவும் அறியக் கூடவில்லை.

இறுதி நின்ற மொழியை இடையிலும் முதலிலுங் கொண்டு கூட்டுதலை 'அளைமறி பாப்பு' என்று எல்லா இலக்கண நூல்களுங் குறிக்க, நேமிநாத உரையோ முதனின்ற மொழியை இடையிலும், இறுதியிலுங் கொண்டு கூட்டுதலைக் குறித்தது.[12] இவ்விரு கருத்துகளையும் இணைத்துத் தலை அல்லது கடை நின்ற மொழி ஒழிந்த ஈரிடங்களுள்ளும் கொண்டுகூட்டப் படுதலை 'அளைமறி பாப்பு' என்று கருதினர் சிவஞான முனிவர்.[13]

5.2.3. *நிரனிறை பெற்ற விகற்பம்:—*

பொருள்கோளைப் பேசும் நூல்களுள் இறையனரகப் பொருளுரை தவிர, ஏனைய அனைத்துமே நிரனிறையைக் குறிக் கின்றன.

"நிரனிறை தானே

வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்

சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்"[14]

என்பது நிரனிறைக்கான தொல்காப்பிய நூற்பாவாகும். 'வினை யினும் பெயரினும் நினையத் தோன்றி' என்றதனால் வினை நிரனிறை, பெயர் நிரனிறை ஆயவற்றைத் தொல்காப்பியர் கொண்டார் எனலாம். முறை நிரனிறை, எதிர் நிரனிறை என்ற பகுப்பைத் தொல்காப்பியம் குறிக்கவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்

களே எதிர் நிரனிறையை 'மயக்க நிரனிறை' என்ற பெயராற் குறித்துச் சென்றனர்.

"பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே"[15]


என்ற நன்னூல் நூற்பாவாற் பெயர், வினை, முறை, எதிர்என்னும் பகுப்புகளை நிரனிறையிற் கொண்ட பவணந்தியாரின் கருத்து இனிது பெறப்படுகிறது.

இவ்விரு நூல்கட்கிடையே தோன்றிய யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை—ஆயவற்றுள் குணசாகரர் நிரனிறையிற் பல விகற்பங்களைக் காட்டுகின்றார். இவற்றுள்ளும் யாப்பருங்கல விருத்தியுரையுள்ளேயே எண்ணற்ற விகற்பங்களைக் காட்டுகின்றார். இவர் எழுத்து நிரனிறை, மயக்க நிரனிறை, நிறையெண் நிரனிறை, குறையெண் நிரனிறை, மிகையெண் நிரனிறை, ஒருமுதல் நிரனிறை, இருமுதல் நிரனிறை, உய்த்துணர் நிரனிறை, அடி நிரனிறை, இணை நிரனிறை, பொழிப்பு நிரனிறை, ஒரூஉ நிரனிறை, கூழை நிரனிறை, மேற்கதுவாய் நிரனிறை, கீழ்க்கதுவாய் நிரனிறை, முற்று நிரனிறை, முரண் நிரனிறை என்று பலவற்றை வேண்டுகின்றார். இந்நிரனிறை விகற்பங்களிற் பல யாப்பிலக்கணத் தாக்கத்தால் வேண்டப் பட்டனவாம்.

உரையாசிரியர்கள் மட்டுமே குறித்துச் செல்லும் எழுத்து நிரனிறை, முறை நிரனிறை ஆயவற்றை மாறனலங்காரமுடையார் தனித்தனி நூற்பாவில் வைத்துப் பேசுகிறார்.[16] இடையிணை நிரனிறை, விற்பூட்டு நிரனிறை என்பன மாறனலங்காரமுடையார் தவிர வேறு யாராலும் பேசப்படாத நிரனிறை விகற்பங்களாகும்.[17]

இவ்வாறாக காலந்தோறும் நிரனிறை பெற்றுவந்த விகற்பங்கள் பலவாகும்.

சுண்ணம், அடிமொழி மாற்று, மொழிமாற்று, கொண்டு கூட்டு, தாப்பிசை, விற்பூட்டு, அளைமறி பாப்பு, நிரனிறை—என்று மேலே காட்டப்பட்ட பொருள்கோள் வகைகள் அனைத்தும் 'சொற்களை மாற்றிக்கூட்டுதல்' என்னும் பொதுமையால்ஒருமையுடையன. இப் இப்பகுப்புகள் தொல்காப்பியத்தாலும் நன்னூலாலும் வேண்டப் பட்டவாறு எதிர்ப் பக்கத்திற் காட்டப்பட்டுள்ளன.


சொற்களை மாற்றிக் கூட்டுதல்
தொல்காப்பியம்
நன்னூல்
ஓர்ஒழுங்குடன் கூட்டல்
(நிரலே நிறைத்தல்)
நிரனிறை
ஏற்புழிக்கூட்டல்
ஈரடி எண்சீருள் கூட்டல்
சுண்ணம்
அத்தகைய வரையறை-யின்றிக் கூட்டல்
மொழிமாற்று
ஓர்ஒழுங்குடன் கூட்டல்
ஏற்புழிக்கூட்டல்
நிரலே நிறைத்தல்
நிரனிறை
தலையுங் கடையுங் கூட்டல்
விற்பூட்டு
ஒரே மொழியை ஒன்றுக்குமேற்பட்ட இடத்துக்கூட்டுதல்
இடைநின்ற மொழியை இருமருங்குங் கூட்டல்
தாப்பிசை
தலை அல்லது கடை நின்ற மொழியை ஒழிந்த ஈரிடத்துங்கூட்டல்
அளைமறிபாப்பு
ஓரடியுட் கூட்டல்
மொழிமாற்று
பலவடியுட் கூட்டல்
கொண்டுகூட்டு

5.2.4. *அடிமறி அடைந்த மாற்றம்:-*

அடி மாறினாலன்றிப் பொருள்தராது என்ற நிலையிலுள்ள செய்யுள்களையே அடிமறிப் பொருள் கோளுடையனவாகத் தொல்காப்பியர் கருதினார்.[18] (3.3.1.4.ப-ள்-50.56) ஆயின், தெய்வச்சிலையார் தவிர்ந்த தொல்காப்பிய உரையாசிரியர்களோ கிடந்தாங்கேயும் பொருள்தந்து, அடிகளை எங்கு மாற்றி அமைத்தாலும் பொருள்தரும் என்ற நிலையுடைய செய்யுள்களையே 'அறிமறி மாற்று' என்று குறித்தனர்.

அடிகள் மாறினாலல்லது பொருள் தராதனவே அடிமறி மாற்றுடையன என்று கருதிய தொல்காப்பியர் கருத்தையும், 'அடிகள் முதலும் இடையும் கடையும் படச் சொல்லிக் கண்டு கொள்க'[19] என்ற இளம்பூரணர் கருத்தையும் ஏற்று, இரண்டையுங் கூறினார் பவணந்தியார்.

"ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீ றிடைமுதல் ஆக்கினும் பொருளிசை
மாட்சியும் மாறா அடியவும் அடிமறி"[20]

என்பது நன்னூல். நன்னூலைப் பின்பற்றி இவ்விரு வகையையுங் குறித்தார் விரமாமுனிவர் தமது 'தொன்னூல் விளக்கத்தில்'.

"அடிமறி மாற்றே அடிபெயர் பொருளவும்
அடியிடம் மாறினும் அழியாப் பொருளவும்"[21]

என்பது தொன்னூல் விளக்கம்.

5.2.4.1. *பொருளிசை மாறாதன அடிமறி மாற்றா?*

செய்யுளில் இயல்பாகக் கிடந்தாங்கே பொருள் கொள்ளும் முறையை யாற்றுநீர்ப் பொருள்கோளாகவும், மாற்றிப் பொருள் கொள்ளும் முறையை ஏனைய பொருள்கோளாகவும் இலக்கணப் புலவர்கள் குறியீடு செய்தனர். இவ்வகையில், 'அடியை மாற்றினால் மட்டுமே பொருள் தரும்' என்னும் நிலையிலுள்ள 'ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்றே' அடிமறிப் பொருள்கோளுள் சேர்க்கத் தகுந்ததாகும். அடிகளை மாற்றித்தான் பொருள் கொள்ள வேண்டும் என்ற நியதியின்றி, இயல்பின் நடாத்திக் கிடந்தாங்கேயும் பொருள் கொள்ளும் 'யாப்பிசை மாறா அடிமறி மாற்றை' யாற்று நீரோடு சேர்த்து, அதன் விகற்பமாய்க் கோடலே பொருந்தும்.

"அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்

சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்"[22]

என்ற பாடலை நேமிநாத உரை, யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, இலக்கண விளக்கவுரை ஆயவைகளும்,

"விலைப்பாலி னீர்கலந்து விற்றலுங் குற்ற
மலைப்பாரைப் பேணு மறுத்தலுங் குற்றம்
நிலைப்பாரைத் தூக்கி நெகிழ்தலுங் குற்றம்
கொலைப்பால குற்றமே யாம்"[23]

என்ற பாடலைத் 'தொன்னூல் விளக்க' உரையும் யாற்றுநீர்ப் பொருள்கோளிலேயே சேர்த்தமையும் மேற்கருத்தை அரண் செய்யும்.

வைத்தியநாத தேசிகர் தமது 'இலக்கண விளக்கத்தில்' ஒன்பது நூற்பாக்களிற் பொருள்கோட் செய்தியைக் கூறுகிறார்.[24] இவற்றுள் எட்டு நூற்பாக்களை நன்னூலிலிருந்து அப்படியே எடுத்து ஆள்கிறார். ஆயின் அடிமறி பற்றிய நூற்பாவை மட்டும் தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொள்கிறார்.[25] 'பொருளிசை மாறு அடிமறி மாற்றை' அடிமறி மாற்றென உடன்பட விரும்பாத தாலேயே 'ஏற்புழிக் கூட்டும் அடிமறி'யை மட்டும் அடிமறிப் பொருள்கோளிற் சேர்க்கும் தொல்காப்பிய நூற்பாவை இவர் எடுத்தாண்டார் எனலாம்.

எனவே, 'பொருளிசை மாறுதனவெல்லாம் அடிமறி மாற்றன்று' என்பது வைத்தியநாத தேசிகரின் கருத்துமாதற் பெறப்படுகிறது.

5.2.4.2. *பின்னூல்கள் கொண்ட கொள்கை:-*

ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று, பொருளிசை மாறு அடிமறி மாற்று என்று நன்னூலாற் குறிக்கப்பெற்ற இருவகை அடிமறி மாற்றினுள் பின்னதை மட்டுமே குறித்தன முத்து வீரியமும், சுவாமிநாதமும்.[26] அதாவது, எது அடிமறியுள் அடங்காதென்றும், யாற்றுநீரொடு சேர்த்து அதன் விகற்பமாய்க் கோட வேண்டுமென்றும் மேலே காட்டப்பட்டதோ அதனை மட்டுமே அடிமறியென்று கொண்டன இவ்விரு நூல்களும். எது அடிமறியுள் சேர்க்கப்பட வேண்டுவது என்று சுட்டப்பட்டதோ அதனை இந் நூல்கள் கூறாமல் விடுத்தன.

கிடந்தாங்கே யாற்றொழுக்காய்ப் பொருள் கொள்ளவும் இடந் தருவதாகிய 'பொருளிசை மாறு அடிமறி மாற்றை' 'அடிமறி'யுள் சேர்த்ததன் விளைவே, அடிமறியை யாற்றுநீருடன் ஒன்றாகச்

சேர்த்துப் 'பொருத்தப் புணர்ச்சி' என்று சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்தினுட் கூறக் காரணியமாய் அமைந்த தெனலாம்.[27]

அடிமறிமாற்றுப் பொருள்கோள் அடைந்த மாற்றத்தினைக் கீழ்க்கண்ட படிகளிற் சுட்டலாம்.

1. ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்றையே தொல்காப்பியர் கூறினார்.
2. ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்றுடன் பொருளிசை மாறா அடிமறி மாற்றையுஞ் சேர்த்துப் பவணந்தியார் சுட்டினார்.
3. தொன்னூல் விளக்கம் நன்னூலை அப்படியே பின்பற்று கின்றது.
4. முத்துவீரியம், சுவாமிநாதம் ஆய நூல்கள் பொருளிசை மாறா அடிமறி மாற்றொன்றையே சுட்டின.
5. இலக்கணக் கொத்து அடிமறி மாற்றை யாற்று நீருடன் சேர்த்து இரண்டையும் 'பொருத்தப்புணர்ச்சி' என்றது.
6. 'ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்றே' அடிமறி மாற்றாகும். 'பொருளிசை மாறா அடிமறி மாற்றை' யாற்றுநீருடன் சேர்த்து, அதன் விகற்பமாய்க் கோடலே பொருந்தும்.

5.2.5. *யாற்று நீர் வந்த வரலாறு:-*

'யாற்று நீர்' ஒரு பொருள்கோளா, அன்றா என்பதில் இலக்கணப் புலவர்களிடையே கருத்து வேறுபாடு தென்படு கின்றது. தொல்காப்பியம், அமுதசாகரம், இறையனாரகப் பொருள் உரை, வீரசோழிய உரை ஆயவைகள் யாற்றுநீர்ப் பொருள்கோளைப் பொருள்கோள் வகைகளுள் ஒன்றாகச் சுட்டவில்லை. ஏனைய நூல்கள் யாற்றுநீரைப் பொருள்கோளாக உடன்படுகின்றன.

5.2.5.1. *'யாற்றுநீர்'—ஒரு பொருள்கோளா?*

5.2.5.1.1 *தொல்காப்பியர் கருத்து:-*

ஒரு தொடரியத்தில் (Sentence) கிளவியங்களும் (Clause) சொற்களும் அமைய வேண்டிய அடிப்படை முறை ஒன்றுண்டு. இந்த அடிப்படை அமைப்புக்கு மாறாகத் திரிந்து வருவனவற்றை முறைப்படுத்திக் கொள்ளும் வகைகளையே 'மொழி புணரியல்பு' (பொருள்கோள்) என்று தொல்காப்பியர் குறித்தார்.

அடிப்படை அமைப்புடன் பொருந்திக் கிடந்து, யாற்றொழுக் காய் இயல்பின் நடந்து பொருள் தருவனவற்றையெல்லாம்

பொருள்கோளின் வகைகளுள் ஒன்ருக அவர் கொள்ளவில்லை.

5.2.5.1.2. *தெய்வச்சிலையார் கருத்து:-*

பூட்டுவில், தாப்பிசை, அளைமறி பாப்பு, கொண்டுகூட்டு—போன்ற பொருள்கோள்களைத் தொல்காப்பியர் கூறிய நாற்பகுப்புகளுள் அடக்கிக் காட்டும் தெய்வச்சிலையார், யாற்றுநீரை மட்டும் தொல்காப்பியர் காட்டிய எப்பகுப்புக்குள்ளும் அடக்காமல், 'திரிபின்றிப் பொருள் படுதலின் இயல்பாம்' என்று கூறுவதோடு அமைகிருர்.[28]

> ''செய்யுளகத்துத் திரிந்து பொருள்படுஞ் சொல் எடுத்தோதினுர் செய்யுட்கண்... இயல்பாகி நடக்கும் பொருள்கள் ஓத வேண்டாமையின்''

என்கிருர் மேலுமவர்.

எனவே, திரிபின்றி, இயல்பின் பொருள்தரும் யாற்றுநீரைப் பொருள்கோளாகக் கொள்ளாத தொல்காப்பியரின் கருத்தை இவரும் உடன் பட்டனராதற் பெறப்படுகிறது.

5.2.5.1.3. *நச்சினுர்க்கினியர் கருத்து:-*

நச்சினுர்க்கினியர், 'மாட்டு' என்னுஞ் செய்யுளுறுப்பை மொழிமாற்று தவிர்ந்த ஏனைய பொருள்கோள்களின் இலக்கணங் கூறுவதாகக் கொண்டார். இது,

> ''மொழி மாற்றுப் பொருள்கோளன்றிப் புலவர்
> வேறு செய்வதோர் செய்கை''[29]

என்று மாட்டு பற்றிய நூற்பாவுரையில் சொல்லினராகலானும், ஏனைய இலக்கண உரையாசிரியர்கள் மொழிமாற்று மற்றும் கொண்டுகூட்டுப் பொருள்கோள்கட்குக் காட்டிய 'ஆரிய மன்னர் பறையின்' எனத் தொடங்கும் பாடலை மாட்டிற்குக் காட்டினராகலானும்,[30]

> "பூட்டுவிற் பொருள்கோளும், அளைமறிபாப்புப் பொருள்கோளும் தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டுகூட்டுப் பொருள்கோளும் 'மாட்டு' என்னும் உறுப்பின்கண் அடங்கும்''[31]

என்று மொழிமாற்று பற்றிய நூற்பாவுரையிற் கூறினராகலானுந் தெளிவாகின்றது.

> *''மாட்டும் எச்சமும் நாட்ட லின்றி*
> *உடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே''*[32]

என்பது மாட்டு, எச்சம் பற்றிய தொல்காப்பியப் புறனடை நூற்பாவாகும்.

“முற்கூறிய மாட்டும் எச்சங்களும் நிறுத்தலின்றி
அச்செய்யுட் கிடந்தவாறே அமையச் செய்யினும்
செய்யுள் தன்மையைப் பெறும்”[33]

என்று நச்சினார்க்கினியர் உரை கூறினர். மாட்டினைப் ‘பொருள் கோள்’ என்று கொண்ட நச்சினார்க்கினியர், ‘மாட்டின்றி உடனிலை மொழிதல்’ என்பதற்குச் ‘செய்யுட் கிடந்தவாறே அமையச் செய்தல்’ என்று கூறினராகலானும், மாட்டின்றி வந்ததென்று ‘யானே ஈண்டையேனே’ எனத் தொடங்குவதும், யாற்றொழுக்காய் அமைந்ததுமான குறுந்தொகைப் பாடலைக் காட்டினராகலானும் யாற்றுநீரினைப் பொருள்கோள் வகைகளுள் ஒன்றென்று கருதாத இவரது கருத்துப் பெறப்படுகிறது.

5. 2. 5. 1. 4. *இறையனாரகப் பொருளும் உரையும்:-*

‘மாட்டும் எச்சமும்...’ என மேற்காட்டப்பட்ட தொல்காப்பிய நூற்பாவுடன் ஒத்ததாகக் கருதப்படுவது கீழ்க்காணும் இறைய னாரகப் பொருள் நூற்பா.

“எச்சமுங் கோளும் இன்மையும் உரிய”[34]

‘கோள்’ என்பதற்குப் ‘பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை’[35] (பொருள்கோள்) என்று உரைகொண்ட இறைய னாரகப் பொருள் உரையுடையார் ‘கோளில்லா (பொருள்கோளில் லா)ப் பாட்டாக’க் காட்டியது ‘யாற்றொழுக்காகவே அமைந் திருக்கக் காண்கின்றனம். எனவே, ‘யாற்றொழுக்கு’ பொருள் கோள் வகைகளுள் ஒன்றன்று என்ற கருத்தினவாகவே இறைய னாரகப் பொருளும் அதனுரையும் இருக்கக் காண்கின்றனம்.

5. 2. 5. 1. 5. *பெருந்தேவனார் கருத்து*

‘செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் நிலை’(கோள்)

‘செய்யுள்களினின்று நாம் பொருள் கொள்ளும் முறை’ (பொருளடைவு) என்ற இரண்டனை வீரசோழியம் பேசுவதை அந்நூற்கமைந்த பெருந்தேவனாரின் உரைகொண்டு தெளிய முடிகிறது.[36]

யாற்றுநீர்ப் பொருள்கோளை இவ்விரு பகுப்புகளுள் முன்னத னுள்ளேயே உரையாசிரியர் சேர்த்தார் ஆகலான், அதனைப் ‘பொருள்கோள்’ வகைகளுள் ஒன்றாகக் கருதாத அவரது கருத்து இனிது பெறப்படும். (மற்ற இலக்கணப் புலவர்கள் ‘பொருள் கோள்’ என்று குறித்ததை வீரசோழிய உரையாசிரியர் ‘பொரு

ணடை என்று குறித்தார். எனவே, யாற்றுநீரை அவர் பொருணடையிற் சேர்க்கவில்லை என்பதே இவண் குறிக்கப்பட்டது.

5. 2. 5. 2. *யாற்றுநீர்—ஒரு பொருள்கோள் அன்று?*

தொல்காப்பியம், அமுதசாகரம், இறையனாரகப்பொருளுரை, வீரசோழிய உரை ஆயவைகள் தவிர, பொருள்கோளைப் பேசும் எல்லா நூல்களும் யாற்றுநீரைப் பொருள்கோளின் வகைகளுள் ஒன்றாகக் குறிக்கின்றன.

யாற்றுநீரின்கண் நான்கு விகற்பங்களை வேண்டுகின்றது அவிநயம்.[37]

அவையாவன :

அ. நிரனிறைப் புனல்யாறு.

ஆ. சுண்ணப் புனல்யாறு.

இ. அடிமறி மொழிமாற்றுப் புனல்யாறு.

ஈ. அடிமொழி மாற்றுப் புனல்யாறு.

யாற்றுநீரின் இவ்விகற்பங்கள் பற்றி மேலும் விரியவுந் தெளியவும் அறியக் கூடவில்லை.

நேமிநாதம் யாற்றுநீரைப் பெயரளவிற் சுட்டுவதோடு அமைகின்றது.[38] நேமிநாத உரை, யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை ஆயவைகள் சிறு குறிப்புகள் தந்து மேற்கோள் காட்டுவதோடு அமைகின்றன.[39] இன்று கிடைத்துள்ள இலக்கண நூல்களுள், யாற்றுநீர்க்குத் தனி நூற்பாவமைத்து இலக்கணங் கூறிச் செல்வதில் நன்னூலே முந்தியதாகும்.[40]

5.2.5.3. *யாற்றுநீரும் ஒரு பொருள்கோளே !*

யாற்றுநீரைப் பொருள்கோளின் வகைகளுள் ஒன்றாகக் கொள்ளாதார் கருத்தும், கொண்டார் கருத்தும் மேலே காட்டப்பட்டன. இந்நிலையில் எக்கருத்து ஏற்புடைத்து என்பது கண்டறியவேண்டுவதொன்றாகும்.

யாற்றுநீர் என்பது அடிப்படைத் தொடர் அமைப்புடன் பொருந்தி இயல்பில் நடப்பதாகும். இவ்வமைப்பினின்றும் மாறி வந்தவை ஏனைப் பொருள்கோள்களாகும். அடிப்படை அமைப்பினின்றும் வேறுபட்டு வருவதை மட்டுமே பொருள்கோள் வகைகளாகக் கொண்டாற்போதும் என்ற கருத்தினர்களே 'யாற்றுநீரை'ப் பொருள்கோள்களுள் ஒன்றாகச் சேர்க்கவில்லை எனலாம். ஆயின், இவர்களது கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை.

5.2.5.3.1. *யாற்றுநீருந் தொல்காப்பியமும் :-*

யாற்றுநீரை உடன்பட்டே, அதனின்றும் வேறுபட்டு வரும் பொருள்கோள்களைக் கூறமுடியுமாகலான், யாற்றுநீர்ப் பொருள் கோள் தொல்காப்பியருக்கு உடன்பாடன்றென்பது கருத்தன்று. யாற்றுநீர்ப் பொருள்கோளை மற்றைப் பொருள்கோள்களுடன் ஒன்ருகச் சேர்த்து எண்தரவேண்டுமா என்பதிலேதான் அவர் கருத்து வேறுபடுகிருர்.

புணர்ச்சி இலக்கணஞ் சொல்லுழி, எவ்வித மாற்றமும் இன்றி, இருந்ததிருந்தவாறே, இயல்பிற்புணரும் புணர்ச்சியாம் 'இயல்புப் புணர்ச்சி'யையும் புணர்ச்சி வகைகளுள் ஒன்ருகச் சேர்த்துப் புணர்ச்சியை நான்கென்றும்,[41]

வேற்றுமை இலக்கணங் கூறுழி, உருபும் விளியும் ஏலாததும், இயல்பின் நடப்பதும், ஏனைய வேற்றுமைகளை விகற்பிக்க அடிப் படையானதுமான 'முதல் அல்லது பெயர் வேற்றுமை'யாம் எழு வாய் வேற்றுமையையும்வேற்றுமை வகைகளுள் ஒன்ருகச் சேர்த்து வேற்றுமையை எட்டென்றும்,[42]

செய்யுறுப்புகளுளொன்ரும் அடியின் இலக்கணம் நுவலுழி, குறளடி, சிந்தடி, நெடிலடி, கழிநெடிலடி என பிற அடிகளை விகற் பிக்க அடிப்படையாய் அமைந்த அளவடியையும் மற்ற அடிகளுள் ஒன்ருகச் சேர்த்து அடியை ஐந்தென்றுங்[43] கூறிய தொல்காப்பியர், அடிப்படையானதும், இயல்பின் நடப்பதும், ஏனைய பொருள் கோள்களை விகற்பிக்கத் துணைபுரிவதுமான 'யாற்றுநீரை'ப் பொருள்கோள் வகைகளுள் ஒன்ருகக் கொள்ளாததற்காக காரணி யம் புலப்படவில்லை.

வேற்றுமைகளுள் முதல் வேற்றுமையும், புணர்ச்சிகளுள் இயல்புப் புணர்ச்சியும், அடிகளுள் அளவடியும் சேர்த்து எண்ணப் பட்டவாறு போல, பொருள்கோள்களுள் யாற்றுநீருஞ் சேர்த்து எண்ணப்படலே முறையாகும் எனலாம்.

5.2.6. *இருபதாம் நூற்ருண்டு இலக்கண நூல் :-*

5.2.6.1. *வகைகள் இரண்டே :-*

நன்னூலின் தாக்கமே இவ்விருபதாம் நூற்ருண்டிலும் மிகுதி யாகக் காணப்படுகிறது. பொருள்கோளின் வகைகளை எட்டென்று கொண்ட பவணந்தியாரின் கொள்கையே இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெரும்பான்மையும் கற்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வருகிறது.

ஆயின், இவ்விருபதாம் நூற்ருண்டிற் பாவடிவில் எழுந்த இலக்கண நூலாகிய திரு. த. சரவணத் தமிழனின் 'தமிழ்நூலோ' பொருள்கோளின் வகைகளை இரண்டென்றே கொண்டது.[44] அவை யாவன:-

அ. யாற்றுநீர்ப் பொருள்கோள்.

ஆ. கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

இவ்விரு பகுப்புகளின் அடிப்படைக்குப், பொருள்கோள்களைப் 'பொருத்தப்புணர்ச்சி', 'பொருத்தமில் புணர்ச்சி' என்று இரு பெரும் பகுப்புகளுக்குள் அடக்கிய 'இலக்கணக் கொத்து' காரணியமாய் அமைந்திருக்கலாம்.

யாற்றுநீர், கொண்டுகூட்டு என்று இருபெரும் பகுப்புகளாகப் பிரித்த தமிழ்நூலின் கருத்துச் சரியே எனினும், கொண்டுகூட்டின் உட்பகுப்பாகப் பிற பொருள்கோள்களையும் விரித்துத் தனியே கூறுதலே நேரிதாம்.

புணர்ச்சியை இயல்பு, திரிபு என்று இருபெரும் பகுப்புகளாகப் பிரித்த இலக்கணப் புலவர்கள் திரிபின் உட்பகுப்புகளாக மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல் என்பனவற்றைக் கொண்டமையும்,[45] திணையை உயர்திணை, அஃறிணை என்று இருபெரும் பகுப்புகளாகப் பிரித்தவர்கள் அவற்றின் உட்பகுப்புகளாக முறையே ஆண், பெண், பலர் என்றும், ஒன்று, பல என்றுங் கொண்டமையும், இந்நிகரன பிறவும் இவண் இணைத்து நினைத்தற்குரியன.[46]

எனவே, கொண்டுகூட்டின் உட்பகுப்புகளையும் கூறும்போதே அப்பகுப்பு நிறைவுடையதாகிறது.

5. 2. 6. 2 உரைநடைக்கும் பொருந்தும்:-

உரைநடையின்கண்ணும் சொற்கள் முறைமாறி பிறழ்ந்து வருதல் உண்டாகலான், பொருள்கோள் இலக்கணத்தை உரைநடைக்காகவும் அமைத்தலே முறை எனினும், உரைநடைக்கண் சொற்கள் முறை பிறழ்தல் சிறுபான்மையே என்பதாலும், எல்லா வகைப் பொருள்கோள்களாலும் பொருள் கொள்ளும்படி சொற்களின் பிறழ்ச்சி உரைநடைக்கண் அத்துணைச் சிக்கலோடு அமைவதில்லை என்பதாலும் பண்டைய இலக்கணப் புலவர்கள் அனைவரும் பொருள்கோள் இலக்கணத்தைச் செய்யுட்கு மட்டுமே வேண்டினர். ஆயின், இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்நூலோ உரைநடைக்காகவும் பொருள்கோள் இலக்கணத்தைக் கூறுகிறது.

"பாட்டினும் உரையினும் பொருள்தெளி வுறுகண்
ணோட்டமும் நோட்டமும் கொள்ளுதல் பொருள்கோள்"[47]

என்பது நூற்பா.

5. 3. *முடிவுரை:-*

இயலின் தொடக்கத்திற் பொருள்கோளின் வளர்ச்சி நான்கு படிநிலைகளிற் காட்டப்பட்டது. முதற்படிநிலையில் 'இளகிய நிலை'யும் மூன்றாவது படிநிலையில் 'இறுகிய நிலை' யும் இரண்டாவது படிநிலையில் 'இடைநிகர்த்த நிலை'யும் நான்காவது படிநிலையில் 'புதுநிலை' யும் இலங்குகின்றமை எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, மொழிமாற்று, தாப்பிசை, அளைமறிபாப்பு, விற்பூட்டு, அடிமறி மாற்று, யாற்றுநீர் - ஆய பொருள்கோள்கள் அடைந்த வளர்ச்சி, பெற்ற மாற்றம், எய்திய விகற்பம் போன்றவை சுட்டப்பட்டன.

இறுதியாக, இருபதாம் நூற்றாண்டிற் பொருள்கோளின் நிலை குறிக்கப்பட்டது.

பின் குறிப்புகள்

1. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்.), *இறையனாரகப் பொருள் உரையோடு*, பக். 174.
2. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்.), *அவிநயம்*, பக். 47.
3. கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்.), *வீரசோழியம்உரையுடன்*, பக். 99 & 107.
4. ஆறுமுக நாவலர் (ப-ர்.), *இலக்கணக் கொத்து மூலமும்உரையும்*, நூ. 108, பக். 71.
5. ஒழுங்காக நிரலே நிறுத்தி, முறையே இயக்கும் நிரனிறையும், அடியை மாற்றிக் கூட்டும் அடிமறியும் இவண் குறிக்கப்படவில்லை.
6. க. ப. அறவாணன், (ப-ர்., உ-ர்.), *அமுதசாகரம்*, நூ. 68, பக் 46.
7. ரா. இராகவையங்கார் (ப-ர்.), *நேமிநாதம் மூலமும் உரையும்* ப-ள். 95-96.
8. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக், 302.
9. *தமிழ்நூல்*, நூ. 433.
10. வீரசோழிய உரை விற்பூட்டினைச் செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்கும் நிலை'யாகிய கோளினுள் (பொருள்கோள் என்கிறார் உரையாசிரியர்) அடக்கிற்று.

11. குறிப்பு 2 காண்க.
12. ரா. இராகவையங்கார் (ப-ர்.), நேமிநாதம் மூலமும் உரையும், பக். 96
13. ச. தண்டபாணி தேசிகர் (ப-ர்.), புத்தம் புத்துரைஎன்னும்நன்னூல்விருத்தியுரை, பக். 598.
14- தொல்காப்பியம், நூ 887.
15. நன்னூல், நூ. 414.
16. நாராயணையங்கார் (ப-ர்.), மாறனலங்காரம், நூ. 171 & 172 ப-ள். 267-268.
17. ,, நூ. 173, 174. ப-ள். 268-269.
18. தொல்காப்பியம், நூ. 889.
19. காவேரிபாக்கம். நமச்சிவாய முதலியார் (ப-ர்.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், பக். 218.
20. நன்னூல், நூ. 419.
21. தொன்னூல் விளக்கம், நூ. 313.
22. நான்மணிக் கடிகை, பா. 26.
23. ஜி. மெக்கென்ஜி. காபன் அய்யர் (ப-ர்.), தொன்னூல்விளக்கம், பக். 223.
24. புலவர், சேயொளி (ப-ர்.), இலக்கண விளக்கம் (எழுத்து, சொல்), நூ. 361-369, ப-ள். 463-472.
25. ,, நூ. 369, பக் 471.
26. சுவாமி நாதம், நூ. 69; முத்துவீரியம், நூ. 1281.
27. குறிப்பு 4 காண்க.
28. திரிபின்றிப் பொருள்படுதலில் அளைமறிபாப்பையுஞ் சேர்த்துக் கூறுகிறுர். காண்க: தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், பக். 227.
29. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் நச்சினுர்க்கினியர் உரை, பக். 253.
30. ,, பக். 255.
31. இராம.கோவிந்தசாமி பிள்ளை (ப-ர்-), தொல்காப்பியம், சொல்லதிகாரமூலமும் நச்சினுர்க்கினியருரையும், பக். 387-388.
32. தொல்காப்பியம், நூ. 1468.

33. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), *தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை*, பக். 255.

34. *இறையனாரகப் பொருள்*, நூ. 57.

35. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்.), *இறையனாரகப்பொருள் உரையோடு*, பக். 174.

36. கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்.), *வீரசோழியம் உரையுடன்*, பக், 91, 99 & 107.

37. குறிப்பு 2 காண்க.

38. *நேமிநாதம்*, நூ. 92.

39. ரா. இராகவையங்கார் (ப-ர்.), *நேமிநாதம் மூலமும் உரையும்*, பக். 96.

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப.ர்.), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, பக். 303.

ந. மு. வேங்கடசாமி நாட்டார் (ப-ர்.), *யாப்பருங்கலக் காரிகை மூலமுமுரையும்*, பக். 205.

40. *நன்னூல்*, நூ. 412.

தாப்பிசை, அளைமறிபாப்பு, விற்பூட்டு, கொண்டுகூட்டு ஆயவற்றுக்கும் நன்னூல் கூறியுள்ள நூற்பாக்களே முதல் நூற்பாக்களாக இன்று கிடைக்கின்றன.

41. தொல்காப்பியம், நூ. 108.

42. ,, நூ. 545-547.

43. ,, நூ. 1293-1297.

44. *தமிழ் நூல்*, நூ. 431.

45. தொல்காப்பியம், நூ. 109.

இலக்கணக் கொத்து தோன்றல், திரிதல், கெடுதல், நிலை மாறுதல் என்று திரிபுப் புணர்ச்சியில் (விகாரப் புணர்ச்சியில்) நான்கு வகைகளைக் கூறுகிறது (நூ. 113).

46. தொல்காப்பியம், நூ. 484-486.

47. *தமிழ் நூல்*, நூ. 430.

6. பொருள்கோள்

-ஒருசெய்யுளிலக்கணக் கூறு.

6.1. முன்னுரை:-

'பொருள்கோள்'—இலக்கண நூல்களிடையே ஒரு இன்றியமையாத இடத்தைப் பெற்று வந்துள்ளது. இதனை இலக்கணப் புலவர்கள் விரித்தும் விளக்கியுங் கூறிப் போகின்றனர். இதனைச் சொல்லிலக்கணத்துப் பேசுவாரும், பொருளிலக்கணத்துப் பேசுவாரும், யாப்பிலக்கணத்துப் பேசுவாரும், அணியிலக்கணத்துப் பேசுவாரும் என பல திறத்தாராயினர் இலக்கணப் புலவர்கள். இவ்வாறு நால்வகை இலக்கணங்களில் நினைக்கப்படும் இப் பொருள்கோள் செய்யுட்கு மட்டுமே உரித்ததா? அன்றி, உரை நடைக்கும் பொருந்தியதா? என்பதைக் காண்பான் எழுந்ததே இவ்வியல்.

6.2. செய்யுட்கே உரியது:-

பொருள்கோள் இலக்கணங் கூறும் நூற்பாக்களை ஆழ்ந்து நோக்குவார்க்கு, அவை செய்யுளிலக்கணம் கூறுபவையே என்பது போதரும். சொல்லிலக்கணத்தில் மட்டுமின்றி, யாப்பு, அணி ஆயவற்றுள்ளும் பொருள்கோள் இலக்கணம் கூறப்படுவது இக்கருத்தை அரண் செய்யும். உரையாசிரியர்களும் பொருள் கோளைச் செய்யுளிலக்கணமாகவே கொண்டு உரையை நடாத்திச் செல்கின்றனர். பொருள்கோள்கட்குக் காட்டப்பட்ட காட்டுகளும் செய்யுள்களாகவே அமையக் காண்கிறோம். இன்னன பல சுரணியங்களால் பொருள்கோள் இலக்கணம் செய்யுட்குரியதாதல் தெளிவாகும். அங்ஙனமாமாறு இவ்வியலில் விரியப் பேசப்படும்.

6.2.1. நூற்பாக்கள் நுவல்வன:-

"செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே"[1]

என்பது அளைமறிபாப்புப் பொருள்கோள் பற்றிய நன்னூல் நூற்பாவாகும். இதை அப்படியே எடுத்தாண்டார் வைத்தியநாத தேசிகர் தமது இலக்கண விளக்கத்தில்.[2]

"குறித்திடும் பெயர்வினை கூறிய செய்யுளில்
நெறிப்பட நிரலுதல் நிரனிறை யாகும்[3]"

என்பது நிரனிறைப் பொருள்கோள் பற்றிய மாறனலங்கார நூற்பாவாகும்.

"செய்யுளின் இறுவாய் எழுவாய் புணர்ந்து
மெய்யுறப் பொருளினை விளக்கல் விற்பூட்டே"[4]

என்பது பூட்டுவிற் பொருள்கோள் பற்றிய மாறனலங்கார நூற்பாவாகும்.

இந்த நூற்பாக்களிற் பயின்று வந்துள்ள 'செய்யுள்' என்ற சொல்லே பொருள்கோளைச் செய்யுளிலக்கணம் என்று பறைசாற்றி நிற்கக் காணலாம். மேலும்,

"யாப்பி னிடைமுதல் ஆக்கினும்" எனவும்,[5]
"யாப்பிசை இடையே இயம்புதல்" எனவும்,[6]
"யாப்படி பலவினும் கோப்புடை மொழிகள்" எனவும்[7]

பொருள்கோள் இலக்கணம் பற்றிய நூற்பாக்களிற் பயிலும் 'யாப்பு' என்ற சொல்லும், அச்சொற்குச் 'செய்யுள்' என்று தெளிய உரை கூறிய உரையாசிரியர்கள் உரையும் பொருள் கோளைச் செய்யுளிலக்கணமாக இனிதே காட்டுகின்றன. அன்றியும்,

உரைநடையின்கண் சீர்களின் அடிப்படையில் அடிகளை வரையறுத்தமைத்தல் வழக்கின்மையால், சுண்ணப் பொருள் கோள் பற்றிய தொல்காப்பிய நூற்பாவில் வரும் 'ஈரடி எண்சீர்'[8] என்பது அளவடியான் அமைந்த இரு செய்யுளடிகளையே உணர்த்தி நிற்பதாதற் பெறப்படும்.

எனவே, பொருள்கோள் இலக்கணஞ் செய்யுட்கே உரிய தென்பதை அதனைப் பேசும் நூற்பாக்களே உணர்த்த உணர்கிறோம்.

6.2.2. *உரையாசிரியர்கள் உரைப்பன:-*

உரையாசிரியர்களும் பொருள்கோளைச் செய்யுட்காகவே நடாத்திப் போகின்றனர்.

"நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என நான்கு வகையான் மொழிகள் தம்முட் புணருஞ் செய்யுளகத்து என்பது உணர்த்தியவாறு"[9]

என்றார் இளம்பூரணர்.

"செய்யுளிடத்து விகார வகையான் மொழிகள் தம்முட் புணருமாறு கூறுகின்றார்"[10]

என்பது சேனாவரையம்.

"செய்யுளகத்துப் பொருள்புணரச் சொற்றொடுக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று"[11]

என்றும்,

"செய்யுளகத்துத் திரிந்து பொருள்படுஞ் சொல் எடுத்தோதினர், வழக்கின்கண் இயல்பாகி, செய்யுட்கண்ணும் இயல்பாகி நிற்கும் பொருள்கள் ஓத வேண்டாமையின்"[12]

என்றும் தெய்வச்சிலையார் தெளிவாகக் கூறிச் சென்றார்.

"செய்யுள் செய்வழி அதன் பொருட்கிடை கூறுகின்றது"[13]

என்று நச்சினார்க்கினியரும் தெளியவுஞ் செறியவுஞ் சொன்னார்.

"'கோள்' என்பது ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை. அஃது ஐந்து வகைப்படும்—விற்பூட்டு, விதலையாப்பு, பாசிநீக்கு, கொண்டுகூட்டு, ஒருசிறைநிலை என்பவற்றுள் இன்னதோர் பொருள் கொண்டு நின்றது இப்பாட்டு என்றறிவது"[14]

என்றார் இறையனாரகப்பொருளுரையுடையார்.

"செய்யுள் கொள்ளும் பொருள்கோளின் பெயருந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று"[15]

என்றார் சங்கர நமச்சிவாயரும்.

சுவாமிநாதத்திற்கு உரைகண்ட டாக்டர் செ. வை.சண்முகம்,

"செய்யுளைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையே பொருள்கோளாக வளர்ந்தது"[16]

என்று கூறுவதும் இவண் இணைத்து நினைத்தற்குரியது.

இங்குக் கூறியவற்றால் பொருள்கோளிலக்கணஞ் செய்யுட்கே உரியது என்பதில் உரையாசிரியர்கள் அனைவரும் ஒத்த கருத்துடையவர்களாய்த் திகழ்தருதற் போதரும்.

6.2.3. சொல்லதிகாரத்திற் செய்யுளிலக்கணமா?

பொருள்கோள் இலக்கணம் செய்யுட்கு உரியதாகவும், பெரும்பாலான இலக்கண நூல்களில் அது பற்றிய செய்திகள் சொல்லதிகாரத்திற் கூறப்பட்டிருப்பதன் இயைபைச் சங்கர நமச்சிவாயர்,

"செய்யுட்கு உரிய பொருள்கோளை ஈண்டுக் (சொல்லிலக்கணத்தில்) கூறியது என்னையெனின் செய்யுட்குத் தொடர்என்னும் காரணக்குறி போந்தது மொழி தொடர்ந்ததால் அன்றே? அங்ஙனமாதலின் இதுவுந் தொடர்மொழி இலக்கணமேயாம் என்க"[17]

என்று கூறியதனால் இனிதுணரலாம்.

பொருள்கோளேயன்றிச் செய்யுட்கே உரிய வேறு சில இலக்கணங்களும் சொல்லதிகாரத்திற் பேசப்படுகின்றன.

"செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்

பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்"[18]

என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரப் புறனடை நூற்பாவும் இதனைத் தெளிவுறுத்தும்.

"இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே"[19]

என்பது போன்ற தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களும்,

"ஆய்ந்த உயர்திணைப்பேர் ஆஓவாஞ் செய்யுளிடை"[20]

என்பது போன்ற நேமிநாதச் சொல்லதிகார நூற்பாக்களும்,

"பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆஓ வாகலுஞ் செய்யுளுள் உரித்தே"[21]

என்பது போன்ற நன்னூற் சொல்லதிகார நூற்பாக்களும்,

"ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா அஃறிணைக் கானல் லாதன"[22]

என்பது போன்ற இலக்கண விளக்கச் சொல்லதிகார நூற்பாக்களும் சொல்லதிகாரத்துச் செய்யுளிலக்கணங் கூறும் வழக்குண்மையை உறுதி செய்கின்றன. சொல்லிலக்கணத்தில் யாப்பின் தாக்கமுண்மையைத் திரு க. வீரகத்தி என்பாரது 'சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு' என்ற நூலுந் தெளிவுறுத்தும்.[23]

6.2 3.1. *நூற்பாக்கள் நவில்கின்றனவா?*

மேற்காட்டிய நூற்பாக்களிலும், அந்நிகரன பிறவற்றிலும் 'செய்யுட்கான இலக்கணம்' என்பது வெளிப்படையாகக் குறிக்கப் பட்டிருக்குமாப் போல, பொருள்கோள் பற்றிய தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களிற் குறிக்கப் படாதிருந்தாலும் அவை செய்யுளிலக்கணமே என்பது இடம்நோக்கி உணரப்படும்.

'செய்யுட்குரிய இலக்கணம்' என்று வெளிப்படையாகக் குறிக்கப்படாத நூற்பாக்களிற் சில செய்யுட்கே உரிமை பூண்டு வருவதனையுங் காண முடிகிறது. காட்டாக,

"உம்உந் தாகும் இடனுமார் உண்டே"[24]

என்ற தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாவைச் சுட்டலாம். 'செய்யுட்கான இலக்கணம் இது' என்றற்கான குறியீடெதுவும் இந் நூற்பாவின்கண் இல்லையாயினும், இது செய்யுட்கான இலக்கணங் கூறும் நூற்பாவே. இது அங்ஙனமாதல்,

“ செய்யுமெ னெச்சவீ ற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே”[25]

என்ற நன்னூல் நூற்பாவானும் வலியுறும். எனவே, பொருள்கோள் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களிற் 'செய்யுட்கான இலக்கணம்' என்பது வெளிப்பட நில்லாதிருப்பதாலேயே அவற்றைச் செய்யுளிலக்கணமன்று என்று தள்ளிவிட முடியாது என்பது இனிது போதரும்.

6. 2. 3. 2. இடம் பெறுஞ் சூழல்:-

பொருள்கோள் பற்றிய நூற்பாக்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரத்து இடம் பெற்றுள்ள சூழலும், அவை செய்யுளிலக்கணங் கூறுபவையே என்பதை நமக்கு உறுதிப்படுத்தும்.

எச்சவியலின் முதலாறு நூற்பாக்களிற் 'செய்யுளீட்டச் சொல்லை' விரித்து, அடுத்துச் 'செய்யுளில் அச்சொற்கள் பெறும் விகாரத்தைக்' கூறி, தொடர்ந்து 'செய்யுள்களிடத்து அச்சொற்கள் தம்முட் புணரும் முறை'யை மொழிபுணரியல்பென (பொருள்கோள்) கூறுகின்றாராகலான் பொருள்கோள்களும் செய்யுளிலக்கணமே என்பது போதரும்.

“ செய்யுட்குரிய சொல்லும், சொற்றெடுக்குங்காற் படும் விகாரமும், அவை செய்யுளாக்குங்காற் றம்முட் புணர்ந்து நிற்குமாறுமாகிய செய்யுளொழிபு உணர்த்தி இனி வழக்கிலக்கணத் தொழிபு கூறுகின்றார்”[26]

என்று, பொருள்கோள் இலக்கணம் பற்றிய நூற்பாக்களின்முடிவில் அமைந்த வேறொரு நூற்பாவின் உரையிற் சேனாவரையர் கூறியுள்ளதும் மேற்கருத்தை அரண் செய்யும்.

அன்றியும், பொருள்கோள் செய்யுட்கான இலக்கணமே என்பது அதிகாரத்தாற் பெற்றது எனினுமாம். “செய்யுளிடத்து என்பது அதிகாரத்தாற் பெற்றும்”[27] என்பது சேனாவரையம்.

6. 2. 4. யாப்பிற் கூறியமை:-

இது செய்யுளிலக்கணமாதல் பற்றியே யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, அமுதசாகரம் போன்ற யாப்பு நூல்கள் இதனைக் குறித்துச் செல்கின்றன; அவற்றின் உரையாசிரியர்கள் விரித்துச் சொல்கின்றனர்;

'தமிழிலக்கணத் தெளிவு' என்ற நூலில் 'யாப்பியல்' என்ற தலைப்பில் 'The mothods of constructing Verse' என்ற பிரிவில் 'பொருள் கோளைத்' திரு தாவீது யோசேப்பு உபாத்தியாயர் பேசுவதும் 'பொருள்கோள் செய்யுளிலக்கணமே' என்ற கருத்தை அரண் செய்யும்.[28]

6. 2. 5. அணியில் அறைந்தமை:-

தொல்காப்பிய உவமவியலில்,

"நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே"[29].

என்று நிரனிறைப் பொருள்கோளை அணியாக (உவமையணியாக)க் கொண்டு பேசுகின்ற தன்மை காணப்படுகிறது.

உவமை வழக்கிலும் பயிலும் என்பது ஒருதலை. ஆயின் உவமை அடுக்கிவரல் பெரும்பான்மை செய்யுட்கே உரித்து. அடுக்குவமையைப் பேசும்போதே தொல்காப்பியம் இதனைச் சுட்டுகின்றதாதலால் இது செய்யுளிலக்கணமாதற் பெறப்படும்.

தண்டியலங்காரம்,

" ஏற்ற செய்யுட் கணி ஏழைந்தே"[30]

என்று பொருளணிகள் முப்பத்தைந்தைக் கூறி அவற்றுள் ஒன்றாக நிரனிறையை நிறுத்துதலும்,

மாறனலங்காரம்,

" ஆய்ந்துரைப்பல் செய்யுளணி"[31]

என்றும்,

"பொருளினுஞ் சொல்லினும் புனையுறு செய்யுட்
கணிபெறப் புணர்த்தலின் அணியெனும் பெயர்த்தே"[32]

என்றும் அணியிலக்கணத்தைச் செய்யுட்குரியதாகக் கூறி, நிரனிறை, பூட்டுவிற் பொருள்கோள்களை அதன்கண் அடக்குதலும்,

முத்துவீரியம்அணியதிகாரத்தைச் சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளணியியல் என்று பிரித்துப் பொருள்கோளனைத்தையும் செய்யுளணியியலிற் சேர்த்தலும்[33] பொருள்கோள் செய்யுளிலக்கணமே என்பதை உறுதி செய்யும்.

6. 2. 6. உரைநடைக்குப் பொருந்தாதா?

அடிப்படைத் தொடர் அமைப்பினின்றும் மாறி கிடக்குஞ் சொற்களை முறைப்படுத்திக் கொள்ளுதலைக் குறிக்கும் பொருள்கோள் செய்யுட்கே உரியதென்று இதுகாறும் காட்டப்பட்டது.

இவண், உரைநடையிற் சொற்கள் மாறிக் கிடப்பதில்லையா? அவற்றைப் பொருத்திப் பொருள் கொள்தற்குப் 'பொருள்கோள்' வேண்டுவதில்லையா? என்பன போன்ற ஐயங்கள் தெளிவாக்கப் பட வேண்டும்.

உரைநடையின்கண்ணும் ஓரோவழி சொற்கள் அடிப்படைத் தொடரமைப்பினின்றும் பிறழ்ந்து வருதலுண்டு.

"இவளும் இவனும் உமையும் உருத்திரனும்"[34]

என்பது 'இவள் உமை' என்றும், 'இவன் உருத்திரன்' என்றும் நிரனிறைப் பொருள் கோளாற் பொருள் கொள்ளக் கிடந்தது.

"ஒரு பெண்மணியை அவளுடைய அழகுக்குக் காரணம் கேட்டபொழுது அவள் சொன்ன பதில்:

"உதடுகளுக்கு உண்மையையும், குரலுக்குப் பிரார்த்தனையையும், இரக்கத்தைக் கண்களுக்கும், தருமத்தைக் கைகளுக்கும், உருவத்திற்கு நேர்மையையும், இதயத்திற்கு அன்பையும் அழகு செய்பவைகளாகப் பயன் படுத்துகிறேன்"[35]

இத்தொடரில், 'கண்களுக்கு இரக்கத்தையும், கைகளுக்குத் தருமத்தையும்' என்று ஈரிடத்து மாற்றிக் கூட்ட வேண்டியதாயிற்று.[36]

" எலுமிச்சை மேனியில் இடையிலும் மார்பிலும் பிரமன் கஞ்சனுகவும் வள்ளலாகவும் காட்சி தந்து கொண்டிருந்தான்"[37]

'இடையில் கஞ்சனுகவும், மார்பில் வள்ளலாகவும்' என முறை நிரனிறையால் இயைத்துப் பொருள்கொள்ள வேண்டும். நாடொறும் வழங்கும் உரைநடையிலும், மிகுதியுங் கல்லாதவர்களிடத்துஞ் சென்று சேரக் கூடிய உரைநடையிலுங் கூட இத்தகைய தொடர்கள் அமையக் காண்கின்றனம். எனவே, சொற்கள் அடிப்படைத் தொடரமைப்பினின்றும் முறைமாறி அமைதல் உரைநடையின் கண்ணும் உளவாதற் பெறப்படுகிறது.

6. 2. 7. *செய்யுட்கே கூறினர்:-*

யாப்பு நோக்கியும், தொடையழகு கருதியும், பொருட்சிறப்பு குறித்தும் ஒரு தொடரிலுள்ள சொற்கள் முறைமாறுதல் பெரும் பான்மையுஞ் செய்யுட்கே உரித்தாகலானும், உரைநடையிற் சொற்கள் முறை பிறழ்தல் மிகவுஞ் சிறுபான்மையேயாகலானும், உரைநடையின்கண் சொற்கள் முறைமாற வேண்டுவது அத்துணை இன்றியமையாததன்றாகலானும், எல்லாவகைப் பொருள்கோள் களாலும் பொருள் கொள்ளும்படி சொற்களின் பிறழ்ச்சி

உரைநடைக்கண் அத்துணைச் சிக்கலொடு அமைவதில்லையாகலானும் பண்டைய இலக்கணப் புலவர்கள் செய்யுட்காக மட்டுமே பொருள்கோள் இலக்கணத்தைக் கூறினர் எனலாம்.

"உரைநடை பெரிதும் ஆற்றொழுக்கினில் அடங்கும்"[38] என்றார் திரு த. சரவணத் தமிழன்.

"உரைநடையை விடச் செய்யுளில் முறைமாற்றம் சற்று மிகுதியாகக் காணப்படும். எனவே செய்யுளைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையே பொருள்கோளாக வளர்ந்தது"[39]

என்றார் டாக்டர் செ. வை. சண்முகம்.

எனவே, உரைநடைக்கண் சொற்கள் அடிப்படைத் தொடரமைப்பினின்றும் மாறுவதில்லை என்பதன்று இவ்வியலின் கருத்து; அவ்வாறு மாறுதற் சிறுபான்மையேயாகலான், இலக்கணப் புலவர்கள் பொருள்கோளின் இலக்கணத்தைச் செய்யுட்காகவே அமைத்தனர் என்பதே இவண் கூற வந்ததாகும்.

6.3. முடிவுரை:-

பொருள்கோள் பற்றிய நூற்பாக்களும், அந்நூற்பாக்கட்கமைந்த உரைகளும், உரைகளுடே காட்டப்பட்ட காட்டுகளும் பொருள்கோளைச் செய்யுட்கேயுரிய இலக்கணமாகப் பறைசாற்றி நிற்கின்றன என்பதும், சொல்லிலக்கணத்தின் கண்ணும் செய்யுளிலக்கணம் பேசப்படுதல் உண்டென்பதும், பொருள்கோள் செய்யுளிலக்கணம் என்பதாலேயே யாப்பு, அணியிலக்கணங்களும் அதனைப் பேசுகின்றன என்பதும் இவ்வியலின்கண் தெளிவாக்கப்பட்டன.

சொற்றொடரமைப்புக் கருதுமிடத்துச் சொல்லிலக்கணமாகவும், செய்யுட்கழகூட்டிப் பொலியும்போது அணியிலக்கணமாகவும், தொடையழகு தந்து பொருளுணர்த்தும் நிலையில் யாப்பிலக்கணமாகவும் விளங்கும் பொருள்கோள் செய்யுளிற்பயில்வது என்னும் பொதுமையாலும் ஒருமையாலும் செய்யுளிலக்கணமாகத் திகழ்தருகிறதெனலாம்.[40]

பின் குறிப்புகள்

1. நன்னூல், நூ. 417.
2. இலக்கண விளக்கம், நூ. 367.
3. மாறனலங்காரம், நூ. 162.
4. ,, நூ. 175.

5. நன்னூல், நூ. 419.
6. தொன்னூல் விளக்கம், நூ. 310.
7. நன்னூல், நூ. 418.
8. தொல்காப்பியம், நூ. 888.
9. காவேரிபாக்கம் நமச்சிவாய முதலியார் (ப-ர்), *தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம்,* பக்.216.
10. ஆறுமுக நாவலர் (ப-ர்), *தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரையோடும்,* பக். 213.
11. தெய்வச்சிலையார் (உ-ர்), *தொல்காப்பியம், சொல்லதிகாரம்,* பக். 222.
12. ,,
13. இராம. கோவிந்தசாமி பிள்ளை (ப-ர்.), *தொல்காப்பியச் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும்,* பக். 382.
14. சி.வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்.), *இறையனாரகப்பொருள் உரையோடு,* பக். 174.
15. டாக்டர் உ.வே. சாமிநாதையர் (ப-ர்.), *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்,* பக். 389.
16. டாக்டர் செ. வை. சண்முகம் (ப-ர்—உ-ர்), *சுவாமிநாதம்,* பக்.159.
17. டாக்டர் உ.வே. சாமிநாதையர் (ப-ர்.), *நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்,* பக். 400.
18. *தொல்காப்பியம்,* நூ. 945.
19. ,, நூ. 501.
20. *நேமிநாதம்,* நூ. 62.
21. *நன்னூல்,* நூ. 353.
22. *இலக்கண விளக்கம்,* நூ 223.
23. க. வீரகத்தி, *சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு,* பக். 11.
24. தொல்காப்பியம், நூ. 776.
25. நன்னூல், நூ. 341.
26. ஆறுமுக நாவலர் (ப-ர்.), *தொல்காப்பியம சொல்லதிகாரம் சேனாவரையருரையோடும்,* பக். 216.
27. ,, பக். 209.

28. தாவீது யோசேப்பு உபாத்தியாயர், தமிழிலக்கணத் தெளிவு, பக். 301.

29. தொல்காப்பியம், நூ. 1257.

30. தண்டியலங்காரம், நூ. 27.
'ஏற்ற செய்யுட் கியன்ற வணியே' என்பதும் பாடம்.

31. மாறனலங்காரம், நூ. 65.

32. ,, நூ. 86.

33. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), முத்துவீரியம் உரையுடன், ப-ள். 556-559.

34. மயிலைநாதர் காட்டிய மேற்கோள்.
காண்க: உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் (ப-ர்.), நன்னூல் மூலமும் மயிலை நாதருரையும், பக். 286.

35. எஸ்.ஏ.பி. அண்ணாமலை (ஆ-ர்.), குமுதம், 29.3.79, (மதி:32- மலர்: 24), பக்.20.

36. இவ்வாறு மாற்றுதல் செய்யுளின்கண் நிகழும்போது அதனை 'மயக்க நிரனிறை' என்று வேண்டிற்று யாப்பருங்கல விருத்தியுரை.
காண்க: மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்.), யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன், பக். 297.

37. அன்புக்கடியான், 'யூ. ஆர் அப்பாய்ண்டெட்' (சிறுகதை), ஆனந்தவிகடன் (ஆ-ர்.—எஸ். பாலசுப்பிரமணியன்) 8.7.79, பக். 70.

38. த. சரவணத் தமிழன், தமிழ் நூல் பாவும் உரையும், பக் 181.

39. குறிப்பு 16 காண்க.

40. ''சொற்றொடர் அமைப்புக் கருதுமிடத்துச் சொல்லிலக்கணமாகவும், பொருளும் உவமையுமாகத் தொடர்புறும் நிலையில் அணியிலக்கணமாகவும், தொடையழகு தந்து பொருளுணர்த்தும்போது யாப்பிலக்கணமாகவும் உருப் பெறுகின்றது; செய்யுளில் பயின்றது எனும் பொதுமையால்-ஒருமையால்-செய்யுளிலக்கணமாகின்றது''

என்று நிரனிறைப் பொருள்கோள் குறித்து டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறினார்.

காண்க: எஸ்.வி. சுப்பிரமணியன், 'நிரனிறை' இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி, 1. பக்.203.

7. இலக்கணத்திற் பொருள்கோளின் இடம்.

7. 1. முன்னுரை:-

இலக்கணப் புலவர்கள் பொருள்கோளின் இலக்கணத்தைச் செய்யுட்காகவே அமைத்தார்கள் என்பது முன்னியலிற் காட்டப் பட்டது. அப்புலவர்கள் பொருள்கோளின் இலக்கணத்தைச் சொல், பொருள், யாப்பு, அணி என்பவற்றுள் எதன்கண் கூறுவது என்பதிற் கருத்து வேறுபடுகின்றனர். ஒரு சிலர் சொல்லிலக் கணத்திலும், வேறு சிலர் பொருளிலக்கணத்திலும், மற்றுஞ்சிலர் யாப்பிலக்கணத்திலும், எஞ்சிய சிலர் அணியிலக்கணத்திலுமாகப் பொருள்கோளின் இலக்கணத்தைச் சொல்லிப் போகின்றனர். ஆக, எழுத்திலக்கணந் தவிர்ந்த எல்லா இலக்கணங்களிலும் பொருள்கோள் பேசப் படுகின்றது என்பது தெளிவாகின்றது. இந்நிலையில் ஐவகை இலக்கணங்களுள் எதன்கண் பொருள் கோளைப் பேசுவது பொருத்தமுடைத்து என்பது ஆயப்பட வேண்டுவதொன்றுகும்.

7.2. இலக்கணப் புலவர்களும் பொருள்கோளும்:-

இலக்கணத்தின் எந்தப் பகுதியிற் பொருள்கோளைப் பகர்வது ஏற்புடைத்து என்பதைக் கண்டறியும் முன், இலக்கண நூல்கள் எந்தெந்த பகுதியிற் பேசுகின்றன என்பதை அறிய வேண்டுவது தேவையாகின்றது.

சொல்லிலக்கணத்திற் பொருள்கோளைச் செப்பும் நூல்கள்:-

அ. தொல்காப்பியம்

ஆ. நேமிநாதம்

இ. நன்னூல்

ஈ இலக்கண விளக்கம்

உ. இலக்கணக் கொத்து

ஊ. சுவாமிநாதம்

பொருளிலக்கணத்திற் பொருள்கோளைப் பேசும் நூல்கள்:-

அ. இறையனாரகப்பொருள்

ஆ. வீரசோழியம்

யாப்பிலக்கணத்திற் பொருள்கோளை அடக்கும் நூல்கள்:-

அ. அவிநயம்

ஆ. அமுதசாகரம்

இ. யாப்பருங்கலம்

ஈ. யாப்பருங்கலக் காரிகை

அணியிலக்கணத்திற் பொருள்கோளை அறையும் நூல்கள்:-

அ. தொன்னூல் விளக்கம்

ஆ. முத்துவீரியம்

7. 2. 1. *பொருளிற் பேசுவது பொருந்துமா?*

இறையனாரகப்பொருள், வீரசோழியம் ஆய இரு நூல்களே பொருளிலக்கணத்துப் பொருள்கோளைப் பேசுவனவாகும். இந்நூல்கள் பொருள்கோளைப் 'பேசுகின்றன' என்பதினுங் 'குறிக்கின்றன' என்பதே நேரிதாம். இவை பொருள்கோளைப் பெயரளவிற் குறிப்பதோடே அமைகின்றன. இறையனாரகப் பொருள் 'கோள்' என்றும், வீரசோழியம் 'பொருளடைவு' என்றுஞ் சுட்டுகின்றன. இக்குறியீடுகள் (கோள், பொருளடைவு) பொருள்கோளையே கருதின என்பதும் நூல்கட்கமைந்த உரைகளாலேயே பெறப்படுகிறது.

7. 2. 1. 1. *இறையனாரகப் பொருள்:-*

"திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோள் என் றுங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்தல் ஆறே"[1]

என்பது பொருள்கோளை (கோளை)க் குறிக்கும் இறையனார் அகப் பொருள் நூற்பாவாகும். ஒரு அகத்திணைச் செய்யுட்கண் பொருள் கொள்ளும்போது இந்நூற்பாவிற் குறிக்கப்பட்ட பத்தானும் பொருள்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

7. 2. 1. 2. *வீரசோழியம்:-*

" சட்டக மேதிணை கைகோள் நடைசுட் டிடங்கிளவி
ஒட்டிய கேள்வி மொழிவகை கோளுட் பெறுபொருளென்
றிட்டகச் சொற்பொருள் எச்ச மிறைச்சி பயன்குறிப்புக்
கட்டக மெய்ப்பாடு காரணங் காலங் கருத்தியல்பே"[2]

" ஏற்றும் விளைவொ டுவம மிலக்கண மேய்ந்த தொல்லோர்
போற்றும் புடையுரை யேமொழி சேர்த்தன்மை யேயுமன்றி

ஆற்றும் பொருளடைவு என்று முறையல் லவற்றினுக்கு
மாற்று முறையும் வகுக்கு முறையு மறிந்தறியே''[3]

என்பன பொருள்கோளை (பொருளடைவை)க் குறிக்கும் வீரசோழியக் காரிகைகள். இவ்விருபத்தேழும் அகப்பொருளுக்கு உரையாம் என்பது கருத்து.

இன்ன திணையைச் சேர்ந்த பாடலிது, இன்னார் கூறுகிறார், இன்னார் கேட்கிறார் என்று இன்னன விவரங்கள் தெளிவாகவில்லையெனில் செய்யுளின் பொருளை முழுதாகவும், முறையாகவும் புரிந்து கொள்ள முடியாது என்பதற்காகவே பொருளிலக்கணத்தில் மேற் குறிப்பிட்ட செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒரு செய்யுட்குப் பொருள் கொள்ளும்போது, அச்செய்யுள் எப் பொருள்கோளுடையது என்று அறிந்தால்தான் அதற்கேற்பச் சொற்களை மாற்றிப் பொருள்கொள்ள முடியுமாகலான், பொருள் கோளையும் திணை, கைகோள் போன்றவற்றுடன் இணைத்துக் கூறினர்.

7. 2. 1. 3. *உரையாசிரியர்களே உரைக்கின்றனர்:-*

நூலாசிரியர்கள் பெயரளவிற் சுட்டிய பொருள்கோளை உரையாசிரியர்களே விரித்துப் பேசுகின்றனர்.

'இறையனார் அகப்பொருள்' அகப்பொருளுக்கான இலக்கணத்தை மட்டுமே கூறும் நூலாதலால், அதனைக் கற்பவர்கள் பொருள்கோளின் இலக்கணத்தை அங்குக்காண மாட்டாமல் இடர்ப் படுவார்களாகையால் உரையாசிரியர் பொருள்கோளை விரித்துக் கூறினார் எனலாம். பொருளிலக்கணங் கூறும் நூலொன்றில், பிறபகுதியில் (எழுத்து, சொல், யாப்பு, அணி) கூற வேண்டிய இலக்கணங்களையெல்லாஞ் சுட்ட வேண்டுவது தேவையில்லை என்பதுடன், அது மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமுமாகும். இந்நிலையில், பொருளிலக்கணத்திற் பேச வேண்டுவதன்று என்று கருதக் கூடிய பொருள்கோளைப் பொருளிலக்கணத்திற் பேசுவது முறையாமோ என்று கருதத் தோன்றும். ஆயின், இங்குப் பொருள் கோள் பிற இலக்கணங்களினின்றும் வேறுபட்டுத் தனித்தன்மையையும் விதிவிலக்கையும் பெறுகிறது. எச்செய்யுளையும் சரியாகப் பொருள் கொண்டு, உரிய முறையிற் புரிந்து கொள்ளப் பொருள் கோள் பற்றிய அறிவு மிகவுந் தேவையாகலான், அகப்பொருட் செய்யுட்குப் பொருள் கொள்ளத் துணையாகும் பிறவற்றோடு பொருள் கோளையுஞ் சேர்த்துக் கூறவேண்டியது இன்றியமையாததாயிற்று.

வீரசோழியம் ஐந்திலக்கணங் கூறும் நூலானாலும், அந் நூலின்கண் பொருள்கோளின் இலக்கணம் வேறெந்த பகுதியிலுங்

கூறப்படவில்லையாகலான், பொருளிலக்கணத்திற் கூறப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உரையாசிரியர் விரித்துக் கூறினர் எனலாம்.

7. 2. 1. 4. *பேசவேண்டிய இடம் பொருளன்று:-*

ஐந்திலக்கணங் கூறும் நூல்களுள் பொருளிலக்கணத்திற் பொருள்கோளைக் குறித்த நூல் வீரசோழியம் ஒன்றே. இந்நூல் பொருளிலக்கணத்தில் மட்டுமே பொருள்கோளைக் குறித்ததாகலான், பொருள்கோள் பொருளிலக்கணத்துப் பேசப்பட வேண்டுவதொன்று என்பது இந்நூலாசிரியரின் கருத்தாமோ என்று கருதத் தோன்றும். இந்நூலாசிரியர் பொருள்கோளைத் தனியே கூறுமலும், அதன் வகைகளைச் சுட்டாமலும், விரித்துச் சொல்லாமலுஞ் சென்றுள்ளார் என்பதும் அகப்பொருட்கு உரையாகும் வேறு சிலவற்றுடன் சேர்த்துப் பொருள்கோளைப் பெயர் மாத்திரையாயே கூறியுள்ளார் என்பதும் இவண் நினையத்தகும். பொருள்கோள் பொருளிலக்கணத்துப் பேசப்பட வேண்டுவதொன்று என்று ஆசிரியர் கருதியிருப்பாரேயாயின் அதனை விரித்துந் தனித்தும் விளக்கியும் பேசியிருப்பார் என்று கருதலாம்.

இது இறையனூர் அகப்பொருளுடையார் திறத்தும் பொருந்தும். வீரசோழிய நூலாசிரியர் கூறிய 'பொருளடைவு' என்பது பொருள் கோளை (பொருணடையை) க் கருதியது என்பதுதானும் உரையாசிரியராலேயே அறியப்படுகிறது என்பதும் இவண் குறித்கத் தகுந்ததொன்றும். வீரசோழியம் ஐந்திலக்கணங் கூறும் நூலாயிருந்தும் மிகவும் இன்றியமையாத இலக்கணக் கோட்பாடாம் பொருள்கோளை எப்பகுதியிலும் விரித்துக் கூருததற்கான காரணியம் புலப்படவில்லை.

7. 2. 2. *யாப்பில் அடக்குவது முறையா?*

அமுதசாகரம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆய நூல்கள் பொருள்கோளை யாப்பிலக்கணத்துட் குறிக்கின்றன. அவிநயம் இருபது வகைப் பொருள்கோளைச் சுட்டுகின்றமை யாப்பருங்கல விருத்தியுரையால் அறியக் கிடக்கின்றது.[4] ஆயின், அவிநயனூர் பொருள்கோளை ஐவகை இலக்கணங்களுள் எதன்கண் அடக்கினூர் என்பது தெரியவில்லை. அவிநயத்தைத் தொகுத்த திரு க. ப. அறவாணனே யாப்பதிகாரத்தின்கண் பொருள்கோள் பற்றிய அவிநயனூரின் கருத்தை அடக்குகிறூர்.[5]

பொருளிலக்கணத்தின்கண் பொருள்கோளைச் சுட்டிய இலக்கண நூல்களை விட, யாப்பிலக்கணத்தின்கண் பொருள் கோளைக் குறிக்கும் இலக்கண நூல்கள் அதிக செய்திகளைத் தரு கின்றன. 'கோள்' என்றும், 'பொருளடைவு' என்றும் பெயர்

மாத்திரையேயாய்க் குறித்த தன்மையினை மட்டுமே பொருளிலக் கணத்துப் பொருள்கோளைப் பேசும் நூல்களிடத்துக் காண முடி கிறது. ஆயின், 'பொருள் கோள்' என்று தெளிவாகக் கூறுவதனை யும்,[6] 'ஒன்பது ஒண் பொருள்கோள்' என்று பொருள்கோள் வகைகளின் எண்ணிக்கையைச் சுட்டுவதனையும்,[7] 'நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதி' என்று தொடக்கங் கூறிக் குறிப்ப தனையும்,[8] பொருள்கோளின் வகைகளை இருபதென்று விரித்தும் பெருக்கியுங் காட்டுவதனையும்,[9] பொருள்கோளின் வகைகட்கு இலக்கணங்கூறி விளக்குவதனையும்,[10] யாப்பிலக்கணத்துப் பொருள்கோளைப் பேசும் நூல்களிடையே காண முடிகிறது. எனவே, பொருளதிகாரத்தை விட யாப்பதிகாரத்திற் பொருள் கோளைப் பேசுவதில் அதிகப் பொருத்தமுந் தொடர்பும் இருப்பதாக இலக்கணப் புலவர்கள் கருதியிருக்கலாம் என்று எண்ணத் தோன்று கின்றது.

7. 2. 2. 1. *யாப்பென் உறுப்பும் பொருள்கோளும்:-*

தொல்காப்பியர் செய்யுட்குரிய உறுப்புகளாக முப்பத்து நான் கைக் கூறுகிறார்.[11] அவற்றுள் 'யாப்பு' என்பதும் ஒன்று. இந்த யாப்பின்கண் யாற்றொழுக்குப் பொருள்கோள் அடங்கும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. எச்சவியலில் மொழி மாற்றுப்பொருள்கோள் பற்றிய நூற்பாவுரையில்,

"யாற்றொழுக்குப் பொருள்கோள் யாப்பு
என்னும் உறுப்பின்கண் அடங்கும்"[12]

என்றார் அவர்.

"*எழுத்து முதலா ஈண்டிய அடியிற்*
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்"[13]

என்பது யாப்பு பற்றிய தொல்காப்பிய நூற்பாவாகும்.

"*குறித்த பொருளென்றது அவ்வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங் கொண்டு கூட்டாது அமைந்து வரச் செய்தல்*"[14]

என்றார் பேராசிரியர். இக்கருத்தினரே நச்சினார்க்கினியரும்.[15] இவ்விருவருங் காட்டிய பாடல்களும் யாற்றொழுக்காகவே அமை கின்றன. தொல்காப்பியர் எச்சவியலில் இயல்பாய் நடத்தல் தன் மையுடைய யாற்றுநீர்ப் பொருள்கோளைக் குறித்திலர் என்பதும் கருதுதற்குரித்து. எனவே, அங்குக் குறிக்காத யாற்றுநீரை இங்கு யாப்பென வேண்டினாரென்றே கருதத் தோன்றுகின்றது.

அதாவது இயல்பாய் நடக்கும் யாற்றுநீர்ப் பொருள்கோளைச் செய்யுளியலின்கண்ணும், மாறி நடக்கும் ஏனைப் பொருள்கோள்களை எச்சவியலின்கண்ணும் கூறினர் எனலாம்.

7. 2. 2. 2. *மாட்டென் உறுப்பும் பொருள்கோளும்:-*

தொல்காப்பியர் குறித்த முப்பத்துநான்கு செய்யுளுறுப்புகளுள் 'மாட்டு' என்பதும் ஒன்று.

> "அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
> இயன்றுபொருண் முடியத் தந்தன ருரைத்தல்
> மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"[16]

என்பது 'மாட்டு' பற்றிய தொல்காப்பிய நூற்பாவாகும். இந்த 'மாட்டு' என்பது 'பொருள்கோளின்' இலக்கணத்தைக் கூறுவதா என்பது ஆயப்பட வேண்டுவதாம். இந்த மாட்டு குறித்து வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவையாவன :-

மாட்டு என்பது (அ) பொருள்கோளின் ஒருவகை
(ஆ) பொருள்கோளின் வேறுபெயர்
(இ) பொருள்கோளே யன்று

7. 2. 2. 2. 1. *பொருள்கோளின் ஒருவகையா?*

நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பன போல மாட்டு என்பதும் பொருள்கோளின் ஒருவகையாகும் என்ற கருத்தொன்றுண்டு.

> " மாட்டு என்பதனைப் பிற்கால இலக்கண நூலார்
> 'பூட்டுவிற் பொருள்கோள்' என வழங்குவர்"[17]

என்கிறார் திரு ந. சுப்புரெட்டியார். எனவே, பொருள்கோளின் வகைகளுள் ஒன்றாகிய 'பூட்டுவில்' லின் மறுபெயரே 'மாட்டு' என்று அவர் கருதினராதற் பெறப்படுகிறது.

மாட்டு பற்றிய நூற்பாவுக்கமைந்த பேராசிரியரது உரையின்கண் காணப்படும் மேற்கோளாம் 'திறந்திடுமின்' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடலை அடியொற்றியே திரு ந. சுப்புரெட்டியார் மாட்டைப் பூட்டுவில்லாகக் கொண்டார் எனலாம். ஆயின், இவரது கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை.

'திறந்திடுமின்' எனத் தொடங்குவதும், பூட்டுவிற் பொருள்கோளுடையதுமாய பாடலைக் காட்டிய பேராசிரியரே மாட்டிற்குப் பட்டினப்பாலைப் பாடலையுங் காட்டினராகலானும்,[18] நச்சினார்க்கினியர் 'ஆரிய மன்னர் பறையின்' எனத் தொடங்குவதும், கொண்டுகூட்டுப் பொருள்கோளுடையதுமாய பாடலைக் காட்டின

ராகலானும்[19] மாட்டு பூட்டுவில்லையே குறிக்கும் என்பது அமை வுடையதாகவும் இயைபுடையதாகவுந் தோன்றவில்லை.

நச்சினர்க்கினியர் மாட்டினுள் எந்தவொரு தனிப்பொருள் கோளினையும் அடக்காமல், பூட்டுவில், அளைமறிபாப்பு, தாப்பிசை, கொண்டுகூட்டு ஆய பொருள்கோள்களை அடக்கியமையும் மாட்டு என்பது பூட்டுவில்லை மட்டுமே பேசுவதன்று என்று கருதிய அவரது கருத்தைப் பறைசாற்றும்.[20]

பிற்கால இலக்கணப் புலவர்களால் வேண்டப்பட்ட தாப்பிசை, அளைமறி பாப்பு, பூட்டுவில் போன்ற பொருள்கோள்களையெல்லாம் தொல்காப்பியர் காட்டிய பொருள்கோட் பகுப்புக்குள் அடக்கிக் காட்டும் தெய்வச்சிலையார், பூட்டுவில்லை மொழிமாற்றினுள்ளேயே சேர்த்தார் என்பதும் இவண் இணைத்து நினைத்தற்குரியது.[21]

அன்றியும், 'மாட்டு' என்பது பொருள்கோளின் வகைகளுள் ஒன்றுயின், அதனைச் சொல்லதிகார எச்சவியலிற் பொருள்கோள் இலக்கணங் கூறுழியே தொல்காப்பியர் சேர்த்துக் கூறியிருப்பாரே யல்லாமல், தனியே பிரித்துச் செய்யுளியலிற் கூறியிருக்க மாட்டார். அவ்வாறு கூறின், எச்சவியலிற் பொருள்கோளிலக்கணத் தைக் குன்றக் கூறினர் என்றுபடும். இதனுனும் 'மாட்டு' என்பது பொருள்கோள் வகைகளுள் ஒன்றன்றென்பது பெறப்படும். பெறவே, பிற்கால இலக்கணப் புலவர்கள் கொண்ட பூட்டுவில்லே மாட்டாகும் என்று எண்ணிய திரு ந. சுப்பு ரெட்டியாரின் கருத்துப் பொருந்தாமை பெறப்படும்.

7. 2. 2. 2. 2. *பொருள்கோளின் வேறுபெயரா?*

மொழிபுணர் இயல்பு, கோள், பொருளடைவு, பொருணடை என்பன போல 'மாட்டு' என்பதும் பொருள்கோட்கு அமைந்த பெயர்களுள் ஒன்றென்று கருதுவாரும் உளர். அதாவது, 'மாட்டு' என்பது பொருள்கோளைக் குறிப்பதே என்பது அவர்கள் கருத்து.

> "மாட்டு என்பது அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானும் சென்று முடியுமாற்றுற் செய்வது. இது மேற்கூறிய 'கோள்' (பொருள்கோள்) என்பதன்பாற் படுவதேயாம்"[22]

என்றுர் மு. இராகவையங்கார்.

> "மாட்டு என்பதன்கண் பிற்காலப் பொருள்கோள் அடங்கி விடுகிறது. சொற்களைப் பொருள்புரியும்படிப் பொருத்திக் கொள்வது இது"[23]

என்று டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறுவதும் இவண் நினையத் தகும்.

மொழிமாற்றுப் பொருள்கோள் பற்றிய நூற்பாவுரையில்,

> "பூட்டுவிற் பொருள்கோளும், அளைமறி பாப்புப்
> பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும்
> கொண்டுகூட்டுப் பொருள்கோளும் மாட்டு என்னும்
> உறுப்பின்கண் அடங்கும்"[24]

என்றும், மாட்டு பற்றிய நூற்பாவுரையில்,

> " இது மொழிமாற்றுப் பொருள்கோளன்றிப்
> புலவர் வேறு செய்வதோர் செய்கை"[25]

என்றும் நச்சினார்க்கினியர் கூறியதன் அடிப்படையிலேயே இவர்கள் மாட்டினைப் பொருள்கோள் என்று கொண்டனர் எனலாம்.

மொழிமாற்று தவிர்ந்த ஏனைய பொருள்கோள்களை உள்ளடக்கியதே மாட்டாகும் என்பதுபட நச்சினார்க்கினியர் நவின்ற கருத்துப் பேராசிரியருக்கு உடன்பாடன்று; 'நால்வகைப் பொருள்கோளன்றிப் புலவரது வேறு செய்கை' என்றே மாட்டைக் குறித்தார் அவர்.[26] எனவே, 'மாட்டு' என்பது 'பொருள்கோளைக்' குறிப்பதன்று என்பது பேராசிரியரின் கருத்தாதற் பெறப்படும்.

மொழிமாற்று தவிர்ந்த ஏனைய பொருள்கோள்களைப் பேசுவதே மாட்டு என்று குறித்த நச்சினார்க்கினியர், தமது சீவகசிந்தாமணி உரையில் மாட்டுறுப்பு வந்ததாகக் கூறிய ஒரு பகுதி 'பொருள்கோள்' என்று கொள்ளும்படி அமையவில்லை என்பது இவண் உறழ்வுநிலையில் நினைத்தற்குரியது.

> " பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும் பையுள் எய்திக்
> கொதிநுனை வேலி னுயிங் கிருக்கைகனக் குருசி லேகிக்
> கதுமெனச் சென்று நோக்கிக் காய்சினங் கடிதற் கொத்த
> மதிமிகுத் தவல நீக்கு மந்திரம் பலவுஞ் செய்தான்"[27]

என்பது பதுமை பாம்பால் தீண்டப்பட்டது தொடர்பான செய்திகளைக் கூறுஞ் சிந்தாமணிப் பாடல்.

'கடிதற்கொத்த மந்திரத்தை மதிமிகுத்துக் கூறி அவலம் நீக்கும் பலவுஞ் செய்தான்' என்று மாற்றி இயைத்துப் பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர்.

யாப்பல்லது தொடை நிமித்தம் செய்யுளின்கண் மாறிக் கிடக்குஞ் சொற்களை இவ்வாறு முறைப்படுத்திப் பொருள் கொள்ளலே பொருள்கோளாகும். இவ்வாறு முறைப்படுத்திப் பொருள் கொண்டபின், அப்பொருளை எங்கெங்கு இயைக்க வேண்டும் என்று கூறுகிறார் நச்சினார்க்கினியர். 1273 ஆம் எண்ணுள்ள இப்

பாடலின் முன்னிரண்டடியை 1266 ஆம் பாடலின் பின்னும், பின்னிரண்டடியை 1272 ஆம் பாடலின் பின்னும் கொண்டு செலுத்திப்பொருள் கோடச் சொல்கிறார். இவ்வாறு செய்வதையே 'மாட்டு' என்று குறிக்கிறார்.

> "இங்ஙனம் மாட்டுறுப்பாகக் கூறுது செவ்னே கூறிற் பாம்பு கடித்தமை கடுகக் கூறிற்றாகாமை யுணர்க"[28]

என்றார் அவர்.

ஒரு செய்யுளில் அடிப்படைத் தொடர் அமைப்புடன் இயையாமல் மாறிக் கிடக்குஞ் சொற்களை முறைப்படுத்தி அமைத்துப் பொருள் கொள்ளுதலைப் 'பொருள்கோள்' என்றும், ஒரு செய்யுளின் கருத்தை இயையுமிடமறிந்து சிலபல செய்யுட்கள் முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ கொண்டுவந்து கொளுத்துதலை 'மாட்டு' என்றும் நச்சினார்க்கினியர் கருதினராதல் மேற்காட்டிய சீவக சிந்தாமணிப் பாடலுரையால் தெரிய வருகிறது. மாட்டு என்பது பெரும்பான்மையும் பல செய்யுள்கள் தொடர்ந்த வழி உறுப்பாகும்-என்ற பேராசிரியரின் கருத்தும் இவண் ஒப்பு நிலையில் நினைக்கத் தகும்.[29]

எனவே, மாட்டினைப் பொருள்கோள் என்ற நச்சினார்க்கினியரின் கருத்துக்கு அவரது சிந்தாமணி உரையே மறுப்பாக அமையக் காண்கிறோம்.[30]

7. 2. 2. 2. 3. பொருள்கோளேயன்று:—

'மாட்டு' என்பது பொருள்கோளின் ஒருவகையோ, பொருள்கோளின் வேறு பெயரோ அன்று என்பது மேலே நிறுவப்பட்டமையின், அது பொருள்கோளேயன்று என்பது கூறாமற் போதரும்.

அன்றியும், எச்சவியலிற் பொருள்கோளைப் பேசிய பின்னர் அதனை மீண்டுஞ் செய்யுளியலிற் கூறுதல் தேவையின்றாம். 'செய்யுட்கண் பொருள் கொள்ளுதல்' எனுந் தொடர்பால் மீண்டுஞ் சொன்னார் எனின், செய்யுட்கண் சொற்பொருட்கு அப்பால் அமைந்து கிடக்கும் உட்பொருளை விளக்குவனவாய உள்ளுறையுவமம், இறைச்சி போன்றவற்றையும், இந்நிகரன பிறவற்றையுந் தொடர்பு நோக்கிச் செய்யுளியலின்கண் மீண்டுங் குறித்திருத்தல் வேண்டும். அவ்வாறு குறியாமையினால், முற்கூறிய பொருள்கோளையே தொடர்பு நோக்கிச் செய்யுளியலின்கண் மாட்டெனமீண்டுங் குறித்தார் என்னல் பொருந்தாது.[31]

அவ்வாறே குறிக்க வேண்டி நேரினும், முன்குறித்த 'மொழி புணர் இயல்பு' எனுங் குறியீடு இருக்கவும், 'மாட்டு' என்று வேறு பெயர் கொண்டு குறித்தல் தேவையின்றாம். எனவே, 'மாட்டு' என்பது பொருள்கோளைப் பேசுவதன்றென்பது தெளிவாம்.

'மாட்டு' என்பது 'மாட்டேற்றைக்' குறிப்பது என்பது இளம் பூரணர் கருத்து. 'மாட்டேறு உணர்த்துதல் நுதலிற்று' என்றார் அவர்.[32] 'ஒன்றற்குக் கூறப்பட்ட ஒரு செய்தி மற்றொன்றற்கும் பொருந்தும்' என்று கூறலே மாட்டேறாகும்.

உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே[33]

என்ற காப்பியர், 'உதி' மரத்தின் விதியையே தானும் பெறும் 'ஒடு' மரத்தைக் கூறும்போது, விதியை மீண்டுஞ் சொல்லாமல்,

ஒடு மரக்கிளவி உதிமர இயற்றே[34]

என்று கூறுகிறார். இதுவே மாட்டேறாகும்.

ஒடு மரத்தைப் படிக்கும்போது முன் படித்த உதி மரத்தை நினைவிற் கொள்ளவும், ஒத்த விதியுடையவற்றையெல்லாம் எளிதில் ஒருங்கே தொகுத்துக் கொள்ளவும் இம்மாட்டேறு பயன் படுகிறது.

பிற்கால இலக்கணப் புலவர்கள் இதனை 'மாட்டெறிந் தொழுகுதல்' என்றும்[35], 'மாட்டெறிதல்' என்றும்[36] குறித்தனர்.

அன்றியும், கீழ்க்கண்டவாறு வருவனவற்றையும் மாட்டென்று ஆசிரியர் கருதியிருக்கலாம்.[37]

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"[38]

என்ற குறட்கு,

"இருவகை அறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. ஏனைத் துறவறமோ எனின் அதுவும் பிறனாற் பழிக்கப் படுவதில்லையாயின் அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று"[39]

என்பது பரிமேலழகர் உரை. இல்வாழ்க்கை அதிகாரத்திலமைந்த இக்குறளிலுள்ள 'அஃது' எனுஞ் சுட்டு அகன்று சென்று, துறவதிகாரத்துட் பேசப்பட்ட துறவறத்தைக் குறித்தது.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"[40]

என்ற குறளில் 'அஃது' என்பது அணுகிய நிலையில் முன்னடியில் நின்ற அன்பைக் குறித்தது. இவ்வாறு அகன்றும் அணுகியுங் கிடந்த பொருளைக் கொணர்ந்து கூட்டிக் கூறுதலைக் கருதியும் மாட்டினை ஆசிரியர் மொழிந்திருக்கலாம்.

'மாட்டு' என்பது எதனைக் குறிக்கின்றது என்பதன்று இங்கு வேண்டுவதாகலான், மாட்டு பற்றிய சிந்தனையினை இதோடு

நிறுத்திக் கொள்ளலாம்; அதனை ஆயப் புகின் மற்றொன்று விரித்தலாய்ப் பெருகும். அது எதனைக் குறிக்கினுங் குறிக்க; ஆயின், பொருள்கோளைக் குறிக்கவில்லை என்பது மட்டுந் தெளிவு.

7. 2. 2. 3. *யாப்பிற் பேசல் பொருந்துமா?*

'மாட்டு' என்பது பொருள்கோளைக் குறிக்கவில்லை என்பது தெளிவாகவே, தொல்காப்பியம் யாப்பிலக்கணத்தின்கண் பொருள்கோளைப் பேசவில்லை என்பது முடிவாகின்றது. முடிவாகவே, யாப்பிற் பொருள்கோளைக் குறிக்கும் நூல்களாக எஞ்சியிருப்பன மூன்றே எனலாம்.[41] அவையாவன:-

அ. அமுதசாகரம்
ஆ. யாப்பருங்கலம்
இ. யாப்பருங்கலக் காரிகை

இந்நூல்கள் அனைத்தும் யாப்பை மட்டுமே பேசுவன என்பதும், இவைகள்தாமும் பொருள்கோளைத் தொல்காப்பியம் போன்றோ, நன்னூல்போன்றோ விரித்தும் விளக்கியும் பேசவில்லை என்பதும் நோக்குதற்குரியன. இவைகள் பிற இலக்கணங்களையும் (எழுத்து, சொல், பொருள், அணி) கூறியிருப்பின் பொருள்கோளை யாப்பின்கண் அடக்கியிருக்குமா என்பதும் ஐயத்திற்குரியதே; ஏனெனின், ஐந்திலக்கணங்களையும் பேசும் எந்த நூலும் யாப்பின்கண் பொருள்கோளைப் பேசவில்லை.

எனவே, பொருள்கோளைப் பேச யாப்பினும் பொருத்தமான இடம் பிறிதொன்று உளதாதல் வேண்டும்.

7.2.3. *அணியில் அறைவது அமையுமா?*

இன்று நமக்குக் கிடைத்துள்ள அணியிலக்கண நூல்களுள் தண்டியலங்காரம், இரு குவலயானந்தங்கள், துறைசைச் சதாலங்காரம், ஆரணச் சைலரலங்கார பஞ்சகம், சந்திராலோகம் ஆயன 'நிரனிறைப் பொருள்கோளை' அணிகளுள் ஒன்றாய்க் கொண்டன. மாறனலங்காரமோ நிரனிறைப் பொருள்கோளுடன் பூட்டுவிற் பொருள்கோளையும் அணிகளுட் சேர்த்தது. ஐந்திலக்கண நூல்களனைத்தும் அணியிலக்கணத்தில் 'நிரனிறைப் பொருள்கோளை'யும் ஒன்றாகக் கொண்டு கூறுகின்றன.

7.2.3.1. *தொல்காப்பியம்:-*

நிரனிறையைத் தொல்காப்பியர் அணியிலக்கணத்திலும் (உவமவியல்) கொண்டு கூறுகிறார்.

> "*அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே*
> *நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்*
> *வரன்முறை வைத்த மூன்றலங் கடையே*"[42]

என்பது நூற்பா.

நிரனிறுத்தமைத்தல், நிரனிறை, சுண்ணம் என்னும் மூன்றும் அல்லாதவழி உவமைகள் பலவாக அடுக்கி வருதல் கடியப்படும் என்று உரை கண்டார் இளம்பூரணர்.[43] இந்நூற்பா வின் முதலடியை ஒரு நூற்பாவாகவும், எஞ்சிய ஈரடிகளைத் தனி நூற்பாவாகவுங் கொண்ட பேராசிரியர், 'வரன்முறை' என் பதை 'வரைநிலை' என்ற பாடமாகக் கொண்டார்.

> ''உவமையையும் நிரலே நிறுத்துப் பொருளினையும் நிரலே நிறுத்து ஒப்புமை கூறின் அது நிரனிறையெனப்படும் சுண்ணத்தினை வரைந்த நிலைமையான் வந்த சுண்ணமும் அடி மறியும் மொழிமாற்றுமென்னும் மூன்றுமல்லாத இடத்து''[44]

என்பது பேராசிரியர் கண்ட உரை. எனவே, நிரனிறுத்தமைத்தல் நிரனிறை, சுண்ணம் ஆய மூன்றனுள்ளும் அடுக்குவமை வரும் என்று இளம்பூரணரும், நிரனிறையில் மட்டுமே அடுக்குவமை வரும் என்று பேராசிரியருங் கருதினராதற் பெறப்படுகிறது.

> '''நிரனிறுத் தமைத்தல் நிரனிறை ஏனை
> வரைநிலை வைத்த மூன்றலங் கடையே'
>
> என்றது சுண்ணத்தினை வரைந்தோதியது என்னையெனின், அவை மூன்றுஞ் சுண்ணம்போலச் சுண்ணஞ் செய்யப்படு தலின் அவ்வாற்றுற் சிதர்ந்து கிடப்ப உவமையுங் கூறின் அது பொருள் விளங்காதென்பது அறிவித்தற்கென்பது. என்னை? அடிமறியுள் ஓரடியுள் உவமங்கூறி ஓரடியுட் பொருள் வைத் தால் இனிது பொருள் கொள்ளாது அறிமறிக்குங் காலைப் பிறிது பிறிதாதலுடைத்து. இனிஓரடியுள் உவமங் கூறிப் பின்னர் எத் துணையுஞ் சென்று பொருள் கூறி மொழிமாற்றிக் கொள்ள வைப்பின் அதுவும் உவமத்தாற் பொருள் தோன்றுது. சுண்ணத்திற்கும் அஃதொக்கும்''[45]

என்ற பேராசிரியரின் இவ்வுரைப்பகுதி சுண்ணத்திலும் அடுக்கு வமை வரும் என்ற இளம்பூரணரின் கருத்துக்கு மறுப்பாக அமை கின்றது. இம்மறுப்பின் பொருத்தம் நோக்கி, நிரனிறையை மட்டுமே தொல்காப்பியர் குறித்தார் என்றமையலாம்.

சுண்ணத்திலும் அடுக்குவமை வரும் என்று கொண்ட இளம் பூரணர், அடுக்குவமை வந்த சுண்ணமாகக் காட்டிய பாடல் வருமாறு:

> ''களிறுங் கந்தும் போல நளிகடற்
> கூம்புங் கலனுந் தோன்றும்
> தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே''

இப்பாடல் தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்களாலும்,

ஏனைய இலக்கண நூல்களின் உரையாசிரியர்களாலுங் கருத்து வேறுபாடின்றி எதிர் நிரனிறைக்குக் காட்டப்பட்டதாகும் என்பதும் இவண் நினைத்தற்குரியதாம். இதனை நோக்கவும், நிரனிறையில் மட்டுமே அடுக்குவமை வரும் என்று கொண்ட பேராசிரியரின் கருத்து மேலும் வலுப்பெறக் காணலாம். [அடுக்குவமை என்பது உவமைகள் பலவற்றை ஒருபால் தனியேயும், அவற்றுக்குரிய பொருள்கள் அனைத்தையும் மறுபால் தனியேயும் (வேறு வேறு) நிரலே நிறுவுவதைக் கருதியது என்பது இவண் உணரப்பட வேண்டுவதாம்.]

நிரனிறைப் பொருள்கோள் பெயரும் பெயருமாகவும், பெயரும் வினையுமாகவும், வினையும் பெயருமாகவும், வினையும் வினையுமாகவும் வரும் என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. இவற்றுள் உவமையும் பொருளுமாக வரும் எதனையும் தொல்காப்பியர் உவமவியலுட் குறித்தார். ஆயின், பிற்கால இலக்கணப் புலவர்களோ உவமையும் பொருளுமாக வரவேண்டும் என்ற வரையறை வேண்டாது, நிரனிறையாக வந்த எல்லாவற்றையுமே அணியினுட் சேர்த்தனர். எனவேதான், அவர்கள் உவமையணியின் உட்பிரிவாக நிரனிறையைக் கோடாமல், அதனைத் தனியே வேண்டினர்.

7.2.3.2 *பிற்கால இலக்கண நூல்கள்:-*

'அணி' என்பது 'அழகு' என்னும் பொருளுடையது. செய்யுட்கு அழகு தருவன என்று தாம் கருதியவற்றையெல்லாம் அணியுட் சேர்த்தனர் இலக்கணப் புலவர்கள்.

> "இவ்வோத்தினில் (உவமவியலில்) கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக் கொண்டு மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென இக் காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர்"[46]

என்ற பேராசிரியரின் உரைப்பகுதி அணி வளர்ந்த வரலாற்றைச் சுட்டுவதாக அமையக் காணலாம்.

'செய்யுட்கணியாகும்' என்று ஒருவராற் கருதப்படாத ஒன்றே 'அணியாகும்' என்று பிறிதொருவராற் கோடவுங் கூடும். தண்டியாசிரியர் பூட்டுவில்லை அணியினுட் சேர்க்காதிருந்தும், மாறனலங்காரமுடையாரோ அதனை அணியெனக் கொண்டமை இவண் கருதத் தகும்.


இடைநின்ற மொழி ஏனை ஈரிடங்கட்குஞ் சென்று பொருந்திப் பொருள் தருதல் என்னும் விதியுடைய தாப்பிசைப் பொருள்கோளை 'இடைநிலை விளக்கு' என்றும், முதல் அல்லது கடைநின்ற மொழி

ஒழிந்த ஈரிடங்கட்குஞ் சென்று பொருந்திப் பொருள்தருதல் என்னும் இலக்கணமுடைய அளைமறிபாப்புப் பொருள்கோளை முதனிலை மற்றுங் கடைநிலை விளக்குகள் என்றும் அணிநூல்கள் பேசுகின்றன.

எனவே, நிரனிறை, பூட்டுவில், தாப்பிசை, அளைமறிபாப்பு ஆய பொருள்கோள்கள் அணிநூல்களால் அணிகளெனக் கொள்ளப்பட்டிருக்கின்றமை தெளிவாகின்றது. இதனைக் கண்ட தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் எஞ்சிய பொருள்கோள்களையும் இவற்றொடு சேர்த்து எல்லாவற்றையும் அணிகள் என்றன.

7.2.3.2.1. *தொன்னூல் விளக்கம்:-*

வீரமாமுனிவர் தமது தொன்னூல் விளக்கத்திற் கீழ்க்கண்டவாறு அணிகளைப் பகுத்துப் பேசுகிறார்.



இப்பகுப்புகளுள் சொல்லணியின் மறிநிலையிற் பொருள்கோளை அடக்குகிறார் ஆசிரியர். ஆயின், மறிநிலையின் வகைகள் ஐந்தனுள் எதன்கண்ணும் பொருள்கோளை அடக்காமல் தனியேதான் கூறுகிறார். அன்றியும்,

“பொருள்கோளும் மறிநிலை போல்வனவாம்”[47]

என்றே கூறுகிறார். ‘மறிநிலையே’ என்று கூறாமல், ‘போல்வனவாம்’ என்றே கூறினராகலான் பொருள்கோளை அணியிற் சேர்த்தலில் அத்துணை தெளிவுடையரல்லர் ஆசிரியர் என்றே தோன்றுகின்றது.

மேலும் சொல்லணிகளைத் தொகுத்துச் சுட்டும்போது,

“சொல்லணி மறிநிலை ஐந்தும் கோளெட்டும்
சொன்மிக்கணி மூன்றும் சொல்லெஞ்சணி பத்தும்

சொல்லொப்பணி நான்கும் தொகை ஆறைந்தே"[48]

என்றே கூறினர். சொல்லணியை நான்காகப் பிரித்துக் கூறிய வீரமாமுனிவர், அந்நான்கனுள் பொருள்கோளைச் சேர்க்காதது நோக்கத்தக்கது. 'பொருள்கோளும் மறிநிலை போல்வனவாம்' என்று கூறிய ஆசிரியர், மேற்காட்டிய நூற்பாவில் 'மறிநிலை ஆறும்' என்னுமல், கோளை (பொருள்கோளைத்) தனியே பிரித்துக் 'கோள் எட்டும்' என்றே கூறியமையால் அணியின்கண் பொருள் கோளைச் சேர்ப்பதில் அவர் காட்டிய தயக்கம் உணரப்படும்.

ஒன்றற்குரியதைப் பிறிதொன்றற்குரியதாக உரைப்பதையே 'மறிநிலை' என இவ்வாசிரியர் குறிக்கிருர். 'நறும்பொழில்'— பூவாகிய சினைப்பொருட்குரிய மணம் பொழிலாகிய முதற்பொருட் குரியதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு வருவனவற்றை மறிநிலை என்கிருர். (குணம், முதல், காரணம்,குறிப்பு, ஒழுக்க மறி நிலைகள் என ஐந்தைக்காட்டுகிருர்). ஆயின், 'பொருள்கோளில்' ஒன்றற்குரியதைப் பிறிதொன்றற்குரியதாகக் கொள்ளும் நிலை இல்லை; பொருளுேக்கில் ஒழுங்கின்றிக் கிடக்குஞ் சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருள் கொள்ளும் நிலையே உள்ளது. எனவே, மறிநிலையுட் பொருள்கோளைச் சேர்த்தது பொருந்தாது.

சொல்லணியின் ஏனைய பிரிவுகளாம் மிகல், எஞ்சல், ஒப்பு ஆயவற்றுள்ளும் பொருள்கோளை அடக்க முடியாமை அவற்றது சிறப்பிலக்கணங்களாற் பெறப்படும். சொல்—தொடர் நிலையே பொருள்கோளுக்கு அடிப்படையாகலான் அதனைப் பொருளணி யுள்ளுஞ் சேர்க்க முடியாது.[49] எனவே, பொருள்கோள்கள் அனைத்தையும் அணியுள் வைத்துப் பேசுவதிற் பொருத்தம் அதிகம் இருப்பதாகத் தோன்றவில்லை.

7.2.3.2.2 முத்து வீரியம்:-

அணியினைச் சொல்லணி, பொருளணி, செய்யுளணி என்று மூன்ருகப் பகுத்தார் முத்துவீரிய உபாத்தியாயர். சொல்லணியில் மறிநிலையைக் குறிக்கிருர்.

"*அக்கர மொழியடி யாவது மாறிப்*
புணர்ப்பது மறிநிலைப் பொருளா கும்மே"[50]

என்பது மறிநிலைக்கான முத்துவீரிய நூற்பா.

"*எழுத்தாவது சொல்லாவது, அடியாவது மாறிப்*
புணர்வது மறிநிலைப் பொருளாகும்"[51]

என்பது உரை. இக்கருத்தின்படி, எழுத்து நிரனிறைப் பொருள் கோளை எழுத்தை மாற்றிப் புணர்க்கும் மறிநிலையிலும், அடிமறி மாற்றுப் பொருள்கோளை அடியை மாற்றிப் புணர்க்கும் மறிநிலை

யிலும், ஏனைய பொருள்கோள்களைச் சொல்லை மாற்றிப் புணர்க்கும் மறிநிலையிலும் அடக்குதற் பொருந்தும். ஆயின் ஆசிரியர் பொருள் கோளைச் செய்யுளணியின்கண்ணே தான் பேசுகிறார்.

தொகைநிலை, தொடர்நிலை, முத்தகம், குளகம் போன்ற செய்யுள் வகைகளையும், பெருங்காப்பியம், காப்பியம் போன்றவற்றின் இலக்கணத்தையும், வைதருப்ப நெறி போன்றவற்றையும் பேசும் செய்யுளணியியலில் சொற்றொடர் நிலையைக் கூறும் பொருள்கோளையுஞ் சேர்ப்பது முன்பின் தொடர்புடையதாகத் தெரியவில்லை.

7. 2. 3. 3. *அணியிற் பேசல் பொருந்துமா?*

தொல்காப்பியம் உவமையும் பொருளுமாக வரும் நிரனிறையை மட்டுமே அணியில் (உவமவியலில்) பேசிற்று என்பதும், பிற்கால இலக்கணப் புலவர்கள் இத்தகைய வரையறையின்றி நிரனிறை எவ்வாறு வரினும் அணியென்றே வேண்டினர் என்பதும், மாறனலங்காரம் பூட்டுவிற் பொருள்கோளையும் அணியிற் சேர்த்தது என்பதும் மேலே காட்டப்பட்டன. தாப்பிசைப் பொருள்கோளை இடைநிலை விளக்காகவும், அளைமறி பாப்புப் பொருள்கோளை முதனிலை மற்றும் கடைநிலை விளக்குகளாகவுங் கொண்டு அணி நூல்கள் பேசுகின்றன என்பதுஞ் சுட்டப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டிற்றோன்றிய தொன்னூல் விளக்கம், 19 ஆம் நூற்றாண்டிற் றோன்றிய முத்துவீரியம் ஆயவை மட்டுமே எல்லாப் பொருள் கோள்களையும் அணியிற் கொண்டு கூறுகின்றன என்பதும் விளக்கப்பட்டது. அவை அவ்வாறு பேசுவதில் உள்ள பொருத்தமின்மைகளுங் குறிக்கப்பட்டன.

செய்யுட்கண் நிற்கும் சொற்றொடரின் அமைப்பைப் பேசுவதே பொருள்கோள் ஆகலான், அதனை அணியிலக்கணத்திற் பேசுவதினுஞ் சொல்லிலக்கணத்திற் பேசுவதிலேயே அதிகப் பொருத்தம் உண்டு என்பதே இங்கு அறிய வேண்டுவதாகும்.

7. 2. 4. *சொல்லிற் சொல்வதே சரி:—*

பொருள், யாப்பு, அணியாய இலக்கணங்களிற் பொருள் கோளைப் பேசுவதினுஞ் சொல்லிலக்கணத்திற் பேசுவதிலேயே அதிகப் பொருத்தம் உள்ளது.

7. 2. 4. 1 *நேமிநாதமும் நன்னூலும்:-*

இன்று முழுமையாகக் கிடைத்துள்ள இலக்கண நூல்களில் தொல்காப்பியத்திற்கும் பிறகு பொருள்கோள்களின் வகைகளைப் பெயரளவிலாவது சுட்டும் முதனூல் நேமிநாதமேயாகும். அது

தொல்காப்பியத்தைப் பின்பற்றிச் சொல்லிலக்கணத்துக்கண்ணே தான் பொருள்கோளைப் பேசுகிறது என்பதும், தொல்காப்பியத் திற்குப் பிறகு பொருள்கோளின் வகைகள் ஒவ்வொன்றையுந் தனித்தனி நூற்பாவிலமைத்து விளக்கிப் போகும் முதனூலாம் நன்னூலும் பொருள்கோளைச் சொல்லிலக்கணத்துக்கண்ணே தான் பேசுகிறது என்பதும் இவண் நினையத் தகும்.

7. 2. 4. 2. *ஐந்திலக்கண நூல்கள்:—*

பொருள்கோளின் இலக்கணம் எந்தப் பகுதியிற் பேசப்பட வேண்டும் என்பதை அறிவதற்குப் பிறநூல்களினும் ஐந்திலக்கண நூல்களே சிறந்த சான்றுகளாக முடியும். ஐந்திலக்கணங் கூறும் நூல்களாக இன்று நமக்குக் கிடைப்பன ஆறே எனலாம். அவை யாவன,

அ. தொல்காப்பியம்
ஆ. வீரசோழியம்
இ. இலக்கண விளக்கம்
ஈ. தொன்னூல் விளக்கம்
உ. சுவாமிநாதம்
ஊ. முத்து வீரியம்

இவற்றுள், வீரசோழியம் யாது கரணியத்தாலோ பொருள்கோளை விரித்துந் தனித்தும் பேசவில்லை.[52] தொன்னூல் விளக்கமும் முத்து வீரியமும் அணியிலக்கணத்துப் பொருள்கோளைப் பேசியமை பொருந்தாதென்பது முன்னர்க் காட்டப்பட்டது. எஞ்சி நிற்பன தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் என்பனவே. இவையனைத்தும் பொருள்கோளைச் சொல்லிலக்கணத்திலேயே பேசுகின்றன என்பது இவண் கருதுதற்குரித்து.

அடிப்படைத் தொடர் அமைப்பினின்றும் மாறிக் கிடக்குஞ் சொற்களை முறைப்படுத்திக் கொள்ளலே பொருள்கோளாகலான், அது சொற்றொடர் இலக்கணங் குறிப்பதாதற் பெறப்படுகிறது. சொற்கட்கும், சொற்களால் இயைந்த தொடர்கட்கும் இலக்கணங் கூறுவது சொல்லிலக்கணமேயாகலான், பொருள்கோளைப் பேசு தற்கும் அதுவே பொருத்தமான இடமாகும்.

அதிகமான இலக்கண நூல்கள் பொருள்கோளைச் சொல்லிலக் கணத்திலேதான் பேசுகின்றன என்பதும், பொருள்கோள் பற்றிய முழுமையான செய்திகள் சொல்லிலக்கணத்துக் கிடைப்பதுபோல் பிறவிலக்கணங்களிற் கிடைப்பதில்லை என்பதும் பொருள்கோட் குரிய இடம் சொல்லிலக்கணமே என்பதைப் பறைசாற்றும்.

7. 2. 4. 3. *மயிலைநாதர் கருத்து:—*

> *“ பெரும்பாலும் யாப்பிற்கே உரிமையுடைமையின் ஆண்டே வைக்கற்பாலவெனின், முன்னம் சொல்லறிந்து யாப்பறிய வேண்டுதலிற் சொல் அறிவுழி வைக்க வேண்டுமென்க’*[58]

என்று கூறிப் பொருள்கோளைச் சொல்லிலக்கணத்தில் வைத்தலை உடன்படுகின்றார் மயிலைநாதரும். சொல்லிலக்கணத்திலுஞ் செய்யுட்கான இலக்கணம் பேசப்படுதலுண்மை முன்னியலிற் சுட்டப்பட்டது. எனவே, பொருள்கோளைச் சொல்லிலக்கணத்திற் பேசுவதிலேதான் மிகுதியும் பொருத்தமிருக்கிறது என்பது போதரும்.

7. 3. *முடிவுரை:-*

வேறு எவ்விலக்கணத்தை விடவும், சொல்லிலக்கணமே பொருள்கோளைப் பேச மிகுதியும் பொருத்தமான இடம் என்பது இவ்வியலில் தெளிவாக்கப்பட்டது.

எனினும், இலக்கணப் புலவர்கள் இதனை எழுத்து தவிர்ந்த எல்லா இலக்கணங்களிலும் நினைந்திருக்கிறார்களாகலான், பொருள்கோளின் இன்றியமையாமையை அவர்கள் உணர்ந்திருந்த தன்மையும், எல்லா இலக்கணங்களோடும் பொருள்கோள் ஏதோ ஒரு அளவிற் கொண்டிருக்குந் தொடர்பும் இனிது புலனாகும்.

பின் குறிப்புகள்

1. இறையனாரகப்பொருள், நூ. 56.
2. வீரசோழியம், கா. 88.
3. ,, கா. 89.
4. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்) யாப்பருங்கலம் *பழைய விருத்தியுரையுடன்*, பக். 305.
5. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்.), *அவிநயம்*, பக். 47.
6. யாப்பருங்கலம், நூ. 95.
   யாப்பருங்கலக் காரிகை, கா. 43, 44.
7. யாப்பருங்கலக் காரிகை, கா. 44.
8. யாப்பருங்கலம், நூ. 95.
9. க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்.), *அவிநயம்*, பக். 47.
10. ,, *அமுதசாகரம்*, பக். 46.
11. தொல்காப்பியம், நூ. 1258.
12. இராம கோவிந்தசாமிப் பிள்ளை (ப-ர்.), *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*, பக். 388.

13. தொல்காப்பியம், நூ. 1335.
14. பேராசிரியர் (உ-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக். 232.
15. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, பக். 77.
16. தொல்காப்பியம், நூ. 1467.
17. ந. சுப்பு ரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப-ள். 426 427.
18. பேராசிரியர் (உ-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக். 416.
19. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), தொல்காப்பியம்,பொருளதிகாரம், செய்யுளியல் நச்சினார்க்கினியர்உரை, பக். 255.
20. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை(ப-ர்.),தொல்காப்பியம் சொல்லதிகாரமூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ப-ள். 387-388.
21. தெய்வச்சிலையார் (உ-ர்.), தொல்காப்பியம் சொல்லதிகாரப் பக். 227.
22. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப-ள். 144-145.
23. ச. வே சுப்பிரமணியன் (தொ-ர்.), இலக்கணத் தொகை யாப்பு, பாட்டியல், பக். 315.
24. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (ப-ர்.), தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ப-ள்.387-388.
25. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, பக். 253.
26. பேராசிரியர் (உ-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக். 416.
27. சீவகசிந்தாமணி, பா. 1273.
28. உத்தமதானபுரம், டாக்டர் வே. சாமிநாதையர் (ப-ர்.), சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், பக். 648.
29. பேராசிரியர் (உ-ர்.), தொல்காப்பியம், பொருளதிகாரம், பக். 113.
30. இவ்வாறு இவரது உரையே இவருக்கு மறுப்பாக அமையும் இடங்கள் சிலவுண்டு. காண்க: மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், ப-ள். 288-291.

31. நிரனிறைப் பொருள்கோளை மீண்டும் உவமவியலிற் குறித்தாரேயெனின் எல்லா நிரனிறையையுங் குறிக்கவில்லை; உவமையும் பொருளுமாக வருவனவற்றையே குறித்தார் என்க. அங்கும், உவமை அடுக்கிவரல் நிரனிறை தவிர்ந்த ஏனையவற்றில் வராது என்று சிறப்பு விதி உணர்த்தலே நோக்கமாகும்.

32. வ. உ. சிதம்பரம் பிள்ளை (ப-ர்.), *தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம்,* பக். 453.

33. தொல்காப்பியம், நூ. 243.

34. தொல்காப்பியம், நூ. 262.

35. நன்னூல், நூ. 14.

36. சுவாமிநாதம், நூ. 10.

37. இது டாக்டர் பொன். கோதண்டராமனூர் கூறிய கருத்தாகும்.

38. திருக்குறள். 49.

39. வை மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் (கு-ர்.), *திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்,* பக். 42.

40. திருக்குறள், 76.

41. அவிநயம் எப்பகுதியின்கண் பொருள்கோளை அடக்கிற்றென்பது அறியக் கூடவில்லை அவிநயத்தைப் பதித்த திரு க ப. அறவாணன் பொருள்கோள் பற்றிய அவிநயனாரின் கருத்தை யாப்பிலக்கணத்தின்கண் சேர்த்துள்ளார்.

42. தொல்காப்பியம், நூ. 1256 & 1257. பி. சிதம்பர புன்னைவன நாதமுதலியார் பதிப்பில் (1922) இரு நூற்பாக்களாகவே பிரிக்கப்பட்டிருக்கிறது. 'வரைநிலை' என்ற பாடமே காணப்படுகிறது.

43. வ. உ சிதம்பரம்பிள்ளை (ப-ர்.) *தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம்,* ப-ள். 355—356.

44. பேராசிரியர் (உ-ர்.), *தொல்காப்பியம், பொருளதிகாரம்,* பக். 107.

45. ,, பக். 108.

46. ,,

47. தொன்னூல் விளக்கம், நூ. 305.

48. ,, நூ. 325.

49. ''சொல்— தொடர் நிலையே இப்பொருள்கோளுக்கு (நிரனிறை) அடிப்படையானமையால், இதைச் 'சொல்' அணி எனல் ஏற்புடைத்தே'' என்று நிரனிறை குறித்து டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறியது ஏனைப் பொருள்கோள்கட்கும் பொருந்தும்.

காண்க: டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் (ப-ர்.), *தொன்னூல் விளக்கம்*, பக். 50.

50. *முத்து வீரியம்*, நூ. 1130.

51. கு. சுந்தரமூர்த்தி (ப-ர்.), *முத்து வீரியம் உரையுடன்*, பக். 497.

52. வீரசோழியம் பொருளதிகாரத்துச் சுட்டிய 'பொருளடைவு' என்பது 'பொருள்கோளைக்' குறிப்பதுவே என்பது தானும் நூற்கமைந்த உரையாலேயே பெறப்படுகிறது.

53. உத்தமதானபுரம், வே. சாமிநாதையர் (ப-ர்.), *நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்*, பக். 285.

8. சொன்முறை மாற்றமுந் தேவையும்.

8.1. முன்னுரை.

8.2. மாற்றற்கான கரணியங்கள்.

8.2.1. பாவுக்காக...

8.2.2. தொடைக்காக...

8.2 3. பொருட்காக...

8.2.4. சிலேடைக்காக...

8.2.5. சுருக்கத்திற்காக...

8.3. தேவையின்றி மாற்றுதற் கூடாது.

8.4. யாற்றொழுக்கே சிறந்தது.

8.4.1. வீரசோழியமும் உரையும்.

8.4.2. இலக்கணக் கொத்தும் உரையும்.

8.5. முடிவுரை.

8.1. *முன்னுரை :-*

செய்யுள்களின்கண் சொற்கள் அடிப்படைத் தொடரமைப் புடன் பொருந்திக் கிடக்கும்போது, அவற்றைக் கிடந்தாங்கே இயல்பின் நடாத்தி, யாற்றொழுக்காய்ப் பொருள் கொள்ளலை யாற்றுநீர்ப் பொருள்கோளாகவும், சொற்கள் அடிப்படைத் தொடரமைப்பினின்றும் மாறிக் கிடக்கும்போது அவற்றை முன்பின் மாற்றி இயைத்து முறைப்படுத்திப் பொருள்கொள்ளலை ஏனைப் பொருள்கோள்களாகவும் இலக்கணப் புலவர்கள் கொண்டமை முன்பே சுட்டப்பட்டது.

அடிப்படைத் தொடரமைப்புடன் பொருந்தி வருமாறு சொற் களைப் பூட்டி, யாற்றொழுக்காய்ச் செய்யுளமைத்தலே படைப் போர்க்கும் படிப்போர்க்கும் எளிமையுந் தெளிவுந் தருவதாய் இருக்கவும், செய்யுள்களின்கண் சொற்களை மாற்றியமைக்க வேண்டுவதன் தேவையென்னையென்ற தடைக்கு விடைகாண எழுந்ததே இவ்வியலாகும்.

8.2. *மாற்றற்கான காரணியங்கள் :—*

காரணியங் கருதாது செய்யுள்களின்கண் சொற்களை மாற்றி அமைப்பதால் விளையும் பயன் ஏதுமின்றாம். எனவே, ஒரு செய்யுளின்கண் சொற்கள் மாற்றியமைக்கப் படுகின்றதென்றால் அதற்குத் தெளிவான காரணியம் ஏதாவது இருத்தல்வேண்டும். யாற்றுநீர்ப் பொருள்கோள் தவிர்ந்த ஏனைப் பொருள்கோள்கள் அமைந்த பாடல்களை உற்றுநோக்குவார்க்குக், கீழ்க்கண்ட தேவைகட்காக அச்செய்யுள்களிற் சொற்கள் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றமை புலனாகும்.

அ. பாவுக்காக
ஆ. தொடைக்காக
இ. பொருட்காக
ஈ. சிலேடைக்காக
உ. சுருக்கத்திற்காக

8.2.1. *பாவுக்காக...*

ஒவ்வொரு பாவும் பாவினமும் இன்னின்ன இலக்கணம் பெற்று இன்னின்ன வரையறைகளோடுதான் இயலுதல்வேண்டும் என்று இலக்கண நூல்களுள் தெளிவாக விதி வகுக்கப்பட்டிருக் கின்றது. தான் சொல்ல விரும்பும் ஒரு கருத்தை, அடிப்படைத் தொடரமைப்புடன் பொருந்தக் கூறினால், தான் தேர்ந்துகொண்ட பாவிற்கோ, பாவினத்திற்கோ ஊறு நேரும் என்று ஒரு புலவன் கருதுவானாயின், கூற வந்த கருத்தை அடிப்படைத் தொடரமைப்

பினின்றும் மாறிய தொடரான் அமைத்துப் பா அல்லது பாவி னத்தைப் பழுதுபடாமற் காப்பதில் முனைவான்.

> "மொழி மாற்றினது இயல்பாவது செய்யுட்கண் பா என்னும் உறுப்பிற்கு ஏற்பச் சொல் நின்ற நிலை பொருள் தாராத வழிச் சொல் நின்ற நிலைக்குப் பொருள் எதிரே வந்து பொருந்தும்படி அச்செய்யுளின் முன்நின்ற சொல்லைப் பின்னேயும் பின்நின்ற சொல்லை முன்னேயும் மாற்றி, பொருள்கொள்ளுமிடத்தே கொளுத்துதலாம்"[1]

என்று மொழிமாற்று பற்றிய தொல்காப்பிய நூற்பாவுக்கு நச்சினார்க் கினியர் கூறிய உரையால், பாவுக்காகச் சொற்கள் மாற்றப் படுதலுண்மையை அவருங் குறித்தனராதற் பெறப்படும்.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகஞ் செவ்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்கஞ் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"[2]

இப்பாடலின் முதன் மூன்று அடிகளும் நிரனிறையாற் பொருள்கொள்ளக் கிடந்தன. இவ்வடிகளில் உள்ள சொற்களை யாற்றொழுக்காய் அமைப்பின் தளை கெட்டு, பா பழுதுபடும். காட்டாக முதலடியைக் காணலாம்.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி"

என்பதைக்,

"கொடிநுசுப்புக் குவளையுண்கண் கொட்டை மேனி",

என்று யாற்றொழுக்காய் அமைப்பின், 'காய் முன் நிரை' என்றும், 'மாமுன் நேர்' என்றும் ஈரிடத்து வந்து, வெண்பா இலக்கணத் தோடு பொருந்தாமற் போகிறது; இதனை எவ்வகையிற் பிரிப்பி னும் தளை கெட்டு பா பழுதடைவது உறுதி.

"கொடிநுசுப்புக் கொட்டை மேனி குவளையுண்கண்
மதிபவள......'

என்று அமைப்பின் 'மாமுன் நேர்' என்று வருவதுடன், முதலடி யின் இறுதிச்சீர் 'காய்ச்சீராய்'[3] அமைந்து இரண்டாமடியின் முதற் சீரின் முதலசையாம் நிரையுடன் பொருந்தாமலும் போய் விடு கிறது; இதனை வேறு எம்முறையிற் பிரிப்பினும் தளை கெடுதலைத் தவிர்க்க முடியாது.

இவ்வாறாக, யாற்றொழுக்காய் அமைப்பின் பாவிற்கு நேரும் ஏதங்கருதி, நிரனிறையாய் அமைத்து வெண்பா யாப்பு கெடாமற்

கொண்டார் இப்பாட்டுடையார். இப்பாடலின் ஏனைய அடிகட்கும் இது பொருந்தும்.

கொண்டுகூட்டு மற்றும் மொழிமாற்றுப் பொருள்கோள்கள் அமைந்த பாடல்கள் பலவற்றில் யாப்புக்காகவுந் தொடைக் காகவுமே சொற்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்பது அவற்றை நோக்குவார்க்கு இனிது புலனாகும்.

8.2.2. *தொடைக்காக...*

ஓலையில் ஆணி கொண்டெழுதுமுறை இருந்த பண்டைக் காலத்தில் நூல்களைப் படியெடுப்பதோ, பரப்புவதோ அத்துணை எளிமைத்தாய் அமைந்திடவில்லை; ஆகலான், படிக்க விரும்பிய எல்லோர்க்கும் நூல்களின் படிகள் கிடைப்பது அருமையாயிருந் தது. எனவேதான், நூல்களை அல்லது அவற்றின் சில பகுதிகளை உருச் செய்து, மனத்திறுத்திப் பாடஞ் சொல்லவுங் கேட்கவுமான நிலை பண்டு மிகுதியாயிருந்தது. அவ்வாறு மனனஞ் செய்வதற்கு வாய்ப்பாகச் செய்திகளைச் செய்யுள் வடிவில் தந்தனர்; அச் செய்யுள்களை ஓசை நயம் பொருந்தப் பாடினர். செய்யுள்களில் ஒலிநயத்தைப் பொருத்தவே எதுகை, மோனை, இயைபு போன்ற தொடைகளை அமைத்தனர்; இத்தொடைகட்கு ஏற்ப, செய்யுள் களின்கண் சொற்களை அடிப்படைத் தொடரமைப்பினின்று மாற்றி யும் அமைத்தனர். இவ்வாறு, தொடைக்காகச் சொற்களை மாற்றி யமைத்தல் செய்யுள்கள் பலவற்றிற் காணப்படுகின்றது. குறிப்பாக மொழிமாற்று மற்றும் கொண்டுகூட்டுப் பொருள்கோள்களுடைய செய்யுள்களில் 'தொடைக்காகச் சொற்களை மாற்றல்' மிகுதியுங் காணப்படுகிறது.

பொருத்தப் புணர்ச்சி, பொருத்தமிற் புணர்ச்சி, இவ்விரு வகையும் ஒருங்கியற் புணர்ச்சி என்று வழுவிற் புணர்ச்சிகளாக மூன்றனை வேண்டி, யாற்றுநீர் மற்றும் அடிமறி மாற்றுப் பொருள் கோள்களைப் 'பொருத்தப் புணர்ச்சியிலும்' ஏனைப் பொருள்கோள் களைப் 'பொருத்தமிற் புணர்ச்சியிலும்' சேர்க்கும்[3] இலக்கணக் கொத்துச் சுவாமிநாத தேசிகர்,

> "பொருத்தப் புணர்ச்சி யொன்றிருக்கவே ஏனையிரண்டும் கொண்டதென்னெனின், புணர்ச்சிச் சிறப்பினும், அடி தொடை ஓசை முதலிய செய்யுளுறுப்புச் சிறத்தலிற் கொண்ட தென்று தெளிக"[4]

என்றமையும் தொடைக்காகச் சொற்கள் மாற்றப்படுதலுண் மையைத் தெளிவுறுத்தும்.

"பொருள்கோள் — பொருளைக் கொள்ளும் முறை அஃதாவது தொடைநயம் நோக்கிக் கோக்கப்பெற்ற சொற்கூட்டத்தை உடைய செய்யுளில் மொழிகளை நேராகவும், மாற்றியும் பொருள் கொள்ளுகின்ற முறைமை என்றவாறு"[5]

என்ற திரு ச. தண்டபாணிதேசிகரின் கூற்றால், தொடைக்காகச் சொற்கள் மாற்றப்படுதலுண்மையை அவருங் குறித்தனராதற் பெறப்படும்.

"ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாஞணுந் தோளாள்
நிறனுள்ளூர் உள்ள தலர்"[6]

இப்பாடலைப் 'பாரி பறம்பின்மேற் தண்ணுமை தாஞணுந் தோளாளுடைய நிறன், காரி விறன்முள்ளூர் வேங்கைவீ போலாயிற்று; அதனால், உள்ளூருள்ளதாய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்' என்று மாற்றியுங் கூட்டியும் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

'ஆரிய — பாரி — காரி' என்றும், 'விறன் — நிறன்' என்றும் எதுகைத் தொடை பொருந்தி வருதற்காகவே, இப்பாடலின் கண்சொற்கள் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன என்பது கூறுமறபோதரும்.

" நோயிடு மென்றஞ் சிறுதலற்க தீயவையே
நோயிலதாஞ் செய்யாத கால்"[7]

இப்பாடலின் இரண்டாமடி, 'செய்யாத கால் நோயிலதாம்' என்று அமைவதே முறை 'நோயிடும்' என்ற முதலடியின் முதற்சீரை நோக்கி, எதுகை, மோனை ஆய இரு தொடைகளும் பொருந்தி வர 'நோயிலதாம்' என்பதை முன் வைத்தார் இப்பாட்டுடையார்.

இவ்வாறுகத் தொடைக்கேற்பச் சொற்களை மாற்றியமைத்தல் பல செய்யுள்களிற் காணப்படுகிறது.

8. 2. 3. பொருட்காக...

ஒரு செய்யுளின்கண் சொற்களை மாற்றி அமைப்பதால், தான் கூற வேண்டிய செய்தி மேலும் நுட்பமுஞ் சிறப்பும் உறுமென்று ஒரு புலவன் கருதுவானாயின், அவ்வாறமைக்க அவன் உரிமை பெறுகிறன்.

" கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்;
அண்டர் நாயக! இனித்துறத்தி ஐயமும்
பண்டுள துயருமெ றனுமன் பன்னுவான்"[8]

சீதையைக் கண்டுவந்த செய்தியை அனுமன் இராமனிடங் கூறுங் கம்பராமாயணப் பாடலிது. இப்பாடலின் முதலிரண்டடி, 'நகரில் அணியைக் கண்களாற் கண்டனென்' என்ற வரிசையில் அமை வதே முறை: ஆயின் மாறி அமைந்துளது. இம்மாற்றத்திற்குப் பொருட் சிறப்பே இன்றியமையாக் காரணியம் எனலாம்.

'கற்பினுக் கணியை' என்ற மாத்திரத்தில், 'கண்டானு இல்லையா?' என்று இராமனது உள்ளங் கவலுமாகலான், 'கண்ட னென்' என்பதை முன் வைத்தான் கம்பன். 'கண்டனென்' என்ற மாத்திரத்தில் 'கண்டது கற்பினுக்கணியைத்தானு? அன்றி வேறு யாரையேனுமா?' என்று அறியமாட்டாமல் இராமன் கலுழ் வானுகலான், 'கண்டனென்' என்பதைத் தொடர்ந்து 'கற்பினுக் கணியை' என்பதை அமைத்தான். கற்பினுக்கு அணியைக் கண்டுவந்த செய்தியைத் தெரிந்துகொண்ட பின்னே தான், 'நீயே கண்டனையா? அன்றிக் கண்டார்வாய்க் கேட்டனையா' என்று இராமன் வினவுவானுகலான் 'கண்களால்' என்பதை அடுத்து நிறுத்தினுன் புலவன்.[9] சீதையைக் கண்ட செய்தியை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே 'எங்கு கண்டனை?' என்று அவாவுற்று வினவுவானுகலான், 'தெண்டிரை அலைகடல் இலங் கைத் தென்னகரில்' என்பதை இறுதியிற் சேர்த்தான் கம்பன். எனவே, இவன் சொற்களின் மாற்றத்திற்குக் காரணியம் பொருட் சிறப்பே என்பது பெறப்படும்.

இரண்டாம் அடியை முதலில் வைத்து, முதலடியை அடுத்து நிறுத்தி முறைப்படி அமைப்பினும் எதுகை கெடுவதில்லை. எனவே அடிமாற்றம் எதுகையை நோக்கியதன்று என்பதும், பொருட் சிறப்புக்காக வேண்டப்பட்டதென்பதும் பெறப்படும். இவ்வடிமாற் றத்தைப் போலவே முதலடியிற் சொற்களிடத்து வேண்டப்பட்ட முறை மாற்றத்தையும் பொருட்சிறப்பை நோக்கியே புலவன் நிகழ்த்தினுன் எனலாம்.

விற்பூட்டுப் பொருள்கோள்கள் உடைய பாடல்கள் பலவற்றிற் சொற்கள் பொருட்சிறப்புக்காகவே மாற்றப்பட்டிருக்கின்றன என்பது அவற்றை நோக்குவார்க்கு இனிது புலனுகும்.

"வருவர் வயங்கிழாய் வாட்டாற் றெதிர் நின்று வாள் மலைந்த
உருவ மணிநெடுந் தேர்மன்னர் வீய ஒளிதருமேல்
புருவ முரிவித்த தென்னவன் பொன்னன் கழலிறைஞ்சாச்
செருவெம் படைமன்னர் போலவெங் கானகஞ் சென்றவரே'[10]

என்பது விற்பூட்டுக்கு இறையனுர் அகப்பொருள் உரையுடையா ராற் காட்டப்பட்ட பாடலாகும்.

'வயங்கிழாய்! கானகஞ் சென்றவர் வருவர்' — என்று அமைத்தலே முறையாகவும், 'வருவர்' என்பதை முன்னே கூட்டி, மாற்றி அமைத்தார் இப்பாட்டுடையார்.

'கார் முந்தும் முன் தேர் முந்தும்' என்று கூறிச் சென்ற தலைவன், கார் வந்துந் தான் வந்திலனாக, வழிமேல் விழிவைத்து ஏங்கியும் வருந்தியும் படுசுவர்ப் பல்லிப் பாடு பார்த்துமிருக்கும் தலைவிக்கு, 'வருவர்' என்ற சொல்தானும் மிகுந்த ஆறுதல் அளிக்கக் கூடியதாகலான் அதனை முற்கூறினார் இப்பாட்டுடையார். எனவே, இங்கு நிகழ்ந்த சொல்மாற்றத்திற்குந் தலைமைக் காரணியம் 'பொருட் சிறப்பே' என்பது போதரும். போதர, பொருட்சிறப்புக்காகவுஞ் சொற்களை மாற்றியமைத்தலுண்மை வலியுறும்.

8. 2. 4. *சிலேடைக்காக...*

இடைக்காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்தரும் சிலேடைப் பாடல்கள் யாத்தலைத் திறமையாகவும் பெருமையாகவுங் கருதினர் புலவர்கள். ஒரு சொல்லைப் பலபொருள் தர அமைப்பதினாலும், ஒருதொடரைப் பல்வேறு வகையாய்ப் பிரிப்பதினாலும், ஒரு செய்யுளை வேறுவேறு பொருள்கோள் முறைகளினால் பொருள் கோடச் செய்வதினாலும் சிலேடைகளை அமைத்தனர் அவர்கள்.

காட்டாகக் காளமேகப் புலவரின் பாடலொன்றைக் காணலாம்.

> *" மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்*
> *கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி*
> *இரும்படிப்பான் செக்கான்எண் ணெய்விற்பான்*
> *வண்ணான்*
> *பரும்புடவை தப்பும் பறை"*[11]

இப்பாடலை யாற்றொழுக்குப் பொருள்கோளாற் பொருள் கொள்ளும் போது, பார்ப்பானுக்கு உரியதல்லாதது என்று கருதப்படுகின்ற தன்மை அவனுக்கும், அவனுக்கே உரியதென்றெண்ணப்படுந் தொழில் குயவனுக்கும், குயவனுக்கு உரிய தொழில் கொல்லனுக்கும் என்றின்னவாறு உண்மைப் பொருளினின்றும் உறழ்ந்த பொருளைப் பெற்று நகைச்சுவையில் மிகுதியுந் திளைக்கலாம்.

விற்பூட்டுப் பொருள்கோளாற் 'பறை' என்பதனை முதலடியின் முதற்சீருக்கு முன்னே சேர்த்துப் 'பறை மாடு தின்பான், பார்ப்பான் மறையோதுவான், குயவன் கூடிமிக மண்பிசைவான்' என்றின்னவாறு பொருள்கொள்ளும் போது உண்மைப் பொருளைப் பெறலாம்.

இச்செய்யுளின்கண் நிகழ்த்தப்பெற்ற சொன்மாற்றத்திற்குச் சிலேடையே தலைமைக் காரணியமாய் அமைந்தது. காளமேகப் புலவரின் பாடல்களுள் இது போன்றவற்றை இன்னும் பலவாகக் காணலாம்.

8. 2. 5. சுருக்கத்திற்காக...

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"[12]

என்றார் வள்ளுவர். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே செய்யுட்குச் சிறப்பு.[13] இச்சுருக்கம் என்னும் பண்பைப் போற்றுதற் கேற்பவும் செய்யுளின்கண் சொற்கள் அமைக்கப்படுகின்றன.

'பொருத்தப் புணர்ச்சி யொன்றிருக்கவே ஏனையிரண்டுங் கொண்டதென்னெனின், புணர்ச்சிச் சிறப்பினும் அடி, தொடை, ஓசை முதலிய செய்யுளுறுப்புச் சிறத்தலிற்கொண்டதென்று தெளிக. சிறுபான்மை சொற்சுருங்குதற் பொருட்டென்றும் ...தெளிக"[14]

என்ற சுவாமிநாத தேசிகரின் கூற்றால், சுருக்கம் எனும் பண்பிற் கேற்பச் செய்யுளின்கண் சொற்கள் அமைக்கப்படுதலுண்மையை அவரும் உடன்பட்டனராதற் பெறப்படும்.

"தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதிக்கட் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்தும்
நெறிமுன்னி முயலா தாரே"[15]

என்பது அளைமறிபாப்புப் பொருள்கோட்குக் காட்டப்பட்ட பாடல்

'வாழ்ந்த ..... முயலாதார் தாழ்ந்த ...... தளர்வார்'
'வாழ்ந்த ..... முயலாதார் சூழ்ந்த ...... சுழல்வார்'
'வாழ்ந்த ...... முயலாதார் மூழ்ந்த ..... முனிவார்'

என்று ஈற்று நின்ற அடியை ஏனைய அடிகள் ஒவ்வொன்றின் முன்னும் கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளக் கிடந்ததிப்பாடல். ஒரே அடியை மீண்டும் மீண்டுங் கூறுவதனால் 'சுருக்கம்' எனும் பண்பு கெடுவதுடன், ஒருவித சலிப்புணர்ச்சியும் ஏற்படுமாகலான், அத்தொடரை ஈற்றில் வைத்து, ஏனைய அடிகளுடன் கூட்டிப் பொருள்கொள்ளுமபடி அமைத்தார் இப்பாடலு

டையார். 'சுருக்கம்' எனும் பண்பு நோக்கியே இங்கு சொற்கள் நின்றன. அனைமறிபாப்புப் பொருள்கோளுடைய பாடல்களுட் பலவும் இப்பண்பு பற்றியே அமைக்கப்படுகின்றன எனின் மிகை யாகாது.

எனவே, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நோக்கத்திற் காகவுஞ் செய்யுளின்கண் சொற்களை அமைவு பெறச் செய்த லுண்மை பெறப்படும். ஆயின், எதுகை முதலாய தொடைகட்காக வும், பாவிற்காகவுஞ் சொற்களை மாற்றியமைத்தலே மிகுதியுங் காணப்படுகிறது

8·3. தேவையின்றி மாற்றுதற் கூடாது:-

மேற்குறித்த காரணியங்கள் பற்றியோ, அல்லது இவை போன்ற இன்றியமையாப் பிற காரணியங்கள் குறித்தோதான் ஒரு செய்யுளின் கண் சொற்களை அடிப்படைத் தொடரமைப்பினின்றும் மாற்றியமைத்தல் வேண்டும் எவ்விதக் காரணியமுமின்றிச் செய் யுளின்கண் சொற்களை மாற்றியமைத்தல் விரும்பத் தக்கதன்று.

" காமவிதி கண்முகம் மென்மருங்குல் செய்யவாய்
தோமில் துகடினி சொல்லமிர்தம் – தேமலாக்
காந்தள் குரும்பை கனக மடவாள்கை
ஏந்திளங் கொங்கை யெழில்"[16]

என்பது எழுத்து நிரனிறைக்குக் காட்டப்பட்ட பாடல்.

'காமவிதி' — என்பதைக் 'காவி மதி' என்றும், 'துகடினி' — என்பதைத் 'துடி கனி' என்றும் எழுத்து நிரனிறையாற் கூட்டிப், பின் முறையே 'கண், முகம்' என்பவற்றோடும், 'மென்மருங்குல்' செய்யவாய்' என்பவற்றோடும் சொன்னிரனிறையால் இயைத்துப் பொருள்கோட வேண்டும்.

'காவிமதி' என்பதைக் 'காமவிதி' என்று மாற்றியமைத்தது 'தோமில்' என்ற இரண்டாமடியின் முதற் சீரோடும், 'தேமலர்' என்ற தனிச் சீரோடும் எதுகைத் தொடர்பு நோக்கியே எனலாம். ஆயின், 'துடிகனி' என்பதைத் 'துகடினி' என்று மாற்றியமைக்கத் தேவையேயில்லை. 'துடிகனி' என்றே இருப்பினும் யாப்போ, ஓசையோ கெடுவதில்லை. எனவே, இது தேவையற்ற மாற்று தலாம்.

" குன்ற வெண்மணல் ஏறி நின்றுநின்
றினைம் காண்கம் வம்மோ தோழி
களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே"[17]

என்பது எதிர்நிரனிறைக்குக் காட்டப்பட்ட பாடல்.

'களிறுபோற் கலனும் கந்துபோற் கூம்பும்
நளிகடல் தன்னுள் தோன்றும்'

என்று யாற்றொழுக்காய் அமைப்பின் வருமிழுக்கு ஏதுமின்றாம்; அன்றியும், அடியெதுகை பொருந்தி அதிக இன்பமுந் தருகிறது.

'போல' என்னும் உவம உருபு ஈரிடத்து வருவதனைத் தவிர்த்து, ஓரிடத்து அமைத்துச் சுருக்கம் வேண்டுவார், நிரனிறையாகக் கூறினர் என்று கொள்ளினும்,[18]

'களிறுங் கந்தும் போல நளிகடற்
கலனுங் கூம்புந் தோன்றும்'

என்று நேர் நிரனிறையாக அமைத்தலே நேரிதாம். இவ்வாறமைப்பதானேரும் ஊறு ஏதுமின்றாம். அன்றியும், இனவெதுகையும் வந்து பொருந்துகின்றது. ஆயின்,

'களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்'

என்று எதிர் நிரனிறையாகவே வைத்தார் இப்பாட்டுடையார். இவ்வாறமைப்பதால், எதிர் நிரனிறைக்குக் காட்டொன்று கிட்டிற்றென்பது தவிர, சிறப்புடைப் பயன் பிறிதொன்றில்லை என்க.

பாடல்கட்காகப் பொருள்கோள் என்ற நிலைமாறிப், பொருள்கோள்கட்காகப் பாடல்கள் என்ற நிலை தோன்றியமையையே இது போன்ற பாடல்கள் காட்டுகின்றன. இவ்வாறு, எந்தப் பயனும் வேண்டாமல், செய்யுளின்கண் சொற்களை மாற்றியமைத்தல் விரும்பத்தக்கதன்று.

தான் சொல்ல விரும்பும் ஒரு கருத்தைச், சொல்ல வேண்டிய அளவுக்குச் சிறப்பாகவும் அழகாகவுஞ் சொல்ல, அடிப்படைத் தொடரமைப்புப் பொருந்தி வராதென்று ஒரு புலவன் உறுதியாகக் கருதும்போதுதான் சொற்களை மாற்றிமைத்தல் பற்றி அவன் சிந்திக்கவேண்டும்; அல்லாதவிடத்து, யாற்றொழுக்கையே நாடுதல் வேண்டும்.

8.4. யாற்றொழுக்கே சிறந்தது:—

யாற்றொழுக்குப் பொருள்கோளுடைய பாடல்களில் எளிமையுந் தெளிவும் மிகுதியும் உளதால், அப்பொருள்கோளையே சிறந்ததென்று கொண்டனர் பலரும்.

8.4.1. *வீரசோழியமும் உரையும்:*

“சார்ந்த வழக்கொடு தப்பா வடவெழுத் தைத்தவிர்ந்து
தேர்ந்துணர் வார்க்கு மினிமையைத் தந்துசெய் யுட்களினும்
நேர்ந்து சொலப்பட் டுயர்ந்தவ ரால்நிர லேபொருளை
ஓர்ந்து கொளப்படுஞ் சொற்குற்ற மற்ற வுறுப்பென்பரே”[19]

என்பது செய்யுட்குக் குற்றமற்ற உறுப்பாகுஞ் சொற்களைக் கூறும் வீரசோழியக் காரிகை. மேல் அடிக்கோடிடப்பட்ட காரிகையின் பகுதிக்குத்,

“திரிதற் பொருள்கோளின்றியே நிரலே பொருள் விளங்க இருக்குஞ் சொல்லுக்கள் குற்றமற்றஉறுப்பாவன”[20]

என்று உரை கூறினர் பெருந்தேவனார். எனவே, செய்யுளின்கண் முன்பின் மாற்றவேண்டாது, யாற்றொழுக்காய் அமைந்து பொருள் தருஞ் சொற்களையுடைய செய்யுள்களையே குற்றமற்றன என்று புத்தமித்திரனாரும், பெருந்தேவனாருங் கருதினராதற் பெறப்படும்.

8.4.2. *இலக்கணக் கொத்தும் உரையும்:-*

பொருத்தப் புணர்ச்சி, பொருத்தமிற் புணர்ச்சி, இவ்விரு வகையும் ஒருங்கியற் புணர்ச்சி என்று மூவகை வழுவிற் புணர்ச்சியைக் கூறும் சுவாமிநாத தேசிகர், யாற்றுநீர் மற்றும் அடிமறி மாற்றுப் பொருள்கோள்களைப் ‘பொருத்தப் புணர்ச்சி’ யிலும், எஞ்சிய பொருள்கோள்களைப் ‘பொருத்தமிற் புணர்ச்சி’ யிலுஞ் சேர்த்தார் என்பது முன்பே சுட்டப்பட்டது. அவ்வாறு சேர்த்த அவர்,

“இம்மூவகைப் புணர்ச்சியும் சிறப்பும், அச்சிறப்பின்மையும், அப்பொதுவுமாகிய வழுவற்ற புணர்ச்சியேயாமென்க”[21]

என்றதனுன், யாற்றுநீர், அடிமறிமாற்றுப் பொருள்கோள்கள் (பொருத்தப் புணர்ச்சி) ‘சிறப்புள்ளன’ என்பதும், ஏனைய பொருள் கோள்கள் (பொருத்தமிற் புணர்ச்சி) ‘சிறப்பில்லன’ என்பதும் அவரது கருத்தாதலும் அறியப்படும்.[22]

எனவே, ஏதேதுமின்றிச் செய்யுளின்கண் சொற்களை மாற்றி யமைத்தல் விரும்பத் தக்கதன்று என்பது பெறப்படும்.

8.5. *முடிவுரை :-*

யாப்பு, தொடை, பொருட்சிறப்பு, சிலேடை, சுருக்கம் போன்ற பலவற்றின் கரணியமாக ஒரு செய்யுளின்கண் சொற்கள் மாற்றியமைக்கப்படுகின்றன என்பதும், இக் கரணியங் களையோ அல்லது இவை போன்ற பிற கரணியங்களையோ

நோக்காமல் எவ்விதப் பயனுமின்றிச் சொற்களை மாற்றி யமைத்தல் விரும்பத் தக்கதன்றென்பதும், வீரசோழியம், இலக்கணக் கொத்து ஆய நூல்களும் அவற்றின் உரைகளும் மாற்றிக் கூட்ட வேண்டாது யாற்றொழுக்காய்ப் பொருள்தர அமையும் பாடல்களையே சிறந்தனவாகக் கருதின என்பதும் இவ் வியலின்கண் தெளிவாக்கப்பட்டன.

பின் குறிப்புகள்

1. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (ப-ர்), *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*, பக். 386.

2. இளம்., சேனா., தெய்., நச்சி.—ஆயோர் முதலடியை மட்டுமே காட்டினர். நேமி., நன்., இ.வி., தொ.வி., மு.வீ.—ஆயவற்றின் உரைகள் முழுப் பாடலையுங் காட்டின.

3. *''ஆற்றொழுக் கடிமறி மாற்றிரண் டல்லா*
எழுவகைப் பொருள்கோள், மரூஉமொழி, பொய்யுரை
சிலவிடைப் பிறவரல் பண்பதி கார
மாதியாம் பதங்க ளவையு மன்றி
விகுதியுரு பும்மை முதலினுட் சிலவும்
பொருத்தமில் புணர்ச்சி யெனப்புகன் றனரே''
—இலக்கணக் கொத்து, நூ. 108.

4. ஆறுமுக நாவலர் (ப-ர்.), *இலக்கணக் கொத்து மூலமுமுரையும்*, பக். 52.

5. ச. தண்டபாணி தேசிகர் (ப-ர்.), 'அடிக்குறிப்பு', *புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை*, பக் 587.

6. சேனாவரையர் மொழிமாற்றுக்குக் காட்டினர். அம்மொழி மாற்றையே கொண்டு கூட்டெனக் கூறி அதற்குக் காட்டின யா.க., யா.கா., இ.வி. ஆயவற்றின் உரைகள்.

7. வீரமாமுனிவர் தாப்பிசைப் பொருள்கோட்குக் காட்டினர். காண்க: ஜி. மெக்கென்ஜி. காபன் அய்யர் (ப-ர்.), *ஐந்திலக் கணத் தொன்னூல் விளக்கம் மூலமுமுரையும்*, பக். 225.

8. *கம்பராமாயணம், சுந்தரகாண்டம், திருவடிதொழுத படலம்*, பா. 25 (கம்பன் கழகம்).

9. *'சீதையினுடைய கண்களால் அவளைக் கற்பினுக்கணியென்று கண்டனென்'* எனினுமாம்.

10. சி. வை. தாமோதரம் பிள்ளை (ப-ர்), *இறையனாரகப்பொருள் உரையோடு*, பக். 174.

11. சென்னை-இட்டா பார்த்தசாரதி நாயுடு (ப-ர்.), தனிப் பாடற்றிரட்டு, முதற்பாகம், பா 112, பக். 69.

12. திருக்குறள், 649.

13. நன்னூல், நூ. 13.

14. ஆறுமுக நாவலர் (ப-ர்.), இலக்கணக் கொத்து மூலமுமுரையும், பக். 52.

15. யா க., யா.கா , நன்., இ.வி., தொ.வி., மு.வீ. ஆயவற்றின் உரைகள் 'அலைமறி பாப்புப் பொருள்கோட்கு' இப்பாடலைக் காட்டின. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியரின் நன்னூலுரையில் இப்பாடலின் அடிகள் முன்பின் முறைமாறிக் காணப்படுகின்றன.

16. நேமி. யா.க., இ.வி., ஆயவற்றின் உரைகளும், நன்னூல் சங்கர நமச்சிவாயருரையுங் காட்டின

17. இளம்., தெய்., நச்சி. ஆயோர் 'மயக்க நிரனிறை' என்ற குறியீட்டுடன் மூன்று நான்காம் அடிகளை மட்டுங் காட்டினர். சேனு. இறுதி மூன்றடிகளைக் காட்டினுர். நேமி., யா.க. ஆயவற்றின் உரைகளும் நன்னூல் மயிலைநாதர் உரையும் முழுப் பாடலைக் காட்டின. இலக்கண விளக்க உரை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை ஆயவற்றில் உரிய பகுதியாய மூன்று நான்காம் அடிகள் மட்டுங் காட்டப் பட்டுள்ளன.

18. 'போல' என்பதை ஓரிடத்துத் தவிர்ப்பதனுன் சுருக்கம் பெருமளவில் நிகழ்ந்து விடுவதில்லை; ஈரிடத்துக் கூறும் போதும் எழுசீருக்குள்ளேயே அடங்குகின்றமை காணலாம்.

19. வீரசோழியம், கா. 142.

20. கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்.), வீரசோழியம் உரையுடன், பக். 199.

21. ஆறுமுக நாவலர் (ப-ர்.), இலக்கணக் கொத்து மூலமுமுரையும், பக். 52.

22. அடிமறிமாற்றுப் பொருள்கோளுடைய பாடல்கள் 'கிடந்தாங்கேயும் பொருள் தரும்' என்று கொண்ட கொள்கையே அதனையும் யாற்றுநீருடன் சேர்த்துப் பொருத்தப் புணர்ச்சியுள் அடக்கச் செய்தது எனலாம்.

காண்க: 'பொருள்கோளின் வளர்ச்சி' எனும் இயலில் 5.2.4.2. பிரிவு. ப-ள். 133-134.

9. முடிவுரை.

9.1. முன்னுரை.

9.2. முன்னியல்கள் மொழிவன.

9.3. வகைப்பாட்டில் வேறுபாடு.

9.3.1. தொல்காப்பியம்.

9 3.2. நேமிநாதம், நன்னூல் முதலியன.

9.4. பயனுடை வகைப்பாடு.

9.5. முடிவுரை.

9. 1. முன்னுரை:-

எல்லாக் காலத்து இலக்கணப் புலவர்களும் பொருள்கோள் பற்றிப் பேசுகின்றனர். எக்காலத்தும் 'பொருள்கோள்' பற்றிய இலக்சணக் கோட்பாடு புறக்கணிக்கப்பட்டதாகவோ, ஒதுக்கப் பட்டதாகவோ வரலாறே இல்லை. சொல், பொருள், யாப்பு, அணி யென்ற இவற்றுள் எந்தவொரு இலக்கணத்தைப் பேசும் நூலும் பொருள்கோளைக் குறைந்த அளவிலோ, விரிந்த நிலையிலோ சுட்டியே போயுள்ளன. எனவே, இலக்கண உலகில் பொருள் கோள் பெற்றிருந்த சிறப்பான இடம் இனிது புலனுகும். அத் துணைச் சிறப்புடைய பொருள்கோள் குறித்து இதுகாறுங் கூறப் பட்ட கருத்துகளைத் தொகுத்துச் சுட்டி, முடிபுரைப்பது இவ் வியலின் நோக்கமாகும்.

9. 2. முன்னியல்கள் மொழிவன:-

இவ்வாய்வின்கண் கூறப்பட்ட விளக்கங்களுங் காணப்பட்ட முடிபுகளும் இயல்வாரியாகத் தொகுக்சப்பட்டுக் கீழே தரப்படு கின்றன.

'முன்னுரை' யின்கண் ஆயக்கொண்ட பொருளும், ஆயக் கண்ட கரணியமுங் குறிக்கப் பெற்றன. அன்றியும், ஆய்பொருளைப் பேசும் இலக்கண மூல நூல்கள் மற்றும் உரை நூல்கள் பற்றிய குறிப்புகளும், ஆய்பொருள் பற்றி இதுகாறும் பிறரால் மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகள் குறித்த விளக்கங்களும் ஆண்டு இடம் பெற்றன.

'பொருள்கோள் வரையறையும் விளக்கமும்' எனும் பெயரிய இயலின்கண் 'பொருள்கோள்' என்ருல் என்ன என்று வரையறை செய்யப்பட்டது. பொருள்கோட்குரிய பல பொருள்களும், பொருள் கோளைக் குறிக்க வழங்கும் பிற சொற்களும் ஆண்டு சுட்டப் பட்டன.

'வகைகள்' என்பது மூன்ருவது இயல் அதன்கண், தொல் காப்பியந் தொடங்கி, தமிழ்நூல் முடிய பல்வேறு இலக்கண நூல்களுங் கூறிய பொருள்கோளின் வகைகள் அனைத்துங் காட்டுகளுடன் விளக்கப்பட்டன. அடிமறி பற்றிய தொல்காப்பிய நூற்பாவுக்கு உரையாசிரியர்கள் கூறிய உரைகளின் பொருந் தாமையும், யாற்றுநீர் பற்றிய நன்னூல் நூற்பாவுக்கு மயிலைநாதர் கூறிய உரை பவணந்தியார் கருத்தொடு இயையாமையும் ஆண்டு காட்டப்பட்டன.

உரை நூல்களும் பொருள்கோள்களும்' — என்பது அடுத்து அமையும் இயல். பொருள்கோளின் வகைகள் குறித்துக் கூறப்பட்ட

கருத்துகளும் அவற்றுக்குக் காட்டப்பட்ட காட்டுகளும் தம்முள் இயையாமை இறையனுரகப் பொருளுரையின்கண் காணப்படு கின்றதென்று ஆங்குக் குறிக்கப் பெற்றது. மேலும் யாப்பருங்கல விருத்தியுரை சுட்டிய நிரனிறை விகற்பங்களிற் பல நிரனி றையே அல்ல என்பதுங் காட்டப்பட்டது. தொடர்ந்து, வீரசோழி யவுரையாற் குறிக்கப்பட்ட பொருள்கோள், பொருணடை எனும் இருகோட்பாடுகட்கிடையேயான வேறுபாடு விளக்கப்பட்டது. இறுதியாக, நம்பியகப் பொருளாற் குறிக்கப்பட்ட 'பொருள்வகை' யை அதனுரை 'பொருள்கோள் வகை'யாகக் கொண்டது பொருந் தாது என்பதும், அப்பகுதி இடைச் செருகலாதல் வேண்டும் என்பதும் நிறுவப்பட்டன.

'வளர்ச்சி' — என்பது ஐந்தாவது இயல். பொருளிசை மாறு அடிமறிமாற்றை அடிமறிமாற்றுப் பொருள் கோளாய்க் கொள்ளல் பொருந்தாதென்பதாண்டுச் சுட்டப்பட்டது. யாற்றுநீரை ஒரு பொருள்கோளாகக் கொள்ளாதார் கருத்தும், கொண்டார் கருத்தும் ஆயப்பட்டுப் பின்னது ஏற்கப்பட்டது. மொழிமாற்று எய்திய வளர்ச்சி, நிரனிறை பெற்ற விகற்பம் போல்வனவும் பேசப்பட்டன.

'பொருள்கோள் ஒரு செய்யுளிலக்கணக் கூறு' — என்பது தொடர்ந்து அமையும் இயல். உரைநடைக்கண் அடிப்படைத் தொடரமைப்பினின்றுஞ் சொற்கள் மாறியமைவது சிறுபான்மை யேயாகலான், இலக்கணப் புலவர்கள் பொருள்கோளின் இலக் கணத்தைச் செய்யுட்காகவே வேண்டினர் என்பதாண்டுக் காட் டப்பட்டது.

'இலக்கணத்திற் பொருள்கோளின் இடம்' எனும் பெயரிய இயலில், பொருள், யாப்பு, அணி ஆய இலக்கணங்களுட் பொருள் கோளைப் பேசுதலினும், சொல்லிலக்கணத்திற் பேசுதலிலுள்ள பொருத்தமிகுதி உணர்த்தப்பட்டது.

'சொன்முறை மாற்றமுந் தேவையும்' என்பது அடுத்தமையும் இயல். செய்யுளின் கண் அடிப்படைத் தொடரமைப்பினின்றுஞ் சொற்களை மாற்றியமைக்க வேண்டுவதன் தேவை ஆண்டு நினைக் கப்கட்டது. யாப்புக்காகவும், எதுகைக்காகவும், பொருட்சிறப்புக் காகவும். சிலேடைக்காகவும், சுருக்கத்திற்காகவும் சொற்களைப் புல வர்கள் அடிப்படைத் தொடரமைப்பினின்றும் மாற்றியமைக்கின் றனர் என்று அறியப்பட்டது. காரணியங் கருதாது செய்யுளின்கண் சொற்களை மாற்றுதற் கூடாது என்பதும், யாற்றொழுக்காய் அமைக்

ப்படுஞ் செய்யுள்களையே சிறந்ததென வீரசோழியமும் இலக்கணக் கொத்துங் கருதின என்பதும் ஆண்டுச் சொல்லப்பட்டன.

9. 3. வகைப்பாட்டில் வேறுபாடு :-

பொருள்கோளின் இன்றியமையாமையை ஒப்பிய இலக்கணப் புலவர்கள், பொருள்கோள் என்றால் என்ன என்பதிற் கருத்து வேறுபடாத இலக்கணப் புலவர்கள் பொருள்கோளை வகைப்படுத்துவதிற் பெரிதும் வேறுபடுகின்றனர். இவர்கள் பொருள்கோளின் வகைகளை இரண்டென்றும், ஐந்தென்றும், எட்டென்றும், ஒன்பதென்றும், இருபதென்றுங் காட்டித் தமக்குள் வேறுபடுவாராயினர். இவ்வகைப்பாடுகள் அனைத்துமே ஏதேனும் ஒரு அடிப்படையின் நிகழ்ந்ததுதான் எனினும் அனைத்தையும் பயனுடை வகைப் பாடாய்க் கொள்ள முடியாது.

கரணியத்துடன் கூடிய பயனுடைய வகைப்பாடே நிலைபேற்றுத்தன்மையை எய்த முடியும்.

உயர்திணை, அஃறிணை என்று திணையை இரண்டாய்க் கொண்ட இலக்கணப் புலவர்கள் உயர்திணையின்கண் ஆண், பெண், பலர் என்ற முப்பால்களையும், அஃறிணையின்கண் ஒன்று, பல என்ற இருபால்களையும் வேண்டினர். உயர்திணை ஒருமையில் ஆண், பெண் என்று தனித்தனி வேண்டிய அவர்கள். அஃறிணை ஒருமையில் அவ்வாறு வேண்டாமல், இரண்டையும் ஒன்றாக்கி 'ஒன்று' என்றே வேண்டினர். இவ்வாறு வேண்டக் கரணியம், அஃறிணை ஒருமையில் ஆண், பெண் ஆய இருபாற் சொற்களும் ஒரே முடிவு பெறுவதேயாகும். எனவே, இந்த வகைப்பாடு கரணியத்துடன் கூடியதாய் இலங்குவதைக் காண முடிகிறது.

இதுபோன்று கரணியத்துடன் கூடிய பொருள்கோள் வகைப் பாடு எதுவென்பது காணப்பட வேண்டுவதாகும்.

9. 3. 1. தொல்காப்பியம் :-

தொல்காப்பியர் கொண்ட வகைப்பாட்டைச் சொற்களை மாற்றிக் கூட்டுதல், அடிகளை மாற்றிக் கூட்டுதல் என்று இரு பெரும் பகுப்புகளாகப் பிரித்துக் காண முடியும். சொற்களை மாற்றிக் கூட்டுதலை அவர் மூன்றாகக் கொண்டார்.

அ. நிரனிறை
ஆ. சுண்ணம்
இ. மொழிமாற்று

என்பன அவை. இவற்றுள், நிரனிறை என்பது ஓர் ஒழுங்குடன் நிரலே சொற்களை மாற்றி இயைத்தலாகும். ஏனைய இரண்டும் ஏற்ற

பெற்றி முன்னும் பின்னும் மாற்றிக் கூட்டுதலாகும். ஈரடி எண்சீருள் மாற்றிக் கூட்டுதலைச் சுண்ணம் என்றும் அத்தகைய வரையறை வேண்டப்படாததை மொழிமாற்று என்றுந் தொல்காப்பியர் குறித்தார்.

நிரனிறையையும் இவ்வாறு அடியடிப்படையிற் பகுக்கக் கூடுமாகலானும், இம்முறைப் பகுப்பை ஓரடியில் மாற்றிக் கூட்டல், ஈரடியில் மாற்றிக் கூட்டல், இரண்டிறந்த அடியில் மாற்றிக் கூட்டல் என்று நீட்டிச் செல்ல முடியுமாகலானும், பொருள் கொள்ளும் நோக்கில், அடியடிப்படையிலான இப்பகுப்புச் செய்யும் உதவி ஏதுமின்றாகலானும் இப்பகுப்பை அத்துணைத் தேவையுடையதொன்றாகக் கோடக் கூடவில்லை. எனவே, சுண்ணம், மொழி மாற்று ஆய இரண்டையும் ஒன்றாக்கி மொழிமாற்று என்றே வழங்கலாம்; அதனானேரும் இழப்பேதுமில்லை.

9. 3. 2. நேமிநாதம் நன்னூல் முதலியன:-

நேமிநாதம் முதலிய நூல்கள்[1] ஓரடியிற் சொற்களை மாற்றிக் கூட்டுதலைச் 'சுண்ணம்' என்றும், ஈரடியில் மாற்றிக் கூட்டுதலை 'அடிமொழி மாற்று' என்றும், இரண்டிறந்த அடிகளில் மாற்றிக் கூட்டுதலை 'மொழிமாற்று' அல்லது 'கொண்டுகூட்டு' என்றும் வேண்டின.[2] நன்னூல் முதலிய நூல்களோ[3] ஓரடியுட் சொற்களை மாற்றிக் கூட்டுதலை 'மொழிமாற்று' என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளிற் சொற்களை மாற்றிக் கூட்டுதலைக் 'கொண்டுகூட்டு' என்றும் வேண்டின. இத்தகைய அடியடிப்படைப் பாகுபாட்டானேரும் பயனேதுமில்லை என்பதற்கு மேற்காட்டப்பட்ட (9. 3. 1.) கரணியங்களே பொருந்தும்.

எனவே, ஓரடியுள் சொற்களை மாற்றிக் கூட்டுதல், ஈரடிகளுள் மாற்றிக் கூட்டுதல், இரண்டிறந்த அடிகளுள் மாற்றிக் கூட்டுதல் என்ற வேறுபாடின்றிச், சொற்களை ஏற்ற பெற்றி மாற்றிக் கூட்டுதல் எத்தனை அடிகளுள்ளாயினும் அனைத்தையும் 'மொழி மாற்று' என்றே வேண்டலாம்.

சொற்களை மாற்றிக் கூட்டுதலிலும் ஓர் முறைப்பாடு இருப்பதனால் விற்பூட்டுப் பொருள்கோள் தனியே வேண்டற்பாலதே.[4] ஓரிடத்து நின்ற மொழிகளை ஒன்றுக்கு மேற்பட்ட இடத்துக் கூட்டல் எனுஞ் சிறப்பால் ஏனைப் பொருள்கோள்களினின்றும் வேறுபட்டுத் தம்முள் ஒன்றுபடும் தாப்பிசை, அளைமறிபாப்பு ஆய இரண்டும் முறையே இடைநின்ற மொழியை இருமருங்குங் கூட்டு

தல், தலை அல்லது கடைநின்ற மொழியை ஒழிந்த இடத்துக் கூட்டுதல் எனும் விதிகளால் தம்முள் வேறுபடுகின்றன. சுருக்கம் என்னும் பண்பு போற்றப்பட இவ்வகைப் பொருள்கோள்களமைய செய்யுள்களை யாத்தலும் வேண்டற்பாலதே.

9. 4. *பயனுடை வகைப்பாடு:-*


பொருள்கோள் வகைப்பாட்டில் இதுகாறுங் கண்ட வேறுபாடு களை நோக்க, எதிர்ப்பக்கத்தில் வரிமரமிட்டுக் காட்டப்பட்டுள்ள பகுப்பு அடிப்படையாலும் நோக்காலுஞ் சிறந்ததாகவும், கரணி யத்துடன் கூடியதாகவும், பொருள்கோட மிகவும் பயனுடையதா கவும் அமைவதைக் காணலாம்.

யாற்றுநீர், கொண்டுகூட்டு ஆய இரண்டையுந் தலைமைப் பகுப்பாகவும், அடிமறி, மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு—ஆயவற்றைக் கொண்டுகூட்டின் உட் பகுப்புகளாகவுங் கோடல் வேண்டும்.

கொண்டுகூட்டின்கண் எழுத்தை மாற்றிக் கூட்டுதல், சொல்லை மாற்றிக் கூட்டுதல், அடியை மாற்றிக் கூட்டுதல் என்ற மூன்றை வேண்டுகிறார், திரு த. சரவணத்தமிழன்.[5] எழுத்தை மாற்றிக் கூட்டுதல் நிரனிறையிலன்றிப் பிறண்டு வருவதில்லை யாகலான், அதனை நிரனிறையுள்ளேயே அடக்கிக் கோடலாம். எனவே, மேலே வரிமரமிட்டுக் காட்டப்பட்ட வகைப்பாடு உள்ள வகைப்பாட்டுள் நல்ல வகைப்பாடாகும். பவணந்தியார் நன்னூலிற் காட்டிய பொருள்கோள் வகைகளுள் மொழிமாற்று, கொண்டுகூட்டு ஆய இருபொருள்கோள்களையும் மொழிமாற்றென் பெயரில் ஒன்றாக இணைக்கவும், யாற்றுநீர் தவிர்ந்த ஏனைப் பொருள்கோள்களைக் கொண்டுகூட்டென் பெரும்பகுப்பை வேண்டி அதன்கண் அடக்கவும் இவ்வகைப்பாடு இனிது கிட்டும்.

9.5. *முடிவுரை :—*

சொல், பொருள், யாப்பு, அணி ஆய இலக்கணங்கள் அனைத் திலும் 'பொருள்கோள்' நினைக்கப்பட்டிருப்பதால், அதன் இன்றி யமையாமையை இலக்கணப் புலவர்கள் உணர்ந்திருந்த தன்மை பெறப்படும். எவ்விலக்கணங் கற்போருக்குந் தொடரிலக்கணம் பற்றிய அறிவு ஏதோவொருவளவிற்றேவையாகலான், பொருள் கோள்பற்றி எல்லா இலக்கண நூல்களும் பேசுகின்றன எனலாம்.[6]


பொருள்கோள் (பயனுடை வகைப்பாடு)
யாற்று நீர்
கொண்டுகூட்டு
சொற்களை மாற்றிக் கூட்டுதல்
அடிகளை மாற்றிக் கூட்டுதல்
அடிமறி
ஓர் ஒழுங்குடன் மாற்றிக் கூட்டுதல்
ஏற்ற பெற்றி முன்னும் பின்னும் மாற்றிக் கூட்டுதல்
மொழிமாற்று
நிரலே நிறைத்தல் (தனித்தனி நிரலே நின்ற எழுத்தையுஞ் சொல்லையும் நிறைத்துக் கோடல்)
நிரனிறை
முறை
எதிர்
தலையுங் கடையுங் கூட்டல்
விற்பூட்டு
ஓரிடத்து நின்ற மொழியை ஒன்றுக்கு மேற்பட்ட இடத்துக் கூட்டல்
இடைநின்ற மொழியை ஈரிடத்துக் கூட்டல்
தாப்பிசை
தலை அல்லது கடை நின்ற மொழியை ஒழிந்த இடத்துக் கூட்டல்
அளைமறிபாப்பு

பின் குறிப்புகள்

1. நேமிநாதம், யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக். காரிகையுரை ஆய நூல்கள் இவ்வகைப் பகுப்பை வேண்டின.

2. இரண்டிறந்த அடிகளுள் சொற்களை மாற்றிக் கூட்டுதலை மொழி மாற்று என்று வேண்டிற்று நேமிநாதம். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆயவற்றின் உரைகளோ 'கொண்டு கூட்டு' என்று வேண்டின.

3. நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆய நூல்கள் இவ்வகைப் பகுப்பை வேண்டின.

4. நிரலே நிறுத்தி முறையே நிறைத்தலெனுஞ் சிறப்பால் நிரனிறை தனியே வேண்டப்பட்டவாறு போன்று, விற்பூட்டும் அதன் சிறப்பு நோக்கித் தனியே வேண்டப்படலே நேரிதாம்.

5. *''சொல்லும் தொடரும் எழுத்தும் கருத்துச்*
செல்லும் வகையான் ஓரடி பலவடி
முன்பின் கொண்டு கூட்டல் பலவே''

என்பது நூற்பா. (தமிழ்நூல், நூ. 433).

6. செய்யுளிலமையுந் தொடரைப் பற்றிய இலக்கணமே பொருள் கோளாகும். அது தொடரிலக்கணமாதல் பற்றியே அதனைத் திரு த. சரவணத் தமிழன் தமது 'தமிழ் நூலில்' தொடரியலின்கண் பேசுகிறார்.

பின்னிணைப்பு

1. பொருள்கோள் பற்றிய நூற்பாக்கள்.

(பல்வேறு இலக்கண மூல நூல்கள் மற்றும் உரை நூல்களிடைக் காணப்படும் பொருள்கோள் பற்றிய நூற்பாக்களுஞ் செய்திகளும் இவண் தொகுத்துத் தரப்படுகின்றன.)

1.1. தொல்காப்பியம்.

1.1.1. *பொருள்கோளின் வகைகள்*

நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே.

—நூ. 886.

1.1.1.1. *நிரனிறை*

அவற்றுள்,
நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

— நூ. 887.

1.1.1.2. *சுண்ணம்*

சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த ஈரடி யெண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல்.

—நூ. 888.

1.1.1.3. *அடிமறி*

1.1.1.3.1. *சீர் திரியாது அடி திரிதல்*

அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

—நூ. 889.

1.1.1.3.2. *சீர் திரிந்து அடி திரிதல்*

பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்
தோற்றமும் வரையார் அடிமறி யான.

—*நூ*. 890.

1.1.1.4. *மொழிமாற்று*

மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்.

—*நூ*.891.

1.2. இறையனாரகப் பொருளுரை.

இறையனாரகப் பொருளுரை விற்பூட்டு, விதலையாப்பு, பாசி நீக்கம், கொண்டுகூட்டு, ஒரு சிறை நிலை என்று ஐந்துவகைப் பொருள்கோள்களைக் கூறுகின்றது. இவ்வைந்து பொருள்கோள் களையும் உள்ளடக்கிய நூற்பாவொன்று மயிலைநாதரால் மேற்கோள் காட்டப்படுகின்றது.

"பூட்டுவில் விதலை யாப்புக் கொண்டுகூட்
டொருசிறை நிலையே பாசி நீக்கமென்
றுக்கிய வைந்தும் பொருள்கோள் ஆகும்."

காண்க:- உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் (ப-ர்)., *நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும்*, ப. 280.

1.3. அவிநயம்.

பொருள்கோள் பற்றிய அவிநயனாரின் கருத்து யாப்பருங்கல விருத்தியுரையின்கண் மேற்கோளாக ஆளப்பட்டிருக்கின்றது.

"நிரனிறை, சுண்ணம், அடிமறி மொழிமாற்று, அடிமொழி மாற்று என்னும் இந்நான்கினோடும், பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு என்னும் இவ் வைந்து செய்யுட் பொருள்கோளும் உறழ இருபதாம். அவை வந்த வழிக் கண்டு கொள்க. இருபது வகையானும் காட்டி னார் அவிநயனார்."

காண்க:- மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்),, *யாப்பருங் கலம் பழைய விருத்தியுரையுடன்*, ப 305.

யாப்பருங்கல விருத்தியுரையின்கண் காணப்படும் இப்பகுதியைத் திரு மயிலை, சீனி. வேங்கடசாமி தாமியற்றிய 'மறைந்து போன

தமிழ் நூல்கள்' எனும் நூலிலும், திரு. க. ப. அறவாணன் தாம் பதித்த 'அவிநயம்' எனும் நூலிலுந் தொகுத்துள்ளனர்.

காண்க:- மயிலை. சீனி. வேங்கடசாமி, *மறைந்து போன தமிழ் நூல்கள்*, ப. 25-26.

க. ப. அறவாணன் (ப-ர்., உ-ர்.), *அவிநயம்*, ப. 47.

1.4. அமுதசாகரம்.

"சொல்லாதல் சொல்லின் பொருளாதல் முன்முறைவைத்
தவ்வகை நேர்கோள் நிரனிறையாம்; அவ்வவ்
விடையிட் டெதிரும் விராய்ச்சொல் இடையிடை
இட்டன சுண்ணம்; இரண்டடியாற் சொல்வர
நிற்ப தடிமொழி மாற்றல்; அதடி
மறியா முழுதும் யாப்பு."

இதுவும் யாப்பருங்கல விருத்தியுரையிடைக் கண்ட மேற் கோளேயாம்.

காண்க:- மே வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்), *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, ப. 303.

இந்நூற்பாவைத் தாம் பதித்த 'அமுதசாகரம்' எனும் நூலின்கண் தொகுத்திருக்கிறுர், திரு. க.ப. அறவாணன்.

காண்க:- க.ப. அறவாணன் (ப-ர்.,உ-ர்)., *அமுதசாகரம்*, ப.46

1. 5. யாப்பருங்கல விருத்தியுரை.

"நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதியாவன;
நிரனிறையும், சுண்ணமொழி மாற்றும், அடிமறி
மொழிமாற்றும், அடிமொழிமாற்றும், பூட்டுவிற் பொருள்
கோளும், புனல்யாற்றுப் பொருள்கோளும், அளைமறிபாப்புப்
பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு.
கூட்டுப் பொருள்கோளும் எனக் கொள்க."

காண்க:- மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப-ர்)., *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்*, ப. 293.

1. 6. யாப்பருங்கலக் காரிகையுரை.

"பொருள்கோள் ஒன்பது வகைப்படும்:- நிரனிறை
மொழிமாற்றும், சுண்ண மொழிமாற்றும், அடிமறி மொழி
மாற்றும், அடிமொழி மாற்றும், பூட்டுவிற் பொருள்கோளும்,
புனலாற்றுப் பொருள்கோளும், அளைமறிபாப்புப் பொருள்

கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு கூட்டுப் பொருள்கோளும் என.''

காண்க:- ந. மு. வேங்கடசாமி நாட்டார் (ப-ர்)., *யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரையும்*, ப. 202.

1. 7. வீரசோழிய உரை.

செய்யுள்கள் தாம் பொருள் கொண்டு நிற்றலைப் 'பொருள் கோள்' என்றும், செய்யுள்களினின்றும் நாம் பொருள் கொள்ளலைப் பொருளடைவு' என்றும் வீரசோழிய உரை குறிக்கின்றது.

1.7.1. பொருள்கோள்

பொருள்கோளாவது,

''கொழுங்கொடி வள்ளி செழுங்குலை வாழை
தீங்கரும் பேமலர் திகழ்தரு பலவே
தேங்கமழ் அசோகு செருவிற் பூட்டே
பூம்புன லாறெனப் பொருள்கோள் ஏழே.''

''அவற்றுள்

கொழுங்கொடி வள்ளி கூறுமுற் பொருளே;
செழுங்குலை வாழையின் சொற்பொருள் ஈறே;
இன்தீங் கரும்பில் இடையது பொருளே;
வன்றுட் பலவுக்கு முதலிடை பொருளே;
நற்பூ வசோகுக்கு நடுவது பொருளே;
விற்பூட்டு மேலுங் கீழும் பொருளே;
இரும்புனல் ஆற்றினுக் கெங்கும் பொருளே.''

1.7.2. பொருணடை

பொருணடையாவது,

''அளைமறி கோடலும் மொழிமாற்றுக் கோடலுங்
கொண்டு கூட்டும் இருநிர னிறையுஞ்
சுண்ணங் கோடலும் முதலா யினவே.

அவைதாந் தலைமையும் இன்மையுங் கூட்டிப்
பின்னருங் காரணம் பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை யுடைத்தே.''

காண்க:- கா. ர. கோவிந்தராச முதலியார் (ப-ர்)., *வீரசோழியம் உரையுடன்*, ப. 99 & 107.

1. 8. நேமிநாதம்.

அடிமொழி சுண்ணம் நிரனிறை விற்பூட்
டடிமறி யாற்று வரவும்—துடியிடையாய்
தாப்பிசை தாவின் மொழிமாற் றளைமறி
பாப்புப் பொருளோடொன் பான்,

—நூ. 92.

1. 9. நன்னூல்.

1.9.1. பொருள்கோளின் வகைகள்

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே.

—நூ. 412.

1.9.1.1. யாற்றுநீர்

மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகும.'. தியாற்றுப் புனலே.

—நூ. 413.

1.9.1.2. மொழிமாற்று

ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோர் அடியுள் வழங்கல்மொழி மாற்றே.

—நூ, 414.

1.9.1.3. நிரனிறை

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே,

—நூ. 415.

1.9.1.4. பூட்டுவில்

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில் லாகும்.

—நூ. 416.

1.9.1.5. தாப்பிசை

இடைநிலை மொழியே ஏனையி ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை.

—நூ. 417.

1.9.1.6. *அளைமறிபாப்பு*

செய்யுள் இறுதி மொழியிடை முதலிலும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே.

—நூ. 418

1.9.1.7 *கொண்டுகூட்டு*

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே.

—நூ. 419

1.9.1.8. *அடிமறி மாற்று*

ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீ றிடைமுதல் ஆக்கினும் பொருளிசை
மாட்சியும் மாறு அடியவும் அடிமறி.

—நூ. 420

1. 10. இலக்கண விளக்கம்.

அடிமறி மாற்றுப் பொருள்கோட்குத் தொல்காப்பியர் கூறிய 'அடிமறிச் செய்தி' எனத் தொடங்கும் நூற்பாவை எடுத்தாண்ட வைத்தியநாத தேசிகர், ஏனைப் பொருள்கோள் கட்குப் பவணந்தியார் கூறிய நூற்பாக்களை அப்படியே ஆண்டு கொண்டார்.

காண்க:- இலக்கண விளக்கம், நூ. 361-369.

1. 11. இலக்கணக் கொத்து.

பொருள்கோளில் ஒன்பது வகைகளை வேண்டிய இந்நூல், அவற்றைப் 'பொருத்தப் புணர்ச்சி' 'பொருத்தமில்புணர்ச்சி' என்ற இருபெரும் பகுப்புகளுள் அடக்குகின்றது.

''ஆற்றொழுக் கடிமறி மாற்றிரண் டல்லா
எழுவகைப் பொருள்கோள்......
பொருத்தமில் புணர்ச்சி எனப்புகன் றனரே''

—இலக்கணக் கொத்து, நூ. 180.

1. 12. தொன்னூல் விளக்கம்.

1.12.1. *பொருள்கோளின் வகைகள்*

பொருள்கோளும் மறிநிலை போல்வன வாம்அவை
யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்

தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றென ஆகும் எட்டென்ப.

—நூ. 305

1.12.1.1. *யாற்றுப் புனல்*

யாற்றுப் புனலே அடிதொறும் பொருளற
ஏற்றடி நோக்கா விளம்பலின் ஆகும்.

—நூ. 306

1.12.1.2. *மொழிமாற்று*

மொழிமாற் றென்ப மொழிகள்தம் பயன்படும்
வழிபெயர்த் தோரடி உரையுள் கொளலே.

—நூ. 307

1.12.1.3. *நிரனிறை*

நிரனிறை யாம்நிரை நிறீஇய பெயர்வினை
இரண்டும் வேறடுக்கி எதிரினும் வைத்த
நிரையினும் பொருளே நேர்தல் என்ப.

—நூ. 308

1.12.1.4. *பூட்டுவில்*

பூட்டுவில் என்ப பூட்டிய வில்போல்
பாட்டிரு தலையொரு பால்பொருள் கொளலே.

—நூ. 309

1.12.1.5 *தாப்பிசை*

தாப்பிசை முதல்கடை தன்பொருள் தரும்மொழி
யாப்பிசை இடையே இயம்புதல் என்ப.

—நூ. 310

1.12.1.6. *அளைமறிபாப்பு*

அளைமறி பாப்பே அந்த மொழிமற்
றுளவிடத் துய்த்துத்தன் உரைப்பொருள் கொளலே.

—நூ. 311

1.12.1.7. *கொண்டு கூட்டு*

கொண்டுகூட் டென்ப கொள்பொருட் கேற்ப
விண்டடி பலவினும் வினைகொள் மொழியே.

—நூ. 312

1.12.1.8. *அடிமறிமாற்று*

அடிமறி மாற்றே அடிபெயர் பொருளவும்
அடியிடம் மாறினும் அழியாப் பொருளவும்.

—*நூ*. 313

1. 13. சுவாமிநாதம்.

*அளைமறி பாப்பு, அடிமறி, தாப்பிசை, விற்பூண், மொழிமாற்று
ஆற்றெழுக்கு, நிரனிறையே, கொண்டு கூட்டல், எட்டாம்;
வளர்பொள் கொள பின்மொழி முன்னிடை சேறல்; அடிகண்
மாறுகினும் பொருளொத்த; நடுச்சொல் முதல்கடை போய்த்
தெளிதல்; பிற்சொன் முதனேக்கல்; ஓரடியிற் பொருள் நேர்
செய்மொழி மாற்றுதல்; அடிதொறும் பொருண் முற்றிடுதல்;
உளவெழுத்துப் பெயர்வினைச் சொற்பொருள் எதிர்நேர்நிரலாய்
உறல்; பொருந்திற் றிசைத்தல்; விரியென்பர் உயர்ந்தோரே.*

—*நூ*. 69

1.14. முத்துவீரியம்.

1.14.1 *ஆற்றுநீர்*

எழுவாய் நதிப்புன லெனப்பய னிலையொடு
முடிவன ஆற்றுநீ ராமென மொழிப.

—*நூ*. 1279

1.14.2. *மொழிமாற்று*

ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே.

—*நூ*. 1280

(நன்னூல் நூற்பாவை அப்படியே ஆண்டது.)

1.14. 3. *அடிமறி மாற்று*

அடியெலாந் தன்னிலை மாறி முதலினும்
ஈற்றினும் இடையினும் எடுத்துச் சரிப்பினும்
ஓசையும் பொருளும் ஒழுகாது வருவன
அடிமறி மாற்றென அறையப் படுமே.

—*நூ*. 1281

1.14.4. *நிரனிறை*

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
நிரனிறை யாக நிறுத்திமற் றெருபொருள்
நேரும் பொருள்கோள் நிரனிறை யாகும்.

—*நூ*. 1282

1.14.5. *அளைமறிபாப்பு*

இயற்பா இறுமொழி இடையினும் முதலினும்
கூட்டிப் பொருளைக் கொள்ளுவ தளைமறி
பாப்பா மெனப்பெயர் பகரப் படுமே.

—நூ. 1283

1.14.6. *பூட்டுவில்*

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முட்
பொருளைக் குடையது பூட்டுவில் லாகும்.

—நூ. 1284

(நன்னூல் நூற்பாவை அப்படியே ஆண்டது.)

1.14.7. *தாப்பிசை*

இடைமொழி முதலினும் ஈற்றினும் எய்தித்
தருவது பொருளைத் தாப்பிசை யாகும்.

—நூ. 1285

1.14.8. *கொண்டுகூட்டு*

யாப்பினுட் பற்பல அடிகளின் நின்ற
இருமொழி களைப்பொருள் ஏற்கு மிடத்துக்
கூறுவ கொண்டு கூட்டாகு மென்ப.

—நூ. 1286

1.15. தமிழ் நூல்.

1.15.1. *பொருள்கோளின் இலக்கணம்*

பாட்டினும் உரையினும் பொருள்தெளி வுறுகண்
ணோட்டமும் நோட்டமும் கொள்ளுதல் பொருள்கோள்.

—நூ. 430

1.15.1.1. *பொருள்கோளின் வகைகள்*

அஃது
ஆற்றின் ஓட்டம்; கொண்டுகூட் டிரண்டே.

—நூ. 431

1.15.1.1.1. *ஆற்றோட்டம்*

ஆற்றின் ஒழுகல்போல் இடையற வின்றித்
தோற்றும்சொற்பொருள் தொடர்வதாற் றோட்டம்.

—நூ 432

1.15.1.1.2. *கொண்டுகூட்டு*

சொல்லும் தொடரும் எழுத்தும் கருத்துச்
செல்லும் வகையான் ஓரடி பலவடி
முன்பின் கொண்டு கூட்டல் பலவே.

—நூ. 433

1.16. அணியிலக்கண நூல்கள்.

அணியிலக்கணம் பேசும் எல்லா நூல்களும் நிரனிறைப்பொருள் கோளை அணியெனக் கொண்டு கூறுகின்றன. மாறனலங் காரமுடையார் பூட்டுவிற் பொருள்கோளையும் அணியாய்க் கொண்டார். இவை பற்றி அணியிலக்கணத்துக் காணப் படும் நூற்பாக்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன. [தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் எல்லாப் பொருள் கோள்களையும் அணியிலக்கணத்துத்தான் பேசுகின்றன. இவ்விரு நூல்களிடைக் காணப்படும் பொருள்கோள் பற்றிய நூற்பாக்கள் மேலே தரப்பட்டன. (காண்க: 1.12 & 1.14.)]

1.16.1. தண்டியலங்காரம்.

1.16.1.1. *நிரனிறையணி*

நிரனிறுத் தியற்றுதல் நிரனிறை அணியே.

—பொருளணியியல், நூ. 40

1.16.1.1.1. *நிரனிறை வழு*

ஒருநிரன் முன்வைத் ததன்பின் வைக்கும்
நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவே.

—சொல்லணியியல், நூ. 18

1.16.1.1.1.1. *வழுவமைதி*

உய்த்துணர வரும்வழி அவ்வாறு முரித்தே.

— சொல்லணியியல், நூ. 19

1.16.2. மாறனலங்காரம்.

1.16.2.1. *நிரனிறையணி*

குறித்திடும் பெயர்வினை கூறிய செய்யுளின்
நெறிப்பட நிரலுறல் நிரனிறை யாகும்.

— நூ. 162

1.16.2.1.1. *பெயர் நிரனிறை*

அவற்றுள்
பெயரொடு பெயர் நிரலுதல் பெயர்நிரனிறை.

—நூ. 163

1.16.2.1.2. *பெயரெதிர் நிரனிறை*

பெயரெதிர் நிரலுதல் பெயரெதிர் நிரனிறை.

—நூ. 164

1.16.2.1.3. *பெயர்வினை நிரனிறை*

உயர்வுறு பெயரொடு வினையுற நிரல்வது
மயர்வறு பெயர்வினை நிரனிறை யெனவரும்.

—நூ. 165

1.16.2.1.4. *பெயர்வினையெதிர் நிரனிறை*

ஓதிய பெயரினோ டுயர்வினை யெதிரின்
நீதிகொள் பெயர்வினை யெதிர்நிர னிறையாம்.

—நூ. 166

1.16.2.1.5. *வினை நிரனிறை*

வினையொடு வினை நிரல்வது வினைநிரனிறை.

—நூ. 167

1.16.2.1.6. *வினையெதிர் நிரனிறை*

வினையெதிர் நிரல்வது வினையெதிர் நிரனிறை.

—நூ. 168

1.16.2.1.7. *வினைபெயர் நிரனிறை*

வினைபெயர் நிரல்வது வினைபெயர் நிரனிறை.

—நூ. 169

1.16.2.1.8. *வினைபெயரெதிர் நிரனிறை*

வினையொடு பெயரெதிர் கொளவரு நிரனிறை
வினையொடு பெயரெதிர் விதிநிர னிறையே.

—நூ. 170

1.16.2.1.9. *எழுத்து நிரனிறை*

இருபெயர்க் கமைநா லெழுத்தை முறைமாறிப்
பொழிப்புறப் பிரித்துப் புணர்த்து நிரைவகை
எழுத்து நிரனிறை என்மனுர் புலவர்.

—நூ. 171

1.16.2.1.10. *முறை நிரனிறை*

முறைமுறை நிரைவது முறைநிர னிறையே.

—நூ. 172

1.16.2.1.11. *இடையினை நிரனிறை*

இணைபெற இடைநின் றிருவயிற் பெயரொடும்
புணர்தகை நிரனிறை புகலில் ஒன்றுளதே.

—நூ. 173

1.16.2.1.12. *விற்பூட்டு நிரனிறை*

உரைபயின் முதலீற் றுறும்பெய ரொடுபெயர்
நிரைநிறை யெதிர்பெற நிகழ்ந்தீ றெடுமுதல்
புரைதீர் தரவிற் பூட்டுறு வதுமுள.

—நூ. 174

1.16.2.2. *பூட்டுவில் அணி*

செய்யுளின் இறுவாய் எழுவாய் புணர்ந்து
மெய்யுறப் பொருணிலை விளக்கல் விற்பூட்டே.

—நூ. 175

1.16.3. பிறநூல்கள்.

1.16.3.1. *தொல்காப்பியம்*

அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே.

—நூ. 1258, 1259

1.16.3.2. *வீரசோழியம்*

நிரனிறை யாவது சொல்லும் பொருளும் நிரனிறுத்தல்.

—கா. 168

1.16.3.3. *இலக்கண விளக்கம்*

நிரனிறை முன்னர் நிகழ்ந்தியாங் கியலும்.—நூ. 663
(சொல்லதிகாரத்துக் கூறினாற் போல நடக்கும் என்பது கருத்து.)

1.16.3.4. குவலயானந்தம் (மாணிக்கசுவாமிகள்)

உபமானப் பொருள் பலவும் ஒருபுறம்
உபமேயப் பொருள் பலவும் ஒருபுறம்
ஒன்றப் பெறுதல் பெயர் நிரனிறையே.

1.16.3.5. *சுவாமிநாதம்*

முந்திருசொற் பொருள்எழுத்து முறை,எதிரால் நிரலே
முடித்தல் நிரனிறையாம்........

—நூ. 189

1.16.3.6. குவலயாநந்தம் (மீனாட்சி சுந்தரக் கவிராயர்)

வரிசையிற் கூறும் பொருள்கட்குச் சம்பந்த மாவமுறை
தெரிவுறச் சொல்லல் நிரனிறை...

—அணி. 50

1.16.3.7. *சந்திராலோகம்*

நிறுத்த முறையே நெறிப்படப் பொருளைக்
குறித்த னிரனிறை யெனக்கூ றுவரே.

—நூ. 76

2. மேற்கோட்பாடல் அகரநிரல்.

(இந்நூற்கண் மேற்கோளாக ஆளப்பட்டுள்ள பாடல்களின் முதற்குறிப்பு அகரநிரல்; எண் பக்கத்தைக் குறிக்கும்.)

3. மேற்கோணூற்பா அகரநிரல்.

(பல்வேறு இலக்கண நூல்களினின்றும் இந்நூற்கண் ஆளப்பட்டுள்ள நூற்பாக்களின் முதற்குறிப்பு அகரநிரல்; எண் பக்கத்தைக் குறிக்கும்.)

4. சிறப்புப்பெயர் அகர நிரல்.

(எண் பக்கத்தைக் குறிக்கும்)

5. பொருட்குறிப்பு அகரநிரல்.

(எண் பக்கத்தைக் குறிக்கும்)

6. உசாத்துணைக் குறிப்புகள்.

(BIBLIOGRAPHY)

6. 0. குறிப்புகள்:—

ஆசிரியர் பெயர், நூற்பெயர், பதிப்பகம், ஊர், பதிப்பெண், வெளியீட்டாண்டு என்ற வரிசையில் நூல் பற்றிய விவரங்கள் தரப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள் அனைத்தும் அவற்றுக்குரிய ஆசிரியர் பெயர் அகர நிரற்படி நிறுத்தப் படுகின்றன; நூல்களின் கால நிரற்படியோ அகர நிரற்படியோ அமைக்கப்பெறவில்லை. ஒரே ஆசிரியரின் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் குறிக்கப் படும் போது நூற்பெயர் அகர நிரற்படி அமைக்கப் படுகின்றன.

மூலநூல்கள் மற்றும் உரைநூல்கட்குப் பதிப்பாசிரியர் பெயரே தரப்படுகின்றது. பதிப்பாசிரியர் பெயர் இல்லாதவழி நூலாசிரியர் பெயரோ உரையாசிரியர் பெயரோ குறிக்கப் படுகின்றது.

பதிப்பகம் அல்லது வெளியீட்டாளரின் பெயர்கள் குறிக்கப்படாத நூல்கட்கு அவை அச்சேறிய அச்சகங்களின் பெயர்கள் தரப்படுகின்றன.

முதற்பதிப்புடைய நூல்கட்கும், எத்தனையாவது பதிப்பு என்கின்ற விவரம் இல்லாத நூல்கட்கும் பதிப்பெண் கொடுக்கப்படவில்லை.

நூலின் வெளியீட்டாண்டு ஆங்கில ஆண்டாயினும், தமிழாண்டாயினும், சாலிவாகன சகாப்த ஆண்டாயினும், வள்ளுவராண்டாயினும் நூலிற் குறிக்கப்பட்டுள்ளவாறே தரப்படுகின்றன.

6. 1. மூல நூல்கள்:—

பவணந்தியார், நன்னூல் மூலம், மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1911.

புன்னைவனநாத முதலியார்., பி. சிதம்பர., (ப-ர்)., தொல்காப்பிய மூலம் பாடபேதம் குறிப்புரையுடன், பி. என். சிதம்பர முதலியார் அன் கோ,, மதுரை., துந்துபி, 1922.

6. 2. உரை அல்லது குறிப்புடன் கூடிய நூல்கள்:—

அறவாணன், க. ப., (ப-ர்., உ-ர்).,அமுதசாகரம், ஜைன இளைஞர் மன்றம், சென்னை-17., டிசம்பர்., 1974.

,, (ப-ர்., உ-ர்)., அவிநயம், ஜைன இளைஞர் மன்றம், சென்னை-17., ஏப்ரல், 1975.

ஆறுமுக நாவலர் (ப-ர்)., இலக்கணக் கொத்து, வித்தியாநு பாலன யந்திர சாலை, சென்னபட்டணம், மூன்றும் பதிப்பு, விரோதிகிருது ஆண்டு, ஆவணித் திங்கள்.

,, (ப-ர்)., தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரை யருரையோடும், வித்தியாநு பாலன யந்திர சாலை, சென்னபட்டணம், விய ஆண்டு ஆனித் திங்கள்.

இராகவையங்கார், ரா., (ப-ர்)., நேமிநாதம் மூலமும் உரையும், தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1923.

இராமாநுசக் கவிராயர் (உ-ர்)., நன்னூல் விருத்தியுரை, மேற்படிஉரையாசிரியருக்குச் சொந்தமான அச்சுக்கூடம், சஞ்சீவிராயன் பேட்டை, சாலிவாகன சகாப்தம்-1768 இல் செல்லாநின்ற பிலவங்க ஆண்டு, மார்கழித் திங்கள்.

கணேசையர், சி., (ப-ர்) தொல்காப்பிய எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1937.

காபன் அய்யர், ஜி. மெக்கென்ஜி., (ப-ர்)., தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும், அர்ச் சூசையப்பர் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1891-குச் சரியான கர ஆண்டு.

குமார சுவாமிப் பிள்ளை, சுன்னாகம். அ., கனகசுந்தரம் பிள்ளை, திருக்கோணமலை. த., (உ-ர்கள்), அகப்பொருள் விளக்கம் வித்தியாநு பாலன யந்திர சாலை, சென்னபட்டணம், பரிதாபி ஆண்டு, கார்த்திகைத் திங்கள்.

கோபால கிருஷ்ணமாச்சாரியார் வை.மு.,(கு-ர்).,தண்டியலங்காரம் மூலமும் பழைய உரையும், குவை பப்ளிகேஷன்ஸ், சென்னை—5., இரண்டாம் பதிப்பு, 1976.

கோபால கிருஷ்ணமாச்சாரியார், வை. மு. (கு-ர்)., திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், குவை பப்ளி கேஷன்ஸ், சென்னை—5, ஐந்தாம் பதிப்பு, 1976.

கோவிந்தசாமிப் பிள்ளை, இராம., (ப-ர்)., தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், தஞ்சை சரசுவதி மகால், தஞ்சை, 1962.

கோவிந்தராச முதலியார்,கா.ர., (ப-ர்),வீரசோழியம் உரையுடன், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, இரண்டாம் பதிப்பு, மே, 1970.

சண்முகம், டாக்டர். செ. வை., (ப-ர்., உ-ர்)., சுவாமிநாதம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1975.

சபாபதியா பிள்ளை, ஆ., துறைசைச் சதாலங்காரம்., ஆரியப் பிரகாசினி அச்சுக் கூடம்., சுபானு ஆண்டு, மகரத் திங்கள், 1884.

சரவணத் தமிழன், த., தமிழ்நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர் மேழம், சித்திரை, தி. பி. 2003.

சாமிநாதையர், டாக்டர். உ. வே., (ப-ர்)., சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், கபீர் அச்சுக் கூடம், சென்னை, ஏழாம்பதிப்பு, சௌமிய ஆண்டு, கார்த்திகைத் திங்கள், 1969.

„ (ப-ர்)., நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும், லா ஜர்னல் அச்சுக் கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, பவஆண்டு, பங்குனித் திங்கள், 1935.

„ (ப-ர்)., நன்னூல் மூலமும் மயிலை நாதருரையும், வைஜயந்தி அச்சுக் கூடம், சென்னை, 1918.

சிதம்பரம் பிள்ளை, வ. உ., (ப-ர்)., தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரம், வாவிள்ள-இராமஸ்வாமி சாஸ்தருலு அண்டு சன்ஸ், சென்னை, 1933.

சுந்தரமூர்த்தி, கு., (ப-ர்)., தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் நச்சினார்க்கினியருரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை—1, பிப்ரவரி, 1965.

சுந்தரமூர்த்தி, கு. ,(ப-ர்), மூத்து வீரியம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, நவம்பர், 1972.

சுப்பிரமணியன், ச.வே., (ப-ர்)., தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, மே, 1978.

,, (ப-ர்)., குவலயானந்தம் 1,2. சந்திராலோகம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20., ஜுன், 1979.

சேயொளி, புலவர்., (ப-ர்)., இலக்கண விளக்கம் மூலமும் உரையும், (எழுத்து, சொல்)., திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, பிப்ரவரி 1973.

தங்கையா நாடார், வித்துவான். வ., (உ-ர்)., அகப்பொருள் விளக்கம் மூலமும் குறிப்புரையும், பாளையங்கோட்டை, 1956.

தண்டபாணி தேசிகர், ச., (ப-ர்), புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை, பாரி நிலையம், சென்னை-1, இரண்டாம் பதிப்பு, மார்ச்சு, 1971.

தாமோதரம் பிள்ளை, சி.வை., (ப-ர்)., இறையனாரகப் பொருள் உரையோடு, கிரேவ்ஸ் குக்சன் அன் கோ, சென்னப் பட்டணம், சுபானு ஆண்டு, சித்திரைத் திங்கள்.

,, (ப-ர்), இலக்கண விளக்கம் மூலமும் உரையும், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்ன பட்டணம், விரோதிகிருது ஆண்டு, புரட்டாதித் திங்கள்.

திருஞானசம்பந்த முதலியார்., ஆரணச் சைலரலங்கார பஞ்சகம், ஸ்காட்டிஷ் பிரஸென்னும் இயந்திரசாலை, சார்வரி ஆண்டு, ஆனித் திங்கள்.

தெய்வச் சிலையார் (உ-ர்)., தொல்காப்பியம், சொல்லதிகாரம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை, 1929.

நக்கீரனார் (உ-ர்)., இறையனாரகப் பொருளுரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, ஆறும் பதிப்பு, அக்டோபர், 1976.

நமச்சிவாய முதலியார், காவேரிபாக்கம்., (ப-ர்)., தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளம்பூரணம், ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை, 1927.

நாராயணையங்கார் (ப-ர்)., மாறனலங்காரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை 1915.

பாண்டித் துரைத்தேவர், பொ., (ப-ர்)., அகப்பொருள் விளக்கம் மூலமுமுரையும், தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1926.

பேராசிரியர் (உ-ர்)., தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1., நான்காம் பதிப்பு, செப்டம்பர், 1972.

மீனாட்சிசுந்தரக் கவிராயர், முகவூர்., குவலயாநந்தம், ஆர்பனேஜ் அச்சுக்கூடம்., சென்னை., 1895.

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., மற்றும் குழுவினர் (ப-ர்கள்)., கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை-40., மறு அச்சீடு, 1977.

முத்துசாமி ஐயங்கார், சதாவதானம்., சந்திராலோக மூலம்., தமிழ்ச்சங்க முத்திராசாலை., மதுரை., 1909.

வையித்திலிங்கம் பிள்ளை, ச., (உ-ர்)., அகப்பொருள் விளக்கம் மூலமும் உரையும், வியாவஹ ரத ரஞ்சினி பிரஸ், சென்னை, 1878.

வேங்கடசாமி நாட்டார், ந.மு., (ப-ர்)., யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரையும், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, அக்டோபர், 1940.

வேணுகோபாலப்பிள்ளை, மே.வீ., (ப-ர்)., யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன், அரசு சுவடி நூலகம், சென்னை, 1960.

6.3. ஆய்வு நூல்களும் பிறவும்:-

அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, ஏப்ரல, 1977.

இராகவையங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 1928

இளவரசு, புலவர். சோம., இலக்கண வரலாறு, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், செப்டம்பர், 1963.

கண்ணையன்., வெ., (பொ-ப-ர்), தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, தமிழ்நாடு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடு, சென்னை, 1961.

சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு, பி.எஸ். கணேச சாஸ்திரி, திருச்சிறுப்பள்ளி, பிரமோத ஆண்டு, 1930.

சுப்பிரமணியன், டாக்டர். ச.வே., (தொ-ர்), இலக்கணத் தொகை-சொல், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்-1, பிப்ரவரி, 1971.

,, (தொ-ர்)., இலக்கணத் தொகை-யாப்பு-பாட்டியல், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, பிப்ரவரி, 1978.

சுப்புரெட்டியார், ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மறுபதிப்பு, 1974.

தாவீது யோசேப்பு உபாத்தியாயர், தமிழிலக்கணத் தெளிவு, எஸ்.பி.சி.கே. பிரஸ், வேப்பேரி, சென்னை, 1893.

பார்த்தசாரதி நாயுடு, சென்னை. இட்டா., (ப-ர்)., தனிப் பாடற்றிரட்டு, முதற்பாகம், ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடம், 1903.

வீரகத்தி, க., சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு, சி. தியாகராசா, யாழ்ப்பாணம், 1968.

வெள்ளைவாரணனுர், க., தொல்காப்பியம்-நன்னூல் சொல்லதிகாரம் திருமதி. வெ. பொற்றடங்கண்ணி, சிதம்பரம், செப்டம்பர், 1971.

வேங்கடசாமி, மயிலை. சீனி, மறைந்து போன தமிழ் நூல்கள், பாரிநிலையம், சென்னை-1, ஜனவரி, 1959.

6.4. இதழ்கள் முதலியன:-

அண்ணுமலை, எஸ்.ஏ.பி., (ஆ-ர்)., குமுதம், மதி: 32/மலர்: 24; குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், 29-3-79.

குஞ்சிதபாதனுர், வித்துவான். கே., 'சுரையாழ', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு: 24/பரல்: 4; திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, டிசம்பர், 1949.

சங்குப் புலவர், பண்டிதவித்துவான். தி., 'பொருள்கோள் ஆராய்ச்சி', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு: 41/பரல்: 11; திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, ஜூலை, 1967.

சுப்பிரமணியன், எஸ்.வி., 'நிரனிறை', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஏழாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுதி-1, நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1975.

நடராசா, எஃப். எக்ஸ்.சி., 'பொருள்கோள்', செந்தமிழ், தொகுதி: 54/பகுதி: 5, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, ஆகஸ்டு, 1958.

பாலசுப்பிரமணியன், எஸ்., (ஆர்)., ஆனந்தவிகடன், வாசன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 8-7-79.

Swaminatha Aiyar. S., *A Lecture on Tamil Grammars and Grammarians*, The Gnanaruthnagara Press, Dindigul., 1893.

Veerasami, V., 'Tamil Meaning Process-Porulkool', *Proceedings of the First All India Conference of Dravidian Linguistics*, Department of Linguistics, University of Kerala, Trivandrum, April, 1972.

ஆசிரியர் பெயரில்லை, 'கானக நாடன் சுனையில் சுரைக்காயும் அம்மியும்', *தமிழ்ப்பொழில்*, துணர்: 38/மலர்: 6,7, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை, அக்டோபர், நவம்பர், 1962.

6.5. *அகரமுதலிகள்:-*

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகராதி, தொகுதி: 2 (The twentieth Centuary Tamil, Dictionary, Volu. II) டி. கோபால் அன் கோ, சென்னை, 1909.

தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon), தொகுதி: 2/ பகுதி: 1, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1936.

,, தொகுதி: 5/பகுதி: 1, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1936.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி (இரண்டாம் பாகம்), இ.மா. கோபால கிருஷ்ணக் கோன் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1950.

7. பிழையுந் திருத்தமும்.

பக்கம்	வரி	இருப்பது	இருக்க வேண்டுவது
8	2	வாய்த்தனும்	வாய்த்தவனும்
13	32	அளேமறியாப்பு	அளேமறிபாப்பு
20	24	நாடராசா	நடராசா
26	6	பெருள்கோள்	பொருள்கோள்
42	2	வேய்க்கண்	வேய்கண்
	23	கலனுத்	கலனுந்
43	1	கத்தும்	கந்தும்
44	27	கோங்கரும்பு	கோங்கரும்பு விற்கரும்பு
46	15	வெற்காவிற்	வெஃகாவிற்
48	14	சுரையாழ்	சுரையாழ
	21	அஞ்னத்தன்ன	அஞ்சனத்தன்ன
	32	ஓட்டுவழி இயற்லல்	ஓட்டுவழி இயற்றல்
65	20	72	71
66	17—18	வருனவும்	வருவனவும்
69	32	விலிந்து	விளிந்து
71	16	அளேமறிபாப்ப்பு	அளேமறிபாப்புப்
90	33	வணங்குன	வணங்குவன
101	26	நினிரறையாகாது	நிரனிறையாகாது
105	15	ஓர் ஐந்துடன்	ஓர் ஐந்துடன்
108	18	ஒருமை பன்மை	ஒருமைப் பன்மை
109	14	முகமட்கு	முகமவட்கு
	18	மகடகு	மகட்கு
120	33	தவிர்த்த	தவிர்ந்த
121	19	படுநிலே	படிநிலே
128	31	அளேத்தும்	அனேத்தும்
130	33—34	இப் இப்பகுப்புகள்	இப்பகுப்புகள்

132	7	அறிமறி	அடிமறி
	18	விரமாமுனிவர்	வீரமாமுனிவர்
133	20—21	எடுத்தாண்டர்	எடுத்தாண்டார்
138	23	கொள்ளாததற்காக	கொள்ளாததற்கான
140	21	இயக்கும்	இயைக்கும்
142	16	தூ. 412.	நூ. 412.
144	6	என பல	எனப்பல
149	2	mothods	methods
160	18	யாற்றொழுகுக்கு	யாற்றொழுக்கு
171	11	பெருளுமாக	பொருளுமாக
174	15	சொல்லதிகாரப்	சொல்லதிகாரம்
175	28	பொருளதிகரரம்	பொருளதிகாரம்
179	6	அச் செய்யுளின்	அச் சொல்லின் (செய்யுளின்)
181	12	தண்ணுமை	றண்ணுமை
	37	துயருமெ	துயருமென்
184	31	ஒவ்வென்றின்	ஒவ்வொன்றின்
187	34	மாற்றியகைக்கப் படுகின்றன	மாற்றியமைக்கப் படுகின்றன
189	2	பாடற்றிரட்டூ	பாடற்றிரட்டு
192	37	பெரருள்கோள்	பொருள்கோள்
!93	31—32	நினைக்கப்கட்டது.	நினைக்கப்பட்டது.
193—194	36—1	அமைக்ப்படுஞ்	அமைக்கப்படுஞ்
196	20	காட்டப் பட்ட	காட்டப் படும்